திருத்தொண்டர் புராண அநுபந்தம்

உ

சிவமயம்.

தமிழ்க்கல்வி, சைவ சித்தாந்தம், தேவாரத் திருமுறைகள்,

இசைத் தமிழ், அன்னதானம், வைத்தியம்

இவற்றின் அபிவிருத்திக்காகவும் பொது ஜனங்களின்

அனுகூலத்துக்காகவும்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவர்களாக

இருபதாம் பட்டத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

அருணந்தித் தம்பிரான் சுவாமிகளவர்கள்

மனமுவந்தமைத்திருக்கும்

பேரறக் கட்டளைகள்

திருப்பனந்தாள் :

1947.

This Perarakattalai is printed at
Commercial Press 168 for C. K. S. P.I.C. No. M. S. 272—2-48—1300 Copies

விவரம்.

பக்கம்

I. சிவஞானசித்தியார் உபந்நியாசக் கட்டளை 1
II. கொட்டையூரில் ஸ்ரீ காசிவாசி சுவாமிநாத ஸ்வாமிகள் லோயர் ஸெகண்டரி கலாசாலை 2
III. திருவாங்கூர் மகாராஜா தேவாரப் பரிசு 3
IV. சேரமான்பெருமாள் தேவாரப் பரிசு 4
V. மூவர் தேவாரப் பரிசு 5
VI. காசியில் சைவ சித்தாந்த சாஸ்திர போதகாசாரியர் ஸ்தானம் 7
VII. சைவ சித்தாந்த வித்தியார்த்திகள் சம்பள உதவிக் கட்டளை அண்ணாமலை ஸர்வ கலாசாலையில் 8
VIII. திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத ஸ்வாமிகள் செந்தமிழ்க் கல்லூரி 9
IX. இசைத் தமிழ்க் கட்டளை 11
X. கால் நடை வைத்தியசாலை, மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் ஷ்காலர்ஷிப் 13
XI. குமாரசாமி அன்னதானக் கட்டளை, காசி (வைகாசிமீ) 14
XII. ஷை இராமேசுவரத்தில் அன்னதானக் கட்டளை ஷை 15
XIII. திருநள்ளாற்றில் அன்னதானக் கட்டளை 15
XIV. காசியில் அன்னதானக் கட்டளை (மார்கழிமீ) 17
XV. செந்தமிழ்க் கல்லூரி ஏழை மாணவர்களுக்கு உணவு அளித்தல் 17
XVI. திருப்பனந்தாள் ஜன வைத்தியசாலை 18
XVII. மண்ணியாற்றில் படித்துறை 18
XVIII. கும்பகோணம் மணிக்கூண்டு 18
XIX. ஸ்ரீ வைகுண்டத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆதி குமரகுருபர ஸ்வாமிகள் அன்னதானக் கட்டளை (வைகாசிமீ) 18
XX. மைசூர் மஹாராஜா அவர்கள் பேரால் தேவாரப் பரிசு 19
XXI. ஸ்ரீ குருஞான சம்பந்த சுவாமிகள் ஞாபகார்த்தத் தேவாரப் பரிசு, மாயூரம் 20
XXII. சென்னை, விவேகானந்தா கல்லூரியில் ஸ்ரீ ராஜாஜி சைவ சித்தாந்த வித்தியார்த்தி சம்பள உதவிக் கட்டளை 22
XXIII. ஸர். எஸ். இராதாகிருஷ்ணன் சைவ சித்தாந்த வித்தியார்த்தி சம்பள உதவிக் கட்டளை, காசி 24
XXIV. ஸ்ரீ வைகுண்டத்தில் ஆதி குமரகுருபர சுவாமிகள் ஞாபகார்த்த தேவாரப் பரிசு 25

தமிழ்க்கல்வி, சைவசித்தாந்தம், தேவாரத் திருமுறைகள், இசைத்தமிழ்,
அன்னதானம், வைத்தியம் இவற்றின் அபிவிருத்திக்காகவும்
பொதுஜனங்களின் அனுகூலத்துக்காகவும்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து தலைவர்களாக இருபதாம் பட்டத்தில்
எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

அருணந்தித் தம்பிரான் சுவாமிகளவர்கள்

மனமுவந்தமைத்திருக்கும்

பேரறக் கட்டளைகள்.

I. ஸ்ரீ அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் சிவஞான சித்தியார் உபந்நியாசக் கட்டளை (1944-ஆம் ஹூ அண்ணாமலை சர்வகலாசாலையாருடைய அங்கீகாரம் பெற்றது.)

சைவசித்தாந்த சாஸ்திரங்களின் பயிற்சி பெருகும்பொருட்டு ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத தம்பிரான் சுவாமிகளவர்கள் ஞாபகார்த்தமாக 1944-ஆம் வருஷம் ஏற்படுத்தியது. இதன் மூலதனம் ரூ. 15,000/ ஸர்க்கார்க் கடன் பத்திரமாக வுள்ளது.

2. இதன் வட்டித் தொகையிலிருந்து அலகபாத்து சர்வகலாசாலையிலும், காசி ஹிந்து சர்வகலாசாலையிலும் இந்தக் கட்டளையை ஏற்படுத்தியவர்கள் சம்மதத்தின்மேல் வேறு சர்வகலாசாலைகளில் உபந்நியாசங்கள் செய்யும் பொருட்டு மாற்றினாலன்றி ஆண்டுதோறும் நான்குக்குக் குறையாத உபந்நியாசங்களுக்கு ரூ. 400 சம்மானம் அளிக்க வேண்டும்; சம்மானத் தொகை போக மிஞ்சுவதை மூலதனத்தோடு சேர்க்கவேண்டும்.

3. எந்த வருஷத்திலேனும் வைஸ்சான்ஸலர் உபந்நியாசம் செய்யத் தகுதியுள்ளவர்களில்லையென்று கருதினால் அதனால் கொடுபடாமல் சேரும் தொகை மூலதனத்துடன் சேர்க்கப்படவேண்டும்.

4. நான்கு உபந்நியாசங்களுள் மூன்று காசி ஹிந்து சர்வகலாசாலையிலும் ஒன்று அலகபாத்து சர்வகலாசாலையிலும் சர்வகலாசாலையார் குறிப்பிடும் இடங்களில் செய்யவேண்டும். உபந்நியாசம் சைவசித்தாந்தத்தின் கொள்கைகளை விவரமாக விளக்கக்கூடியவாறு இருக்கவேண்டும். அண்ணாமலை சர்வகலாசாலையின் வைஸ்சான்ஸலர் தம் சர்வகலாசாலையிலுள்ள ஹிந்து ஆசிரியர்களையோ சைவசித்தாந்த சாஸ்திரத்தில் நல்ல பயிற்சியுள்ள வேறு ஹிந்துக்களையோ உபந்நியாசகராக ஆண்டுதோறும் நியமிப்பார்கள். ஒரு வருஷம் உபந்நியாசம் செய்தவர் 12 வருஷங்களுக்குப் பிறகே இரண்டாம் முறை உபந்நியாசம் செய்ய வரலாம். உபந்நியாசகர் எந்த ஜாதியினராகவோ ஆண்பாலாராகவோ பெண்பாலாராகவோ இருக்கலாம். உபந்நியாசங்கள் செய்த ஒரு மாதத்திற்குள், உபந்நியாசங்களை அண்ணாமலை சர்வகலாசாலைக்கும் இந்தக் கட்டளையை ஏற்படுத்தியவர்களுக்கும் அவர்களுடைய வார்சுகளுக்கும் அனுப்பவேண்டும். வைஸ்சான்ஸலருடைய நோக்கம்போல் சர்வகலாசாலையார் இந்த உபந்நியாசங்களை அச்சிட்டு வெளியிடலாம்.

5. சிவஞான சித்தியார் பரபக்கம் சுபக்கம் என்னுமிவற்றின் சூத்திரங்களிலும் இவற்றிற்குரிய அறுவருரைகளிலும், ஸ்ரீ உமாபதி சிவாசாரியாருடைய சிவப்பிரகாசத்திலும் ஆழ்ந்த பயிற்சியும் ஆராய்ச்சியும் இருத்தலை உபந்நியாசங்கள் காட்டவேண்டும்.

6. காசி ஹிந்து சர்வகலாசாலையாரையும் அலகபாத்து சர்வகலாசாலையாரையும் கலந்துகொண்டு தசரா விடுமுறைக்கு முன்போ பின்போ உபந்நியாசங்களை நடத்த ஏற்பாடு செய்யவேண்டும்.

7. உபந்நியாசங்களை முடித்துவிட்டு உபந்நியாசகர் திரும்புகையில் சிதம்பரத்திலுள்ள ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் அபிஷேகத்துக்காக ஒரு குடம் கங்கா தீர்த்தத்தைக் கொண்டுவருவதோடு அந்த விவரத்தை இந்தத் தரும ஸ்தாபகரவர்களுக்கு உபந்நியாசப் பிரதி அனுப்பும்பொழுது தெரிவிக்க வேண்டும்.

8. சம்மானம் ரொக்கமாகவோ உண்டியல் மூலமாகவோ அளிக்கப்படும். ஒவ்வொரு வருஷமுடிவிலும், உபந்நியாசம் செய்தவருடைய பெயரையும் விலாசத்தையும் சம்மானத் தொகையையும் எந்த வருஷத்திலேனும் உபந்நியாசம் நடைபெறாவிட்டால் சேர்ந்திருக்கும் தொகையையும் ஸிண்டிகேட்டார் தெரிவிக்கவேண்டும். கணக்குகளைப் பிரபலமான தினசரி ஆங்கிலப் பத்திரிகையிலோ தமிழ்ப்பத்திரிகையிலோ பிரசுரிக்க வேண்டும். வருஷந்தோறும் மிச்சப்படக்கூடிய வட்டித் தொகையையும் இப்போது வட்டிக்குக் கொடுத்திருக்கும் மூலதனத்தை ஒருவேளை கவர்ன்மெண்டார் திருப்பிக் கொடுத்தால் அதையும் வேறு நம்பிக்கையான இனங்களில் வட்டிக்கு அண்ணாமலை சர்வகலாசாலை ஸிண்டிகேட்டார் போடவேண்டும். வட்டிக்கு விடுவதில் மதிப்பு அதிகமாகி அதிக வருமானம் ஏற்பட்டால் வேறு சர்வகலாசாலை ஸ்தலங்களில் உபந்நியாசங்களை ஏற்படுத்தி அந்த உபந்நியாசங்களுக்கு ஸம்மானம் அளிக்க அந்த் வருமானத்தை உபயோகிக்கலாம்.

II. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத தம்பிரான் சுவாமிகளவர்கள் ஞாபகார்த்தமாகக் கும்பகோணம் முனிஸிபல் எல்லைக்குள் கோட்டையூரில் ஒரு லோயர் ஸெகண்டரி பாடசாலை. இதனை அமைக்க 1945–ஆு பிப்ரவரி மாதத்தில் ஏற்படுத்திய மூலதனம் ரூ. 11,500. இந்த தொகையில் ரூ. 10,000, 3½% வட்டியுள்ள சர்க்கார்க் கடன் பத்திரமாகவும், ரூ. 1500 ரொக்கமாகவும் உள்ளன.

முதல் மூன்று பாரங்களையோ, அல்லது அவற்றிற்குச் சமமான வகுப்புகளையோ கொண்ட ஒரு பாடசாலையை நடத்தக் கும்பகோணம் நகரபரிபாலன சபையார் வசம் ரூ. 10,000 இருக்கும். அவர்கள் அதனைப் பரிபாலித்து வட்டியைக் கொண்டு பாடசாலையை நடத்தவேண்டும். இந்தத் தொகையை வேறு காரியத்திற்கு உபயோகப்படுத்தலாகாது. 1947-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் முதல் தேதிக்குள் பாடசாலையை ஆரம்பிக்காவிட்டால் மூலதனத்தையும் அந்தத் தேதிவரை சேர்ந்திருக்கும் வட்டித் தொகையையும் சேர்த்து இந்தத் தருமஸ்தாபகரவர்களிடமாவது, அவர்கள் வார்சுகளிடமாவது முனிஸிபாலிடியார் சேர்ப்பிக்கவேண்டும்.

2. ரொக்கமாகவுள்ள ரூ. 1,500-ஐ முனிஸிபாலிடியார் பள்ளிக்கூடம் கட்டுவதற்காக ஒரு மனையை வாங்க உபயோகிக்கவேண்டும். பள்ளிக்கூடம் அந்தக் கட்டிடத்தில் நடைபெறவேண்டும். மூன்று வருடங்களுக்குள்ளாகவோ

யுத்தம் முடிந்த உசிதமான ஒரு காலத்திற்குள்ளாகவோ கட்டிடத்தைக் கட்ட ஆரம்பிக்கவேண்டும்.

3. குறிப்பிட்ட காலத்திற்குள் அவ்வாறு செய்யாவிட்டால் இந்த ரூ. 1,500-ம் தருமஸ்தாபகரவர்களையோ அவர்கள் வார்சுகளையோ சார்ந்துவிடும்.

4. பள்ளிக்கூடத்தின் வருஷ நிருவாக அறிக்கையை முனிஸிபாலிடியார் திருப்பனந்தாள் காசிமடத்து ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஸ்வாமிகளவர்களுக்கு அனுப்பவேண்டும். ஜாஸ்தி வட்டி வரக்கூடிய நம்பிக்கையான நல்ல இனத்தில் இந்த மூலதனமாகிய ரூ. பதினாயிரத்தையும் போட்டுவைக்க நகர பரிபாலன சபையாருக்கு அதிகாரமுண்டு.

III. திருவாங்கூர் மஹாராஜா அவர்கள் தேவாரப் பரிசு.

திருவாங்கூர் மஹாராஜாவாகவும், தரும சீலர்களாகவும், தாராள சிந்தையுள்ளவர்களாகவும், பக்திமான்களாகவும், ராஜ்ய பரிபாலனத்தில் உதாரண புருஷர்களாகவும், திருவாங்கூர் சர்வகலாசாலையின் சான்ஸலராகவும், சீர்திருத்தத்தில் விசேஷ ஊக்கம் உள்ளவர்களாகவும், தமிழ் மொழியிலும் சங்கீதத்திலும் அபிமான முள்ளவர்களாகவும் விளங்கும் மேன்மை பொருந்திய ஸர் பாலராம வர்மா G. C. S. I., D. Litt., அவர்கள் பெயரால் 1946-ஆம் வருஷ ஏப்ரல்மீ˚த்தில் ஏற்படுத்தப்பட்டது இது.

2. தேவாரத்திற் பயிற்சியும் தேர்ச்சியும் திருவாங்கூர் ராஜ்யத்தில் பரவும் பொருட்டு இப்பரிசு ஏற்படுத்தலாயிற்று. இப்பரிசு திருவாங்கூர் மஹாராஜா அவர்கள் பெயரால் வழங்கப்பெறும்.

3. இதற்கு ஏற்படுத்திய மூலதனம் ரூ. 5,000. 100-க்கு 3½ வட்டி வரக்கூடிய சர்க்கார்க்கடன் பத்திரமாக உள்ளது. இதனைத் திருவாங்கூர் சர்வகலாசாலையார் பரிபாலித்துவருவர். இதன் வட்டியிலிருந்து வருஷந்தோறும் தேவாரத்தை மிகத் திறமையாக ஓதும் ஒருவருக்கு ரூ 100 (நூறு) அளிக்கப்படும்.

4. நான்கு வருஷங்களுக்கு ஒருமுறை சர்வகலாசாலையார் மூவர் தேவாரங்களிலிருந்து பண்கள் எல்லாம் அமைந்த 75 தேவாரங்களைப் பொறுக்கி எடுத்து அரும்பதவுரையுடன் ஒரு புத்தக ரூபமாக அச்சிட்டு வெளியிட ஏற்பாடு செய்யவேண்டும். அடுத்த நான்கு வருஷங்களில் இவையல்லாத வேறு தேவாரங்களைப் பொறுக்கி எடுக்கவேண்டும்.

5. பரிசுத் தொகை போக மிஞ்சும் தொகையை அப்புத்தகத்தைப் பதிப்பித்து வெளியிட உபயோகிக்கலாம். பரிசுக்காக வருபவர்களுக்கு அப்புத்தகத்தின் பிரதிகளை இலவசமாக வழங்கவேண்டும்.

6. இப்பரிசுப் போட்டிக்குத் திருவனந்தபுரம் சர்வகலாசாலைக்குச் சம்பந்தப்பட்ட காலேஜ்களிலுள்ள மாணாக்கர்கள் ஜாதி வேறுபாடின்றி ஆண்பாலர்களாயினும் பெண்பாலர்களாயினும் அபேட்சகர்களாக வரலாம்.

7. பொறுக்கி எடுத்த 75 தேவாரங்களையும் ஏற்பட்ட பண்களில் பாராமல் நல்ல இசையோடு ஒப்பிக்கக் கூடியவர்களே பரிசுக்குவரத் தகுதியுள்ளவர்கள்.

8. எந்த வருஷத்திலேனும் இருவரோ மேற்பட்டவர்களோ பரிசுபெறத் தகுதியுடையவர்களென்று கருதப்பட்டால் திருவுளச் சீட்டுப்போட்டு யார் பேருக்குச் சீட்டு விழுகிறதோ அவருக்கே பரிசை வழங்கவேண்டும் சர்வ கலாசாலையின் கான்வொகேஷன் காலத்தில் பரிசு வழங்கப்பெறும். அச்சமயம் பரிசு பெறுபவர் வரமுடியாவிட்டால் சர்வகலாசாலையார் அவருக்குப் பரிசுத் தொகையை அனுப்பிவிடலாம். பரிசுக்குரியவர் பரிசு பெறுவதற்குமுன் காலஞ் சென்றுவிட்டால் பரிசுத் தொகை அவருடைய சட்டபூர்வமான வார்சுக்குச் சேர்க்கப்படவேண்டும். ஒருமுறை பரிசுப்பெற்றவர் மறுமுறை பரிசுபெற அருகரல்லர்.

9. எந்த வருஷத்திலேனும் ஒருவருக்கும் பரிசு வழங்காவிட்டால் அத் தொகை மூலதனத்தோடு சேரும். எந்தக் காலத்திலேனும் மூலதனத்தோடு சேரும் தொகை மிகவும் அதிகரித்தால் சர்வகலாசாலையார் உசிதப்படி பரிசுத் தொகையை அதிகப்படுத்தவோ அதிகமான பரிசுகளை வழங்கவோ ஏற்பாடு செய்யலாம். ஒவ்வொரு வருஷத்திலும் பரிசு பெறுவோருடைய பெயரையும் விலாசத்தையும் தரும ஸ்தாபகரவர்களுக்கும் அவர்கள் வார்சுகளுக்கும் தெரி விக்க வேண்டும். கட்டளைத் தொகையை வேறு எந்தக் காரியத்திற்கும் உபயோகப்படுத்தக்கூடாது. இந்தக் கட்டளை திருவனந்தபுரம் சர்வகலாசாலை யாருடைய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது ; 8-4-1946.

IV. சேரமான் பெருமாள் தேவாரப் பரிசு. கோச்சி கவர்ன் மேண்டாருடைய அங்கீகாரம் பெற்றுள்ளது. 21-1-1947.

கொச்சி மன்னராகவும் தமிழிற் பெரும்புலவராகவும், சுந்தரமூர்த்தி நாயனாரிடத்துப் பேரன்பு பூண்டவராகவும் அவருடைய பேருதவியானும் அவருடனும் திருவஞ்சைக்களத்திலிருந்து ஆடிச்சுவாதி நன்னாளில் கைலையை யடைந்து திருக்கைலாய ஞானவுலாவைத் தமிழிலியற்றியவராகவும் விளங்கிய சேரமான் பெருமாள் நாயனார் ஞாபகார்த்தமாக இப்பரிசு அமைக்கப்பட்டது. சுந்தரமூர்த்தி நாயனாருடைய தேவாரப் பயிற்சியும் தேர்ச்சியும் கொச்சி ராஜ்யத்தில் பரவும் பொருட்டுச் சேரமான் பெருமாள் நாயனார்பேரால் இது நிறுவலாயிற்று.

2. இதற்கு ஏற்பட்ட மூலதனம் ரூ. 5,000. கொச்சி அரசாங்கத்தார் நியமிக்கும் ஒரு சபையார் இந்த மூலதனத்தைப் பரிபாலிப்பார்கள். மேற்படி சபையில் காலேஜ் தலைவர்கள் இருப்பார்கள். அந்த ராஜ்யத்திலுள்ள கல்வி யிலாகா தலைமை அதிகாரியே அச்சபைக்குத் தலைவராக இருப்பார். அப்போதைக் கப்போது ஷை சபையார் மூலதனத்தை, வட்டி அதிகமாக வரக் கூடிய வேறு இனங்களிற் போடலாம். அந்த வட்டித் தொகையிலிருந்து ரூபாய் 100 மிகவும் திறமையாகத் தேவாரம் ஓதும் ஒருவருக்கு ரொக்கமாக வழங்கப்பெறும்.

3. நான்கு வருஷங்களுக்கு ஒருமுறை அச்சபையார் சுந்தரர் தேவாரத்திலிருந்து பண்கள் எல்லாம் அமைந்த ஐம்பது தேவாரப் பாசுரங்களைப் பொறுக்கி எடுத்து அரும்பதவுரையோடு புத்தகமாக வெளியிட வேண்டும். பொறுக்கி எடுக்கும் பாசுரங்கள் நான்கு வருஷங்களுக்கு ஒரு முறை மாறும். ஆனால் ஒவ்வொரு முறையிலும் "பித்தா", "தானெனை" என்னும் பதிகங்கள் விடாமல் சேர்ந்திருக்கவேண்டும். பதிப்பின் செலவிற்கு, பரிசுத்தொகை நூறு ரூபாய் போக வட்டியில் மிஞ்சும் தொகையிலிருந்து எடுத்துக்கொள்ளலாம். காலேஜில் படிக்கும் ஹிந்துக்களே ஆண்பாலராயினும்

பெண்பாலராயினும் பரிசுக்குவர உரியவர்கள். பொறுக்கி யெடுத்துப் பதிப்பித்த பிரதிகள் பரிசுக்கு வருபவர்களுக்கு இலவசமாக வழங்கப்பெறும்.

4. தமிழில் ஐம்பது தேவாரப் பாசுரங்களையும் பண்ணோடு நல்ல இசையில் பாராமல் ஒப்பிக்கக் கூடியவர்களே இந்தப் பரிசுக்குவரத் தகுதியுள்ளவர்கள். மேலே சொன்ன சபையாரே பரீக்ஷையை நடத்துவார்கள்.

5. பரீக்ஷை இரண்டு பிரிவுகளை யுடையது ; (1) பொறுக்கி எடுத்த ஐம்பது தேவாரப் பாசுரங்களையும் பாராமல் ஒப்பித்துப் பாசுரங்களின் பொருளையும் தாற்பரியத்தையும் தெரிவித்தல் ; இதற்குரிய அம்சம் 50 ; (2) பொறுக்கி எடுத்த ஐம்பது தேவாரப் பாசுரங்களிலிருந்து குறிப்பிடும் எவற்றையேனும் நல்ல இசையுடன் உரிய பண்களில் பாசுரங்களின் பொருள் நன்கு விளங்கும்படி பாடுதல் ; இதற்குரிய அம்சம் 50 ; எவர் அதிக அம்சங்களைப் பெறுகிறாரோ அவரையே பரிசுக்குரியவரென்று அச் சபையார் நிச்சயிப்பர்.

6. எந்த வருஷத்திலேனும் இருவரோ மேற்பட்டவர்களோ பரிசுக்குத் தக்கவரென்று கருதப்பட்டால் திருவுளச் சீட்டுப்போட்டு அதில் எவர் பெயர் அகப்படுகிறதோ அவரே பரிசுக்குரியவரென்று நிச்சயிக்கப்படுவர். ஒருமுறை பரிசு பெறுபவர் மறுமுறை பரிசுப்போட்டிக்குவர அருகரல்லர்.

7. திருவஞ்சைக்களத்திலுள்ள சிவாலயத்தில் சுந்தரர், சேரமான் பெருமாள் சந்நிதியில் ஆடிச்சுவாதி விழா நடக்கையில் பரிசு வழங்கப்படும்.

8. எந்த வருஷத்திலேனும் பரிசுக்குரியவர் வரமுடியாமல் இறந்து போய்விட்டால் பரிசுத்தொகை அவருடைய சட்டபூர்வமான வார்சுக்குக் கொடுக்கப்படும். பரிசு பெறுபவர் நேரில்வர இயலாவிட்டால் பரிசுத்தொகை அவரிருப்பிடத்துக்கு அனுப்பப்பெறும்.

V. மூவர் தேவாரப் பரிசு. இதற்கு ஏற்படுத்திய மூலதனம் ரூ. 10,000.

தென்னிந்தியாவில் விளங்கிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்னும் மூன்று நாயன்மார்களுடைய தேவாரங்களையும் பயில்வதை ஊக்குவதற்கும் அதனால் தெய்வபக்தியை மக்களிடையே எழுப்பி அவர்களை நன் மக்களாகச் செய்வதற்கும் இப்பரிசு அமைக்கப்பட்டது. அந் நாயன்மார் மூவரும் பரம்பொருளைப் புகழ்வனவும் பக்திச்சுவை மிக்கனவும் ஆகிய பாடல்களால் இந்நாட்டை அலங்கரித்தும், ஸ்தல யாத்திரை செய்தும், எலும்பைப் பெண்ணாக்கியதும், கல்லைத் தெப்பமாக மிதப்பித்ததும், முதலையுண்ட பாலனை அழைத்ததும் இவைபோன்ற பிறவுமான அற்புதச் செயல்கள் புரிந்தும் மக்களின் முன்னேற்றத்திற்கு உழைத்துள்ளார்கள்.

2. இக்கட்டளைத் தொகை ரூ. 10,000 பெறுமானமுள்ள ஸர்க்கார் ஜாமீன் பத்திரங்களாக உள்ளது. இதன் பரிபாலனம் திருப்பனந்தாளிலுள்ள காசிவாசி சாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரியின் நிதியை நிர்வகிக்கும் கமிட்டியார் வசம் இருக்கும்.

3. மூலதனத்திலிருந்து வருஷந்தோறும் கிடைக்கும் வட்டியிலிருந்து ரூ. 200 சீகாழி, திருவாரூர், திருவையாறு, திருப்பனந்தாள் என்னும் முக்கியமான இடங்களிலிருந்து பரிசு பெறுபவர் ஒவ்வொருவருக்கும் ரூ. 50 வீதம் பரிசு அளிக்க உபயோகிக்கப்படும். எஞ்சிய வட்டித்தொகை தேவாரத் திரட்டை அச்சிடுவது முதலிய செலவுகளுக்கும் பரிசுக்கு முதல் மூன்று ஊர்

களிலிருந்து வருபவர்களுடைய பிரயாணச் செலவுக்கும் உபயோகிக்கப்பட வேண்டும். செலவாகாமல் மிஞ்சிய தொகை மூலதனத்தோடு சேர்க்கப்பட வேண்டும்.

4. சீகாழி, திருவாரூர், திருவையாறு என்னும் ஊர்களிலுள்ள ஹைஸ்கூல்களில், 4,5,6-ஆம் பாரங்களிலோ அவற்றுக்குச் சமமாக அமைக்கப்படும் வேறு எந்த வகுப்புகளிலோ படிக்கும் மாணுக்கர்களும், திருப்பனந்தாள், காசிவாசி சாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரியில் யூனிவர்ஸிடி பரீக்ஷைக்குப் படிக்கும் மாணவர்களும் இப்பரிசுப் போட்டிக்கு வரத் தகுதியுடையவர்கள். அவர்கள் கமிட்டியாரால் வெளியிடப்படும் புத்தகத்திலுள்ள தேவாரங்களிலிருந்து, ஒவ்வொரு பதிகத்திற்கும் குறைந்தது ஒரு பாசுரம் வீதம் ஒவ்வொரு நாயனர் தேவாரத்திலிருந்தும் 15 பாசுரங்களுக்குக் குறையாமல் மொத்தம் 50 பாசுரங்களை மனப்பாடம் பண்ணிச் சரியான பண்ணேடு நல்ல இசையில் பாடவேண்டும்.

5. பரிசு அளிப்பதற்குரிய விதிகள் வருமாறு:—

(a) பரிசுப் போட்டிக்கு ஜாதி வேற்றுமை யில்லாமல் ஆண்பாலரும் பெண்பாலரும் வரலாம்.

(b) பரிசுப் போட்டிக்கு வருவோர் மேலே 4-ம் பாராவில் சொல்லியபடி வெளியிடப்பட்ட தேவாரங்களின் தாற்பரியம் விளங்க அவற்றை மனப்பாடம் பண்ணிச் சரியான பண்ணேடு பாடவேண்டும்.

(c) அபேட்சகர்கள் தம் தம் விண்ணப்பங்களைத் தத்தம் கலாசாலைத் தலைமையாசிரியர் மூலமாக ஒவ்வொரு வருஷமும் ஜூலை 31உக்குள் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியின் பிரின்ஸிபாலவர்களுக்கு அனுப்ப வேண்டும்

(d) சீகாழி, திருவாரூர், திருவையாறு, திருப்பனந்தாள் என்னும் ஊர்களிலுள்ள கலாசாலை யதிகாரிகள் தத்தம் கலாசாலைகளில் ஒரு பூர்வாங்கப் பரீக்ஷையை நடத்தி ஒரு கலாசாலை யிருந்தால் மூவரையும், ஒன்றுக்கு மேற்பட்ட கலாசாலைகள் இருந்தால் அவற்றிலிருந்து மொத்தமாக நால்வரையும் பொறுக்கி எடுத்து, ஒவ்வொரு வருஷமும் டிஸம்பர் மாதத்திற்குறிப்பிட்ட ஒரு தேதிக்குள் திருப்பனந்தாளுக்கு அனுப்பவேண்டும். செந்தமிழ்க்கல்லூரியின் பிரின்ஸிபாலும் கமிட்டியாரால் நியமிக்கப்படும் அவருடைய உதவியாசிரியர்கள் இருவரும் சேர்ந்து பொறுக்கி அனுப்பப்பட்டவர்களுக்கு முடிவுப் பரீக்ஷையை நடத்திப் பரிசுக்குத் தகுதியுள்ள சிறந்தவர் ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் தீர்மானிக்கப்படுவர்.

(e) செந்தமிழ்க் கல்லூரி மாணவர்களைப் பரீக்ஷிக்க முடிவுப் பரீக்ஷைக்கு நியமிக்கப்படும் உதவியாசிரியர் இருவரும் பூர்வாங்கப் பரீக்ஷைக்கு நியமிக்கப் பட்டவரல்லாத அன்னியராக இருக்கவேண்டும்.

முக்கிய குறிப்பு:—ஏதேனும் ஒரு காரணத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் திருப்பனந்தாளில் நடைபெறும் முடிவுப்பரீக்ஷைக்கு வரத் தவறினல் பரிசுத் தொகையும் மூலதனத்தோடு சேர்க்கப்படவேண்டும்.

(f) ஒருமுறை பரிசு பெற்றவர் மறுமுறை பரிசுப் போட்டிக்கு வர அருகரல்லர்.

(g) செந்தமிழ்க் கல்லூரியின் பிரின்ஸிபால், தரும ஸ்தாபகரவர்களுக்கும் அவர்களுடைய வார்சுகளுக்கும் பரீக்ஷையின் முடிவுகளைத் தெரிவிக்க வேண்டும்.

6. பரிசு பெறுவோருக்குரிய பரிசுத்தொகையைக் கமிட்டியார் பரிசு பெறுவோர் பெயரால் உண்டியல்களாகச் சம்பந்தப்பட்ட அவ்வக் கலாசாலையதிகாரிகளுக்கு அனுப்புவார்கள்.

7. சீகாழி, திருவாரூர், திருவையாறு என்னும் ஊர்களிலிருந்து போட்டிக்கு வருபவர்களுக்கு (ஒரு கலாசாலை இருந்தால் மூவருக்கும், ஒன்றுக்கு மேற்பட்டவை இருந்தால் நால்வருக்கும்) திருப்பனந்தாளுக்கு வந்து போவதற்குரிய செலவு ஒவ்வொருவருக்கும் ரூ. 4 வீதம் அளிக்கப்படும். (மேலேயுள்ள 5-d பாராவைப்பார்க்க.)

8. மூலதனத்தில் வரவு செலவுகளுக்குக் கமிட்டியார் ஒழுங்கான கணக்கு வைத்திருக்கவேண்டும். பரிசுகளும், வெளியூரிலிருந்து வருவோருக்குப் பிரயாணச் செலவுகளும் கொடுத்த பிறகு மிஞ்சும் தொகையை கமிட்டியார், பரிசுக்கு வருவோருக்கு உதவுவதற்காக மூவர் தேவாரத்திலிருந்தும் பொறுக்கி எடுக்கப்படும் பாசுரங்களைப் புத்தகமாக அச்சிடுவதற்கு உபயோகிக்கலாம்

ஒவ்வொரு வருஷத்திலும் பரிசு பெறுவோர் பெயர்களையும் அளிக்கப்பட்ட பரிசுத் தொகையையும் பிரபலமான இங்கிலீஷ், தமிழ்த் தினசரிகளில் வெளியிடவேண்டும். வருஷத்து வரவு செலவு முழுவதும் அடங்கிய கணக்கு தரும ஸ்தாபகரவர்களுக்கும் அவர்கள் வார்சுகளுக்கும் சேர்ப்பிக்கப்படவேண்டும்.

9. கட்டளைத் தொகையை ஸ்தாபகரவர்களுடைய நோக்கத்துக்கு மாறான வேறு எந்தக் காரியத்துக்கும் உபயோகப்படுத்தலாகாது.

VI. காசி ஹிந்து சர்வகலாசாலைக்கு அளித்த சைவ சித்தாந்தக் கட்டளை ரூ. 60,000.

காசியில் காசிமடத்தை ஸ்தாபித்த மூல புருஷராகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஆதி குமரகுருபர ஸ்வாமிகள் ஞாபகார்த்தமாகச் சைவசித்தாந்த சாஸ்திரத்தில் ஒரு பேராசிரியர் ஸ்தானத்தை அமைப்பதற்காக 1946-ஆம் வருஷம் ஜனவரி மாதம் ஏற்பட்டது இது.

1. இந்த மூலதனமாகிய ரூ. 60,000-த்தைச் சர்வகலாசாலையார் 3½% வட்டி வரக்கூடிய சர்க்கார்ப் பத்திரங்களாகப் போட்டுவைக்கவேண்டும்.

2. இந்தக்கட்டளையின் பரிபாலனம் காசி ஹிந்து சர்வகலாசாலையாரைச் சேர்ந்தது.

3. எந்த சர்வகலாசாலையிலேனும் டிகிரிபெற்றுத் தமிழிலும் ஆங்கிலத்திலும் பயிற்சியுற்றுத் தமிழிலும் சைவ சித்தாந்தத்திலும் ஆசிரியராக இருக்கத் தகுதியுள்ள ஒருவரைச் சர்வகலாசாலையார் ஷை ஸ்தானத்துக்கு நியமிக்கவேண்டும். அவர் சைவசித்தாந்தத்தில் அழுத்தமான பற்றுடையவராகவும் அதைப்பற்றிக் காலேஜ் மாணவர்களுக்குத் தமிழில் உபந்நியாசம் செய்யக்கூடிய திறமையுடையவராகவும் இருக்கவேண்டும்.

4. கட்டளைத் தொகையின் வருஷ வட்டியிலிருந்து இரண்டாயிரத்துக்கு மேற்படாத ஒரு தொகையைப் பேராசிரியருடைய சம்பளத்துக்கு உபயோகிக்க வேண்டும்.

5. சம்பளம் போக எஞ்சிய வட்டித் தொகை மூலதனம் ஒரு லக்ஷம் ரூபாய் ஆகும் வரையில் மூலதனத்தோடு சேர்க்கப்படும். அதன் பிறகு சர்வ கலாசாலையாருடைய உசிதப்படி பேராசிரியருடைய சம்பளத்திற்கு ரூ. 2000-க்கு மேற்பட்டால் தொகையை உபயோகிக்கலாம். அப்பாலும் தொகை மிகுதிப் பட்டால் சைவசித்தாந்த சாஸ்திர சம்பந்தமான புத்தகங்களைத் தமிழிலும், ஹிந்தியிலும், இங்கிலீஷிலும் அச்சிட்டு அவற்றை இலவசமாக எல்லாச் சர்வ கலாசாலையாருக்கும் விநியோகிக்கலாம். மேற்படி நூலில் ஐந்து பிரதிகள் இந்தத் தரும ஸ்தாபகரவர்களுக்கும் அவர்கள் வார்சுகளுக்கும் அனுப்பப் பெற வேண்டும்.

எப்போதாவது ஸர்க்கார் கடன் பத்திரத் தொகையையும் பின் சேர்ந்த தொகையையும் திரும்பக் கொடுத்தால், ஜாஸ்தி வரக்கூடிய ஸர்க்கார் ஜாமீன் பத்திரங்களாக மாற்றிக்கொள்ள ஸர்வகலாசாலையாருக்கு அதிகாரமுண்டு.

6. வருஷந்தோறும் நடைபெற்ற வேலைகளின் விவரத்தையும் வரவு செலவு கணக்குகளையும் தருமஸ்தாபகரவர்களுக்கோ அவர்கள் வார்சுகளுக்கோ அனுப்பவேண்டும்.

7. இந்தக் கட்டளைத் தொகையைத் தருமஸ்தாபகரவர்களுடைய நோக்கத்துக்கு மாறான வேறு எந்தக் காரியத்துக்கும் உபயோகப் படுத்தலாகாது.

இந்தக் கட்டளை காசி ஸர்வகலாசாலையாரால் 28-1-46ல் அங்கீகரிக்கப் பெற்றுள்ளது.

VII. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஆதி குமரகுருபரஸ்வாமிகள் ஞாபகார்த்தச் **சைவசித்தாந்தப் படிப்பின் சம்பள உதவிக் கட்டளை.**

Approved by the Syndicate of the Annamalai University on 17-1-47.

1. தமிழிற் பெரும்புலமை வாய்ந்தவர்களும் காசி முதல் இராமேசுவரம் வரை தமிழ்க்கலையைப் பரவச்செய்தவர்களும் மொகலாய சக்கரவர்த்தியாகிய ஔரங்கசீப் காலத்தில் 16-ஆம் நூற்றாண்டில் காசியில் காசி மடத்தை ஸ்தாபித்தவர்களுமான ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஆதிகுமரகுருபர ஸ்வாமிகளின் நிரந்தர ஞாபகார்த்தமாகச் சைவசித்தாந்த சாஸ்திரம் பரவுவதைக்கருதி இந்தக் கட்டளை ஏற்பட்டது.

2. இதற்கு ஏற்பட்ட மூலதனம் ரூ. 30,000. இதன் பரிபாலனம் அண்ணா மலைச் சர்வகலாசாலையைச் சேர்ந்தது.

சர்வகலாசாலையார் இந்தத் தொகையை வட்டி வரக்கூடிய சர்க்கார் ஜாமீன் பத்திரங்களிற் போடவேண்டும்.

அண்ணாமலைச் சர்வகலாசாலையிற் படிக்கும் மாணக்கர்களுக்குக் கீழே கண்ட நிபந்தனைப்படி சம்பள உதவி அளிக்கப்பெறும்.

3. இதன் வட்டித் தொகையிலிருந்து அண்ணாமலைச் சர்வகலாசாலையில் யோக்கியதையுள்ள ஏழை மாணவர் அறுவருக்கு ரூ. 135 வீதம் (மாதந் தோறும் ரூ. 15-ஆக 9 தவணையில்) சம்பள உதவி ஜாதிமத வித்தியாசம்

கருதாமல் ஆண்பாலராயினும் பெண்பாலராயினும் அளிக்கப்படும். சைவ சித்தாந்தப் புலவர் வகுப்பில் படிப்பவர்களுக்குச் சம்பள உதவிகள் நான்கு அளிக்கப்படும். மற்ற இரண்டும் காலேஜ் வகுப்பில் படிக்கும் மாணுக்கர்களில் தமிழை இரண்டாம் பாஷையாகவும் சைவசித்தாந்த சாஸ்திரத்தை இஷ்ட பாடமாகவும் எடுத்துக்கொண்டு படிப்பவர்களுக்கு அளிக்கப்படும்.

சம்பள உதவி செய்யும் முதல் வருஷத்திற் புலவர் வகுப்பிலுள்ள இருவருக்கும் காலேஜ் வகுப்பிற் படிப்பவர்களுள் சைவசித்தாந்த சாஸ்திரத்தை இஷ்டபாடமாக எடுத்துக்கொண்ட ஒருவருக்கும் உதவி அளிக்கப்படும். இரண்டாம் வருஷத்தில் இந்த உதவியைப் பெற இம்மாதிரி மூவர் தேர்ந்தெடுக்கப்பெறுவார்கள். இதனுல் இரண்டாம் வருஷம் முதல் வருஷந்தோறும் பண உதவி பெறுபவர் மேலே சொன்னபடி அறுவராவர். சம்பள உதவி இரண்டு வருஷங்களுக்கு உண்டு. அதற்கு மாணுக்கர்களுடைய முதல் வருஷப் படிப்பு திருப்திகரமாக இருப்பதோடு அவர்கள் இரண்டாம் வருஷத்திலும் படிக்க வரவேண்டும்.

4. பண உதவிபெறும் எந்த மாணுக்கரேனும் ஒழுங்கீனமாக நடந்தாலும், ஒழுங்காகப் பாடங்கேட்க வராவிட்டாலும், படிப்பில் தேர்ச்சியைக் காட்டாவிட்டாலும் அவரைப் பண உதவிக்குத் தகுதியற்றவரென்று அதை நிறுத்திவிட வைஸ்சான்ஸலருக்கு அதிகாரம் உண்டு. அவர் ஸ்தானத்தில் தகுதியான வேறு ஒரு மாணுக்கருக்கு இவ்வுதவி செய்யலாம். இவ்விஷயத்தில் வைஸ்சான்ஸலருடைய அபிப்பிராயமே முடிவானது.

5. எந்த வருஷத்திலேனும் பணவுதவி செய்யப்படாவிட்டாலும் சில காலம் கொடுத்த பின்பு மாணுக்கர் அதை இழந்துவிட்டாலும் செலவாகாத தொகையும் வட்டியின் மிகுதித் தொகையும் மூலதனத்தோடு சேர்க்கப்படும்.

6. எந்தக் காலத்திலேனும் முதலில் ஏற்பட்ட மூலதனம் வட்டித்தொகைகளுடன் சேர்ந்து போதிய அளவு அதிகரித்தால் சௌகரியத்துக்குத் தக்கபடி உதவித் தொகையை அதிகப்படுத்தவோ சம்பள உதவி பெறுபவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவோ சர்வகலாசாலையாருக்கு அதிகாரம் உண்டு.

7. மேலே சொன்ன பிரகாரம் தொகை செலவான பிறகு மிச்சம் ஏற்படுமாஞல் அந்த தொகையைச் சைவசித்தாந்தப் படிப்புக்குப் பாடமாக உள்ள சிவஞான சித்தியாரின் பிரதிகளை வாங்கிச் சம்பள உதவி பெறும் மாணுக்கர்களுக்கு இலவசமாக விநியோகிக்கலாம்.

8. ஒவ்வொரு வருஷத்தின் முடிவிலும் வரவு செலவு கணக்குகளையும் சம்பள உதவி பெறும் மாணுக்கர்களின் பெயர்களையும் தரும ஸ்தாபகரவர்களுக்கும் அவர்கள் வார்சுகளுக்கும் ஸிண்டிகேட்டார் அனுப்பவேண்டும்.

9. மூலதனத்தின் வரும்படியையோ சேரும் தொகைகளையோ ஸ்தாபகரவர்களுடைய நோக்கத்துக்கு மாறுன எந்தக் காரியத்துக்கும் உபயோகிக்கலாகாது.

VIII. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.

சென்னை ஸர்வகலாசாலை ரிஜிஸ்டிராருக்கு 13-6-46-ல் எழுதிக்கொடுத்த ஒப்பந்தப் பத்திரம் (19-6-46-ல் திருவிடைமருதூர், ஸப்ரிஜிஸ்டிரார் ஆபீஸில் பதிவாகியுள்ளது.)

சென்னை சர்வகலாசாலையார் ஏற்படுத்தியுள்ள தனித்தமிழ் (7-D) வித்துவான் பரீக்ஷைக்கு அனுப்பும்படி மாணாக்கர்களைப் பயிற்றுவதற்கு இக் கல்லூரி ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகளவர்கள் ஞாபகார்த்தமாகத் தமிழ் மொழியின் அபிவிருத்தியைக் கருதி அமைக்கப்பெற்றது.

2. இக்கல்லூரி நடைபெறும் பொருட்டுப் பொறுப்பாக கொடுக்கப்பெற்ற சொத்து மாயூரம் தாலூகா, நக்கம்பாடி கங்காதரபுரத்து வட்டங்களில் கீழையனூர்குடி கிராமத்தில் நன்செயும் புன்செயும் சேர்ந்து ஏகர் 183, செண்டு 42. இவை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஸ்வாமிகளவர்களுடைய பேரில் பட்டாவாகி அவர்களுடைய ஏகபோக அனுபவத்தில் உள்ளன. இவற்றின் பெறுமானம் ஒன்றரை லக்ஷம் ரூபாயும் வருஷ வரும்படி ரூபாய் எண்ணாயிரமும் ஆகும்.

3. மேற்படி சொத்துக்கள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஸ்வாமிகளவர்களாலும் அவர்கள் வார்சுகளாலும் அனுபவிக்கப்பெறும்.

4. இந்தச் சொத்துக்களிலிருந்து எச்செலவும்போக வரும் நிகர வரும்படி இக்கல்லூரியின் நிர்வாகத்துக்காக நியமிக்கப்பெற்றுள்ள கமிட்டியாரிடம் ஒப்புவிக்கப்படும். அவர்கள் கல்லூரியை நடத்துவதற்கு இத் தொகையை உபயோகித்து வருவதோடு தொகைகளை ஒழுங்கான இனங்களில் ஜாக்கிரதையாக வட்டிக்குப் போட்டு வைக்கவும், கல்லூரி செவ்வையாக நடைபெறுவதற்கு வேண்டிய சமயங்களில் தொகையைப் பயன்படுத்தவும் பொறுப்பாளிகளாவர்.

5. சர்க்கார் கிராண்டு கல்லூரிக்கு ஓர் அதிக வரும்படி. இதையும் மேலே சொன்னவாறு பரிபாலிக்கவேண்டும்.

6. ஆசிரியர்களுடைய சம்பளம், புத்தகசாலையை நடத்தல், கல்லூரியின் கட்டிடத்தைப் பாதுகாத்தல் இவை சம்பந்தமாக அவ்வப்போது ஏற்படும் அவசியமான செலவுகளாகிய இவற்றிற்கே மேலேசொன்ன வருஷ வரும்படியை உபயோகிக்கவேண்டும்.

7. கமிட்டியார் வரவு செலவு கணக்கை ஒழுங்காக வைத்திருந்து மாதந்தோறும் அதை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஸ்வாமிகளவர்களிடம் சேர்ப்பிக்கவேண்டும்.

8. சர்க்கார் கிராண்டு உள்படக் கிடைக்கும் வருஷ வரும்படிக்கு ஏற்றபடி செலவு செய்யவேண்டும். மிச்சம் ஏற்பட்டால் அதனை, "ரிசர்வ் பண்டு"க் கென்று காற்பங்கைத் தனியே குறிப்பிட்டுச் சர்க்கார் கடன் பத்திரங்களில் போட்டுவைக்கலாம்.

9. சொத்தின் வருஷ வரும்படி கமிட்டியாரிடம் ஒப்புவிக்கப்படாவிட்டால் ஸ்தாவர சொத்திலிருந்து கிடைக்கும் நிகர வரும்படியை மட்டும் கமிட்டியார் கேட்டு வாங்கிக்கொள்ளலாம்.

10. மேலே குறிப்பிட்ட சொத்தின் வரும்படியை வேறு எந்தக்காரியத்துக்கும் உபயோகிக்கலாகாது.

11. எந்தக் காலத்திலேனும் மேலே குறிப்பிட்ட வரும்படிகளுக்கு மேலே செலவு ஏற்படுமானால் கும்பகோணம் தாலூகா மணிக்குடி கிராமத்தில் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஸ்வாமிகளவர்கள் பேரால் பட்டாவாகி அவர்கள் அனுபவத்தில் உள்ள எழுபதினாயிரம் ரூபாய் பெறுமானம் உள்ள நன்செய் ஏகர் 61 செண்டு 80, புன்செய் ஏகர் 6 செண்டு 49 இவற்றிலிருந்து கிடைக்கும் ரூபாய் 4,000 மேற்படி அதிகச் செலவுக்கு உத்தரவாதம் ஆகும்.

IX. இசைத் தமிழ்த் தருமநிதி.

ரூ. 1,00,000 ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலங்கள்.

1. இந்தத் தருமம், காசியிலுள்ள ஸ்ரீ காசி மடத்தை ஸ்தாபித்தவரும், 16-வது நூற்றாண்டில் தமிழ் மொழியைக் காசி முதல் இராமேசுவரம் வரை பரவச்செய்தவருமான மாபெரும் தம்பிரானும், சகலகலாவல்லுநருமான ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஆதி குமரகுருபரஸ்வாமிகளின் ஞாபகார்த்தமாக ஸ்தாபிக்கப்பெற்றது. இசைக் கருவிகளுடன் இசைத் தமிழை அபிவிருத்தி செய்வதும், அதன் பொருட்டுத் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி உயர் வகுப்பு மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளிப்பதும் இத் தருமத்தின் நோக்கமாகும்.

2. இதற்கு வேண்டிய வருமானம் அளிக்கும் சொத்துக்களாகிய சுமார் 200 ஏக்கர்கள் நன்செய், புன்செய் நிலங்களும், மனைகளும், கட்டிடங்களும், ஏத்தக்குடி, பைங்காட்டூர், அக்கரைக்கோட்டகம், குறிச்சி, நல்லூர், வாட்டார் வட்டம் முதலிய தஞ்சை ஜில்லா மன்னார்குடி தாலுகா கிராமங்களிலிருக்கின்றன; இவை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி தம்பிரான் சுவாமிகள் அவர்களின் பெயரில் பட்டாவுடன் அவர்களது அனுபவத்திலிருப்பவை. சொத்தின் மதிப்பு ஒரு லட்சம் ரூபாய். வருஷ வருமானம் சுமார் ரூ. 5000/- (ரூபாய் ஐயாயிரம்.)

3. இந்தச் சொத்துக்கள் இனியும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் அனுபவத்திலும், அவர்களுக்குப்பின் வரும் உரிமையுள்ளவர்களுடைய அனுபவத்திலும் இருந்து வரவேண்டியது.

4. சொத்தின் வருஷாந்தர வரும்படியில் சர்க்கார் கிஸ்தி, கிராம சிப்பந்திச் செலவுகள், கிராம சமுதாயம், மராமத்து செலவுகள் கிராம தேவதை உத்ஸவச் செலவுகள் முதலியனபோக மிஞ்சும் தொகை கல்லூரி நிர்வாகக் கமிட்டியிடம் ஒப்புவிக்கப்பெறும். கமிட்டியார் இவ்வருமானத்தில் 10 சதவிகிதத் தொகையை ரிசர்வ் நிதிக்காக ஒதுக்கி சர்க்கார் ஜாமீன் பத்திரங்களில் முதலீடுசெய்த பிறகு மீதத் தொகையைக் கீழ்க்குறிப்பிட்ட வீதம் செலவிடுவர். தொகைகளைச் சரியான முறையில் முதலீடு செய்து தருமத்தின் நோக்கத்தைச் சரிவர நிறைவேற்றுவதற்கு அவ்வப்பொழுது உபயோகப்படும்படி செய்வது கமிட்டியின் பொறுப்பாகும்.

5. உபாத்தியாயர்களின் சம்பளம் சங்கீதக் கருவிகள் வாங்குவதற்கான செலவுகள், மற்றும் கீழே, ii, iii, iv பாராக்களில் குறிப்பிட்ட செலவுகள், மேலும் ஸ்தாபன நிர்வாகத்திற்கும், இதர நோக்கங்களைப் பூர்த்திசெய்வதற்கும் அவசியமான செலவுகளுமே வருஷாந்தர வருமானத்திலிருந்தும் செலவாகக் கூடிய நியாயமான செலவுகளாகும்.

(i) (a) செந்தமிழ்க் கல்லூரி மாணவர் ஆண், பெண், ஜாதி வகுப்புப் பேதமின்றிப் பயிற்சியில் கலந்துகொள்ளலாம்.

(b) இது சம்பந்தமாக நியமிக்கப்பட்டுள்ள உபாத்தியாயர்கள் உயர்தர வகுப்பு மாணவர்களில் வாய்ப்பாட்டுப் பாடுவதற்குத் தகுதியுடையவர்களையும் தனி வாத்தியங்கள் வாசிக்கத் தகுதியும் விருப்பமுடையவர்களையும் பொறுக்கி எடுப்பர்.

(c) கல்லூரியின் பாடங்களைப் பாதிக்காமல் தினசரி ஒரு மணி நேரம் இதற்காகச் செலவிடப்படும்.

(d) இசைத் தமிழ் என்பது தேவாரத் திருமுறைகளைப் பண் ஒன்றப் பாடுதலும், மற்றும் தமிழ்ப் பாடல்களை இன்னிசையுடன் பாடு தலும் ஆம்.

(e) இசைக் கருவிகளாவன :—

1. வீணை, 2. தம்பூரா, 3. பிடில், 4. ஹார்மோனியம், 5. புல்லாங்குழல், 6. கஞ்சிரா, 7. மிருதங்கம், 8 கடம், 9. ஜலதரங்கம்.

உபாத்தியாயர்கள் வாய்ப்பாட்டிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர் களுக்கு இசைக்கருவிகளுடன் தமிழ்ப் பாட்டுகளில் பயிற்சி யளிக்கவேண்டும். இசைக்கருவிகளில் மட்டும் பயிற்சிபெறத் தகுதியுடையவர்களுக்கு அந்த அந்த வாத்தியங்களில் பயிற்சியளிக்க வேண்டும். இசைக் கருவிகளுள் முதல் முதல் மிக அவசியமாகக் கருதப்படும் வாத்தியங்களிலேயே பயிற்சி ஆரம்பிக்க வேண்டும். பயிற்சி முன்னேற்றமடையுங்கால் அவ்வப்பொழுது தேவைக்குத் தகுந்தபடியும் பொருள் நிலைமைக்குத் தகுந்தபடியும் மற்ற வாத்தியங்களிற் பயிற்சி அளிக்கப்படும்.

ii. வருஷா வருஷம் ஒரு சஞ்சிகை வெளியிட்டு அதில் வாய்ப்பாட்டிலும் வாத்தியத்திலும் பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை விவரங்கள் இசை விஷயமாக நிபுணர்களின் ஆராய்ச்சிக் குறிப்புகள் கீழே iv-வது பாராவில் குறிப்பிட்டுள்ள இசைத் தமிழ் மகாநாடு வருஷா வருஷம் கூடுவதுபற்றிய விவரங்கள் முதலியவை அச்சிடப்படும்.

iii. பயிற்சி பெறுவோர்களுக்கு ஊக்கம் தருவதற்காக வருஷா வருஷம் வாய்ப்பாட்டிற்கு ரூ. 50-ம். வாத்தியங்களுக்கு ரூ. 50-ம், ரொக்கப் பரிசு இதற்காக நடைபெறும் போட்டியில் சிறப்பாகத் தேர்ச்சி பெறுபவருக்கு அளிக்கப்படும். இந்தத் தொகை கமிட்டி வசமுள்ள நிதியினின்று செலவிடப் படும்.

iv. இசைத் தமிழை அபிவிருத்தி செய்வதற்காக வருடாந்திர வரு மானத்தில் மிகுந்திருக்கும் உபரித் தொகையைக்கொண்டு ஆதி குமரகுருபர ஸ்வாமிகளின் வருஷ நினைவு விழாவின்போது இசைத் தமிழ் மகாநாடு ஒன்று கூட்டித் தேவாரத் திருமுறைவாணர்களும், இதர தமிழ் பாடல்களில் தேர்ந்த வித்துவான்களும் இசைக்கருவி வல்லுநர்களும் மகாநாட்டிற்கு வருவிக்கப் பெற்று இசையரங்கு நடத்தப்பெறும்.

6. மேலே 5-வது பாராவில் கண்ட விஷயங்களுக்காகச் செலவானபின் வருமானத்தில் மிச்சமிருந்தால், சங்கீதப் பயிற்சிபெற்று வரும் மாணவர்களில் தகுதி பெற்றவருக்கு உபகாரச் சம்பளங்கள் கொடுக்கப்படும். இந்த உபகாரச் சம்பளங்கள் மாதா மாதம் ரூ. 10 முதல் ரூ. 15 வரையில் வருஷத்திற்கு 10 மாதங்களுக்கு அளிக்கப்படும்.

7. மேலே 4-வது பாராவில் குறித்தபடி சொத்தின் வருஷாந்தர வருமானம் கமிட்டியின் வசம் ஒப்புவிக்கப்படாவிட்டால் மேலே குறித்த ஸ்தாவர சொத்திலிருந்து கிடைக்கக்கூடிய நிகர வருஷ வருமானத்தை மட்டுமே பெறக் கமிட்டிக்கு உரிமையுண்டு.

8. வரவு செலவு சம்பந்தமான கணக்குகளை ஒழுங்காக எழுதி மாதா மாதம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் பார்வைக்கு அனுப்புவது கமிட்டியின் பொறுப்பு.

9. இந்தத் தருமத்தின் ஸ்தாபகர் அவர்கள் நோக்கத்துக்கு மாறுன வேறு எந்தக் காரியத்துக்காகவும் தருமத்தின் வருமானம் செலவிடப்பட மாட்டாது.

இது மதராஸ் கல்வியிலாகாத் தலைவரது 17-2-47 தேதியிட்ட நெ. ஆர். ஸி. 114 of 47 கடிதப்படி அங்கீகாரம் பெற்றிருக்கிறது.

இது சம்பந்தமான பத்திரம் 16-5-47ல் மன்னார்குடி சப்ரிஜிஸ்திராராபீசில் 1-வது புத்தகம் 931-வது வால்யூம், 99 முதல் 109 பக்கங்களில் 1947-ம் வருஷத்து 1432-ஆம் நம்பர் தஸ்தாவேஜாக ரிஜிஸ்தர் செய்யப்பெற்றுள்ளது.

உ

X. கால்நடை வைத்தியசாலை,

மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர்

உ. வே. சாமிநாதையரவர்கள் ஸ்காலர்ஷிப்.

1947-ம் வருஷம் ஜூன் மாதம் 28-ந் தேதி எழுதிவைத்த

டிரஸ்டு செட்டில்மெண்டு பத்திரம்.

1. திருப்பனந்தாளில் கவர்ன்மெண்டாரால் நடத்தப்பெற்றுவரும் கால்நடை வைத்தியசாலைக்கு நம்மாலும் தஞ்சை ஜில்லா போர்டாராலும் வருஷந் தோறும் வர்த்தனை கொடுக்கப்பெற்று வருவதில் நாம் வருடம் ஒன்றுக்குக் கொடுப்பதாக ஒப்புக்கொண்ட தொகை ஒருவருஷச் செலவின் மொத்தத் தொகையில் கால் பங்கு அல்லது ரூ 683-4-0 இந்த இரண்டில் எது குறைவோ அதுவேயாகும். இத்திட்டம் சென்னை அரசாங்கத்தார் 2782 - எம். எஸ். டிவலப்மெண்டு 27—6—44 தேதியுள்ள உத்தரவில் அங்கீகரிக்கப் பெற்றிருக்கிறது.

2. நாம் பட்டா மிராசுடன் நாகப்பட்டினம் தாலுகா அந்திப்புலியூர் வட்டத்தில் அனுபவித்து வருகிற ஏக்கர் 133 செண்டு 6 நன்செய் புன்செய் நிலமும், கும்பகோணம் தாலுகா திருபுவனம் வட்டத்தில் புன்செய் ஏக்கர் 1 செண்டு 77 நிலமும் ஆக மொத்தம் ஏக்கர் 134 செண்டு 83 நிலங்கள் ஷை முதல் பாராவில் காணப்பெற்றிருக்கும் கால்நடை வைத்தியசாலைக்கு வர்த்தனை தொகை கொடுத்து வரவும் இன்னும் கீழே காணும் இதர சில தருமங்களுக்காகவும் ஒதுக்கி வைக்கப்பெற்றுள்ளன.

4. ஷை சொத்து நம்மாலும் நமக்குப் பின்வரும் உரிமையுள்ளவர்களாலும் எப்பொழுதும் போல் அனுபவிக்கப்பெற்றுவரும்.

5. ஷை சொத்திலிருந்து எச்செலவும் போகவுள்ள நிகர வருமானம் இதில் காணப்பெற்றிருக்கும் தருமங்களுக்குச் செலவிடப்பெறும்,

6. கால்நடை வைத்தியசாலைக்குக் கொடுத்தது போக எஞ்சியுள்ள தொகையிலிருந்து கும்பகோணம் கவர்ன்மெண்டு காலேஜில் நம்முன்னோரால் ஏற்படுத்தப் பெற்றிருப்பதும் ஷை காலேஜ் பழைய மாணவர்களின் சங்கத்தால் 10—2—43-ந் தேதி கடிதத்தில் அங்கீகரிக்கப்பெற்றிருப்பது மான மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே சாமிநாத ஐயரவர்கள் ஸ்காலர்ஷிப்பு அல்லது உபகாரச் சம்பளம் அளிப்பதற்குச் செல விடப்பெறும். ஷை உபகாரச் சம்பளம் ஒரு மாணவருக்கு மட்டும் கொடுப் பதாகும். உபகாரச் சம்பளம் பெறுபவருக்கு இண்டர்மீடியேட்டு வகுப்புகளில் படிக்கும்பொழுது வருடம் ஒன்றுக்கு ரூ. 130-ம் பி. ஏ. வகுப்புகளில் படிக்கும் பொழுது ரூ. 170-மாக அளிக்கப்பெறும்.

7. ஷை தருமங்களுக்குக் கொடுத்தது போக மிச்சமாகும் தொகை இந்தத் தருமம் ஏற்படுத்தியவர்களும் அவர்களுக்குப் பின்வரும் உரிமை யுள்ளவர்களும் தங்கள் இஷ்டம்போல் இதர தருமகாரியங்களுக்காகச் செல விட்டுக்கொள்வார்கள்.

8. எக்காரணத்தைக் கொண்டாவது திருப்பனந்தாளில் ஏற்படுத்தப் பெற்றிருக்கும் கால்நடை வைத்தியசாலை பிற ஊர்களுக்கு மாற்றப்பெற்றாலும் அல்லது நிறுத்தப்பெற்றாலும் அதற்குக் கொடுக்கப் பெற்றுவரும் கண்டிரி பியூஷன் தொகை நிறுத்தப்பெற்று ஷை தொகை வேறு தருமகாரியங்களுக்காக இந்தத் தருமம் ஏற்படுத்தியவர்களின் இஷ்டம்போல் செலவிடப்பெறும்.

இது திருவிடைமருதூர் சப்ரிஜிஸ்டிரார் ஆபீஸில் **5-9-47-ல் 1525-ம்** தஸ்தா **வேஜாகப்** பதிவு செய்யப்பெற்றுள்ளது.

உ

XI. ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமாரசுவாமி அன்னதானக் கட்டளை.

ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமாரசுவாமியென்னும் பெயரால் மிகப் பிரசித்தமாக வழங்கி வரும் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் அவர்களின் நினைவு நாளாகிய வைகாசிமீ அமரபக்ஷம் திருதியை தினத்தில் அன்னதான தருமத்திற்காக ரூ. 10,000-க்கு எழுதிவைக்கப்பெற்ற எண்டௌமெண்டு.

2. இந்தத் தருமத்தின் மூலதனம் 1951-54-ம் வருஷத்திய 3 சத விகிதம் வட்டியுள்ள ரூ. 10,000 சர்க்கார் கடன் பத்திரமாயுள்ளது. ஸ்டாக் சர்டிபி கேட்டு நெ. எம். எஸ். 1333. இதன் நிர்வாகம் நம்மிடத்திலும் நமக்குப் பின் வரும் உரிமையுள்ளவர்களிடத்திலுமே இருந்து வரும்.

3. இதிற்கண்ட சர்க்கார் கடன் பத்திரத்திலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை ஸ்ரீ காசியில் ஆண்டுதோறும் வைகாசி அமரபக்ஷம் திருதியை தினத்தில் பிராம்மண போஜனத்திற்காகவும் மகேசுவர பூஜைக்காகவும் செல விடப்பெறும்.

4. அந்த அந்த வருஷத்தில் உள்ள விலைவாசியை அனுசரித்து ஏற் படுத்தும் திட்ட ஜாப்தாவில் உள்ளபடி அன்னதானம் நடத்தப்பெறும்.

5. இந்தத் தருமம் ஒவ்வொரு வருஷத்திலும் நம்மாலும் நமக்குப் பின் வரும் உரிமையுள்ளவர்களாலும் நடத்தப்பெறும். இந்தத் தருமநிதி நம்மாலும் நமக்குப் பின்வரும் உரிமையுள்ளவர்களாலும் வேறெந்தக் காரியத்துக்கும் உபயோகப்படுத்தப்படமாட்டாது.

இது சம்பந்தமான பத்திரம் திருவிடைமருதூர் ஸப்ரிஜிஸ்திரார் ஆபீஸில் **5-7-47**-ல் **1947**-ஆம் வருஷத்து **18**-ம் நம்பர் தஸ்தாவேஜாகப் பதிவு செய்யப் பெற்றுள்ளது.

XII. இராமேசுவரத்தில்

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் அன்னதானக் கட்டளை.

இராமேசுவரத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் அவர்களின் நினைவு நாளாகிய வைகாசி அமரபக்ஷம் திருதியை தினத்தில் அன்னதான தருமத்திற்காக ரூ. 10,000-க்கு எழுதிவைக்கப்பட்ட எண்டௌமெண்டு.

2. இந்தத் தருமத்தின் மூலதனம் 1951—54-ம் வருஷத்திய 3 சதவிகிதம் வட்டியுள்ள ரூ. 10,000 சர்க்கார் கடன் பத்திரமாயுள்ளது. ஸ்டாக் சர்டிபிகேட் எம். எஸ். நெ. 1334. இதன் நிர்வாகம் நம்மிடத்திலும் நமக்குப் பின் வரும் உரிமையுள்ளவர்களிடத்திலுமே இருந்து வரும்.

3. இதிற் கண்ட சர்க்கார் கடன் பத்திரத்திலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை இராமேசுவரத்தில் வைகாசி மாதம் அமரபக்ஷம் திருதியை தினத்தில் பிராம்மண போஜனத்திற்காகவும், மகேசுவர பூஜைக்காகவும் ஆண்டுதோறும் செலவிடப்பெறும்.

4. அந்த அந்த வருஷத்தில் உள்ள விலைவாசியை அனுசரித்து ஏற்படுத்தும் திட்ட ஜாப்தாவில் உள்ளபடி அன்னதானம் நடத்தப் பெறும்.

5. இந்தத் தருமம் ஒவ்வொரு வருஷத்திலும் நம்மாலும் நமக்குப் பின் வரும் உரிமையுள்ளவர்களாலும் நடத்தப்பெறும். இந்தத் தரும நிதி நம்மாலும் நமக்குப் பின் வரும் உரிமையுள்ளவர்களாலும் வேறெந்தக் காரியத்துக்கும் உபயோகப்படுத்தப்படமாட்டாது.

இந்தப் பத்திரம் 5-7-47-ல் திருவிடைமருதூர் ஸப்ரிஜிஸ்திராராபீஸில் 1947 ஆம் வருஷத்து 17-ஆம் நம்பர் தஸ்தாவேஜாகப் பதிவு செய்யப்பெற்றுள்ளது.

உ

XIII. **1947**-ம் வருஷம் செப்டம்பர் மாதம் **17**-ந் தேதி திருநள்ளாற்றில்

ஏழைகளுக்கு அன்னமளித்தல்

முதலிய தருமத்திற்கு எழுதிவைத்த டிரஸ்டு செட்டில்மெண்டு, திருவிடைமருதூர் ஸப் ரிஜிஸ்டிரார் ஆபீஸில் 17-9-47-ல் 21-ஆம் நெம்பர் தஸ்தாவேஜாகப் பதிவாகியிருக்கிறது.

1. இந்தத் தருமத்துக்குரிய மூலதனம் ரூ. 100-க்கு ரூ. 3/- வீதம் வட்டி கிடைக்கும். ரூ 3,000 (ரூபாய் மூவாயிரம்) பெறுமான எம். எஸ்.

017181-ம் நம்பர் உள்ள சர்க்கார் கடன் பத்திரமாகும். இந்த தருமத்தின் பரிபாலனம் நம்மிடத்திலும் நமக்குப் பின் வரும் உரிமையுள்ளவர்களிடத்திலும் இதன் 7-வது பாராவில் கண்டபடியுள்ள ஐந்து உத்தியோகங்களை அவ்வப்போது வகிக்கிற ஐந்து நபர்கள் அடங்கிய ஒரு கமிட்டியின் பொறுப்பில் இருந்து வரவேண்டும்.

2. இந்த செட்டில்மெண்டு பிரஞ்சு இந்தியா திருநள்ளாறு ஆலயத்துக்கு நம்மால் 28-6-1946-ல் இனாமாக அளிக்கப்பெற்றிருக்கும் மா இரதத்தில் வருஷந்தோறும் ஆவணி மூலத்தில் சுவாமி புறப்பாடு செய்யும் விசேஷத்துக்கும் ஷை தினத்தில் ஏழைகளுக்கு அன்னம் அளிக்கவும் ஏற்படுத்தப் பெற்றிருக்கிறது.

3. இந்த மூலதனத்திலிருந்து வருஷந்தோறும் கிடைக்கும் வட்டியிலிருந்து ரூ. 20 (ரூபாய் இருபது) ரிசர்வ் பண்டாக ஒதுக்கி வைத்தது போக பாக்கித் தொகை ரூ. 70 ரூபாய் எழுபதையும் வருஷந்தோறும் ஷை இரதத்தில் சுவாமி எழுந்தருளச் செய்யவும் ஏழைகளுக்கு அன்னம் அளிக்கவும் செலவிட வேண்டியது. இந்த ரூ. 70 ரூபாய் எழுபதையும் வட்டி வருமானத்துக்குத் தகுந்தவாறு கூட்டவோ குறைக்கவோ கமிட்டியாருக்கு உரிமையுண்டு.

4 ஒவ்வொரு வருஷமும் ஆவணி மாதம் மூல நக்ஷத்திரங் கொண்டாட்ட நன்னாளில் ஷை இரதத்தில் சுவாமி எழுந்தருளச் செய்யவேண்டியது. ஷை தினத்தில் ஷை ஆலயத்தில் அபிஷேக அலங்கார நைவேத்தியங்களுக்காக ரூ. 35 (ரூபாய் முப்பத்தைந்துக்குள்) ஏற்படுத்தும் திட்ட ஜாப்தாவில் கண்டபடி செலவு செய்யவேண்டும்.

5. ஷை ஆவணி மூலம் திருநாளில் ஷை இரதம் இழுக்கும் பணியைச் செய்யும் ஆட்களுக்கும் இதர ஏழை மக்களுக்கும் அன்னம் அளிக்கும் தருமத்துக்காக ரூ. 35 (ரூபாய் முப்பத்தைந்து) திட்ட ஜாப்தாப்படி செலவிடப்படும்.

6. இந்த மூலதனத்தொகை எப்போதாவது சர்க்காரால் திருப்பி அளிக்கப்பட்டால் அதை அச்சமயம் மிக வுயர்ந்த சர்க்கார் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யவேண்டியது.

7. இந்தத் தரும பரிபாலனம் செய்வதற்குரிய கமிட்டியில் அங்கத்தினர்கள் ஐவர் ஆவர். நம்மிடத்திலும் நமக்குப் பின்வரும் உரிமையுள்ளவர்களிடத்திலும் வேலை பார்த்து வரும்

காறுபாறு, அட்டவணை, ஷராப், இமார்த்தி,

இராயசம்

ஆக ஐந்து உத்தியோகங்களை வகிக்கிறவர்கள் ஷை கமிட்டியில் அங்கத்தினர்களாயிருப்பர்.

8. இதன் 3-வது பாராவில் கண்ட ரிஸர்வ் பண்டு தொகை ரூ. 200 ரூபாய் இருநூறுக்கு மேல் கூடின பிறகு ரூ. 200-க்கு மேற்படும் தொகை ஷை தினத்தில் இந்தத் தரும ஸ்தாபகரவர்களுடைய உசிதம்போல் அன்னமளிக்கும் தருமத்திற்குச் செலவிடப் பெறும்.

9. இந்த மூலதனத் தொகையும் பின்னும் சேர்க்கப்பெறும் தொகைகளும் நமது பேரிலும் நமக்குப் பின்வரும் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்து வரவேண்டும்.

XIV. காசியில்
ஸ்ரீ குமாரசாமி அன்னதானக் கட்டளை
ரூ. 17,000

ஸ்ரீ குமாரசாமி என்ற பெயருடன் காசியில் பிரபலமாக விளங்கிய ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகளுடைய ஞாபகார்த்தமாக ஆண்டு தோறும் மார்கழி மாதத்தில் அதாவது டிசம்பர் 16-ந் தேதி முதல் ஜனவரி 14-ந் தேதி முடிய ஸ்ரீ காசியில் அன்னதானம் நடைபெறும் பொருட்டு விசேஷ பக்தியுடன் இந்தக் கட்டளை அமைக்கப்பெற்றது.

2. இதற்கு ஏற்படுத்திய மூலதனமாகிய ரூ. 17,000, 100-க்கு 3 வீதம் வட்டி வரக்கூடிய ஸர்க்கார் கடன் பத்திரமாக உள்ளது. இந்தக் கட்டளை இதனை ஸ்தாபித்தவர்களாலும் அவர்களுடைய வார்சுதாரர்களாலும் பரிபாலிக்கப்பெற்று வரும்.

3. இந்தக் கடன் பத்திரத்திலிருந்து வருஷந்தோறும் கிடைக்கும் வட்டித் தொகையை மார்கழி மாதத்தில் அதாவது டிசம்பர் 16-ந் தேதி முதல் ஜனவரி 14-ந் தேதி முடிய, காசியிலுள்ள நமது சத்திரத்தில் நித்தியப்படி வழக்கமாக நடக்கும் அன்னதானத்துடன் சிறப்பாகப் பிராமண சமாராதனைக்கும், மகேசுவர பூஜைக்கும் (சைவர்களுடைய சாப்பாட்டுக்கும்) உபயோகிக்கவேண்டும்.

4. சாப்பாடு போடவேண்டிய காலத்தில் இருக்கும் சாமான்களின் விலைவாசிக்கு ஏற்றவாறு ஜாப்தா போட்டு அதன்படி சாப்பாடு போடப்படும்.

5. வருஷந்தோறும் இந்தத் தருமத்தை இதன் ஸ்தாபகரவர்களும், அவர்களுடைய வார்சுகளும் நடத்தி வருவார்கள். ஸ்தாபகரவர்களுடைய நோக்கத்துக்கு மாறான வேறு எந்தக் காரியத்துக்கும் இந்தக் கட்டளையை மாற்றக்கூடாது.

இந்தப் பத்திரம் 8-10-47-ல் திருவிடைமருதூர் ஸப் ரிஜிஸ்டிரார் ஆபீஸில் 22-ஆம் நம்பர் தஸ்தாவேஜாகப் பதிவு செய்யப்பெற்றது.

XV. திருப்பனந்தாளிலுள்ள ஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி பேருக்கு ஒரு லக்ஷம் 1,00,000 ரூபாய் பெறுமானமுள்ள நிலங்களைப் பொறுத்து எழுதிவைத்த டிரஸ்டு செட்டில்மெண்டு பத்திரம்

1. நமக்கு முன் ஸ்தானத்தில் இருந்து விளங்கிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகளவர்கள் ஞாபகார்த்தமாகத் தமிழ் மொழியின் ஆக்கங் கருதி நம்மால் ஒரு தமிழ்க் கல்லூரி திருப்பனந்தாளில் அமைக்கப்பெற்றது. சென்னை அரசாங்கத்தார் 17-9-45-ம் தேதியுள்ள Dis. No. 3154/45 உத்தரவில் கல்லூரியை அங்கீகரித்திருப்பதோடு சென்னை சர்வகலாசாலையார் 24-5-46-ம் தேதியுள்ள A. 2788 கடிதத்தின் மூலம் கல்லூரியை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

2. பத்திரத்திற் குறிப்பிட்ட சொத்துக்கள் தஞ்சை ஜில்லா, கும்பகோணம் தாலுகா, வீராக்கண்வட்டம், ஆனைக்கோயில் கிராமத்தில் உள்ள நன்செய், புன்செய், நத்தம் மூன்றும் சேர்ந்து 97 ஏகரா 37 செண்டு விஸ்தீரணமுள்ள நிலங்களாகும். இவற்றின் பெறுமானம் ரூ. 1,00,000 (ஒரு

லக்ஷம்). ஷை நிலங்களிலிருந்து எச்செலவும் (சர்க்கார் கிஸ்தி, கிராமசிப்பந்தி கள் செலவு, கிராம சமுதாயம், மராமத்துச் செலவு முதலியன) போக நிகர வரும்படி வருஷத்துக்கு ரூ. 5,000 ஆகும். இந்த நிலங்கள் நம்பேரில் பட்டா வாகி நமது அநுபவத்தில் இருக்கின்றன.

காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரியில் படிக்கும் ஏழை யாகவும் தகுதியாகவும் உள்ள மாணுக்கர்களுக்கு உணவளிக்க இந்த நிகர வரும்படியை நிலையாக உபயோகித்து வரவேண்டும்.

3. ஷை சொத்துக்கள் நம் அநுபவத்திலும் நிர்வாகத்திலும் நம் வார்சு களுடைய அநுபவத்திலும் நிர்வாகத்திலும் இரண்டாவது பாராவில் கண்ட ஏற்பாட்டுக்கு உட்பட்டு இருந்துவரும்.

4. இத்தனை மாணுக்கர்களுக்கு உணவளிக்கலாம் என்பது, அவர்களைத் தேர்ந்தெடுத்தல், சாப்பாடுவகை முதலியன கிடைக்கக் கூடிய பணத்துக்குத் தக்கபடி உசிதம்போல் நம்மாலும் நம் வார்சுகளாலும் நிச்சயித்து ஏற்பாடு செய்யப்படும்.

5. 2, 4 பாராக்களிற் குறித்தபடி மாணுக்கர்களுக்கு உணவளித்த பிறகு ஏதேனும் மிச்சப்படுமானல் நாமும் நம் வார்சுகளும் தீர்மானிக்கிறபடி இதுபோன்ற வேறு தர்மங்களுக்கு அந்த மிச்சத் தொகை உபயோகிக்கப்படும்.

6. மேலே குறிப்பிட்ட சொத்துக்களின் வரும்படியை மேலே விவரித் துள்ளபடி யல்லாமல் வேறு எந்தக்காரியத்துக்கும் உபயோகிக்கக்கூடாது.

மேற்படி செட்டில்மெண்ட் பத்திரம் 16-10-47-ல் திருவிடைமருதூர் ஸப் ரிஜிஸ்திரார் ஆபீஸில் 2152-ஆம் நெம்பர் தஸ்தாவேஜாகப் பதிவு செய்யப் பெற்றது.

XVI. திருப்பனந்தாளில் ஜன வைத்தியசாலை.

மடத்தைச் சார்ந்த மணிக்குடி கிராமத்திலுள்ள 44 ஏகரா 22 செண்டு நன்செய் நிலங்களின் நிகர வரும்படியை வருஷந்தோறும் வர்த்தனையாகக் கொடுத்து இந்த வைத்தியசாலை செவ்வையாக நடந்து வருகிறது.

XVII. ஸ்நான கட்டம்.

திருப்பனந்தாளில் ஓடுகின்ற சுப்பிரமணிய நதி என்கிற மண்ணியாற்றில் பொது ஜனங்களின் உபயோகத்துக்காக ரூ. 2,900 செலவில் நல்ல படித்துறை களோடு கூடிய ஸ்நான கட்டமொன்று அமைக்கப்பெற்று ஜனங்களுக்கு மிக்க பயனளித்து வருகிறது.

XVIII. மணிக்கூண்டு.

கும்பகோணம் நகரத்தில் மகாமகக் குளத்துக் கருகே ஒரு பிரதானமான இடத்தில் ரூ. 25,000 செலவில் அழகான ஒரு மணிக்கூண்டு கட்டப்பெற்று விளங்குகிறது.

XIX. ஸ்ரீ வைகுண்டத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள்

அன்னதானக் கட்டளை ரூ. 9,000.

காசி ஸ்ரீ குமாரசாமி மடத்தின் ஸ்தாபகராகிய ஸ்ரீலஸ்ரீ ஆதி குமர குருபர ஸ்வாமிகளின் ஞாபகார்த்தமாக ஆண்டு தோறும் அவர்களுடைய தினமாகிய வைகாசி மாதம் அமரபக்ஷம் திருதியையில் திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டத்தில் அன்னதானம் செய்ய மிகுந்த பக்திபூர்வமாக இந்தக் கட்டளை ஏற்படுத்தப்பெற்றது.

2. இதன் மூலதனமாகிய ரூ. 9,000 100-க்கு 3 வீதம் வட்டி கிடைக்கக்கூடிய ஸர்க்கார் கடன் பத்திரமாக உள்ளது. இந்தக் கட்டளையின் நிர்வாகம் நம்மிடத்திலும் நம் வார்சுகளிடத்திலும் இருக்கும்.

3. காசியில் ஸ்ரீ குமாரசாமி மடத்தை ஸ்தாபித்த ஸ்ரீலஸ்ரீ ஆதி குமர குருபர ஸ்வாமிகள் அவதரித்த ஸ்தலமாகிய ஸ்ரீவைகுண்டத்தில் பிராமண சந்தர்ப்பணையும் மகேசுவர பூஜையும் (சைவர்களுக்கு அன்னமளித்தலும்) நடத்த இந்த ஸர்க்கார் கடன் பத்திரத்தின் வருஷ வட்டி வரும்படி உபயோகிக்கப்பெறும்.

4. ஆண்டுதோறும் மேலே குறிப்பிட்ட விசேஷதின சமயம் இருக்கும் சாமான்களின் விலைவாசியைப் பொறுத்துத் திட்ட ஜாப்தா தயார்செய்து அதற்குத் தக்கபடி அன்னதானம் நடத்தப்பெறும்.

5. இந்தக் கட்டளையை ஸ்தாபித்தவர்களும் அவர்களுடைய வார்சுகளும் ஆண்டுதோறும் அன்னதானத்துக்கு ஏற்பாடு செய்து நடத்திவருவார்கள். மேலே குறிப்பிட்டபடி யல்லாமல் வேறு எந்தக் காரியத்துக்கும் இந்தக் கட்டளை மாற்றப்படமாட்டாது.

இந்தப் பத்திரம் 1-11-47-ல் எழுதி அதே தேதியில் திருவிடைமருதூர் ஸப் ரிஜிஸ்திராராபீஸில் 1947-ம் வருஷத்து 26-ஆம் நம்பர் தஸ்தாவேஜாகப் பதிவு செய்யப்பெற்றது.

XX. மாக்ஷிமைபொருந்திய மைசூர் மஹாராஜா அவர்கள்

தேவாரப் பரிசு, ரூ. 5,000.

உதார குணமும், தெய்வ பக்தியும், சங்கீத அபிமானமும் கொண்ட மைசூர் மஹாராஜாவாகிய மாக்ஷிமை பொருந்திய ஜய சாமராஜேந்திர உடையார் பஹதூரின் பெயரால் இந்தப் பரிசு அமைக்கப்பெற்றது. மைசூர் ஸமஸ்தானத்தில் தேவாரம் விரும்பப் பெற்று அதன் ஞானம் பரவவேண்டு மென்பதே இந்தப் பரிசின் நோக்கம். மாக்ஷிமை பொருந்திய மைசூர் மகாராஜா அவர்கள் தேவாரப் பரிசு என்பதே இதன் பெயர்.

2. இந்தப் பரிசின் மூலதனமாகிய ரூ. 5,000 ஸர்க்கார் ஜாமீன் பத்திரமாக உள்ளது. இதன் நிர்வாகம் மைசூர் ஸர்வகலாசாலையாரிடம் இருக்கும். மேற்படி ஸர்வகலாசாலையார் தங்கள் உசிதப்போல் அவ்வப்போது ஜாஸ்தி வட்டி வரக்கூடிய ஸர்க்கார் ஜாமீன் பத்திரங்களாக இந்த மூலதனத்தை மாற்றி வைக்கலாம். ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து ரூ. 100 தேவாரத்தை மிகவும் நன்ருகப் பாடுபவருக்குப் பரிசாக அளிக்கப்பெறும். சம்பந்தர், அப்பர், சுந்தரர் இந்த மூவர் தேவாரங்களிலிருந்தும் எல்லாப் பண்களும் கலந்திருக்கும்படி 50 பாசுரங்களை ஸர்வகலாசாலையார் 4 வருஷங்களுக்கு ஒரு முறை பொறுக்கியெடுத்து அவற்றை அரும்பதவுரையுடன் அச்சிட்டு ஒரு புத்தகமாக வெளியிடவேண்டும். ஒரு முறை பொறுக்கிய பாசுரங்களுக்குப் பதிலாக வேறு பாசுரங்களை அடுத்த முறை பொறுக்கவேண்டும். வட்டியிலிருந்து பரிசுக்காக ரூ. 100 ஒதுக்கி மிச்சத் தொகையை இந்தத் தேவாரத்திரட்டை அச்சிட்டு வெளியிட உபயோகித்துக் கொள்ளலாம். அப்பால் மிஞ்சும் வட்டித் தொகை மூலதனத்தோடு சேர்க்கப்பட வேண்டும். பரிசுப் போட்டிக்காக வரும் மாணுக்கர்களுக்கு இலவசமாகத் தேவாரத் திரட்டின் பிரதிகளை விநியோகிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

3. பரிசளிப்பு சம்பந்தமான நிபந்தனைகளாவன :—

(i) மைசூர் ஸர்வகலாசாலையாரால் ஏற்றுக்கொள்ளப்பெற்ற காலேஜ்களில் உள்ள மாணவர்கள் ஜாதி மத பேதமில்லாமல் ஆண்பாலாரேனும், பெண்பாலாரேனும் இந்தப் பரிசுப் போட்டிக்கு வரலாம்.

(ii) பரிசுப் போட்டிக்கு வர விரும்பும் மாணுக்கர்கள் மேலே இரண்டாம் பாராவில் குறிப்பிட்ட ஐம்பது தேவாரப் பாசுரங்களையும் பாராமல் உரிய பண்ணில் நல்ல சாரீரத்துடன் பாடக்கூடியவர்களாக இருக்கவேண்டும்.

(iii) எந்த ஆண்டிலேனும் இருவரோ மேற்பட்டவரோ பரிசுக்குத் தக்கவர்களென்று கருதப்பட்டால், திருவுளச் சீட்டுப்போட்டு யார் பெயர் அதில் கிடைக்கிறதோ அவரே பரிசுபெற உரியவரென்று தீர்மானிக்கப்பெறுவர்.

(iv) ஒரு முறை பரிசு பெற்றவர் மறுபடி பரிசுப் போட்டிக்கு வர உரியரல்லர்.

4. ஸர்வகலாசாலையின் கான்வொகேஷன் சமயத்தில் பரிசு வழங்கப் பெறும். எந்த வருஷத்திலேனும் பரிசு பெற வேண்டியவர் நேரில் வந்து பெற்றுக்கொள்ள முடியாவிட்டால் பரிசுத் தொகையை அவருக்கு அனுப்புவதற்கு ஸர்வகலாசாலையார் ஏற்பாடு செய்யவேண்டும். பரிசை அடைவதற்கு முன் பரிசுக்குரியவர் இறந்து விட்டால் அவருடைய சட்டபூர்வமான வார்சுகளுக்குப் பரிசுத்தொகை கொடுக்கப்பெறும்.

5. எந்த வருஷத்திலோ, பல வருஷங்களிலோ பரிசுப் போட்டிக்கு ஒருவரும் வராவிட்டால் பரிசுத் தொகையை மூலதனத்தோடு சேர்த்துவிட வேண்டும். இவ்வாறு அவ்வப்போது மூலதனத்தோடு பரிசுத்தொகை சேர்ந்து ஜாஸ்தி வட்டி வரும்படி கிடைக்க இடமுண்டானால், ஸர்வகலாசாலையார் உசிதம்போல் காலத்துக்கேற்றபடி பரிசுத் தொகையை அதிகப்படுத்தவோ, அதிகப் பரிசுகளை ஏற்படுத்தவோ ஏற்பாடு செய்யலாம்.

6. வருஷந்தோறும் பரிசு வழங்கிய விவரம், பரிசு பெற்றவர் பெயர், விலாசம், அந்த வருஷத்து வரவு செலவு கணக்கு இவற்றை இந்தப் பரிசை ஏற்படுத்தியவர்களுக்கும் அவர்களுடைய வார்சுகளுக்கும் அனுப்பி வர வேண்டும்.

7. இந்தக் கட்டளையை மேலே குறிப்பிட்ட காரியத்துக்கன்றி வேறெதற்கும் மாற்றக்கூடாது.

குறிப்பு :—இவ் விஷயம் மைசூர் கவர்ன்மென்டாருடைய ஆலோசனையில் இருந்து வருகிறது.

XXI. ஸ்ரீ குருஞான சம்பந்த ஸ்வாமிகள் ஞாபகார்த்தமான

தேவாரப் பரிசுக் கட்டளை.

தேவாரத் திருமுறைகளின் அறிவு மாணுக்கர்கள் கோஷ்டியில் நன்றாக ஊன்றிப் பரவவேண்டுமென்ற நோக்கத்துடன், தர்மபுரம் ஆதீனத்தின் மூல புருஷரும், புகழ்பெற்ற முனிபுங்கவரும் சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை ஜனங்களுக்கு மிக நன்றாக விளக்கியவரும் குருஞான சம்பந்த சுவாமிகளென்னும் பிரபலமான பெயரோடு விளங்கியவருமான ஸ்ரீலஸ்ரீ ஞான சம்பந்த சுவாமிகளின் ஞாபகார்த்தமாக இந்தக் கட்டளை பக்தியுடன் அமைக்கப்பெற்றது.

2. இந்தக் கட்டளையின் மூலதனம் ரூ. 5,000 பெறுமானம் உள்ள 100-க்கு 3 வட்டி கிடைக்கும் ஸர்க்கார் ஜாமீன் பத்திரமாகவுள்ளது. இதன் நிர்வாகம் மாயூரம் நகர பரிபாலன சபையாரிடமிருக்கும்.

3 ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து தேவாரத்தை நன்ருகப் பாடக்கூடிய முதலிருவருக்கு முறையே ரூ. 60, ரூ. 50 ஆக ரூ. 110 அளிப்பதற்கு உபயோகிக்கப் பெறும். மிச்சத் தொகை தேவாரத் திரட்டை அச்சிட்டு வெளியிடுவதற்கும் எதிர்பாராது நேரக்கூடிய வேறுசெலவுகளுக்கும் உபயோகிக்கப்படும்.

4. மாயூரம் முனிஸிபல் எல்லைக்குள்ளிருக்கும் ஹைஸ்கூல்களில் IV, V, VI பாரங்களிலோ அவற்றிற்குச் சமமான வேறு வகுப்புகளிலோ படிக்கும் மாணவர்களே இந்தப் பரிசுப் போட்டிக்கு வரலாம். தேவாரப் பாசுரங்கள் ஐம்பதை உரிய பண்களில் நல்ல சாரீரத்தோடு பாடக்கூடிய மாணக்கர்களே பரிசுப் போட்டிக்கு வரத்தகுதியானவர்கள். ஐம்பது தேவாரங்கள் இன்னவை யென்பது அவ்வப்போது முன்னதாகவே தெரிவிக்கப்படும்.

5. சம்பந்தர், அப்பர், சுந்தரர் இந்த மூவர் தேவாரங்களிலிருந்தும் எல்லாப் பண்களும் கலந்து வரும்படி ஐம்பது பாசுரங்களை நான்கு வருஷங்களுக்கு ஒருமுறை மாயூரம் நகர பரிபாலன சபையார் தேர்ந்தெடுத்து அவற்றை அரும்பதவுரையுடன் ஒரு திரட்டாக அச்சிட்டு வெளியிடவேண்டும். அடுத்த நான்கு வருஷங்களுக்குப் பொறுக்கி யெடுக்கும் தேவாரப் பாசுரங்கள் இவை யல்லாத வேருக இருக்கவேண்டும்.

6. பரிசுக்குரிய நிபந்தனைகள் வருமாறு :—

(i) மாயூரம் முனிஸிபல் எல்லைக்குள் இருக்கும் ஹைஸ்கூல்களில் IV, V, VI ஆம் பாரங்களில் படிப்பவர்கள் ஜாதி மத பேதமின்றி ஆண்பாலாராயினும் பெண்பாலாராயினும் பரிசுப் போட்டிக்கு வரலாம்.

(ii) பொறுக்கி யெடுத்த ஐம்பது தேவாரங்களையும் பாராமல் சரியான பண்களில் நல்ல சாரீரத்துடன் பாடவேண்டும்.

இதற்காக ஏற்பட்டுள்ள பரீக்ஷை இரண்டு பிரிவுகளையுடையது.

முதற் பிரிவு : தமிழில் 50 தேவாரங்களையும் சரியான பண்ணில் இசையுடன் பாராமல் பாடி, பாசுரங்களின் பொருளையும் கருத்தையும் தெரிவிக்க வேண்டும். இதற்கேற்பட்ட அம்சம் (மார்க்) 50.

இரண்டாம் பிரிவு : குறிப்பிட்ட 50 தேவாரங்களுக்குள் பொறுக்கிக் கொடுக்கும் எவற்றையேனும் சரியான பண்ணில் பாசுரங்களின் கருத்தை நன்ருக அறிந்துகொண்டது விளங்கும்படி நல்ல இசையுடன் பாடவேண்டும் இதற்கு ஏற்பட்ட அம்சம் 50.

(iii) வருஷந்தோறும் மாயூரம் நகர பரிபாலன சபையார் அந்த அந்த ஸ்கூல் ஹெட்மாஸ்டர்கள் மூலம் அவரவர்கள் ஸ்கூலில் படிக்கும் மாணக்கர்களுடைய விண்ணப்பங்களைப் பரிசுப் போட்டிக்கு வருவிக்கலாம். விண்ணப்பம் செய்துகொண்டவர்களுக்குத் தேவாரத்திரட்டுப் பதிகங்கள் இலவசமாக வழங்கப்பட வேண்டும்.

(iv) அந்த அந்த ஸ்கூல் அதிகாரிகள் தங்கள் தங்கள் பாடசாலைகளில் பூர்வாங்கப் பரீக்ஷை யொன்று நடத்தி அதில் சிறந்த ஐந்து மாணுக்கர்களைப் பொறுக்கி முடிவுப் பரீக்ஷைக்கு அனுப்பவேண்டும். அந்த முடிவு பரீக்ஷை மாயூரம் முனிஸிபல் சபையார் அமைக்கும் பரீக்ஷை சங்கம் ஒன்றால் மாயூரத்தில் நடத்தப்படும். அந்தச் சங்கத்தின் அங்கத்தினர்கள், மாயூரம் முனிஸிபல் சேர்மன், முனிஸிபல் கமிஷனர், பரீக்ஷைக்கு வரும் மாணுக்கர்கள் படிக்கும் ஒவ்வொரு ஹைஸ்கூலுக்கும் ஒவ்வொரு பிரதிநிதி ஆகிய இவர்களே யாவர். பரீக்ஷை நடைபெறும்பொழுது தருமபுரம் மடத்திலிருந்து ஒரு பிரதிநிதியை அழைத்துக்கொள்ளலாம்.

(v) ஒருமுறை பரிசு வாங்கியவர் மறுமுறை போட்டிக்கு வரத் தகுதியற்றவராவர்.

(vi) பரீக்ஷையின் முடிவை மாயூரம் முனிஸிபாலிடியார் இந்தக் கட்டளையை ஏற்படுத்தியவர்களுக்கும், அவர்களுடைய வார்சுகளுக்கும் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிகாரிகளுக்கும் தெரிவிக்கவேண்டும்.

7. முதற் பரிசின் தொகை ரூ. 60; இரண்டாம் பரிசின் தொகை ரூ. 50. முடிவுப் பரீக்ஷையில் ஜாஸ்தியான அம்சங்களை வாங்குபவருக்கு முதற் பரிசும் அதற்கடுத்தபடியான அம்சங்களை வாங்குபவருக்கு இரண்டாவது பரிசும் அளிக்கப்பெறும். வருஷந்தோறும் ஐப்பசி மாதம் கடைமுழுக்கு நாளில் மாயூரத்தில் காவிரியின் வடகரையிலுள்ள வள்ளலார் கோயில் தீர்த்த மண்டபத்தில் பரிசுகள் வழங்கப்பெறும்.

8. ஆண்டுதோறும் முனிஸிபாலிடியார் வரவு செலவு கணக்குகளை இந்தக் கட்டளையின் ஸ்தாபகரவர்களுக்கும் அவர்களுடைய வார்சுகளுக்கும் அனுப்பிவரவேண்டும்.

9. இதன் மூலதனத்தை மேலே குறித்தபடி யல்லாத வேறு எந்தக் காரியத்துக்கும் உபயோகிக்கலாகாது. உத்தேசித்த விஷயத்துக்கு இந்த மூலதனம் உபயோகப்படாவிட்டால், இந்தக் கட்டளையை ஸ்தாபித்தவர்களுக்கோ அவர்களுடைய வார்சுகளுக்கோ ஷை கட்டளையை நிறுத்திவிட அதிகாரம் உண்டு.

இந்தக் கட்டளையை மாயூரம் நகர பரிபாலன சபையார் தங்களுக்குள் 17-11-47-ல் நடந்த மீட்டிங்கில் அங்கீகரித்துக்கொண்டு விட்டதாக முனிஸிபல் கமிஷனர் 21-11-47-ல் 6957 நெ. கடிதம் மூலம் தெரிவித்திருக்கிறார்.

XXII. சென்னை விவேகானந்தா கல்லூரியில் ஸ்ரீ ராஜாஜி சைவசித்தாந்த வித்தியார்த்தி சம்பள உதவி கட்டளை ரூ. 10,000.

1947 நவம்பரில் ஏற்படுத்தியது.

சிறந்த தமிழ் விற்பன்னரும், ஞானவானும், அரசியல் நிபுணரும், மேற்கு வங்காளத்தின் கவர்னரும் ராஜாஜி என்று பிரபலமாக விளங்குபவரும் ஆன மாக்ஷிமை பொருந்திய ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியரவர்கள் பெயரால் இந்தக் கட்டளை அமைக்கப் பெற்றது. சைவ சித்தாந்த சாஸ்திரக் கல்வி விருத்தியடைந்து எங்கும் பரவவேண்டு மென்பதே இந்தக் கட்டளையின்

நோக்கம். கீழ்கண்ட சில நிபந்தனைகளின்படி சென்னை விவேகானந்தா கல்லூரி மாணுக்கர்களுக்குச் சம்பள உதவி அளிக்கப்படும். இது ஸ்ரீ ராஜாஜி சைவ சித்தாந்த வித்தியார்த்தி சம்பள உதவி கட்டளை என்று வழங்கும்.

2. இதற்கு ஏற்படுத்திய மூலதனம் ரூ. 10,000. இதன் பரிபாலனம் சென்னை விவேகானந்தா கல்லூரியைச் சேர்ந்தது. வட்டி வரக்கூடிய ஸர்க்கார் ஜாமீன் பத்திரங்களில் இந்த மூலதனத்தை விவேகானந்தா கல்லூரியார் போட்டு வைக்கவேண்டும்.

3. மூலதனத்திலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையை விவேகானந்தா கல்லூரியில் B. A., வகுப்பில் சைவ சித்தாந்த சாஸ்திரத்தை இஷ்டபாடமாக எடுத்துக் கொண்டு படிக்கும் யோக்கியதையுள்ள எளிய தமிழ் மாணவர்களில் ஜாதி மத வேறுபாடு பாராமல் இருவருக்கு வருஷந்தோறும் ரூ. 135 சம்பள உதவி தவணைக்கு ரூ. 15 வீதம் ஒன்பது தவணையில் அளிக்கப்படும். கல்லூரிப் படிப்பில் சைவ சித்தாந்த சாஸ்திரத்தை ஒரு பாடமாக எடுத்துக்கொண்டு படிக்கும் மாணுக்கர்களில் ஒருவரை முதல் வருஷத்தில் தேர்ந்தெடுக்க வேண்டும். இரண்டாம் வருஷத்தில் வேறொரு மாணவரை இவ்வாறு தேர்ந்தெடுக்கவேண்டும். இரண்டாம் வருஷம் தொடங்கி வருஷந்தோறும் இரண்டு மாணவர்கள் சம்பள உதவி பெறுவார்கள். முதல் வருஷத்திலே படிப்பில் தேர்ச்சியைக் காட்டி மறு வருஷமும் தொடர்ந்து படித்தால் இந்த உதவி இரண்டு வருஷங்களுக்கு அளிக்கப்படும்.

4. சம்பள உதவி பெறும் மாணவர் வகுப்புக்கு ஒழுங்காக வராமலோ, தவறுதலாக நடந்தாலோ, படிப்பில் அபிவிருத்தி காட்டாமலோ இருந்தால், அவர் சம்பள உதவியை இழந்தவராவர் என்று உத்தரவு போடக் கல்லூரி பிரின்ஸிபாலுக்கு அதிகாரமுண்டு. அவருக்குப் பதிலாக வேறொருவரைத் தேர்ந்தெடுத்து அவருக்குச் சம்பள உதவி யளிக்கவேண்டும். இவ்விஷயத்தில் பிரின்ஸிபால் செய்வதே முடிவானது.

5. எந்த வருஷத்திலேனும் சம்பள உதவி அளிக்கப்படாவிட்டாலோ, உதவி அளிக்கப்பட்ட சில காலத்துக்குப் பின் எந்த மாணவரேனும் அதை இழக்கும்படி ஏற்பட்டாலோ, கொடுபடாமல் நிற்கும் தொகையும், வட்டியிலிருந்து சம்பள உதவி அளித்தபின் மிஞ்சும் தொகையும் மூலதனத்தோடு சேர்க்கப்படவேண்டும்.

6. ஒரு காலத்தில் இவ்விதமாகச் சேரும் தொகையோடு மூலதனம் அதிகரித்தால் உதவித் தொகையைப் போதிய அளவு அதிகரிக்கவோ, அதிகமான மாணவர்களுக்கு உதவி யளிக்கவோ கல்லூரி கமிட்டியார் சந்தர்ப்பத்துக் கேற்றபடி தங்கள் உசிதம்போல் ஏற்பாடு செய்யலாம்.

7. மேலே சொல்லிய நிபந்தனைகளின்படி எல்லாம் நிறைவேறிய பின் தொகை மிஞ்சுமானல் சைவ சித்தாந்த சாஸ்திரப் படிப்புக்குரிய சிவஞான சித்தியார் என்னும் புத்தகப் பிரதிகளை வாங்க அதை உபயோகித்துச் சம்பள உதவிபெறும் மாணவர்களுக்கு அந்தப் பிரதிகளை இலவசமாக விநியோகிக்கலாம்.

8. ஒவ்வொரு வருஷத்தின் முடிவிலும் கல்லூரிக் கமிட்டியார் இந்தத் தர்ம ஸ்தாபகரவர்களுக்கும் அவர்களுடைய வார்சுகளுக்கும் வரவு செலவு கணக்கையும், சம்பள உதவி பெற்ற மாணவர்களின் பெயர்களையும் அனுப்பி வரவேண்டும்.

9. மூலதனத்தின் வரும்படியையும், அவ்வப்போது சேரும் தொகையையும் இந்தக் கட்டளையை ஏற்படுத்தியவர்களுடைய நோக்கத்துக்கு மாறான வேறு எந்த விஷயத்துக்கும் உபயோகிக்கலாகாது.

இந்தக் கட்டளை விஷயம் விவேகானந்தா கல்லூரியாருடைய ஆலோசனையில் இருக்கிறது.

XXIII. காசி ஹிந்து சர்வகலாசாலையில் 1947 நவம்பரில் ரூ. 20,000 இருபதினாயிரத்துக்கு ஏற்படுத்திய சைவ சித்தாந்த வித்தியார்த்தி சம்பள உதவிக் கட்டளை.

சிறந்த ஞானியும், வித்தியா விநோதரும், அரசியல் நிபுணரும், காசி ஹிந்து ஸர்வகலாசாலையின் தற்கால வைஸ்சான்ஸலருமான ஸர். எஸ். ராதாகிருஷ்ணனவர்கள் பெயரால் இந்தக் கட்டளை ஏற்படுத்தப் பெற்றது. சைவ சித்தாந்த சாஸ்திரக் கல்வி விருத்தியடைந்து பரவவேண்டுமென்பதே இதன் நோக்கம். காசி ஹிந்து ஸர்வகலாசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்குக் கீழே காட்டிய நிபந்தனைகளின்படி சம்பள உதவி அளிக்கப்படும். இந்தக் கட்டளை ஸர். எஸ். ராதாகிருஷ்ணன் சைவ சித்தாந்த வித்தியார்த்தி சம்பள உதவிக் கட்டளை என்று பெயர் பெறும்.

2. இதற்கு அமைத்த மூலதனம் ரூ. 20,000 ரொக்கமாக ரூ. இருபதினாயிரம். காசி ஹிந்து சர்வகலாசாலையாருடைய பரிபாலனத்தில் இந்த மூலதனம் இருக்கும். வட்டி வரக்கூடிய ஸர்க்கார் ஜாமீன் பத்திரங்களாக இந்தத் தொகையை ஸர்வகலாசாலையார் போட்டு வைக்கவேண்டும்.

3. இந்த நிதியிலிருந்து வட்டியை ஒவ்வொருவருக்கும் வருஷம் ஒன்றுக்கு ரூ. 135 வீதம் ஹிந்து ஸர்வகலாசாலையில் தமிழை இரண்டாம் பாஷையாகவும், சைவ சித்தாந்த சாஸ்திரத்தை இஷ்ட பாடமாகவும் எடுத்துக்கொண்டு கல்வி பயிலும் மாணாக்கர்களில் ஜாதி மதபேதம் பாராமல் யோக்கியதையுள்ள எளிய வித்தியார்த்திகள் நால்வருக்கு அளிக்க உபயோகப் படுத்த வேண்டும். ரூ. 135, தவணை ஒன்றுக்கு ரூ. 15 ஆக ஒன்பது தவணைகளில் அளிக்கப்படும். எம். ஏ. பரீக்ஷைக்காகச் சைவ சித்தாந்த சாஸ்திரத்தைப் படிக்கும் வித்தியார்த்திகளில் இருவரை முதல் வருஷத்தில் தேர்ந்தெடுத்து அவர்களுக்குச் சம்பள உதவி அளிக்கவேண்டும். இரண்டாம் வருஷம் அதே மாதிரி வேறு இருவர்களைப் பொறுக்கி அவர்களுக்குச் சம்பள உதவி அளிக்க வேண்டும். இரண்டாம் வருஷம் முதல் பணஉதவி பெறுவோர் நால்வராவர். முதல் வருஷத்தில் வித்தியார்த்தியின் படிப்பு நன்றாக இருந்து இரண்டாவது வருஷத்திலும் அவர் தொடர்ந்து கல்வி பயின்றால் சம்பள உதவி அவருக்கு இரண்டு வருஷங்களுக்கு உண்டு.

4. சம்பள உதவிபெறும் வித்தியார்த்தி வகுப்புக்கு ஒழுங்காக வராமலோ, தவறுதலாக நடந்தாலோ, படிப்பில் அபிவிருத்தி காட்டாமலோ இருந்தால் அவர் சம்பள உதவியை இழந்தவராவர் என்று உத்தரவுபோட வைஸ்சான்ஸலருக்கு அதிகாரமுண்டு. அவருக்குப் பதிலாக வேறொரு தகுதியான வித்தியார்த்தியைத் தேர்ந்தெடுத்து அவருக்குச் சம்பள உதவியை அளிக்கலாம். இவ்விஷயத்தில் வைஸ் சான்ஸலர் செய்வதே முடிவானது.

5. எந்த வருஷத்திலேனும் சம்பள உதவி அளிக்கப் பெறாமலோ, அளிக்கப்பட்ட சில காலத்துக்குப் பின் எந்த வித்தியார்த்தியேனும் அதை இழக்கும்படி ஏற்பட்டாலோ, செலவாகாமல் நின்ற தொகையும், சம்பள உதவி செய்தபின் வட்டியில் மிச்சப்படும் தொகையும் மூலதனத்தோடு சேர்க்கப்பட வேண்டும்.

6. இவ்விதம் சேரும் தொகையோடு மூலதனம் போதிய அளவு அதிகரித்தால், ஸர்வகலாசாலையார் சம்பள உதவித்தொகையை அதிகப்படுத்தவோ, அதிக வித்தியார்த்திகளுக்குச் சம்பள உதவியளிக்கவோ, ஸர்வகலாசாலையார் சந்தர்ப்பத்துக்கேற்றபடி தங்கள் உசிதம்போல் ஏற்பாடு செய்யலாம்.

7 மேலே குறித்தபடி எல்லாம் நிறைவேறிய பிறகு தொகை மிஞ்சுமானல், படிப்புக்கு வேண்டிய "சிவஞான சித்தியார்" என்னும் புத்தகத்தில் வேண்டிய அளவு பிரதிகளை அதைக்கொண்டு வாங்கி, சம்பள உதவி பெறும் வித்தியார்த்திகளுக்கு அவற்றை இலவசமாகக் கொடுக்கலாம்.

8. ஸர்வகலாசாலை ஆலோசனைச் சபையார் ஒவ்வொரு வருஷமுடிவிலும் இந்தக் கட்டளையை ஏற்படுத்தியவர்களுக்கும் அவர்களுடைய வார்சுகளுக்கும் வரவு செலவு கணக்கையும், சம்பள உதவி பெற்ற வித்தியார்த்திகளின் பெயர்களையும் அனுப்பிவரவேண்டும்.

9 மூலதனத்தின் வரும்படியையும் அவ்வப்போது சேரும் தொகையையும் இந்தக் கட்டளையை ஏற்படுத்தியவர்களுடைய நோக்கத்துக்கு மாருக வேறு எந்த விஷயத்துக்கும் உபயோகிக்கலாகாது.

இந்தக் கட்டளை ஸர்வகலாசாலையாருடைய ஆலோசனையில் இருந்து வருகிறது.

XXIV. ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் ஞாபகார்த்தத் தேவாரப் பரிசுக் கட்டளை.

மூலதனம் ரூ 5,000. 4—12—47.

காசியில் காசி மடத்தை ஸ்தாபித்த புகழ் வாய்ந்தவரும், தமிழிற் சிறந்த கல்விமானும், பதினேழாம் நூற்றுண்டில் காசி முதல் இராமேஸ்வரம் வரையில் தமிழ்க் கல்வியைப் பரவச்செய்தவருமான ஸ்ரீலஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகளுடைய ஞாபகார்த்தமாக இந்தக் கட்டளை ஏற்படுத்தப்பெற்றது. மாணவர்கள் கோஷ்டியில் தேவாரத் திருமுறைகளின் பயிற்சி நன்ருக ஏற்பட்டுப் பரவவேண்டுமென்பதே இதன் நோக்கம்.

2. இதற்கு அமைத்திருக்கும் மூலதனம் ரூ. 5,000 ஸர்க்கார் ஜாமீன் பத்திரமாக் உள்ளது. திருப்பனந்தாள் காசிவாசி ஸ்வாமிநாத ஸ்வாமிகள் செந்தமிழ்க் கல்லூரியின் நிதியை நிர்வகிக்கும் கமிட்டியாரே இந்த நிதியைப் பரிபாலித்து வருவார்கள்.

3. தேவாரத்தை மிகவும் நன்ருகப் பாடக்கூடிய முதல் இருவருக்கு முறையே ரூ. அறுபதும், ரூ. ஐம்பதும் ஆக ரூ. 110 இந்த மூலதனத்தின் வட்டியைக்கொண்டு ஆண்டுதோறும் பரிசாக அளிக்கவேண்டும். மிச்சப்படும் வட்டித் தொகையைத் தேவாரத்திரட்டை அச்சிட்டு வெளியிடும் செலவு முதலிய செலவுகளுக்கு உபயோகிக்க வேண்டும். அதன் பிறகு மிஞ்சும் தொகையை மூலதனத்தோடு சேர்க்கவேண்டும்.

4. ஸ்ரீ ஆதி குமரகுருபர ஸ்வாமிகளுடைய அவதார ஸ்தலமாகிய ஸ்ரீ வைகுண்டம் முனிஸிபாலிடி அல்லது பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குள் இருக்கும் ஸெகண்டரி கலாசாலைகளிலும் உயர்தரக் கலாசாலைகளிலும் IV முதல் VI பாரங்கள் வரையில் அல்லது அவற்றிற்குச் சமமாக வைக்கப்படும் வேறு வகுப்புக்களில் படிக்கும் மாணவர்கள் இந்தப் பரிசுப் போட்டிக்கு வரலாம். வருஷந்தோறும் பாடமாக ஏற்படுத்தும் ஐம்பது தேவாரப் பாசுரங்களை அவர்கள் பண்ணோடு பாராமல் ஓதவேண்டும்.

5. திருப்பனந்தாள் காசிவாசி ஸ்வாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரியின் கமிட்டியார் நான்கு வருஷங்களுக்கு ஒருமுறை சம்பந்தர், அப்பர், சுந்தரர் இவர்களுடைய பதிகங்களிலிருந்து பண்களெல்லாம் கலந்திருக்கும்படி ஐம்பது பாசுரங்களைப் பொறுக்கியெடுத்து அரும்பதவுரையுடன் ஒரு புத்தகமாக அச்சிட்டு வெளியிடவேண்டும். மறுபடி 4 வருஷங்களுக்காகப் பொறுக்கும் பாசுரங்கள் இவையல்லாத பாசுரங்களாக இருக்கவேண்டும்.

6. பரிசளிப்புக்கு உரிய நிபந்தனைகள் வருமாறு :—

(i) ஸ்ரீவைகுண்டம் முனிஸிபாலிடி அல்லது யூனியன் எல்லைக்குள் இருக்கும் ஸெகண்டரி பாடசாலைகளிலும் உயர்தரப் பாடசாலைகளிலும் படிக்கும் மாணவர்களுக்கு ஆண்பாலாராயினும் பெண்பாலாராயினும் ஜாதிமத வேறுபாடின்றி இந்தப் பரிசு அளிக்கப்படும்.

(ii) பரிசுப் போட்டிக்கு வரும் மாணவர்கள் ஐம்பது தேவாரப் பாசுரங்களையும் பாராமல் சரியான பண்ணில் நல்ல இசையுடன் பாடவேண்டும். இதற்காக உரிய பரீக்ஷை இரண்டு பிரிவையுடையது.

(a) முதற் பிரிவு : தேவாரப் பாசுரங்கள் ஐம்பதையும் பாராமல் ஒப்புவித்துப் பாசுரங்களின் பொருளையும் கருத்தையும் விளக்கமாகச் சொல்ல வேண்டும். இதற்கு ஏற்பட்ட அம்சம் 50.

(b) இரண்டாவது பிரிவு : சரியான பண்ணில், பாசுரங்களின் பாவத்தை நன்றாக அறிந்துகொண்டு அவற்றை நல்ல சாரீரத்தோடு பாட வேண்டும். இதற்கு ஏற்பட்ட அம்சம் 50.

(iii) மாணவர்கள் தங்கள் பாடசாலை ஹெட்மாஸ்டர் மூலம், பரிசுப் போட்டிக்கு உரிய விண்ணப்பங்களை ஜூலை மீ 31-ம் வுக்கு முன் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரிக் கமிட்டிக்கு அனுப்பவேண்டும்.

(iv) பரிசுப் போட்டிக்கு விண்ணப்பம் அனுப்பும் மாணவர்கள் படிக்கும் கலாசாலைகளின் அதிகாரிகள் சேர்ந்து டிசம்பர் மாதத்தில் பரிசுப் பரீக்ஷையொன்றை ஸ்ரீவைகுண்டத்தில் நடத்திப் பரிசு பெறத்தக்க இரண்டு மாணவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இவ் விஷயத்தில் பஞ்சாயத்து போர்டு தலைவரையும் ஊரில் பிரபலஸ்தராகவுள்ள சைவர் ஒருவரையும் கலந்துக்கொள்ளலாம். இவர்களில் பெரும்பாலோர் செய்யும் முடிவே ஏற்றுக்கொள்ளப்படும்.

5. ஒருதடவை பரிசு பெற்றவர் மறுபடி பரிசுப் போட்டிக்கு வர அருகரல்லர்.

6. பரீக்ஷையின் முடிவையும், பரிசளிப்பதற்காகத் தேர்ந்தெடுத்த மாணவர்களின் பெயரையும் திருப்பனந்தாள் காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரியின் கமிட்டிக்குத் தெரிவிக்க வேண்டும். கமிட்டியார் பரிசுத்தொகையை உரிய மாணவர்களுக்குச் சேர்ப்பிக்கும்படி கலாசாலை அதிகாரிகள் மூலம் அனுப்ப ஏற்பாடு செய்வார்கள்.

7. முதற்பரிசின் தொகை ரூ. 60 ; இரண்டாம் பரிசின் தொகை ரூ. 50. ஜாஸ்தியான அம்சங்களை வாங்குபவருக்கு முதற் பரிசும், அடுத்தபடியான அம்சங்களை வாங்குபவருக்கு இரண்டாவது பரிசும் வழங்கப்பெறும்.

8. காசிவாசி சாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி கமிட்டியார் வருஷந்தோறும் வரவு செலவு கணக்கையும், பரிசு பெறுபவர்களுடைய பெயர்களையும், இந்தக்கட்டளையை ஏற்படுத்தியவர்களுக்கும், அவர்களுடைய வார்சுகளுக்கும் அனுப்பிவரவேண்டும்.

9. மூலதனம் ஏற்பட்ட நோக்கத்துக்கு மாறான வேறு எந்தக்காரியத்துக்கும் அதை மாற்றக்கூடாது.

சிவமயம்

நன்றியுரை

ஆளுடைய பிள்ளையார் திருப்பனந்தாள் வணங்கிய வரலாறு இச்சஞ்சிகைப் பகுதியில் வருவது பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது அதனைக் கேட்ட அளவில் **திருப்பனந்தாள் காசிமடத்தின் அதிபர் ஸ்ரீமத் அருணந்தித் தம்பிரான் சுவாமிகள்** இச்சஞ்சிகையின் வெளியீடு தமது திருமடத்தின் சார்பாக ஆதல் வேண்டுமென மன முவந்து ஆணை தந்தருளி ஆசி புரிந்தார்கள். அதற்குரிய படங்களையும் எடுத்துதவி யருளினார்கள் ; இவர்கள் அன்பின் பெருமைதான் என்னே ! இவர்களது நாளுளும் பெருகி வருகின்ற உத்தமோத்தமச் சிவ புண்ணியங்களையும் பயனையும் சைவமக்கள் தெரியும் பொருட்டு அவையிற்றின் அட்டவணை ஒன்று இச்சஞ்சிகையிற் சேர்த்துக்கொள்வதற்கும் இவர்கள் அருள்விடை தந்தருளினார்கள். இவர்கள் செய்துவரும் அறங்களின் பெருமைகள் உலகமறிந்தன. இவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இவர்களும் இவர்களது திருமடமும் மரபும் சிவதருமங்களும் ஓங்கி வளர்ந்து நீடு வாழ்க என்று எல்லாம் வல்ல இறைவரது திருவடிகளை இறைஞ்சி மனமொழி மெய்களால் வணங்குகின்றேன்.

ஸ்ரீமத்-சுவாமிகள் இப்புராண உரை வெளியீட்டுக்கென்று முன்னம் அளித்த நன்கொடையினை நன்றியுடன் முன்னமே அன்பர்களுக்கு அறிவித்துள்ளேன். இவர்களின் முன்பட்டத்தில் ஞானபீடத்தில் எழுந்தருளிய ஸ்ரீமத் காசி வாசி - சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் இவ்வுரை வெளியீட்டினைக் கண்காணித்து உதவியருளியவை குங்குலியக்கலய நாயனார் புராணத்திறுதியில் [(2) திருப்பனந்தாள்-தலவிசேடத்தில் II[- பக் - கககக-ல்] குறித்துள்ளேன்.

கோவை, சேக்கிழார் நிலயம்
10—12—47

C. K. சுப்பிரமணிய முதலியார்
பதிப்பாசிரியன்

மதிப்புரை

தூத்துக்குடிச் "சித்தாந்தப் பேராசிரியர்" "சைவத்தாத்தா" திரு. ந. சிவகுருநாத பிள்ளை அவர்கள் மனமுவந்தெழுதிய ஆசியுரை :—

உயர் சைவத் திரு. "சிவக்கவிமணி"

C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள் B. A., கோவை.

வணக்கம். தங்கள் தவ உடலின் பாங்கறியும் ஆவலுடையேன். தாங்கள் அடியேனது 75-ஆம் ஆண்டுப் பிறந்தநாட் பரிசாகப் பெரிய புராண விருத்தி உரையின் மூன்றும் பகுதி இரண்டாம் பாகமும், எமது ஆண்டவன் திருஞான சம்பந்தப் பெருமான் புராணம் 1-100 வரையுள்ள பாடல்கள் அடங்கிய பகுதியும் அனுப்பியருளினமைக்குப் பெரிதும் நன்றி செலுத்துகின்றேன். கண்ணைக் கவரும் பதிப்பின் அழகும், கருத்தைக் கவரும் உரையின் நலமும் பொருந்திய பெரிய புராணத்தைப் பெரியீராகிய தாங்களேயன்றி வேறு எவர் அளித்தற்குரியார் !

தாங்கள் மேற்கொண்டுள்ள அரும்பெரும் தொண்டு விரைவில் இனிது நிறைவேறும் வண்ணம் தங்கட்கு எல்லா நலன்களையும் அளித்தருளப் பொன்னம்பல வாணன் இன்னடிகளை ஏத்துகின்றேன்.

செயற்கரிய செயல்செய்து சிவனடிக்கே யாளாகி
உயர்ச்சிபெறும் அடியவர்தம் உண்மைபுகல் புராணத்தை
அயற்சமயி களுங்கற்றே அன்புநிலை புரிந்திடற்காம்
மயற்சியறு முரைவிரிக்குஞ் சுப்ரமண்யன் வாழ்கவரோ.

அன்பன்

ந. சிவகுருநாதன்

உ

சிவ முருகா

வாழ்த்துப்பா

கண்டி - (இலங்கை) - 31-11-47

கண்டி - அன்பர் திரு. க. வேலுபிள்ளை அவர்கள் அன்புடன் அனுப்பியது.

ஐயா ! முருகா ! வயில்வேல் கரத்தேந்துஞ்
செய்யா ! கதிரைமலைச் செவ்வேளே !—தெய்வக்
கவிக்குரைசெய் சைவக் கவிமணிக்குன் ஞசி
நிதிக்குவையோ டீவாய் நிதம்.



கலிக்கம்ப நாயனார்
மேல்பாற் பெண்ணாகடம்

திருத்தூங்கானை மாடம்-கருப்பக்கிருகமும்
பலகணியும் - பின்புறம் பார்வை

Govt. Oriental Mss. Library,
Triplicane P.O., Madras.



சீகாழி - பிரம தீர்த்தம் - மேல்கரையும் திருநிலை நாயகியம்மை சந்நிதியும்
கீழைக் கோபுரமும் வட கோபுரமும்

முன்கோபுரம் -
முகப்பு

திருக்கழிப்பாலை - கருப்பக்கிரகம்
தென்புறம் பார்வை





திருக்கழிப்பாலை - கோயில் பின் பார்வை



சீகாழி - பிரமதீர்த்தத்தென்கரையில்
உள்ளது. சிவபாதவிருதயர்

பல்லவனேச்சரம் -
கோயிலும் - கோபுரமும் பாட்டு-2020

Govt. Oriental Mss. Library,
Triplicane P.O., Madras.

திருநெல்வாயிலரத்துறை
கருப்பக்கிருகம்



கொள்ளிடத் திருநதி - இரயில் பாலம்



திருக்கழிப்பாலை - சுவாமி அம்மை கருப்பக் கிருகங்கள்



சிதம்பரம் தெற்குத் திருவீதியும் கோபுரமும்

—பாட்டு - 2055



திருநெல்வாயிலரத்துறை -
வெள்ளாறும் (நிவாநதி) - கோயிலும் —பாட்டு - 2122

சிதம்பரம் - பான்டிநாயகம் - கோயிலும் முகப்பும்
—பாட்டு - 2056 - 2062



கொள்ளிடத் திருநதி வடகரை - சத்திரமும் மடமும் -
சிதம்பரம் தெற்குத் திருவெல்லை
—பாட்டு - 2044



திருத்தூங்கானை மாடம் - வடபுறம் பார்வை -
கருப்பக்கிருகமும் - சண்டீசர் கோயிலும்,
—பாட்டு - 2032



திருக்கழிப்பாலை - பின்புறம் பார்வை - கருப்பக்கிருகம்
—பாட்டு - 2065

சிதம்பரம் - தெற்குத் திருஎல்லைப்புறம் கொள்ளிடத் திருநதி

மாறன்பாடி - கோயில் - பின்புறம் பார்வை



மாறன்பாடி - திருமடம் —பாட்டு - 2091



திருநெல்வாயில் - (சிவபுரி) - சுவாமி - அம்மை - கருப்பக்கிருகம்



திருநெல்வாயில் (சிவபுரி) - கோபுரமும் குளமும்

திருவுச்சி - திருநெல்வாயில்

பாட்டு - 2065

விருத்தாசலம்-திருமுதுகுன்றம் - முன் மண்டபம் - கோபுரம்





திருமுதுகுன்றம் - திருமணிமுத்தாறும் - கோயிலும் -
(பாலத்திலிருந்து பார்வை —பாட்டு - 2079

திருஎருக்கத்தம்புலியூர் - கோயிலும் - கோபுரமும் - குளமும்





திருஎருக்கத்தம்புலியூர் - கருப்பக்கிருகம் - கோயிலும் -
எருக்கு மரமும் பாட்டு - 2077



திருக்கடம்பூர்-"கரக்கோயில்"
"கடம்பை"-பாட்டு.2150.

Govt. Oriental Mss. Library,
Triplicane P.O., Madras.



தென்குரங்காடுதுறை

திருப்பழமண்ணிப்படிக்கரை-
பாட்டு - 2186.


திருப்பந்தணைநல்லூர்-
பாட்டு - 2187



கஞ்சனூர் - கோயில் முன் பார்வை—பாட்டு - 2191—பக்கம் - ௫௫



திருமாந்துறை—பாட்டு - 2191—பக்கம் - ௫௫



திருக்கோடிகா - கருப்பக்கிருகம்—பாட்டு - 2190—பக்கம் - ௫௰௪

ஆரும் பெறாத வறிவுபெற்றேன்" (திருப்பல்) என்பனவாதி திருவாக்குக்களின் இறைவரது அருளைப் பாராட்டுந் திறமே இங்கும் காண்க.

போற்றி - போற்றப்படுவது. இகரம் செயப்படுபொருள் விகுதி. 226

Govt. Oriental Mss. Library, Triplicane P.O., Madras

2125. சூடி னார்கர கமலங்கள் ; சொரிந்திழி கண்ணீர்
ஆடி னார்திரு மேனியி ; லரத்துறை விரும்பி
நீடி னார்திரு வருட்பெருங் கருணையே நிகழப்
பாடி னார்திருப் பதிகமே ழிசையொடும் பயில. ௨௨௭

(இ - ள்) வெளிப்படை. கைமலர்களை உச்சியின்மேற் சூடிக்கொண்டனர் ; பொங்கி வழிகின்ற கண்ணீர்த் தாரையினால் திருமேனி நனைய நீராடினார் ; திருவரத் துறையை விரும்பிப் பழமையாக வீற்றிருந்தருளும் இறைவரது கருணையே நிகழும்படி ஏழிசையொடும் பயிலும்படி திருப்பதிகம் பாடினார்.

(வி - ரை) சூடினார் கர கமலங்கள் - மலர்களைச் சிரத்திற் சூடுதல்போலக் கைகளாகிய மலர்களைச் சிரத்தில் சூடிக்கொண்டார் என்பது குறிப்பு.

திருமேனியிற் சொரிந்திழி கண்ணீ(ரில்) ஆடினார் - கண்ணீர் திருமேனி மேல் பெருக வழிதலின் அந்நீரினுள் ஆடினார் (நீராடினார்) போன்றார் என்பது.

நீடினார் - பெயர்.

கருணையே நிகழத் திருப்பதிகம் - கருணையின் பெருமையை விளக்கும் திருப் பதிகம். இப்பதிகம் இப்போது கிடைத்திலது. சிதலரித்தொழிந்தது போலும் !

ஏழிசையோடும் பயில-ஏழு சுரங்களோடும் பயிலப்படும் வேதங்களோ டொப்பப் பயிலப்படும்படி. 227

2126. இசைவி ளங்கிட வியல்பினிற் பாடிநின் றேத்தி,
மிசைவி ளங்குநீர் வேணியா ரருளினால் மீண்டு,
திசைவி ளங்கிடத் திருவருள் பெற்றவர் சிலநாள்
அசைவில் சீர்த்தொண்டர் தம்முட னப்பதி யமர்ந்தார். ௨௨௮

(இ - ள்) வெளிப்படை. ஏழிசையும் விளங்கும்படி இயல்பினில் திருப்பதிகத் தினைப் பாடி நிறைவாக்கி நின்று துதித்து, மேலே கங்கைநீர் விளங்குதற்கிடமாகிய சடையினையுடைய சிவபெருமானது திருவருள் பெற்று, அங்கு நின்றும் மீண்டெழுந் தருளி, எல்லாத் திசைகளில் உள்ளோரும் சிவஞானம் பெற்றுய்யும்படி திருவருள் பெற்றவராகிய பிள்ளையார் சில நாள்கள் அத்திருத்தலத்தின்கண் அசைதலில்லாத சிறப்புடைய திருதொண்டர்களோடு விரும்பி எழுந்தருளியிருந்தார்.

(வி - ரை) இயல்பினிற் பாடி - செயற்கையாலன்றித் தன் இயல்பாகவே இசை களும் திருஅருளும் சென்றெழுகும்படி.

மீண்டு - இறைவரது திருமுன்பு நின்றும் புறத்தில் மீண்டு.

திசை விளங்கிடத் திருவருள் பெற்றவர்-திசை - எல்லாத் திசையிலுள்ளோரும்; ஆகுபெயர். விளங்கிட - விளங்கும் பொருட்டு. விளங்குதலாவது சிவஞானம் விளங்கப் பெறுதலால் சிவநெறியில் நின்று மேம்படுதல். பிள்ளையார் அருள் பெற்றது தம் பொருட்டன்றி உலகம் கண்டுணர்ந்து உய்யும் பொருட்டென்பது. அருள் - பதிகத்தில் "அருளே" என்ற கருத்து. ஈண்டைக் கேற்பச் சிவிகை முதலியவற்றையும் குறிப்பாகக் கொள்க.

அசைவில் சீர் - அசைவின்மையாவது எதுவரினும் தன்னிலையிற் பிறழா திருத்தல். " மலையே வந்து விழினு மனிதர்காள், நிலையி னின்றுநீர் கலங்கப் பெறு திரேல் ", " வானந் துளங்கிலென்...ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே " முதலிய திருவாக்குக்களுக்கு இலக்கியமாக ஒழுகும் தவ உறைப்புடைய சிறப்பு.

அமர்ந்தார் - விரும்பி எழுந்தருளியிருந்தார். அமர்தல்-விரும்புதல். 228

2127. தேவர் தம்பிரான் றிருவரத் துறையினி லிறைஞ்சி
மேவு நாட்களில் விமலனூர் நெல்வெண்ணெய் முதலாத்
தாவி லன்பர்க டம்முடன் றொழுது,பின் சண்பைக்
காவ லாரருள் பெற்றுடன் கலந்துமீண் டணைந்தார். உஉகூ

(இ - ள்) தேவர்...நாட்களில் - தேவ தேவராகிய சிவபெருமானது திருவரத் துறையின்கண் அவ்விறைவரை வணங்கி அங்கு எழுந்தருளியிருக்கும் நாட்களில்; விமலனூர்...தொழுது - சிவபெருமானது திருநெல்வெண்ணெய் முதலாகவுள்ள தலங்களைக் குற்றமில்லாத அன்பர்களுடன் தொழுது; பின்...அணைந்தார் - பின் சீகாழித் தலைவராகிய பிள்ளையார் இறைவரது திருவருளைப் பெற்று உடன் கலந்திருந்து மீண்டும் திருவரத்துறையினில் வந்தணைந்தார்.

(வி - ரை) - இறைஞ்சி - இறைவரை வணங்கி.

நெல்வெண்ணெய் முதலாத் தொழுது - நெல்வெண்ணெய் முதலாகிய தலங்களில் இறைவரை வணங்கி; தலங்களையே தொழுவதனோடு அவற்றுள் எழுந்தருளிய இறைவரையும் தொழுது என்ற குறிப்புத் தரக் கூறினார்; தலங்களையும் தொழுதல் மரபாதலின்; " முதுகுன்றடைவோமே " முதலிய பதிகங்கள் பார்க்க.

சண்பைக்காவலார் - பிள்ளையார். சண்பை - சீகாழியின் ஒன்பதாவது பெயர். **காவலார்** - தலைவர்.

அருள்பெற்று உடன் கலந்து - நெல்வெண்ணெய் முதலிய தலங்களில் தொழுது அங்கங்கும் திருவருள் பெற்று அங்கங்கும் தொண்டர்களுடன் கலந்து இனி திருந்து மீண்டு திருவரத்துறையில் அணைந்தனர். அணிமையில் உள்ள வேறு தலங்களுக்குச் சென்றாலும் திருவரத்துறையை அகலாது மீண்டு அணைந்திருந்தனர் என்பது. 2027 - 2028 பார்க்க.

அணைந்தார் - அணைந்தெழுந்தருளி யிருந்தனர். 229

திருநெல்வெண்ணெய்

திருச்சிற்றம்பலம் **திருமுக்கால்** பண் - சாதாரி

நல்வெணெய் விழுதுபெய் தாடுதிர் நாடொறும், நெல்வெணெய் மேவிய நீரே,
நெல்வெணெய் மேவிய நீருமை நாடொறுஞ், சொல்வண மிடுவது சொல்லே. (1)
நிலமல்கு தொல்புகழ் நெல்வெணெ யீசனை, நலமல்கு ஞானசம் பந்தன்,
நலமல்கு ஞானசம் பந்தன செந்தமிழ், சொலமல்கு வார்துய ரிலரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—நெல்வெண்ணெய் மேவிய இறைவரே! உம்மை நாடொறும் வாழ்த்தி வழிபடுவோர் அச்சமும் வினையு மிலராகுவர்; பழியிலர்; புகழும் பாக்கியமும் பண்புமுடையவர்.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) நல்வெ(ண்)ணெய் விழுது பெய்து நாடோறும் ஆடுதீர் - வெண்ணெய் ஆடுதல் இத்தலத்தின் சிறப்பு. இதுகொண்டு ஆனைந்தில் வெண்ணெய் ஒன்றென்று கூறுவோருமுளர். அது பொருந்தாமை முன்னர் உரைக்கப்பட்டது. சொல்வண மிடுவது சொல்லே - உம்மைச் சொல்வதுதான் சொல்.—(2) கச்சு - கச்சாக.—(3) உரைவிரிப்போர் - உரையால் விரித்துப் போற்றுவோர்.—(4) அவர் பண்பு பார்மல்கு புகழ் என்க.

தலவிசேடம் :—திருநெல்வெண்ணெய் - இதனை இப்போது நெய்வெண்ணெய் என்று வழங்குகின்றனர். இங்குத் தினமும் வெண்ணெயாட்டி வழிபடுதல் சிறப்பு என்பது தலசரிதக் குறிப்பு. பதிகமும் சுவாமி பெயரும் பார்க்க. சனகாதி முனிவர் வழிபட்டதலம். சுவாமி - வெண்ணெயப்பர் ; அம்மை - நீலமலர்க்கண்ணி ; தீர்த்தம் - பெண்ணையாறு ; பதிகம் - 1.

இத்தலம் திரிசிரபுரம் - விழுப்புரம் இருப்புப்பாதையில் உழுந்தூர்ப்பேட்டை நிலயத்தினின்றும் வடமேற்கில் 3 நாழிகையில் காற்பாதைவழி அடையத்தக்கது. வண்டிப்பாதை உழுந்தூரினின்றும் மேற்கில் - எல்லவனூர் 3 நாழிகை - அங்கு நின்றும் வடக்கு 2 நாழிகை - இறையூர் பாதையில் கிழக்கில் ½ நாழிகையளவில் அடையலாம்.

நெல்வெண்ணெய் முதலா - இத்தலங்கள், திருவெண்ணெய்நல்லூர், திருவிடையாறு முதலிய அணிமையிலுள்ளவை என்பது கருதப்படும். பிள்ளையார் பதிகங்கள் கிடைத்தில !

2128. விளங்கு வேணுபு ரத்திருத் தோணிவீற் றிருந்த
களங்கொள் கண்டர்தங் காதலி யாருடன் கூட
வுளங்கொ ளப்புகுந் துணர்வினில் வெளிப்பட வுருகி
வளங்கொள் பூம்புனற் புகலிமேற் செலமனம் வைத்தார்.

(இ - ள்) விளங்கு...வெளிப்பட - விளங்கும் வேணுபுரத்தில் திருத்தோணிக் கோயிலின்கண் வீற்றிருந்த திருநீலகண்டராகிய இறைவர் தமது தேவியாராகிய பெரிய நாயகியம்மையாருடன் கூடத் தமது உள்ள மிடங்கொள்ள நிறைந்து உட்புகுந்து உணர்வின்கண் வெளிப்படக் கண்டு ; உருகி...மனம் வைத்தார் - மனமுருகி வளம் கொள்ளும் அழகிய நீர்வளமுடைய சீகாழியின்கட் செல்ல மனம் கொண்டனர் (பிள்ளையார்).

(வி - ரை) வேணுபுரம் - சீகாழியின் இரண்டாவது பெயர்.

தோணிவீற்றிருந்த களங்கொள் கண்டர் - தோணி - "திருத்தோணி புரத் தோணிச் சிகரக்கோயில்" (2004). தோணி என்று வழங்கும் கோயில். களம் - கறுப்பு ; விடம் குறித்தது. காதலியார் - தேவியார் ; பெரியநாயகியார். "பெரிய நாச்சியா ருடன்புகலித் திருத்தோணி வீற்றிருந்தார்."

உளங்கொளப் புகுந்து உணர்வினில் வெளிப்பட - உளங்கொளப் புகுந்து - எங்கு நிறைந்த தன்மையால் பொதுவகையாலும், பிள்ளையார் எஞ்ஞான்றும் மறவாத் தன்மையால் சிறப்பு வகையாலும் தோணியப்பர் பிள்ளையாரது உள்ளத்தில் நீங்காமல் விளங்கியருளுகின்றனராகவும், இங்குப் புகுந்து என்றதென்னை ? எனின், திருவரத்துறையினின்றும் சீகாழிக்குச் செல்லும் நினைவைத் தூண்டும் இறைவரது அருள் சிறந்து விளங்குவதனைப் புகுந்து என்று உபசரித்தவாறென்க.

உணர்வினில் வெளிப்பட என்றதனால் உள்ள உருவம் வெளியிற் காணப்படும் உருவெளித் தோற்றத்தின் வேறாய காட்சி என்பதும், புறக் கரணத்துக்குப் புலப்படுவதாகிய வாயிற் காட்சியின் வேறாகிய தன்வேதனைக் காட்சியாகிய உண்மை யனுபவக் காட்சி என்பதும் பெறப்படும்.

புகலிமேற் செலமனம் வைத்தார் - மேல் - ஏழனுருபு. **மனம் வைத்தல்** - எண்ணுதல். பிள்ளையார் என்ற எழுவாய் முன்பாட்டிலிருந்து வருவிக்க. 230

2129. அண்ண லார்திரு வரத்துறை யடிகளை வணங்கி
நண்ணு பேரரு ளால்விடை கொண்டுபோய் நடங்கொண்
டுண்ணி றைந்தபூங் கழலிணை யுச்சிமேற் கொண்டே
வெண்ணி லாமலர் நித்திலச் சிவிகைமேற் கொண்டார். உஉக

(இ - ள்) அண்ணலார்...வணங்கி - அண்ணலாராகிய திருவரத்துறை யடிகளாரை வணங்கி; நண்ணு...போய் - பொருந்திய அவரது பெரிய திருவருளினால் விடைபெற்றுக் கொண்டுபோய்; நடம் கொண்டு...கொண்டே - ஆனந்தக் கூத்தியற்றி உள்ளே நிறைந்த அழகிய திருவடிகளைத் தமது உச்சியின்மேல் ஏற்றிக் கொண்டபடியே; வெண்ணிலா...மேற்கொண்டார் - வெள்ளிய நிலாக் கதிர்போன்ற ஒளி வீசுகின்ற முத்துச் சிவிகையின்மேல் எழுந்தருளினார்.

(வி - ரை) விடைகொண்டுபோய் - உச்சி மேற்கொண்டே - சிவிகை மேற்கொண்டார் - என்று கூட்டி முடிக்க.

விடைகொண்டு புறப்படுதல் மரபு. **நண்ணு பேரருளால்** - என்றது, இங்கு, எதிர்கொண்டு பொருந்தி வரவிடுத்த, சைவம் பெருகுதற்கிட்ட சிவிகை, முதலிய அருட்பண்டங்களைக் குறிக்கப் **பேரருள்** என்றார்.

அரத்துறை அடிகள் - என்பதும், " **அருள்** " என்பதும், " அரத்துறை யடிகடம் மருளே " என்ற பதிக மகுடக் குறிப்புக்கள். **பேரருளால் விடைகொண்டு** - எதிர்கொண்டு அழைத்த பேரருளால் வந்தது போலவே, அருளால் விடைகொண்டு என்ற குறிப்புத் தருவது.

நடங்கொண்டு...உச்சிமேற்கொண்டே-கழலிணை-இறைவரது திருவடிகளாவன அருள். **நடம்கொண்டு** - ஆனந்தக்கூத்தினைக் குறித்தது. **உண்ணிறைந்த பூங்கழல்** - என்பது மும்மல நீங்கிய முத்தான்ம சைதன்னியத்திற் சிறப்பாக வெளிப்பட்டு விளங்கி வியாபகமாகி நிற்கின்ற அழகிய கழலிணை. "நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே" "ஒன்றுவே றுணர்வு மில்லேன்...நின்றுநீ யாடல்செய்கை நினைப்பதே நியமமாகும்" என்பன காண்க. " ஞானவம்பலம் " (சித் - அம்பரம்) (2058), " எப்புவனங்களும் நிறைந்த திருப்பதி " (1444).

சீகாழியினின்றும் திருத்தில்லை பணியப் புறப்பட்டு வந்து வழிபட்ட பிள்ளையார், திருநீலகண்டப் பாணனாரது வேண்டுகோளின்படி நிவாநதிக்கரை வழியே போந்து திருவெருக்கத்தம்புலியூர் முதலிய தலங்களை வணங்கிப் போந்தனர். தமக்கு ஞானவமுதூட்டிய தோணியப்பரைத் தரிசித்துச் சால நாளாயினமை யுணர்ந்து உருகிச் சீகாழிக்கு மீண்டு செல்ல மனங்கொண்டனர். திரும்பும் வழியில் முன்வந்த வழியே மீண்டும் திருத்தில்லை பணிந்து செல்லுதல் மரபாயினும் ஆர்வமேலீட்டினால் விரைந்து வேறு வழிச் செல்கின்றாராதலின் தில்லையின் அருட்பெருங்கூத்தியற்றும் திருவடிகளை நினைந்து துதித்து உச்சிமேற் கொண்டு சென்றனர் என்பதும் குறிப்பு.

கழலிணை உச்சிமேற்கொண்டே - சிவிகை மேற்கொண்டார் - சிவிகையினைத் தாம் ஊர்ந்துசெல்ல அதன் மேற்கொண்டாராயினும், அதனைச் சிவிகை என்னும் வாகனமாகக் காணாது அருளாகக் கண்டாராதலின் அது தம்மைத் தாங்குதல் என்பதின்றி அதனை அளித்த அருட்கழலைத் தம் உச்சிமேற்கொண்டு தாம் அதனைத் தாங்கிச் செல்வதாகவே உட்கொண்டு சென்றனர் என்பது. திருவருளைச் சிரமேற்றாங்கிச் சிவன் பெருமையை உலகறியச் செய்து உயிர்களை உய்யச் செய்வது கடமையாக மேற்கொண்டெழுந்தனர் என்க. சிவிகையினை மேற்கொள்ளுதல் - அதன் மீது எழுந்தருளுதல். 231

2130. சிவிகை முத்தினிற் பெருகொளி திசையெலாம் விளக்கக்
கவிகை வெண்மதிக் குளிரொளி கதிர்செய்வான் கலப்பக்
குவிகை மேற்கொண்டு மறையவர் குணலையிட் டாடப்
புவிகை மாறின்றிப் போற்றவந் தருளினார் போந்தார். உ௬உ

(இ - ள்) சிவிகை...விளக்க - சிவிகையிற் பதித்த முத்துக்களினின்றும் பெருகும் ஒளியானது எல்லாத் திசைகளையும் விளக்கவும்; கவிகை...கலப்ப - மேலே கவித்த முத்துக் குடையின் வெள்ளிய மதிபோன்ற குளிர்ந்த ஒளி சூரியனது கதிர் பரவும் ஆகாயத்திற் கலக்கவும்; குவிகை...ஆட - குவித்த கைகளை மேலே கொண்டு வேதியர்கள் ஆனந்த மேலீட்டினால் குணலையிட்டு ஆரவாரித்து ஆடவும்; புவி...... போந்தார் - உலகத்தை எந்தக் கைம்மாறுமில்லாமற் காக்கும் பொருட்டே வந்தவதரித்தருளிய பிள்ளையார் போந்தருளினர்.

(வி - ரை) இப்பாட்டு அடிதோறும் முதற்சீர் திரிபு என்ற யாப்பணி கொண்டது.

சிவிகை...விளக்க - சிவிகையின் முத்துக்கள் அதனை சுற்றி நாற்புறமுமிருத்தலின் அவ்வொளி நாற்றிக்கிலும் வீசுதலால் திசையெலாம் விளக்க என்றார். திசை - நாற்றிசை குறித்தது. எண்டிசை என்றலுமாம்.

கவிகை - குடை. **கவிகையின்** - ஒளி என்க. வெண்மதிக் குளிர் என்பன ஒளிக்கு அடைகள். மதியின் ஒளிபோன்ற. கவிகையாகிய வெண்மதி என்று கூட்டி உரைப்பினு மமையும்.

கதிர்செய் வான் கலப்ப - கதிர் - சூரியனது கதிர். சூரியனது கதிர் விளங்கும் வானில் மதியின் குளிர் ஒளியும் கலக்க. கவிந்த குடையின் முத்துக்கள் மேற்பக்கத்தில் இருத்தலால் அவற்றின் ஒளி வானிற் கலக்க என்றார். வேறு எல்லா வொளிகளையும் கீழ்ப்படுத்தும் ஞாயிற்றின் ஒளியினையும் இம்முத்துக்களின் ஒளி தன் கீழ்ப்படுத்த என்ற குறிப்புமாம்.

குவி - கை - கூப்பிய கைகள். **குணலை** - குணலைக்கூத்து என்பர். மிக்க மகிழ்ச்சியினால் ஆரவாரத்துடன் நடிக்கும் கூத்து. இங்கு ஆரவாரம் என்ற மட்டில் அமைந்தது. மறைவிளங்குதலால் மறையவர் ஆடினர் என்க.

கைம்மாறின்றிப் புவிபோற்ற என்க. தாம் யாதொரு கைமாற்றினையும் வேண்டாது; உலகத்தைக் காக்க. புவி - புவியை இரண்டனுருபு தொக்கது. **போற்றுதல்** - தீதகற்றி நலம் செய்து காத்தல். மேலும், சுற்றுத் திசையும் முத்து ஒளி விளக்கத் தாம் புவி காத்தனர் என்ற நயமும் காண்க.

வந்தருளினார் போந்தார் - முரண் அணி. வந்தருளினார் - வினைப் பெயர். பிள்ளையார்.

விரிக்க - என்பதும் பாடம். 232

2131. மறைமு ழங்கின ; தழங்கின வண்டமிழ் ; வயிரின்
குறைந ரன்றன ; முரன்றன வளைக்குலங் ; காளம்
முறையி யம்பின ; வியம்பல ஒலித்தன ; முரசப்
பொறைக றங்கின ; பிறங்கின போற்றிசை யரவம். உ௩௩

(இ - ள்) வெளிப்படை....வேதங்கள் முழங்கின ; வண்மையுடைய தமிழ் மறைகளும் ஒலித்தன ; கொம்புகளின் குறைகள் ஒலித்தன ; சங்கினங்கள் முழங்கின ; எக்காளங்கள் முறைப்படி மெய்க் கீர்த்திகளைக் கூறி ஊதின ; மற்றும் பலவகை இயங்கள் ஒலித்தன ; முரசங்களாகிய பெரிய இயங்கள் முழங்கின ; அடியார்கள் துதிக்கும் சத்தம் இவற்றின் மேலாய் விளங்கின.

(வி - ரை) முழங்கின என்பது முதலாக வந்த எட்டு வினைமுற்றுக்களும் ஒலித்தன என்ற ஒரே பொருளைத் தருவன. ஆயின் சத்திக்கும் வெவ்வேறு பொருள்களுக்கேற்ப ஒலிகளும் வேறு படுவனவாதலின் அவ்வவற்றுக்கு ஏற்றபடி வெவ்வேறு வினைகளாற் கூறினார். அதிர்வு - ஆர்ப்பு முதலாக வெவ்வேறு ஒலிப் பெயர்களாற் கூறும் கவிநயம்பற்றி 1175-லும், பிறாண்டும் உரைத்தவை பார்க்க.

திருவரத்துறையினின்றும் விடைபெற்றுப் பிள்ளையார் சிவிகையில் ஏறிப் புறப்படும் இதுபோழ்து எழுச்சியின் ஆர்ப்புக்களை முழங்கின, தழங்கின என்பன முதலாகப் பலவேறு சொற்களால் கூறி ஒரு பாட்டினுள் முடித்தனர். முன்னர்த் திருவரத்துறையை நோக்கிவரச் சிவிகையிலெழுந்தருளி வரும்போழ்து அங்கிகழ்ச்சியின் ஆர்ப்புக்களை "ஆர்த்தல்" என்ற ஒரே சொற்பின்வருநிலை யணியில் இரண்டு பாட்டுக்களாற் கூறியருளினமை காண்க. ஆங்குத் திருவரத்துறையினின்றும் வந்த வேதியர் தொண்டர் கோயிலுள்ளார் முதலியோர் ஒரு திறமும், பிள்ளையார் உடனிருந்தோர் ஒரு திறமும் ஆக இரு திறத்தார்களின் ஆர்ப்பும் ஒருமுகப்பட்டெழுந்தன. ஈண்டு அவ்வாறன்றிப் பிள்ளையாருடைய பரிசனங்களின் மகிழ்வின் முழக்கம் ஒன்றுமே கருணப்படும் என்பதாம். ஈண்டு வெவ்வேறு சொற்களாற் கூறியது திருவரத்துறையினர்பாலிற் பிள்ளையாரது பிரிவாற்றாமையும், பிள்ளையாரது பரிசனங்கள் பாலில் தாம் வரும்போதில்லாத சிவிகை முதலிய அருள் பெற்றெழுந்த மகிழ்வும் பொருந்தியன என்பதும் குறிப்புப் போலும். முன்னர் விரித்தமையின் ஈண்டுச் சுருக்கியமைந்தார் என்றலுமாம்.

மறை முழங்கின - வண்தமிழ் தழங்கின - மறை முழங்கினது போலவே தமிழ் தழங்கின என்பார் வினைமுற்றுக்களை அடுத்து வரவைத்தார். மேல் நரன்றன - முரன்றன என்பதுமிக்கருத்து. மறைகள் - தமிழ்கள் எனப் பன்மையிற் கொள்க. தமிழ் என்று வேறு பிரித்துக் கூறினமையால், ஈண்டு மறை என்பது தமிழல்லாத மறை என்க. மறைகள்-வேதங்கள். இவை மூன்றென்றும், நான்கென்றும், அனந்தம் என்றும் கூறுபவாதலின் பன்மையிற் கொள்ளப்படும். தமிழ் - தமிழ் மறைகளும் கீதங்களும் கொள்ளப் பன்மையிற் கூறினார். வண்மை என்ற அடைமொழி தமிழ்க்குச் சிறப்பு. வண்மையாவது வேண்டும் பயனை வரையாது எஞ்ஞான்றும் கொடுத்தல். இங்குத் தமிழ் என்றதனுட் பிள்ளையாரது திருப்பதிகங்களும் கொள்ளப்படும்,

அவற்றை அப்போதே எழுதியும் பாடியும் வருவோர் உடனிருந்தார் என்பதறியப் படுதலின்.

வயிரின் துறை - வயிர் - ஊது கொம்புகள். துறை - இவை சில துண்டங்களாக உள்ளவை பற்பலவாறு சேர்த்தும் பொருத்தியும் முழக்கப்படுதல் குறிப்பு.

வளைக்குலம் - அளவாலும் உருவாலும் பலவகைப்பட்டவையும், தொகையாற் பன்மையும் குறிக்கக் குலம் என்றார்.

காளம் - இனம் பற்றித் தாரையும் திருச்சின்னமும் உடன் கொள்க. **முறை** - முறைப்படி.

இயம்பின - மெய்க் கீர்த்திகளைக் கூறி ஊதுதலின் இயம்பின - சொல்லின - என்றார். முறை என்றதனைக் கருத்து.

முரசப்பொறை - பொறை - சிறுகுன்று ; குன்று போலும் பெரிய உருவுடைய தனைக் குன்றென்ற உபசாரம். பொற்றை - (சிறு மலை) என்பது எதுகை நோக்கி இடை குறைந்து நின்றது போலும். இயங்களுட் பெரிய உருவுடையன முரசங்கள். பொறை - பேருருவுடைமையின் தாங்கிச் செல்லும் முயற்சி குறித்துச் சுமை என்றலுமாம்.

போற்றிசை - இசை - இசைக்கும். போற்று - துதிகள் ; பிள்ளையாரையும் திருவருட் பெருமையினையும் அடியார் அர! அர! என்று பலவாறும் துதித்து உடன் சென்றனர் என்க.

பிறங்கின - அர! அர! முழக்கம் எல்லாவற்றினும் மேலாய் விளங்கின என்பது. "அரகர வென்பது கடலின் முழங்கிய தருணை வளம்பதியே" (அருணை - புரா).

கானம்—பறை—போற்றி செய்—என்பனவும் பாடங்கள். 233

2132. உடைய பிள்ளையார் மருமெல்லை யுள்ளவப் பதியோர்
புடையி ரண்டினுங் கொடியொடு பூந்துகில் விதானம்
நடைசெய் காவணந் தோரணம் பூகநற் கதலி
மிடையு மாலைக ணிறைகுடம் விளக்கொடு நிரைத்தார். உநச

2133. அனைய செய்கையா லெதிர்கொளும் பதிகளா னவற்றின்
வினைத ரும்பவந் தீர்ப்பவர் கோயில்கண் மேவிப்
புனையும் வண்டமிழ் மொழிந்தடி பணிந்துபோந் தணைந்தார்
பனைநெ டுங்கைமா வுரித்தவர் மகிழ்பெரும் பழுவூர். உநரு

2132. (இ - ள்) உடைய...பதியோர்-ஆளுடைய பிள்ளையார் எழுந்தருளி வரும் இடங்களில் உள்ள பதியவர்கள் ; புடை...நிறைத்தார் - இரு பக்கங்களிலும் கொடிகளோடு, அழகிய துகில்களையும், விதானங்களையும், நடைக்காவணங்களையும், தோரணங்கள் - கமுகு - வாழை - நெருங்கிய மாலைகள் இவற்றால் செய்யும் அலங்காரங்களையும், விளக்கினோடு நிறைகுடங்களையும் வரிசைப் படுத்தினார்களாக, உநச

2133. (இ - ள்) அனைய...பதிகளானவற்றின் - அத்தகைய செயல்களினாலே தம்மை எதிர்கொண்ட தலங்களில் ; வினை...பணிந்து போந்து - வினை காரணமாக வரும் பிறவி தீர்த்தருளும் சிவபெருமானது திருக்கோயில்களிற் சென்று புனைகின்ற வளப்பமுடைய தமிழ்ப் பதிகங்களை அருளிச் செய்து அடிவணங்கிச் சென்று ; பனை...பழுவூர் - பனைபோன்ற நீண்ட கையினையுடைய யானையை யுரித்த இறைவர் மகிழ்ந்து எழுந்தருளும் திருப்பழுவூர் என்றதலத்தை அணைந்தனர்(பிள்ளையார்). உநரு

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு பொருள் படுத்தி உரைக்க கின்றன.

2132. (வி - ரை) உடைய - ஆளுடைய. உலகத் தந்தை தாயரால் ஆட் கொள்ளப்பட்ட என்க. "ஆளுடைய பிள்ளையாராய்" (1967). எம்மை ஆளாகவுடைய என்றலுமாம்.

எல்லை - இடம். அளவுபட்ட நாட்டின் பகுதி.

கோடியோடு - வெற்றிக் குறியும் தசாங்கத்துள் ஒன்றும் ஆகும் சிறப்பு நோக்கி ஏனை அணி செய்வகைகளின்முன் வைத்தும், ஒடு உருபு தந்து பிரித்தும் ஓதினர். கோடி - வெண் கொடி. தூய்மையும் புகழும் சித்த அமைதியும் காட்டுவது. "விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்" (தேவா.) வெண்கொடி (white flag) சமாதான விருப்பம் காட்டும்படியை இந்நாள் நவீனர்களது போர்முறையினுங் காண்க.

நடைசெய் காவணம் - நடந்து நீளச் செல்லும்படி அமைக்கப்பட்ட பந்தர்.

பூந்துகில் விதானம் - அழகிய மெல்லிய துணிகள் கட்டிய மேற்கட்டி.

விளக்கொடு நிறைகுடம் - என்க. இவை யிரண்டும் அங்கங்கும் மனைவாயில்களி லும் பிற குறித்த இடங்களிலும் வைக்கப்படுவன. இவை யிரண்டும் கூடி ஒரே அணிவகை என்பார், நிறைகுடம் விளக்கொடு - என்று ஒடு உருபினுற் கூட்டி யுரைத்தார்.

நிரைத்தல் - வரிசைப்பட வைத்தல். 234

2133. (வி - ரை) அனைய செய்கையால் எதிர்கொளும் பதிகளானவற்றின் - எல்லாத்தலங்களையும் வழிபட்டுச் செல்லுதல் முறையேயாயினும், பிள்ளையார் புகலி மேற்செல மனம் வைத்துப் போந்தாராதலின் விரைந்து செல்லும் அச்செலவினிடை யிடை பல தலங்களிலும் சென்று தடைப்படுதல் முறையன்று ; ஆயினும் முன் பாட் டிற் கூறியபடி அடியார் எதிர்கொண்ட பதிகளில் சென்று சேராது விடுதலும் முறை யன்று ; ஆதலின் எதிர்கொளும் பதிகளில் - கோயில்கள் மேவி என்றார். எதிர் கொளும் - எதிர்கொண்டு அழைக்கும்.

வினை தரும் பவம் - வினை காரணமாக வரும் பிறவி ; வினை காரணமாக வருவ தால் வினைதரும் என்றார்; தரும் - தரப்படும் எனச் செயப்பாட்டுவினையாகக் கொள்க. அவ்வவர் வினைக்கீடாக இறைவனால் பிறவி தரப்படுவது என்பது ஞானசாத்திர முடிபு. பவம் - பிறவி - உற்பவம்.

பவந்தீர்ப்பவர் - சிவபெருமான், தனு முதலியவற்றையும் நூல்களையும் தந்து தன்மையாதி மூவிடங்களிலும் தாமே அருளிப் பிறவி தீர்ப்பவர்.

பனை நெடும் கைமா - நீண்ட கையினையுடைய விலங்கு ; யானை ; பனைபோன்ற கை ; "பனைக்கை மும்மத வேழம்" (தேவா).

பழவூர் - இது வேறு, வழுவூர் வேறு என்பர். தலவிசேடம் பார்க்க.

வண்டமிழ் மொழிந்து - பிள்ளையார் திருவரத்துறையினின்று போந்து வழியிடை அடியார் எதிர்கொள்ளச் சென்று இறைவர் கோயில்களை வழிபட்ட தலங்கள் இன்னவை என்று தெரியவில்லை. பதிகங்களும் கிடைத்தில ! எழுமூர் (வைப்பு) வாலிகண்டபுரம், துறைமங்கலம், அரியலூர் என்ற தலங்களில் கோயில்கள் உள்ளன. (பெரம்பலூர் தாலுகா - திருச்சி ஜில்லா). 235

வேறு

2134. அங்கணைந் திளம்பிறை யணிந்த சென்னியார்
பொங்கெழிற் கோபுரந் தொழுது புக்கபின்
துங்கநீள் விமானத்தைச் சூழ்ந்து வந்துமுன்
பங்கயச் சேவடி பணிந்து பாடுவார், உருசு

2135. மண்ணினிற் பொலிகுல மலையர் தாந்தொழு
தெண்ணில்சீர்ப் பணிகள்செய் தேத்துந் தன்மையில்
நண்ணிய வகைசிறப் பித்து நாதரைப்
பண்ணினிற் றிகழ்திருப் பதிகம் பாடினார். உருஎ

2134. (இ - ள்) வெளிப்படை. அங்குச் சார்ந்து, பிறை சூடிய முடியினை யுடைய பெருமானது அழகுமிக்க திருக்கோபுரத்தைத் தொழுது திருக்கோயிலி னுள்ளே புகுந்த பின்னர்ப், பெரிய நீண்ட விமானத்தைச் சூழ்ந்து வலம் வந்து திரு முன்பு சென்று தாமரை போன்ற திருவடிகளைத் தொழுது பாடுவாராய், உருசு

2135. (இ - ள்) மண்ணினில்...சிறப்பித்து - நிலவுலகத்திற் சிறந்து விளங்கும் அந்தணர் குலத்தில் வந்த மலையாளர்கள் தொழுது எண்ணில்லாத சிறந்த பணிகள் செய்து துதிக்கும் தன்மையில் பொருந்தியுள்ள வகைகளைச் சிறப்பித்து ; நாதரை... பாடினார் - இறைவரைப் பண்ணிசையால் விளங்கும் திருப்பதிகம் பாடியருளினார்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

2134. (வி - ரை) கோபுரந் தொழுது - என்றும், பின்னர் விமானம் - சூழ்ந்து என்றும், அதன் பின்னர் முன்பணிந்து என்றும் எடுத்து வகுத்துக் கூறியது வழி பாட்டு முறையினை வற்புறுத்தற்கு.

தொழுது - சூழ்ந்து - பணிந்து - வினையெச்சங்கள் தனித்தனி வழிபாட்டு முறையின் அங்கங்களைக் குறித்தன.

பாடுவார் - சிறப்பித்துப் பாடினார் - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. பாடுவார் - பாடுவாராகி ; முற்றெச்சம்.

துங்கம் - பெரிய. துங்கநீள் - மிகவுயர்ந்த ; மீமிசைச்சொல் என்றலுமாம். துங்கம் - தூய்மையுமாம். வந்து - வலம்வந்து. புக்க - கோயிலினுள் புகுந்த. 236

2135. (வி - ரை) மண்ணினிற் பொலிகுல மலையர் - என்றும், சீர்ப்பணிகள் செய்து - என்றும், ஏத்தும் - என்றும் கூறியவை "மண்ணின்மிசை யாடிமலை யாளர் தொழு தேத்திப், பண்ணினொலி கொண்டுபயில் கின்ற பழுவூரே" (4), "வேதமொழி சொல்லிமறை யாளரிறை வன்றன், பாதமவை யேத்த" (5), "ஒன்றுமிரு மூன்று மொரு நான்குமுணர் வார்கண், மன்றினி லிருந்துடன் மகிழ்ந்த" (9), "அந்தணர்க ளானமலை யாளரவ ரேத்தும்" (11) என்று வரும் பிள்ளையாரது பதிகப் பகுதிகளின் பொருளை எடுத்துக் காட்டிப் போற்றிய படியாம். பதிகப்பாட்டுக் குறிப்புப் பார்க்க.

வகை சிறப்பித்துப் பதிகம் பாடினார் என்க. சிறப்பித்த வகை முன் தொகுத் துக் காட்டப்பட்டது. மேலும் காண்க.

பணிகள் - அணுக்கத் தொண்டுகள்.

பண்ணினில் திகழ் - பண் - இந்தளப்பண். திகழ்தலாவது "நடையின் முடுகு மிராகம்" என்றபடி முடுகிய சந்தங்கொண்டிசைக்கும் கட்டளையின் விளங்கு

தல். மலையாள அந்தணர் பணி செய்தது இத்தலத்துச் சிறப்பு. ஆதலின் பிள்ளையார் அதனை எடுத்துப் போற்றியருளினர். அதனைப் பதிகக் குறிப்பாக ஆசிரியரும் காட்டியருளினர். 237

திருப்பழுவூர்

திருச்சிற்றம்பலம் திருவிராகம் பண் - இந்தளம்

முத்தன்மிகு மூவிலைநல் வேலன்விரி நூலன்
அத்தனெமை யாளுடைய வண்ணலிட மென்பர்
மைத்தழை பெரும்பொழிலின் வாசமது வீசப்
பத்தரொடு சித்தர்பயில் கின்றபழு வூரே. (1)

எண்ணுமொ ரெழுத்துமிசை யின்கிளவி தேர்வார்
கண்ணுமுத லாயகட வுட்கிடம தென்பர்
மண்ணின்மிசை யாடிமலை யாளர்தொழ தேத்திப்
பண்ணினொலி கொண்டுபயில் கின்றபழு வூரே. (4)

அந்தணர்க ளானமலை யாளரவ ரேத்தும்
பந்தமலி கின்றபழு வூரரனை யாரச்
சந்தமிகு ஞானமுணர் பந்தனுரை பேணி
வந்தவண மேத்துமவர் வானமுடை யாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—ஆசிரியர் 2135ல் காட்டியருளியபடி காண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) **முத்தன்** - இயல்பாகவே பாசங்களினீங்கியவர்; முத்தியருள்பவர் ; **விரிநூலன்** - கலைகளெல்லாமாய் விரியும் மறையின் பொருளானவர். நூல் சொன்னவர் ; **பத்தர்** - அன்பர் ; **சித்தர்** - சித்தத்தைச் சிவன்பால் வைத்த யோகியர். "காரணபங் கயமைந்தின் கடவுளர்தம் பதங்கடந்து, பூரணமெய்ப் பரஞ்சோதி பொலிந்திலங்கு நாதாந்தத், தாரணையாற் சிவத்தடைந்த சித்தத்தார்" என்று ஆசிரியர் இந்நிலையை விரித்தருளுதல் காண்க. அணிமாதிசித்திவல்லோர் - சித்தர் என்பாருமுளர். இது முன்னையதினும் தாழ்ந்த நிலை என்பர். "திண்டிறற் சித்தர்களே கடைக்கூழைச் சென்மின்கள்" (படையெழுச்சி) என்பது திருவாசகம்.—(2) **கோடல்** - வெண்காந்தள் ;—(3) **விழி செய்த** - நினைத்த என்ற பொருளில் 'வந்தது. விழித்த - என்றலுமாம். (4) **எண்ணும், ஓர் எழுத்தும், இசையின் கிளவி(யும்) தேர்வார்-கண்ணும்** (நினைக்கின்ற-கண்ணுகின்ற) **முதல்(வன்)** என்க - "எண்ணுமெழுத்தும் கண்ணெனத்தகும்" ; **மண்ணின்...பயில்கின்ற** - இதனை ஆசிரியர் (2135) எடுத்துக்காட்டியருளினர். (5) **மறையாளர்** - மறைபயிலும் மலையாளர். முன்பாட்டில் தொழுதேத்த என்றும், இங்கும், மேல் 11ம் பாட்டிலும் ஏத்த என்றும் வரும் கருத்தை ஆசிரியர் "ஏத்தும் தன்மை" (2135) என்று எடுத்துப் போற்றினர்.—(6) **மா அயரா அன்று உரிசெய் மைந்தன்** - **மா** - யானை; **மைந்தன்** - வன்மையுடையோன். "பனைநெடுங்கைமா வுரித்தவர் மகிழ்பெரும் பழுவூர்" (2133) என்று இதனை எடுத்து ஆண்டனர் ஆசிரியர். யானை யுரித்த வீரம் நிகழ்ந்த தலம் இது என்று குறிப்புப் போலும். **பூவை** - நாகணவாய்ப் பறவை. **கற்பு** - கற்பித்தல்.—(7) **மந்தணம்** - மந்திரம். இரகசியம் என்றலுமாம். **மாமடி** - தக்கன். **சுவடு ஒற்று** - அடையாளம்பட ஒற்றிக் கொள்ளுதல்—(8) **உரம்** - வலிமை—(9) **ஒன்றும்** - ஒன்றுகின்ற - பொருந்துகின்ற. ஒன்றும் - ஒன்றாகிய தாரக மந்திரத்தையும் என்றலுமாம். **இருமூன்று** - வேதங்களின்

ஆறு அங்கம். ஒருநாலும் - நான்மறைகள். மன்று - அம்பலம். இறைவரது கோயில். நகரசபை என்றலுமாம். திருநீலகண்டர் புராணம் பார்க்க.—(10) முட்டைகள் - கீழ்கள். "முட்டை கட்டுரை மொழிவ கேளாதே" (தேவா); "திட்டை முட்டைப் பெண்ணரை" (திருவிசைப்பா).—(11) அந்தணர்க ளான மலையாளர் அவர் ஏத்தும் - "மலையர் தாந்தொழுது ஏத்தும்" (2135).

தலவிசேடம் - திருப்பழுவூர் - இது சோழநாட்டில் உள்ளது. காவிரிக்கு வடகரையில் 55வது தலம். அந்தணர்களாகிய மலையாளர்கள் அணுக்கன் றொண்டர்களாய்ப் பணி செய்யும் சிறப்பியல்புடைய தென்பது பதிகத்துக் காண்க. புராணத்தும் ஆசிரியர் இதனை எடுத்தோதுதலும் காண்க. பரசுராமர் வழிபட்ட தலமென்றும், மலையாளர் பூசிக்கும் சிறப்புக்கு அது காரணம் என்றும் கூறுப. யானை யுரித்த வீரம் நிகழ்ந்த வீரட்டம் இதுவன்று என்றும் மாயூரத்திற்குத் தெற்கில் உள்ள வழுவூர் அதுவாமென்றும் கூறுவர். ஆனால் வழுவூருக்குத் தேவாரப் பாடல் இல்லாததும், இத்தலப் பதிகத்தில் "மாவயர வன்றுரிசெய் மைந்தனிடமென்பர்" (6) என்றும், புராணத்துள் "பனைநெடுங்கைமா வுரித்தவர் மகிழ் பெரும் பழுவூர்" (2133) என்றும் வருவன யானையுரித்த விவரத்தைக் கூறுதலும் குறிக்கத்தக்கன. சுவாமி - வடமூல நாதர்; அம்மை - அருந்தவநாயகி; பதிகம் 1.

இது திருச்சி - விழுப்புரம் இருப்புப்பாதை, அரியலூர் நிலயத்தினின்றும், தெற்கில் நான்கு நாழிகை யளவில் கற்சாலைவழி அடையத்தக்கது. கல்லகம் என்ற நிலயத்தினின்றும் வட கிழக்கில் கற்சாலை வழி 3 நாழிகையிலும் அடையலாம்.

2136. பாவின திசைவழி பாடி யங்ககன்
றியாவருந் தொழுதுட னேத்த வெய்தினர்
மூவுல குய்யநஞ் சுண்ட மூர்த்தியார்
மேவிய பெருந்திரு விசய மங்கையில் உ௬அ

(இ - ள்) வெளிப்படை. (திருப்பதிகத்தைப்) பாவின் இசை வழியே பாடி, அங்கு நின்றும் போய் யாவர்களும் உடனே கூடி ஏத்தும்படி, மூன்றுலகங்களும் உய்ய நஞ்சினை உண்டருளிய சிவபெருமான் விரும்பி எழுந்தருளிய பெரிய திருவிசய மங்கையில் சென்று சேர்ந்தனர்.

(வி - ரை) பாவினது இசைவழிபாடி - திருப்பதிகம் பண் வழி பாடப்பட்டதனை முன் கூறினர். யாப்பும் உரிய இசையும் பொருந்தியது இங்குக் கூறப்பட்டது. பா - கலிவிருத்தம் என்ற விருத்தப் பாவினம்.

அங்கு அகன்று - அங்கு நின்றும் அகன்று. நீக்கப்பொருளில் வரும் ஐந்தனுருபு தொக்கது.

யாவரும் தொழுதுடன் ஏத்த - விசயமங்கையில் - எய்தினர் என்க. யாவரும் - உடன் வந்தார்களும் அங்கு வந்து கூடியவரும் எதிர்கொண்ட அன்பர்களும்.

பாவினமிசைவழி—என்பதும் பாடம். 238

2137. அந்தணர் விசயமங் கையினி லங்கணர்
தந்தனி யாலயஞ் சூழ்ந்து தாழ்ந்துமுன்
வந்தனை செய்துகோ தனத்தை மன்னிய
செந்தமிழ் மாலையிற் சிறப்பித் தேத்தினர். உ௬௯

(இ - ள்) அந்தணர்...வந்தனை செய்து - அந்தணர்கள் வாழ்கின்ற விசயமங்கையில் சிவபெருமானது ஒப்பற்ற திருக்கோயிலை வலம் வந்து வணங்கி முன்பு வந்தித்து நின்று; கோதனத்தை - அங்குப் பசுக்களும் காமதேனுவும் பூசித்த செயலை; மன்னிய ...எத்தினர் - நிலைபெற்ற செந்தமிழ்ப் பதிகத்திற் சிறப்பித்து எடுத்துத் துதித்தனர்.

(வி - ரை) கோதனத்தை - கோதனம் - பசுக்கள் - வழிபட்ட செயலை. கோதனம் - பசுக்குலம்; பசுவாகிய செல்வங்கள்.

கோதனத்தைத் - தமிழ் மாலையிற் சிறப்பித்து-பசுக்கள் வழிபட்ட செய்தியைப் பிள்ளையாரது பதிகம் ''கோதனம் வழிபட'' எனவரும் இரண்டாவது திருப்பாட்டிற் காண்க. ''வெள்விடைக் கருள்செய் விசயமங்கை'' என்று திருக்குறுந்தொகை (3) யுள் ஆளுடைய அரசுகள் அருளியதுமிக் குறிப்பென்பர்.

அந்தணர் விசயமங்கை - ''குலவு நான்மறை, வேதியர் தொழுதெழு விசய மங்கையே'' (2) என்பது பதிகம். அந்தணர்களும் பசுக்களும் ஒருசேர வாழ்த்தற் குரியவர்; ''வாழ்க வந்தணர் வானவ ரானினம்'' (தேவா); இரண்டு தன்மையாலும் ஒருசேர அத்திருப்பாட்டிற் சிறப்பித்தமை குறிக்க, இவ்விரண்டினையும் இத்திருப் பாட்டில் அமைத்துக் காட்டியருளினர் ஆசிரியர். 239

திருவிசயமங்கை

திருச்சிற்றம்பலம் — பண் - காந்தார பஞ்சமம்

மருவமர் குழலுமை பங்கர் வார்சடை, யரவமர் கொள்கையெம் மடிகள் கோயிலாம்,
குரவமர் சுரபுன்னை கோங்கு வேங்கைகள், விரவிய பொழிலணி விசய மங்கையே. (1)

கீதமு னிசைதரக் கிளரும் வீணையர், பூதமு னியல்வுடைப் புனிதர் பொன்னகர்,
கோதனம் வழிபடக் குலவு நான்மறை, வேதியர் தாந்தொழும் விசய மங்கையே (2)

விண்ணவர் தொழுதெழு விசய மங்கையை, நண்ணிய புகலியுள் ஞானசம் பந்தன்,
பண்ணிய செந்தமிழ் பத்தும் வல்லவர், புண்ணியர் சிவகதி புகுத றிண்ணமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகப்பாட்டுக் குறிப்பு: கோதனமும் அந்தணரும் விண்ணவரும் வழிபட இறைவர் எழுந்தருளியுள்ள சிறப்புடையது திருவிசையமங்கை.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) **விசயமங்கையே அடிகள் கோயிலாம்** என்க. **குரா - சுரபுன்னை - கோங்கு - வேங்கை** - இவை கோட்டுப் பூக்களின் பொருட்டுத் திருநந்தன வனங்களில் வைக்கப்படுவன. **பொழில்** - நந்தனவனச் சோலை.—(2) **வீணையர்** - இறைவரது கையில் ஏந்தியது; '' மிகநல்ல வீணை தடவி '' - ''நல்வீணை வாசிக்குமே '' (தேவா). **இயல்வு** - சூழச் சரித்தல்; **கோதனம் வழிபட - வேதியர் தொழுதெழ** - ''அந்தணர் விசயமங்கை'' என்றும், ''கோதனத்தை'' என்றும் (2137) ஆசிரியர் காட்டியருளிய சிறப்புப் பெருமைகள்.—(3) அக்கும் அரவும் அரையில் உடையவர்;—(6) **ஒப்பு உரை** - ஒப்பாகச் சொல்லப்பட்ட;—(7) **பொனின்மலை** - மேரு.—(10) **கவணர்** - கீழ்கள்.—(11) **விண்ணவர் தொழுதெழ** - வானவர் மெய்ப்பட (6), ''விண்ணவர் தொழுதெழு'' (9); விஞ்சையர் தொழுதெழு (10).

தலவிசேடம் - திருவிசய மங்கை - சோழநாட்டில் காவிரி வடகரை - 47வது பதி. விசயன் (அருச்சுனன்) வழிபட்டு வரம் பெற்றமையால் இப்பெயரெய்தியது. ''பாண்டு வின்மகன் பார்த்தன் பணிசெய்து, வேண்டுநல் வரங்கொள் விசயமங்கை''

என்று ஆளுடைய அரசுகள் இதனைப் போற்றியருளினர். காமதேனு, பசுக்கள், இடபம், வானவர்கள் பூசித்த சிறப்புடையது. பிள்ளையார் பதிகம் பார்க்க. சுவாமி - விசயநாதர்; அம்மை - மங்கைநாயகி; தீர்த்தம் - அருச்சுன தீர்த்தம் ; பதிகம் - 2. (சிறிய கோயில்.)

குறிப்பு "கொள்ளி டக்கரைக் கோவந்த புத்தூரில்...விசயமங்கை" (குறுந் தொகை) ; கொள்ளிடத்தின் வடகரையில் உள்ளது கோவந்தபுத்தூர். எதிர் தென் கரையில் உள்ளது விசயமங்கை. இவை யிரண்டும் ஒரு நகராகக் கருதப்பட்டு வழங்கப் பட்டன ; தருத்தியும் வேள்விக்குடியும்போல.

இத்தலம் திருப்புறம்பயத்தினின்றும் தென்மேற்கில் மட்சாலை வழி இரண்டு நாழிகையளவில் அடையத்தக்கது. கும்பகோணம் செயங்கொண்டசோழபுரம் வண்டிப் பாதையில் வடக்கு நோக்கி 2 நாழிகையளவில் மேற்கே திரும்பிச் சென்றால் 2 நாழிகையளவில் மட்சாலை வழியும் அடையத்தக்கது.

2138. விசயமங் கையினிட மகன்று, மெய்யர்தாள்
அசைவில் வைகாவினி லணைந்து பாடிப்போந்
திசைவளர் ஞானசம் பந்த ரெய்தினார்
திசையுடை யாடையர் திருப்பு றம்பயம். உ௪௦

(இ - ள்) விசயமங்கை......அகன்று - விசையமங்கையினின்றும் நீங்கிச் சென்று ; மெய்யர்தாள்...போந்து - அசைதல் இல்லாத வைகா(வில்) என்னும் தலத்தில் அணைந்து சத்தே சொரூபமாயுடைய இறைவரது திருவடிகளைப் பாடிப் போந்து; இசைவளர்...திருப்புறம்பயம் - (தமிழ்) இசையினை வளர்க்கின்ற திருஞானசம்பந்த நாயனார் திசைகளையே ஆடையாக உடைய இறைவரது திருப்புறம்பயம் என்னும் தலத்தை அடைந்தனர்.

(வி - ரை) விசயமங்கையினிடம் - மங்கையினது இடத்தினின்றும்; ஐந்தனுருபுவிரிக்க.

மெய்யர் - சத்தாயுள்ளவர். அசைவில் - நிலையுதலில்லாமை.

வைகா(வில்) - சோழ நாட்டுத் தலம். தலவிசேடம் பார்க்க.

இசைவளர் - இன்னிசையினால் தமிழை வளர்க்கும். "நாளு மின்னிசை யாற் றமிழ் பரப்பு ஞான சம்பந்தன்" (நம்பி - தேவா. கோலக்கா). இசை - புகழ் என்று கொண்டு, புகழ் பெருகும் என்றலுமாம்.

திசையுடை ஆடையர் - திக்குக்களே இறைவனது ஆடை என்பர். திகம்பரர் என்ற பெயர் காண்க.

திருப்புறம்பயம் - சோழ நாட்டுத்தலம். தலவிசேடம் பார்க்க. 240

திருவைகாவில்

திருச்சிற்றம்பலம் திருவிராகம் பண் - சாதாரி

கோழைமிட றாககவி கோளுமில வாகவிசை கூடும்வகையால்
ஏழையடி யாரவர்கள் யாவைசொன சொன்மகிழு மீசனிடமாம்
தாழையிள நீர்முதிய காய்கமுகின் வீழநிரை தாறு சிதறி
வாழையுதிர் வீழ்கனிக ளூறிவயல் சேறுசெயும் வைகாவிலே. (1)

இன்னவுரு வின்னநிற மென்றறிவ தேலரிது நீதிபலவுந்
தன்னவுரு வாமென மிகுத்ததவ னீதியொடு தானமர்விடம்

முன்னைவினை போம்வகையி னென்முழு துணர்ந்தமுயல் கின்றமுனிவர்
மன்னவிரு போதுமரு வித்தொழுது சேரும்வயல் வைகாவிலே. (4)

முற்றுநமை யாளுடைய முக்கண்முதல் வன்றிருவை காவிலதனைச்
செற்றமலி னூர்சிர புரத்தலைவன் ஞானசம் பந்தனுரைசெய்
உற்றதமிழ் மாலையீ ரைந்துமிவை வல்லவ ருருத்திரரெனப்
பெற்றமர லோகமிக வாழ்வர்பிரி யாரவர் பெரும்புகழொடே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—சிற்றடிமை செய்யினும் மகிழ்ந்து கொண்டு பேரருள் புரியும் இறைவரது இடம் திருவைகாவில் என்பது. "வைகாவிலே" என்றும், "வைகாவிலதனை" என்றும் வருவனவாற்றால் வைகாவில் என்பது தலப் பெயராகக் கொள்ளப்பட்டது. கள்ளில் - காறயில் - நெல்வாயில் என்பனபோல.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) கீதம் பாடும் அடியார்க்குச் சிவன் இரங்கியருளும் எளிமை குறிக்கப்பட்டது. "கீதத்தை மிகப்பாடு மடியார்கள்" (தேவா). **கோழைமிடறு** - சுரம் நன்கு வெளிப்பட முடியாதபடி அடைக்கும் கோழையுடைய மிடறு. **கவிகோளுமில** - பாடும் கீதம் பொருள்கோ ளற்றன; **இசைகூடும் வகை** - நன்கமையாது இயன்ற அளவில் பொருந்துதல்; **ஏழை** - வேறு பற்றுக்கோடு இல்லாதவர். **தாழை** - தென்னை. **இளநீர் முதியகாய்** - இளநீர் முற்றிய நெற்று; இளநீரும் முற்றிய கனியும் என்றலுமாம். தென்னை - கமுகு - வாழை - இவை செழித்து ஒன்றன்கீழ் ஒன்றாய் வரிசையிற் காணப்பயன்றந்து நிற்கும் வளம் குறித்தது. தெங்கங்கனியும் வாழைக் கனியும் முன் பறிப்பா னின்றித் தாமே விழ உள்ள நிலையும் குறிப்பு. **வயல் சேறு செயும்** - உழவர்க் குபகாரமாக என்ற குறிப்பும் காண்க. "காய்மாண்ட தெங்கின் பழம்வீழ......வாழைப் பழங்கள் சிந்தும்" என்று உபகாரக் குறிப்பாகிய பயனின்றி, வாளா செயலின் றேற்றங்கூறும் சிந்தாமணிப் பாட்டு ஈண்டு ஒப்பு நோக்கற்பாலது. "தாழையிள நீர்முதிய வாழையில் விழுந்த வதரில்...பூகநிரை தாறுதிர" (தேவா); "தெங்கம் பழம் கமுகின் குலை சாடிக் கதலி செற்று" (கோவை - 100—(2) **விண்டவர்** - பகைவர்; —(3) **உணர்ந்த** - அனுபவநிலை கைவந்த. **ஞானமிக** - சிவஞானம் முறுகி வளர; **மல்** - வளமை. **சூழ்** - நீர் நிலை. **அணவும்** - கூடும்.—(4) இறைவர திலக்கணம் உரைத்தது. **நீதி** - அறநூல் விதித்த ஒழுக்க முறைமை; "நீதிநூல்" என்னும் வழக்குக் காண்க. **முன்னைவினை** - பழவினை.—(5) **கேதகை** - தாழை.—(6) **அஞ்சுடர்** - தீபம். **ஆறுபதம்** பிரணவ முதலாகிய பஞ்சாட்சரம். **மைஞ்சர்** - மைந்தர் என்பதன் திரிபு. ஆண்மக்கள்.—(7) **குளிர** - நிரம்ப; நிறைய. "தோளைக் குளிரத் தொழுதேனே" (தேவா); **நாளி** - நாளிகேரம், தென்னை.—(8) **விலங்கல்** - மலை; **கடியோன்** - கொடியவன்; (9) **அந்த முதலாதி** - **முதல்** - முதல்வன்; **அந்த முதல்** - அந்தத்தைச் செய்கின்ற முதல்வனும், **ஆதி** - ஆதியைச் (சிருஷ்டி) செய்கின்ற முதல்வனுமாகிய அமரர் கோனை என்க.—(10) **அணையா** - விளங்காத.—(11) **செற்றமலினூர்** - செறிந்த வளங்களால் நிறைந்த. **மாலை** - பாட்டு. **உருத்திரர் எனப்பெற்று** - "உருத்திர பல்கணத்தார்"களில் வைத்து எண்ணப்பட்டு; **புகழோடே பிரியார்** - ஒடு நீக்கப் பொருளில் வரும் ஐந்தனுருபு. உருபு மயக்கம். புகழினின்றும் பிரியார்.

தலவிசேடம் - திருவைகாவில் - தலப்பெயர்; வைகாவூர் என்பது இதுவரை பல பதிப்புக்களிலும் கொண்ட பெயர். காவிரிக்கு வடகரையில் 48வது தலம்.

புலிக்குப் பயந்து வில்வமரத்தின்மேல்ஏறிய வேடனொருவன் இரவு முழுதுந் துயில் வராமலிருக்க வில்வ இலைகளைப் பறித்துச் சிவலிங்கத்தின் மேலே போட்டுக்கொண் டிருந்தமையால் முத்தியடைந்த தலம் என்பர். இங்குச் சிவராத்திரி சிறப்பாகக் கொண் டாடப்படுகிறது. உபதேச காண்ட வரலாறு பார்க்க. சுவாமி - **வில்வவன நாதர்; அம்மை - வளைக்கை நாயகி**; மரம் - வில்வம்; தீர்த்தம் - இயமதீர்த்தம். பதிகம் - 1.

குறிப்பு:—ஆளுடைய பிள்ளையாரது பதிகமுழுமையிலும் இறைவரை வழிபடும் சிறப்பும், வழிபாட்டு முறைகளும், அருட்பெருமையும் கூறப்பட்டமை காண்க.

இது திருவிசயமங்கையினின்றும் (2137ன் உரைத்த தலவிசேடம் பார்க்க.) மேற்கே மட்சாலை வழி இரண்டு நாழிகை யளவில் அடையத் தக்கது.

2139. புறம்பயத் திறைவரை வணங்கிப் போற்றிசெய்
திறம்புரி நீர்மையிற் பதிகச் செந்தமிழ்
நிறம்பயி லிசையுடன் பாடி நீடிய
அறந்தரு கொள்கைய ரமர்ந்து மேவினார். உ௲சக

(இ - ள்) புறம்பயத்து.....போற்றிசெய் - திருப்புறம்பயத்தில் எழுந்தருளிய இறைவரை வணங்கித் துதிக்கும்; திறம்புரி நீர்மையில் பதிகச் செந்தமிழ் - திறம் புரிகின்ற நீர்மையில் வரும் பதிகமாகிய செந்தமிழினை; நிறம்பயில் இசையுடன் பாடி - வண்ணம் மிகும் இசையுடனே பாடி; நீடிய......மேவினார் - நீடும் அறத்தை உதவும் கொள்கையாராகிய பிள்ளையார் அங்கு விரும்பி எழுந்தருளியிருந்தனர்.

(வி - ரை) திறம் - நீர்மை - நிறம் - இசை - இவை பண்ணமைதியாகிய இசையின் பாகுபாடுகள். 221ம் பாட்டிலும், 948 - 953 பாட்டுக்களிலும், 2033 பாட்டினும் உரைத்தவை இங்கு ஏற்ற பெற்றி அமைத்துக் கண்டுகொள்க. **நீர்மை** - பண்ணின் முதல்முறை முதலாகிய பதினொரு பாகுபாடுகளுள் ஒன்று. (சிலப். அரங். 41-42 உரை); **திறம்புரி** - பண்வகை நான்கு: அவை பண், பண்ணியல், திறம், திறத்திறம் என்பன. அவற்றுள் திறம் பொருந்த. திறம் - பன்னிரண்டென்பர். (சிலப். புறஞ். 187 - உரை). **நிறம்** - வண்ணம்.

நிறம்பயில் இசை - "பல இயற்பாக்களுடனே நிறத்தை இசைத்தலால் இசை என்று பெயராம்" (சிலப். அரங். 28. "இசையுடன் படுத்து" - உரை.)

திறம்புரி...இசையுடன் - இதனுள் பண்ணிசைப் பாகுபாடுகள் பற்றிக் கூறியது, **நிறம்** பசுமை...**நீர்மை** - திறம்பய னுறும்பொருள் என்று வரும் பதிக முதற் பாட் டின் குறிப்பை அறிவுறுத்தியவாறும். பதிகப்பாட்டுக் குறிப்புப் பார்க்க.

நீடிய அறந்தரு கொள்கையார் - நீடிய அறம் - சிவதருமம். **தருதல்** - உலகுக்கு எடுத்துக்காட்டி உபதேசித்தல். **கொள்கையார்** - கொள்கையராய். "அறம் பயனுரைத்தனை" என்ற பதிகப் பாட்டுக் குறிப்புப் பார்க்க. 241

திருப்புறம்பயம்

திருச்சிற்றம்பலம் **திருவிராகம்** பண் - இந்தளம்

மறம்பய மலைந்தவர் மதிற்பரி சறுத்தனை;
நிறம்பசுமை செம்மையொ டிசைந்துனது நீர்மை
திறம்பய னுறும்பொரு டெரிந்துணரு நால்வர்க்
கறம்பய னுரைத்தனை புறம்பய மமர்ந்தோய். (1)

விரிந்தனை குவிந்தனை விழுங்குயி ருமிழ்ந்தனை
திரிந்தனை குருந்தொசி பெருந்தகையு நீயும்
பிரிந்தனை புணர்ந்தனை பிணம்புகு மயானம்
புரிந்தனை மகிழ்ந்தனை புறம்பய மமர்ந்தோய், (3)

கருங்கழி பொருந்திரை கரைக்குலவு முத்தஞ்
தருங்கழு மலத்திறை தமிழ்க்கிழமை ஞானன்
சுரும்பவிழ் புறம்பய மமர்ந்ததமிழ் வல்லார்
பெரும்பிணி மருங்கற வொருங்குவர் பிறப்பே. (11)

திருச்சிற்றம்பலம்.

பதிகக் குறிப்பு :—இறைவர் உயிர்களிடத்துச் செய்யும் உபாயங்களை எடுத்துரைத்துப் போற்று முகத்தால் சிவதருமங்களை எடுத்து உபதேசித்தல். இதனை அறந்தரு கொள்கையார் (2139) என்று ஆசிரியர் காட்டியருளினர்.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) **மறம்பயம் மலைந்தவர்** - மறம் - பாவச் செயல்கள். மறங்களையே பயனாகக் கொண்டு போரிட்டவர். முப்புரவாணர். **நிறம் - நீர்மை - திறம் -** இசைக் கூறுபாடுகள். இசையாவது சிவன் புகழை உள்ளடக்கிக் கூறுதலேயாம் என்பர் ; இனி, இரட்டுற மொழிதலால், **நிறம் பசுமை செம்மையோடு இசைந்து** என்றது, நிறம் என்ற கூறுபாடாவது அம்மை (பசுமை) அப்பர் (செம்மை) என்ற சிவனருட் பண்பும், **திறம்பயனுறும் பொருள் தெரிந்து** என்றது திறம் என்பதெல்லாம் பயன்படும் மெய்ப் பொருளை உள்ளடக்கியனவே என்ற பொருட் பண்பும், **உணருநால்வர்க்கு** என்றதனால் பெறுவோர் பண்பும், **அறம் பயனுரைத்தனை** என்றதனால் சிவதன்மமாகிற ஞானப் பயனின் பண்பும், என்றலுமாம்; உபதேசித்தபடி; ஈண்டு **நீர்மை - தன்மை ; அளியின் தன்மை** என்க. " அறங்கொண்டு சிவதன்ம முரைத்த பிரான் " (பிள். தேவா. புள்ளிருக்குவேளூர். சீகா. 6). "புறம்பய மதனில் அறம்பல வருளியும்" (திருவா)—(2) **எருத்து** - மார்பு.—(3) **விரிந்தனை** - புனருற்பவம் - சிருட்டி. **குவிந்தனை** - ஒடுக்கம் - சங்காரம்; **விழுங்குயிர் உமிழ்ந்தனை** - சங்காரத்திலும் சிருட்டியிலும் உயிர்கள் சூக்கும சரீரத்துடன்மாயையில் கிடப்பன. தாரகமா மத்தன்றாளாகிய சிவனருளில் கிடப்பனவாயினும், மலம் நீங்கியபோது தான் திருவடிச் சம்பந்தம் வெளிப்படும் ; விரிதலுங் குவிதலும் ஈண்டு வியாபகமாதலும் நுணுகுதலும் என்றல் பொருந்தும்; இத்திருப்பாட்டின் சொல்லும் பொருளும் " விரிந்தும் குவிந்தும் விழுங்குவர்கள் " எனத் திருக்களிற்றுப்படியில் எடுத்தாளப்பட்டன. **பிரிந்தனை புணர்ந்தனை** - முதல்வன் திரோதான சத்தியின் கூறாகிய ரோதயித்திரி சத்தியை அதிட்டித்து நின்று காத்தல் செய்யுங்கால், திருமாலொடு புணர்ந்தனன் என்றும், அத்தொழிலை ஒடுக்கிக் கொண்டு ஆரணி சத்தியால் உருத்திரமூர்த்தியை அதிட்டித்துச் சங்காரஞ் செய்யுங்கால் அத்திருமாலைப் பிரிந்தனன் என்றும் கூறப்படுமாதலான் " பெருந்தகையு நீயும் பிரிந்தனை புணர்ந்தனை " என்றருளிச்செய்தனர். **பிணம் புகு மயானம் புரிந்தனை மகிழ்ந்தனை** - சங்காரத்தின் பின் புனருற்பவத்தின் பொருட்டுச் செய்யும் நடனம் குறித்தது—(4) **உளங்கொள வளைந்தவர்** - சிவபூத கணங்கள்.—(5) **இறைவர் பிணி** - இறப்பு - பிறப்பு இல்லாதவர். **படுதல்** - உண்டாதல். இத்தல அம்மை **கரும்படுசொல்லம்மை** என்பது.—(6) **அனற்படு தடக்கையவர்** - எரியோம்பும் மறையவர். வேதியர்களது வலக் கையில் அனல்உளதென்பது மரபு. அனலை உண்டாக்கும்-வளர்க்கும்-என்பது. **நினைப்புடை மனத்தவர்** - மறவா மனமுடையோர். **வினைப்பகை** - வினைக்குப் பகை. பகைப்பொருளில்வரும்

நான்கனுருபு தொக்கது. கனற்படு - படு - உவமவுருபு. கிடக்கையை - கிடக்கை யுடையை.—(7) மறுந்தவர் - கொன்றவர்; அதனுட் செல்லாதவர். அறத்துறையிற் செல்லும்படி உள்ளம் ஒறுத்து என்க. ஒறுத்தல் - ஐம்புலவின்பங்களிற் செல்லாது அறத்துறையில் நிற்கும்படி தடை செய்து நிறுத்துதல். "நெறிசேர் புலனுறு மனனிடை தடைசெய்த பொறிகளி னளவு" (734); அருட்கிழமை - அருளுக் குரியராந் தன்மை. திறத்துள - வசமாக உள்ள—(8) இறை - அரசன்; உலம் - திரண்ட கல்.—(10) விடக்கு - புலால்; ஒருவர் நன்றெனை - ஒருவர் தீதெனை - முறையே புத்தர் - சமணர் கொள்கைகள். படக்கர் - கீழ்கள்; பிடக்கு - பொய். வஞ்சம். பெரும்பிணி - ஆணவம். ஒருங்கு - மலவாதனையும். ஒருங்குதல் - நீங்கு தல். சிவதன்மப் பயன் கூறியபடி. "அறந்தரு கொள்கையர்" (2139) என்று ஆசிரியர் இத்தன்மையவாகிய வுபதேச மொழிபற்றி எடுத்துக் கூறியமை காண்க.

தலவிசேடம் - திருப்புறம்பயம் - சோழ நாட்டில் காவிரிக்கு வடகரையில் 46வது தலம். ஊழிப் பெருவெள்ளநீர் உள்ளே வராமல் தடைபட்டு வெளியில் - புறத்தில் - நின்றமையால் இப்பெயர் பெற்றதென்பர். புறம் - வெளிப்பக்கம்; பயம் - நீர். பிரளயங்காத்த பிள்ளையார் என்ற காரணப் பெயரும் காண்க. தனது பெற்றோரைத் துறந்து, தான் மணந்து கொள்ளவுள்ள காதலனொடு ஒரு வணிகப் பெண் வந்து தங்கியபோது, அவ்வணிகனைப் பாம்பு தீண்டி அவன் இறக்க, அப்பெண் ணின் பொருட்டு இறைவர் சித்தராகி எழுந்தருளி வந்து விடந்தீர்த்து அவ்விருவருக் கும் மணம் முடித்து வைத்தனர் என்பதும், பின் ஒருகால் அந்த மணத்தினைப்பற்றி வழக்கு நேர்ந்தபோது இறைவர் வன்னியும் கிணறும் இலிங்கமும் ஆகிச் சான்று பகர்ந்தனர் என்பதும் தலவரலாறு. இது சம்பந்தமான வன்னிநாடகம் என ஒன்று அணிய காலம்வரை நடிக்கப்பட்டு வழங்கி வந்தது. திருவிளையாடற் புராணத்துள் இச்சரிதம் திருஞானசம்பந்த நாயனார் திருமருகலில் விடந்தீர்த்த வரலாற்றுடன் பிணைத்துக் கூறப்பட்டுள்ளது. இவ்வரலாற்றின் காரணத்தால் சுவாமி சாட்சிநாத ரென்றும், வழங்கப்படுவர். அம்மை பெயர் கரும்படு சொல்லம்மை என்பது பதிகத்துக் (5) காணப்படும். இங்குச் சிவபெருமான் சனகாதியர்களுக்கு அறமுரைத் தருளினர் என்ற வரலாறு முன் 2139ன் கீழும், பதிகக் குறிப்பு, பதிகப்பாட்டுக் குறிப்புக்களினும் உரைக்கப்பட்டது. இறைவர் திருமுன்புக்குக் கீழ்பக்கம் தீர்த்தக் கரையில் எழுந்தருளிய குருமூர்த்தி இம் மூர்த்தி என்பர். இவர் திருமடப்பள்ளிக்கு விறகு கொண்டுவரும் பஞ்சம அடியார்க்கு அருளும் பொருட்டு அங்கெழுந்தருளினர் என்பதும் வரலாறு.

இத்தலம், திருவிசய மங்கையினின்றும் கிழக்கே மட்சாலை வழி ஒரு நாழிகை யளவில் அடையத் தக்கது. விசயமங்கைத் தலவிசேடம் முன் 2137ன் கீழ் உரைக் கப்பட்டது.

2140. அத்திருப் பதிபணிந் தகன்று போயனற்
கைத்தலத் தவர்பதி பிறவுங் கைதொழு
முத்தமிழ் விரகரா முதல்வர் நண்ணினார்
செய்த்தலைப் பணிலமுத் தீனுஞ் சேய்ஞலூர். ௨௬௨

(இ - ள்) அத்திருப்பதி......போய்-அந்தப் புறம்பயம் என்னும் திருத் தலத்தைப் பணிந்து சென்று; அனல்.........முதல்வர் - தீயை ஏந்திய கையினை உடைய இறைவரது திருத் தலங்கள் பலவற்றையும் கைதொழும் முத்தமிழ் விரகராகிய

தலைவர் ; செய்த் தலை...சேய்ஞலூர் நண்ணினார் - வயல்களில் சங்குகள் முத்துக்களை ஈனுதற்கிடமாகிய திருச் சேய்ஞலூரை வந்தடைந்தனர்.

(வி - ரை) பதி பிறவும் கை தொழும் - முதல்வர் என்க. தொழச் செல்லும் தலைவர் என்க. பதிபிற என்பவை இடையில் உள்ள திருவியலூர், திருந்துதேவன் குடி முதலாயின என்று கருதப்படும்.

செய்த்தலைப் பணிலம் முத்து ஈனும் - தலை - ஏழனுருபு. பணிலம் - சங்கு; வயலினுட் சங்கம் முத்தீனுதற்கிடமாகிய என்க. "கடலேறித் திரைமோதிக் காவிரியி னுடன்வந்து கங்குல் வைகித், திடலேறிச் சுரிசங்கம் வெண்முத்தங் கீன்றலைக்குந் திருவை யாறே' (பிள் - தேவா); சங்குகள் ஆற்றினின்றும் அலையால் கொணரப்பட்டவை.

பணில முத்தீனும் சேய்ஞலூர்-சங்கங்கள் முத்து ஈனுதல்போல, அத்திருத்தலம் சிவபூசைப் பயனை உயிர்களுக்கு அருளி முத்திக்கு நெறிகாட்டும் பிள்ளையார் திருவவதரிக்கப் பெற்றது என்ற குறிப்புப்பெற இச்சிறப்பாற் கூறினார். முத்து - விடு பட்டது ; வீடுபேறு குறிப்பது ; மேற்பாட்டுப் பார்க்க. 242

பிறவுங் கைதொழ - என்பதும் பாடம்.

திருவியலூர்

திருச்சிற்றம்பலம். பண் - நட்டபாடை

குரவங்கமழ் நறுமென்குழ லரிவையவள் வெருவப்
பொருவெங்கரி படவென்றத னுரிவையுட லணிவோன்
அரவும்மலை புனலும்மிள மதியுந்நகு தலையும்
விரவுஞ்சடை யடிகட்கிடம் விரிநீர் வியலூரே. (1)

விளங்கும்பிறை சடைமேலுடை விகிர்தன்விய லூரைத்
தளங்கொண்டதோர் புகலித்தகு தமிழ்ஞானசம் பந்தன்
துளங்கிறமிழ் பரவித்தொழு மடியாரவ ரென்றும்
விளங்கும்புக ழதனோடுயர் விண்ணும்முடை யாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—விரிநீர் வியலூரே இறைவர்க்கிடம்.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) விரிநீர் - காவிரி பரவிச்செல்ல அதன் கரையில் உள்ளமை குறிப்பு.—(2) ஒருவன் பலவுருவன் - "ஒருவனுமே பலவாகி நின்றவா" (திருவா); நிலையானுன் - அழியாதவன்.—(3) உம்மென்று - ஒலிக் குறிப்பு ; உரை - முழக்கம் ; முழக்கமிடும் சோலைகள். "குன்றங் குமுறிய வுரை" (பரிபா. ச. 35) அடைவு - புகல்—(5) இறைவர் எல்லாமாய் நிற்கு நிலை.—(6) வசை - "கொல்லெறி குத்தென் றார்த்துக் குழுமிய வோசை" (654) "விரவலாமை சொலி" (நம்பி-தேவா) நிலையவனை - தவநிலையுடையானை ; அசைய - தவநிலை கலைய ; அசையா வணம் - தோல்வியுறாதபடி.—(7) இரவு - இரத்தல் ; சங்காரமாகிய இரா என்றலுமாம் ; பகல் நட்டம் - ஊழிதருமுயிரான் - (புனருற்பவம்) மீளப்படைத்தல் ; விளைபொருள் கள் ; புவனபோகங்கள்.—(10) பிடக்கு - பொய்ம்மொழி.

தலவிசேடம் - திருவியலூர் - காவிரிக்கு வடகரையில் 43-வது தலம். பரந்த காவிரியின் கரையில் உள்ளது. காவிரி நீர்ச் செழிப்பு மிகவுடையது.

"விரிநீர் வியலூர்" என்பது பதிகம். இது பண்டாரவாடைத் திருவிசலூர் என்று வழங்கப்படுவது. மெய்கண்ட சாத்திரங்களுள் முதலாவதாகிய "திருவுந்தியார்" என்ற நூலை அருளிய உய்யவந்த தேவநாயனார் இத்தலத்தில் எழுந்தருளியிருந்தார் என்பர். சுவாமி - யோகாநந்தேசுரர்; அம்மை - சாந்தநாயகி; பதிகம் 1.

இது முன்கூறிய திருப்புறம்பயத்தினின்றும் கிழக்கில் ஒரு நாழிகை யளவில் மட்சாலைவழி அடையத்தக்கது. திருவிடைமருதூர் நிலயத்தினின்றும் வடமேற்கே மட்சாலைவழி 4 நாழிகை யளவிலும் அடையலாம்.

திருந்துதேவன்குடி

திருச்சிற்றம்பலம் பண் - கொல்லி

மருந்துவேண் டில்லிவை மந்திரங் கள்ளிவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங் கள்ளிவை
திருந்துதே வன்குடித் தேவர்தே வெய்திய
அருந்தவத் தோர்தொழு மடிகள்வே டங்களே. (1)

வீதிபோக் காவன வினையைவீட் டுவ்வன
ஓதியோர்க் கப்படாப் பொருளையோர் விப்பன
தீதிறே வன்குடித் தேவர்தே வெய்திய
ஆதியந் தம்மிலா வடிகள்வே டங்களே. (2)

சேடர்தே வன்குடித் தேவர்தே வன்றனை
மாடமோங் கும்பொழில் மல்குதண் காழியான்
நாடவல் லதமிழ் ஞானசம் பந்தன
பாடல்பத் தும்வல்லார்க் கில்லையாம் பாவமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—திருந்து தேவன்குடித் தேவர்தேவனது வேடங்களாகிய திருநீறு - அக்கமணி - மருந்து - மந்திரம் - புண்ணியம் முதலியவை எல்லாச் சாதனமும் பயனுமாவன.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) **மருந்து வேண்டில்** - வேண்டப்படுமாயின் - வேண்டும்போது; நோய் தீர்க்கும் மருந்து மந்திரம் மணி என்ற மூன்றும் கூறப்பட்டன. தல அம்மையின் பெயர் அருமருந்தம்மை என்ற குறிப்புமாம். **வேடங்கள்** - மணி; நோய் - பிறவிநோய். "மயக்கந் தீர்க்குநெறி - வீடுகாட்டுநெறி" என 5வது பாட்டிற் கூறும் குறிப்புக் காண்க. வேடங்கள்-திருநாமம்.—(2) **வீதிபோக்கு** - விதி என்பது வீதி என முதனீண்டு வந்தது. **அகப்படா** - மனத்துள் வராத. **படுதல்** - உண்டாதல். அறியப்படுதல். ஓர்வித்தல் - அறிவித்தல்.—(3) **வான்** - சிவலோகம். (7) **கரைதல்** - மெலிதல். ஐயப்பாடு - மாறு சொல்லுதல் என்றலுமாம்.—(8) **உட்குதல்** - அஞ்சுதல்.—(9) **துளக்கம்** - நிலையிற் கலங்குதல்.—(10) **தொழும்பர்** - கீழ்கள்.

தலவிசேடம்; —**திருந்துதேவன்குடி** - சோழநாட்டில் காவிரிக்கு வடகரையில் 42வது தலம். நண்டு பூசித்துப் பேறுபெற்ற தலம். சிவலிங்கத் திருமேனியில் நண்டு உருவம் காணப்படுகின்றது. ஒரே நிறமுள்ள பசுப்பால் நிறைய ஆட்டினால் திருமேனிக்குள்ளிருந்து நண்டு வருவது காணலாமென்பர். அம்மை கோயில்கள் இரண்டு.

சுவாமி - கர்க்கடகேசுரர் ; தேவர் தேவேசுரர் - என்பது பதிகத்துக் காண்பது. அம்மை - அருமருந்தம்மை. பதிகம் 1.

இத்தலம் வயலிடையே தனிக்கோயில் மாத்திரமாய் சுற்றிலும் வீடுகள் முதலியன இன்றி உள்ளது. கோயிலைச் சூழ்ந்து அகழிபோல மூன்று புறமும் ஒரு தீர்த்தம் உண்டு.

இது முன்கூறிய திருவியலூருக்கு வடக்கே வரப்புவழி ஒரு நாழிகை யளவில் அடையத்தக்கது. மழைக் காலத்தில் வழி கடினம். திருவிடைமருதூர் நிலையத்தி னின்றும் மட்சாலைவழி வடமேற்கே 4½ நாழிகையிலும் அடையலாம்.

2141. திருமலி புகலிமன் சேரச் சேய்ஞலூர்
அருமறை யவர்பதி யலங்க ரித்துமுன்
பெருமறை யொடுமுழ வொலிபி றங்கவே
வருமுறை யெதிர்கொள வந்து முந்தினர். உசங

(இ - ள்) திரு......சேர - திருமிக்க சீகாழித் தலைவர் இவ்வாறு எழுந்தருளிவர; சேய்ஞலூர்......பிறங்கவே - சேய்ஞலூரில் வாழும் அரிய வேதியர்கள் தமது பதியை அலங்காரம் செய்து முன் பெரிய மறை முழக்கத்தோடு மங்கல முழவுகளின் ஒலியும் விளங்கவே ; வருமுறை......முந்தினர் - வரும் முறைமையின்படி பிள்ளையாரை எதிர்கொள்ளும் பொருட்டு வந்து முற்பட்டனர்.

(வி - ரை) அருமறையவர் - முந்தினர் - என்க. " திருமறையோர் மூதூர் " (1206) ஆதலின் அவர்கள் முந்தினர் என்றார். அருமறையவர் - அருமைப்பாடாவது 1207ல் உரைக்கப்பட்டது. மேன்மையோர்களது வழிவழிவந்த சிறப்பு.

பதி - நகரையும் கோயிலையும் கொள்ள நின்றது. பின் " விளங்குகோயில் " (2145) என்பது மிக்குறிப்பு.

மறையோடு முழவொலி - மறையொலியொடு என்க. முழவோசையை ஒலி என்றது சார்ச்சி பற்றி வந்தது. மங்கலப் பொருள் தருதலும் குறிப்பு.

பிறங்கவே - பிறங்குதலாவது முழக்கம் இன்னின்னவை என்று பிரித்தறியப் படும்படி விளங்குதல். பிறங்க - பெருக என்பாருமுண்டு.

வருமுறை - பிள்ளையாரது பெருமைக்குத் தக்கபடி அம்முறையில் ; முறைமை யாவன புண்ணிய நீர்நிறை குடமேந்துதல், பொரியு மலரும் ஏந்துதல், விளக்கு ஏந்துதல் முதலாயின. (2144 பார்க்க.)

முந்தினர் - பிள்ளையார் நகரினை அணுகுமுன் வந்தனர் பிள்ளையார் திருமுன்பு வந்தனர் என்றலுமாம். 243

2142. ஞானசம் பந்தரு, "நாய னார்சடைத்
தூநறுந் தொடையன்முன் சூட்டும் பிள்ளையார்
பான்மையில் வரும்பதி" யென்று, நித்தில
யானமுன் னிழிந்தெதி ரிறைஞ்சி யெய்தினர். உசச

(இ - ள்) ஞானசம்பந்தரும்......என்று - திருஞானசம்பந்தப் பிள்ளையாரும், இறைவர் தமது சடையிற் சாத்திய தூய நறிய கொன்றைமாலையை முன்னர்ச் சூட்டும் சண்டேசப் பிள்ளையார் பான்மையினால் வந்தவதரிக்கப் பெற்ற பதியிதுவாம் என்றுட் கொண்டு ; நித்தில......எய்தினர் - முத்துச் சிவிகையினின்றும் இறங்கி எதிர் வணங்கி வந்தணைந்தனர்.

(வி - ரை) நாயனார் - தலைவர். சிவபெருமான். 470ம் பிறவும் பார்க்க.

நாயனார் - தொடையலைச் சூட்டும் பிள்ளையார் என்க. தொடையல் - மாலை. இங்குக் கொன்றைமாலை குறித்தது. 1261 பார்க்க. பிள்ளையார் - இறைவர் தமது மகனைக் கொண்டமையாற் பிள்ளையார் என்பது மரபு. 1259 பார்க்க.

பான்மை - நியதி - ஊழ்; முந்தை யறிவின்றொடர்ச்சியினால் வேதாகமங்களின் முதிர்ந்த உணர்வுடன் விளங்கியமை குறிப்பு; 1218 பார்க்க. வரும் - வந்தவதரிக்கும்.

நித்தில யானம் - யானம் - சிவிகை. இழிதல் - கீழிறங்குதல்.

எதிர் இறைஞ்சி - பதியினை எதிர் வணங்கி. பதியினைக் கண்டவுடன் வணங்கும் மரபும் நகரச்சிறப்பும் உடன் குறிக்கப்பட்டன. 244

2143. மாமறை யாளர்,வண் புகலிப் பிள்ளையார்
தாமெழுந் தருளிடத், தங்கள் பிள்ளையார்
காமரும் பதியில்வந் தருளக் கண்டன
ராமகிழ் வுடன்பணிந் தாடி யார்த்தனர். உ௪௫

(இ - ள்) மாமறையாளர் - பெரு மறையவர்கள்; வண்......எழுந்தருளிட - வண்மையுடைய சீகாழிப் பிள்ளையார் தாம் அவ்வாறு எழுந்தருளிவர; தங்கள்... மகிழ்வுடன் - தங்களுடைய சண்டீசப் பிள்ளையாரே அழகிய பதியினில் அன்று மீண்டும் எழுந்தருளிவரக் கண்டனர் போன்ற மகிழ்ச்சியுடன்; பணிந்து ஆடி ஆர்த்தனர் - வணங்கியும் ஆடியும் ஆரவாரித்தனர்.

(வி - ரை) வண் - பிள்ளையார் என்று கூட்டுக. வள்ளன்மையாவது கைம்மாறு கருதாது தாமே எழுந்தருளி வந்து அருள் கொடுத்தல். வண்புகலி என்று புகலியின் வளம் பற்றிக் கூறுதலுமாம். இப்பொருளில் "செய்த்தலைப் பணிலமுத் தீனும்" (2140) என்று முன் சேய்ஞலூருக்குக் கூறிய சிறப்புக் குறிப்பினைப் புகலிக்குங் கொண்டுரைக்க.

புகலிப் பிள்ளையார் - தங்கள் பிள்ளையார் - என்றீரிடத்தும் பிள்ளையார் என்ற பெயராற் கூறினமை மகன்மை முறையால் இருவரு மொப்பாகக் கண்ட குறிப்புத் தருதற்கு.

தங்கள் பிள்ளையார் - பதியில்வந்தருள - சண்டீசப் பிள்ளையார் முன்னர் வந்தது போலவே மீண்டும் வந்தருள என்க. மீண்டும் என்பது இசையெச்சத்தான் வந்தது. வந்தருள - அவர் முன்னர்த் தொழுதணைந்த சிவலோகத்தினின்றும் எழுந்தருளிவர என்பது குறிப்பு.

கண்டனர் ஆம் - கண்டார்கள்போலும். ஆம் - உவம உருபு. வினையும் பயனும் மெய்யும் உருவும் என நான்கும்பற்றி விரவி எழுந்த உவமக் குறிப்பு. சண்டீசப் பிள்ளையார் உபநயன முடித்து ஓதும் பருவத்தே இறைவரை யடைந்த சரித நிகழ்ச்சி உளதாயிற்று. ஆளுடைய பிள்ளையார்க்கும் இதுகாலை அப்பருவமேயாக இனிச் சீகாழி சேர்ந்து அடுத்து நிகழ்வது உபநயன நிகழ்ச்சியாம். (2161) என்பதும் ஈண்டு இவ்வுவமையுள் வைத்துக் கருதத்தக்கன.

பணிந்து - பிள்ளையாரைப் பணிந்து.

ஆடுதல் - ஆர்த்தல் - மகிழ்ச்சியின் மெய்ப்பாடுகள். 245

2144. களித்தனர் புண்ணியக் கரக வாசநீர்
தெளித்தனர் ; பொரிகளு மலருஞ் சிந்தினர் ;
துளித்தனர் கண்மழை ; சுருதி யாயிரம்
அளித்தவர் கோயிலு ளவர்முன் பெய்தினர். உ௪௬

(இ - ள்) வெளிப்படை - மேலே கண்டவாறு மகிழ்ச்சியடைந்தனராகிக் கமண்டலத்தினால் புண்ணியமுடைய மணமூட்டிய நீரினைத் தெளித்தனர் ; பொரிகளையும் மலர்களையும் வீசினர் ; ஆனந்தக் கண்ணீர் துளித்தனர் ; அளவில்லாத வேதங்களை அளித்தருளிய சிவபெருமானது திருக்கோயிலினுள் அப் பிள்ளையாரின் முன்பு (மறையவர்) சென்றனர்.

(வி - ரை) களித்தனர் - முற்றெச்சம் ; களிப்படைந்தவர்களாகி ; ஏனையவை வினைமுற்றுக்கள். இஃது ஆசிரியரது கவிநயங்களுள் ஒன்று.

கரகப்புண்ணிய வாசநீர் - என்க. புண்ணிய நீராவது காவிரி முதலிய புண்ணிய நீர்நிலைகளினின்றும் கொணர்ந்த நீர் என்றும், அதனோடு புண்ணியந்தரும் மந்திரங்களால் உருவெய்திய நீர் என்றும் பொருள்படும்.

கண்மழை துளித்தனர் - என்க. கண்ணீர் மழைபோலத் துளித்தல் ஆனந்த விளைவின் மெய்ப்பாடாம். துளிக்கப் பெற்றனர்.

சுருதி ஆயிரம் அளித்தவர் - சிவபெருமான். ஆயிரம்-அளவிறந்தது ; அனேகம். ஆறனுருபு தொக்கது.

அவர்முன் பெய்தினர் - மாமறையாளர் என்ற எழுவாய் முன்பாட்டினின்றும் வருவிக்க. "முன்புகு காதலர் பின்சென்றார்" (1983) என்று சிவபாதவிருதயர் சென்றதுபோல இம்மறையவர்களும் பிள்ளையாரைப் பின்பற்றிச் செல்லாது அவர் முன்பு எய்தினமை என்னை ? யெனின், தமது பதிக்கோயிலாதலின் அவரை எதிர் கொண்டு அழைத்துச் செல்லும் கடமைப்பாடுபற்றி என்க. 246

2145. வெங்குரு வேந்தரும், விளங்கு கோயிலைப்
பொங்கிய விருப்பினாற் புடைவ லங்கொடு,
செங்கைகள் சென்னிமேற் குவித்துச், சென்றுபுக்
கங்கணர் முன்புற வணங்கி, தாழ்ந்தனர். உ௪௭

(இ - ள்) வெளிப்படை. சீகாழித் தலைவராகிய பிள்ளையாரும் விளக்கமுடைய அத்திருக்கோயிலினை மிக்க விருப்பினாலே சுற்றி வலமாக வந்து செங்கைகளைச் சிரத்தின்மேற் குவித்துக்கொண்டு உள்ளே புகுந்து இறைவரது திருமுன்பு அணைந்து வணங்கினார்.

(வி - ரை) வெங்குரு - சீகாழியின் நான்காவது பெயர்.

விளங்குகோயில் - சிவனை வழிபடும் அடியார்களின் மனத்துளெல்லாம் விளங்குகின்ற என்க. என்னை ? சிவபூசைப் பயன் பெறும் பொருட்டு அவர் யாவரும் இத்திருக்கோயிலினையும் அதன் பிள்ளையாரையும் உடன் எண்ணுதல் ஒரு தலையாதலின் என்க.

பொங்கிய விருப்பினால் - இறைவர்பால் மிகுந்த அன்பு, ஈண்டு அதனோடு மிக்குச் சண்டீசப் பிள்ளையார்பாலும் பெருகிச் சேர்ந்தமையாற் பொங்கிய என்றார். இதனை மேல்வரும் பாட்டிற் கூறுதல் காண்க.

முன்புற அணைந்து - இப்பதிகத்தில் முழுமையும் நூலடைந்த என்பது முதலாக அடைந்த என்பதுபற்றிய சிறப்புக் கூறுகின்றமையால் அக்கருத்துடன் முன்பு பொருந்த அணைந்தனர் என்பதாம். உற என்ற குறிப்புமிது.

அங்கணர் - தாதையை எறியும் பொருட்டுக் கோலினையே மழுவாக்கிக் கொடுத்தும், அது கொண்டு எறிந்தார்க்குப் பதம் கொடுத்தும், பிறவாறும் அருளியமையால் அவ்வருள், அவரது அங்கண்மைக் கிழுக்கில்லாமையுடன், அதனை விளக்கிக் காட்டிற்று என்றது குறிப்பு. "பாதகப் பயன் பெறும் பரிசு" என்றும், "கருணை" என்றும், மேல் வரும் பாட்டிற்கூறும் குறிப்பும் கருத்தும் காண்க. "நயனங்கண் மூன்றுடைய நாயகனே தண்டித்தாற், சயமன்றோ வானவர்க்கு" (திருவா - சாழல் 4) என்றதும் "நயனங்கண் மூன்றுடைய நாயகன்" என்ற குறிப்புப்பெற அங்கணர் என்றதும் கருதுக. 247

2146. வேதியர் சேய்ஞலூர் விமலர் தங்கழல்
காதலிற் பணிந்தவர் கருணை போற்றுவார்
தாதைதா டடிந்தசண் டீசப் பிள்ளையார்
பாதகப் பயன்பெறும் பரிசு பாடினார். உ௪அ

(இ - ள்) வேதியர்......போற்றுவார் - வேதியர்கள் வாழ்தற்கிடமாகிய சேய்ஞலூரில் எழுந்தருளிய விமலரது திருவடிகளை வணங்கி அப்பெருமானாரது கருணைத் திறத்தைத் துதிப்பாராகிய பிள்ளையார்; தாதைதாள்......பரிசு பாடினார் - தாதையைத் தாளினை வெட்டிய சண்டீசப் பிள்ளையார் பாதகச் செயலாகிய அதற்குப் பயனாக அரனார் மகனாராகிய பரிசினைப் போற்றிப் பாடியருளினார்.

(வி - ரை) **வேதியர் சேய்ஞல்** - மறையவர் மிகுதியாய் வாழும் பதியாகிய சேய்ஞலூர். "மறையோர் விளங்குவது" (1207); "வேதியர் வாழும் சேய்ஞல்" (திருசேரிசை. ஆப்பாடி - 2)

கருணை - முன்பாட்டில் அங்கணர் என்றவிடத் துரைக்கப்பட்டது. கழுவாயில்லாத சிவாபராதத்தினின்றும் தாதையை மீட்க அருளுதலின் கருணை என விதந்தோதப்பட்டது. "நிக்கிர கங்க டானும்...இறைசெய லருளே யென்றும்" - (சித்தி - 2 - 15)

கருணை போற்றுவார் - **பாதகப் பயன்பெறும் பரிசு பாடினார்** - பதிகம் - "பீரடைந்த" என்ற 7-வது திருப்பாட்டின் கருத்துரைத்தபடி. **போற்றுவார்** - போற்றுவாராகிய பிள்ளையார்; வினைப்பெயர். **கருணைத்** திறமாவது மாவேள்வியும் பாதகச்செயலுமாகிய செய்கைகளைப்பற்றியன்றிக் கருத்துப்பற்றிப் பயன்களளித்தல்.

தாதைதாள் தடிந்ததாகிய பாதகத்துக்குச், சண்டீசப் பிள்ளையாராகிய பரிசு என்க. "பாதக நன்மை யாய்த்தே" (சித்தி - 2-29); "பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே"

பாதகப்பயன் - பாதகத்துக்குப்பயன் என்க. கொடைப் பொருளில் வரும் நான்கனுருபு தொக்கது.

தாதை - எச்சதத்தன். **தாள்தடிந்த** - வரலாற்றினைச் சண்டீச நாயனார் புராணத்துட் (1256) பார்க்க.

• பாதபங்கயம் பெறும் பரிசு—என்பதும் பாடம். 248

2147. இன்னிசை வண்டமிழ் பாடி யேத்தியே
நன்னெடும் பதியுளோர் நயக்க வைகிய
பின்னர்வெண் பிறையணி வேணிப் பிஞ்ஞகர்
மன்னிய திருப்பனந் தாள்வ ணங்கினர். ௨௪௯

(இ - ள்) இன்இசை......ஏத்தியே - இனிய இசையமைந்த வண்மையுடைய தமிழ்ப் பதிகத்தினைப் பாடித் துதித்தே; நன்னெடும்...பின்னர் - நல்ல பழமையுடைய அத்திருப்பதியினுள்ளோர்கள் விரும்பியதனால் அங்குத்தங்கி எழுந்தருளியிருந்த பின்பு; வெண்பிறை...வணங்கினர் - வெள்ளிய பிறையினை அணிந்த சடையப்பர் நிலைபெற்றருளும் திருப்பனந்தாளினைச் சென்று தொழுதருளினர் (பிள்ளையார்).

(வி - ரை) இன் இசை வண்தமிழ் - இன் இசையாவது பதிகப் பண்ணாகிய பழந்தக்கராகமும் அதன் கட்டளை பேதமும்; வண்மையாவது "சேயடைந்த சேய்ஞலூரிற்" "செல்வன் சீர்பரவி" உபதேசித்தும், எல்லாப் பாட்டுக்களிலும் அடைந்த என மேற்கொண்டமையால் அதனை அடைதலால் வரும் பயன் பலவாற்றாலும் எடுத்துக்காட்டியும் உபகரித்தது.

நயக்க - விரும்பியதினால் சீகாழிக்குச் செல்ல மனம்வைத்த பிள்ளையார் அவ்வார்வச் செலவினிடையே இங்கு வைகியதற்கு அந்த நன்னெடும் பதியுளோர் நயந்த தன்மை காரணம் என்பதாம். நயக்க - காரணப் பொருள்பற்றி வந்த செயவெனெச்சம்.

வேணிப்பிஞ்ஞகர் - திருப்பனந்தாளின் இறைவர் சடையப்பர் என்னும் பெயர் பெறும் வரலாற்றுக் குறிப்பு. 831 பார்க்க.

ஏத்தியநீநன்னெடும்—என்பதும் பாடம். 249

திருச்சேய்ஞலூர்

திருச்சிற்றம்பலம் பண் - பழந்தக்கராகம்

நூலடைந்த கொள்கையாலே நுன்னடி கூடுதற்கு
மாலடைந்த நால்வர்கேட்க நல்கிய நல்லறத்தை
யாலடைந்த நீழன்மேவி யருமறை சொன்னதென்னே
சேலடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே. (1)

பீரடைந்த பாலதாட்டப் பேணுத வன்றாதை
வேரடைந்து பாய்ந்ததாளை வேர்தடிந் தான்றனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித் தலைமைவ தந்ததென்னே
சீரடைந்த கோயின்மல்கு சேய்ஞலூர் மேயவனே. (7)

சேயடைந்த சேய்ஞலூரிற் செல்வன சீர்பரவித்
தோயடைந்த தண்வயல்சூழ் தோணிபு ரத்தலைவன்
சாயடைந்த ஞானமல்கு சம்பந்த னின்னுரைகள்
வாயடைந்து பாடவல்லார் வானுல காள்பவரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக்குறிப்பு :—பதிகக் கருத்தும் குறிப்பும் 2146 திருப்பாட்டில் ஆசிரியர் காட்டியருளினர்.

பக்கம் உஅஉ : பாட்டு 2148-ன் கீழ்ச் சேர்க்க.

" ஆங்கணி சோன்மலர் மாலைசாத்தி "

திருப்பனந்தாள்

திருச்சிற்றம்பலம் பண் - பஞ்சமம்

கண்பொலி நெற்றியினான் றிகழ் கையிலோர் வெண்மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகு பீடுடை மால்விடையான்
விண்பொலி மாமதிசேர் தரு **செஞ்சடை வேதியனூர்**
தண்பொழில் சூழ்பனந்தாட் டிருத் தாடகை யீச்சரமே. (1)

தண்வயல் சூழ்பனந்தாட் டிருத் தாடகை யீச்சரத்துக்
கண்ணய லேபிறையா னவன் றன்னைமுன் காழியர்கோன்
நண்ணிய செந்தமிழான் மிகு ஞானசம் பந்தனல்ல
பண்ணியல் பாடல்வல்லா ரவர் தம்வினை பற்றறுமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—*கண்பொலி நெற்றியினான் என்பது முதலாகிய தன்மைகளா லறியப்படுகின்ற செஞ்சடை* வேதியனூர் *திருப்பனந்தாளின் தாடகை யீச்சரமே.*

பதிகப் பாட்டுக் குறிப்பு :—(1) **கண்பொலி நெற்றியினான்** - *நெற்றிக்கண்ணன்;* **பீடு** - *பெருமை ;* **செஞ்சடை வேதியன்** - *தலச்சுவாமி பெயர் ;* **பனந்தாள்** - *ஊர்ப் பெயர்.* **தாடகையீச்சரம்** - *கோயிலின் பெயர் :*—(2) **விரித்தவன்** - *சங்கார காலத்தில் தன்னுள் ஒடுக்கிச் சிருட்டியில் மீள விரித்துவைத்தவன் ;* **உயிரும் பிரித்தவன்** - *சங்கரித்தவன் ;* **செஞ்சடை** - *தலச்சுவாமி பெயர்க் குறிப்பு ;*—(3) **உள்குதல்** - *நினைத்தல் ;* **கிளர்கீதமோர் நான்மறை** - *சுரங்கள் பொருந்திய வேதங்கள் ;* **மடுத்தல்** - *உண்ணுதல் ;* **மாதவர்** - *தக்கனும் அவனை உள்ளிட்ட முனிவர் முதலியவர்களும் ;* **தடுத்தல்** - *இங்கு அழித்தல் என்ற பொருளில் வந்தது ;*—(4) **சூழ்தரு** - *முன்னை வினைக்கீடாகப் பிறவியிற் சுற்றிய ;* **பல்பிணி** - *அது காரணமாக இம்மையின் கலிவுகள் ;* **பாழ்படுதல்** - *நீங்குதல் ;* **சடையான்** - *தலச்சுவாமி பெயர் ;*—(5) **விடம்படு** - **படுதல்** - *தோன்றுதல் ;* **படுதல்** - *நிலையழிதல் என்ற குறிப்புமாம் ;* **இருள்** - *சங்கார காலம் ; இரவு ; ஊழி ; இருளின் கண் என்க. ஏழனுருபு தொக்கது ;* **திரைநாக மோடு மணியும் கொணரும்** *என்க.* **கொணர்தல்** - *மலைப் பாம்புகளை அலைகள் அடித்து வருதல் குறிப்பு ;* **புனல்** - *மண்ணியாறு ; காவிரியின் கிளை ;*— (6) **பூதம்** - *சிவபூதகணங்கள் ;* **நவில்** - *போன்ற ; உவமவுருபு ;* **தொடைநவில்** - *மாலைபோன்ற ;* **சடையவன்** - *தலச் சுவாமி பெயர் ;*—(7) **மலையவன்** - *மலையரசன்.*—(8) **மும்மையினான்** - *இம்மை அம்மை வீடு என்ற மும்மையினும் கருத்தனாகிய நாயகன்* **தற்றவன்** - *அணிந்தவன் ;*—(9) **வில்......அம்பு** - *மலை (மேரு) வில் ;* **அரவம்** - *(ஆதிசேடன்) நாண் ;* **கனல்** - *(தீ) அம்பு - ஆக என்க ;* **புன்மை** - *தீமை ;*— (10) **ஆதர்** - *தீயவர் ; கீழ்கள் ;* **நீதர்** - *நீசர் - கீழ்மக்கள் ;* **பொய்கை** - *இத்தலத் தீர்த்தம் ;*—(11) **கண்ணயலே பிறை** - *முடிமேற் சூடிய பிறை நெற்றிக் கண்ணின் பக்கம் உள்ள குறிப்பு ;* **பண்** - *பதிகப்பண் - பஞ்சமம்.*

தலவிசேடம் :—திருப்பனந்தாள்—II பக்கம். கககo - கககக - பார்க்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—இப்பதிக முழுமையும் அடிதோறும் அடைந்த என வருவது சொற் பொருட் பின்வருநிலை.—(1) நூல் - வேத சிவாகமங்கள். மால் - ஐயப்பாடு. மால் - காதலுமாம். நல்லறம் - சிவதருமத் துணிபு. அறம்பொருள் இன்பம் வீடென்னு முறுதிப் பொருட்கு முடிபாகியது சிவதருமம். "திறங்கொண்ட வடியார்மேற் றீவினைநோய் வாராமே, யறங்கொண்டு சிவதன்ம முரைத்தபிரான்" (புள். வேளூர். பிள். தேவா.) என்னே-சொன்ன கருணைத்திறந்தான் என்ன பெருமை! என்ற அற்புதக் குறிப்பு. இவ்வாறே மேல்வரும் பாட்டுக்களிலும் கொள்க. "கருணை போற்றுவார்" (2146);—(2) உமையாளைப் பாகம் வைத்துக் கங்கையையும் சடைமேல் வைத்த சதுரப்பாடு.—(3) நோக்கி - பெயர் ; நோக்குடையவள் ; உமை அம்மையார் ;—(4) பாண் - இசை ; சேண் - விசும்பு.—(5) வாயடைந்த - எழுதப்படாது வாய்மொழியாக வழிவழி வந்த. ஐவேள்வி - பஞ்சமகாயாகங்கள் ; வேள்வித்தீ அடைந்த செங்கையாளர் - வேள்வித்தீ வளர்க்கும் கையினராகிய மறையவர். சேய்ஞலூர் மறையவர் பதி என்பது.—(6) களிற்றுக்கோச்செங்கணான் - சிலந்தியாயிருந்தபோது களிற்றினுடன் மாறுபட்டுப் பின் அந்நிலைவுடன் கோச்செங்கணானாக வந்தவர். களிற்றின் படையினை யுடையவன் என்றலுமாம். சேடு - பெருமை. அருள்செய் - மேயவன் என்றுகூட்டுக.—(7) இப்பாட்டின் கருத்து முன் 2146-ல் ஆசிரியரால் எடுத்துக்காட்டப் பட்டது. பீர்-முலையின் வழிக்கறந்த பால். பேணுதவனாகிய தாதை; பேணாத வன்னெஞ்சனாகிய தாதை என்றலுமாம். வேரடைந்து - அவ்வழிபாட்டின் வேராகிய பாற்குடத்தை அடைந்த ; வேர் - வெயர்வை ; கோபித்த என்றலுமாம் ; வெகுளியிலும் வேர்வை தோன்றும். "வேர்த்து வெகுளார் விழுமியோர்" குறள்.—(8) நாவடைந்த பாடல் - துதி. சே - இடபம் ;—(9) கனக் மலையான் - பொன்னிறமுடைய பிரமன் ;—(10) வீசடைந்த - வீசுதலை உடைய. வீசுதல் - விரித்தலும் ஆடுதலும். தோகை - அதனை உடைய மயிலுக்கு வந்தது.—(11) சேய் - முருகப் பெருமான். 1206 பார்க்க. செல்வன - அகரம் ஆறனுருபு ; தோய் - தோயம் ; கடைக்குறை ; நீர். சார் - சார்பு ; புகழ் என்றலுமாம்.

தலவிசேடம்—திருச்சேய்ஞலூர் :—சோழநாட்டில் காவிரிக்கு வடகரையில் 41-வது தலம். ஏனைய வரலாறுகள் பற்றிச் சண்டேசநாயனார் புராணத் திறுதியில் (II - பக் - ௧௬௧௬) தலவிசேடம் உரைத்தவை பார்க்க.

2148. ஆங்கணி சொன்மலர் மாலை சாத்தி,யப்
பாங்குபந் தணைநலூர் பணிந்து பாடிப்போய்த்,
தீங்குதீர் மாமறைச் செம்மை யந்தணர்
ஓங்குமோ மாம்புலி யூர்வந் துற்றனர். உ௫0

(இ - ள்) ஆங்கு......சாத்தி - அத்திருப்பனந்தாளில் அழகிய சொல்மலர்களாலாகிய பதிகமாலையினைச் சாத்தியபின் ; அப்பாங்கு......போய் - அப்பக்கத்தில் உள்ள திருப்பந்தணை நல்லூரைப் பணிந்து துதித்து மேலே சென்று ; தீங்குதீர்......உற்றனர் - தீங்கினைத் தீர்க்கும் பெருமறை பயிலும் செம்மை வேதியர்கள் விளங்கி ஓங்குதற் கிடமாகிய திருவோமாம்புலியூரினில் வந்து சேர்ந்தனர் (பிள்ளையார்).

(வி - ரை) ஆங்கு - அவ்விடத்தில் ; முன்னறி சுட்டு. முன்சொல்லிய அத்திருப்பனந்தாளில். அப்பாங்கு - அதன் பக்கத்தில்.

தீங்குதீர் - தீமையாவன கலிவலிமையால்வரும் தீமைகள். **தீர்த்தல்** - தாங் கற்ற மறைவழியே எரிமூன்றும் வளர்த்து உலகை ஓம்புதல். "கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார்" (பிள்ளை. தேவா - குறிஞ்சி ; கோயில் - 1) - "உயர் புகழ் தணரேத்த உலகர்க் கென்றுந் தீங்கிறிந வடதளி" (தாண்) என்பன காண்க.

மறைச் செம்மை - தாம்பயின்ற மறைவழி ஒழுகி எரியோம்பும் ஒழுக்கம்.

செம்மை அந்தணர் ஓங்கும் ஓமாம்புலியூர் - கற்றநூல் வழியே எரியோம்பும் அந்தணர் வாழ்தலால் அவ்வாறு காரணப்பெயர் பெற்றதென்று குறிக்க உடம்பொடு புணர்த்திஓதினார். "ஆங்கெரி மூன்று மமர்ந்துட னிருந்த வங்கையா லாகுதி வேட்கும், ஓங்கிய மறையோ ரோமமாம் புலியூர்" என்ற பதிகத்தின் கருத்தை ஆசிரியர் எடுத்துக் காட்டியபடி. 250

திருப்பந்தணைநல்லூர்

திருச்சிற்றம்பலம் **பண் - புறநீர்மை**

இடறினார் கூற்றைப் பொடிசெய்தார் மதிலை யிவைசொல்லி யுலகெழுந் தேத்தக்
கடறினா ராவர் காற்றுளா ராவர் காதலித் துறைதரு கோயில்
கொடிறனார் யாதுங் குறைவிலார் தாம்போய்க் கோவணங் கொண்டுகூத் தாடும்
படிறனார் போலும் பந்தணை நல்லூர் நின்றவெம் பசுபதி யாரே. (1)

கல்லிசை பூணக் கலையொலி யோவாக் கழுமல முதுபதி தன்னில்
நல்லிசை யாளன் புல்லிசை கேளா நற்றமிழ் ஞானசம் பந்தன்
பல்லிசை பகுவாய்ப் படுதலை யேந்தி மேவிய பந்தணை நல்லூர்
சொல்லிய பாடல் பத்தும்வல் லவர்மேற் றொல்வினை சூழகில் லாவே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—இறைவர் கடல் - நாடு - காடு - மலை முதலிய உலகாயுள்ளார் ; அவர் அவ்வாறு இருத்தல் யாராலும் அடையாளம்பட அறியவியலாதது ; யாவர் யாது சொல்லினும் அவரது துதியேயாம் ; அவ்விறைவர் பந்தணைநல்லூர் நின்ற எம் பசுபதியார் ; அவர் அவ்வாறிருத்தல் பசுக்களாகிய உயிர்களுக்குப் பதியாந் தன்மையினாலாம். **குறிப்பு** : இங்கு அந்தணர் தீயோம்பும் சிறப்புப்பற்றி அரசுகள் திருத்தாண்டகப் பதிகமுழுமையும் அருளுதலும் காண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) **இடறினார்** - உதைத்தார் ; **கடறு** - காடு ; **கொடிறனார்** - கொடுமையார். **படிறு** - வஞ்சனை ; அமர்நீதியார் சரிதக் குறிப்புமாம். **பந்தணைநல்லூர் நின்றவெம் பசுபதியாரே** - பதிகத்தின் மகுடம். பசுபதியாரதலின் இன்னின்ன தன்மையர்போலும் என்பது. **பசுபதியார்** - தலத்துச் சுவாமி பெயர்.—(2) **சுவடுதாமறியார்** - சுவடு - அடையாளம். அவர் அவ்வாறு ஒன்றியுடனாயிருந்தும் இருக்கும் அடையாளம் அறியப்படாதவர். **அறியார்** - செயப்பாட்டு வினை - அறியப் படாதவர். "மனமே யொன்றிப் புக்கனன் போந்த சுவடில்லையே" (தேவா). "தாவியவ னுடனிருந்துங் காணாத தற்பரன்" (தேவா). **வாய்வந்தன** - இழிப்புக் குறிப்பும்படக் கூறியது. "ஒத்தன வொத்தன சொல்லிட", "தத்த மனத்தன பேசிட" ; **பழி** - பழிப்பு - பழித்தல் ; போற்றுதல் என்பதுமாம்.—(3) **சூட்டினார்** - சூடினார் என்பது எதுகையின்பொருட்டு ஒற்றிரட்டி நின்றது;—(4) **கணங்கள்**-பூதகணங்கள்; அமரர் முதலிய தேவகணங்கள் என்றலுமாம் ; **மேனி கருகினார்** - விடமெழுந்ததனால் உடல் கருகிய மால் முதலிய தேவர்கள் ;—(5) **பொன்னின்** - பொன்போல். **இன்** -

ஒப்புப் பொருளில் வந்த ஐந்தனுருபு. தோற்றமுங்கேடும் பன்னினுர் - மாறிமாறி உலகைப் படைத்தலும் அழித்தலும் செய்பவர் ;—(6) அன்பினுர் பிரியார் - அணிய ராஞர் பிரியமாட்டாராய். பிரியார் - பிரியாராகி. முற்றெச்சம். பிரியார்தோழ - என்க. "மேவினர் பிரிய மாட்டா விமலனுர்"(818); அல்லவர் தீயரேன் றேத்தும் - அல்லவர் - அன்பில்லார் - புறச்சமயிகள் ; அவர்கள் தீயர் என்றிகழ்ந்தாலும் அதுவும் இறைவருக்குப் புகழ்ச்சி மொழியேயாகும் என்பது. (7) எற்றுதல் - மோதுதல். தெற்றினுர் - பகைவர். அடியிணை சேர்வான் முற்றினுர் - முப்புரத்தினுள் வாழ்ந்த அடியவரான மூவர் ; "எண்ணுடை மூவர்" (திருவா). "உய்ந்தமூவர்" (தேவா) ;— (9) தோற்றத்தோன்மை - இருவரின் நடுவே தோற்றிய பொருளின் பழமை ; முன்னைப் பழம்பொருளான தன்மை. துணைமை...சாற்றினுர் - தாந்தாம் பெரியர் என்று இகலினுர். ஆற்றலோம் என - இறுதியில் தமது வலியின்மை கூறி யடைய ; பாவம் - யாம் பரமம் யாமே காண்போம் என்ற ஆணவமுயற்சி ; பாற்றுதல் - போக்குதல் ;—(11) கல்லிசை - நூல்கள் கற்கும் இசைபொருந்த ; புல்லிசை கேளா - புல்லியோர் மொழியைப் பொருட்படுத்தாத; முன் "வாய்வந்தன சொல்லும் பழியுளார்" (2) என்றும், " அல்லவர் தீயரென் றேத்தும் " என்றும் வருவன வாற்ருல், இத்தலத்தில் அல்லது அருகில், புறச்சமயத்தினர் அந்நாட்டிற் குழுமி யிருத்தல் கூடுமென்று கருத இடமிருக்கின்றது.

தலவிசேடம்:—திருப்பந்தணை நல்லூர் - அம்மையார் ஆடிய பந்து வந்தணை ஊர் என்ற காரணத்தால் இப்பெயர் போந்ததென்பர். பந்தணநல்லூர் - என்றும் வழங்குவர். (அணவுதல் - சமீபித்தல்) ; இந்நாளில் பந்தநல்லூர் என மருவிப் பெரும் பாலும் வழங்குவர். தேவ கன்னியர்களும், காமதேனுவும் பூசித்துப் பேறு பெற்ற தலம். "பைங்கணேற்றுர் பலியேற்றுர் பந்தணை நல்லூ ராரே" என்ற மகுடங்கொண்ட திருத்தாண்டகப் பதிகக் கருத்துக்களும் பார்க்க. சுவாமி - பசுபதீசுவரர் (பதிகம் பார்க்க); அம்மை - காம்பன்ன தோளியார் ; மரம் - கொன்றை ; பதிகம் 2.

இத்தலம் திருப்பனந்தாளினின்றும் வடகிழக்கில் 3 நாழியளவில் கொள்ளிடத் தின் தென்கரையில் உள்ளது. மற்றொருவழி-குற்ருலம் இருப்புப்பாதை நிலயத்தினின் றும் வடகிழக்கே $1\frac{3}{4}$ நாழிகை யளவில் காவிரிக்கு வடகரையில் மஞ்சிவாய்க்கால் பாலத்தினின்றும் வடமேற்கே மட்சாலைவழி $4\frac{1}{2}$ நாழிகை யளவில் அடைவது.

2149. மற்றநற் பதிவட தளியின் மேவிய
அற்புத ரடிபணிந் தலர்ந்த செந்தமிழ்ச்
சொற்றொடை பாடி,யங் ககன்று, சூழ்மதிற்
பொற்பதி வாழ்கொளி புத்தூர் புக்கனர். உருக

(இ - ள்) மற்ற......பணிந்து - அந்த நல்ல பதியில் வடதளிக் கோயிலில் எழுந்தருளிய அற்புதராகிய சிவபெருமானது திருவடிகளைப் பணிந்து ; அலர்ந்த...... அகன்று - விளங்கிய செந்தமிழாலாகிய திருப்பதிகத்தினைப் பாடி அங்கு நின்றும் நீங்கிச் சென்று ; சூழ்மதில்......புக்கனர் - சூழ்ந்த மதிலையுடைய அழகிய பதியாகிய திருவாழ் கொளிபுத்தூரில் வந்து புகுந்தனர்.

(வி - ரை) வடதளி - வடக்கில் உள்ளகோயில். வடதளி என்பது கோயிலின் பெயர் ;

அற்புதர் - உணர்ச்சியுள் வரினும் இன்னரென்று அறியப்படாதவர் ; "அற்புதன் காண்க" (திருவா).

அலர்ந்த செந்தமிழ் - அலர்தலாவது மெய்ப்பொருள் விளங்கவிரிதல். பதிகப் பண் புறநீர்மை யாதலின், அஃது ஞாயிற்றின் கதிர் விரியும் விடியற் காலையில் பாடப் படும் மரபு பற்றிய குறிப்புமாம்.

சொற்றொடை-பதிகம்; இத்திருப்பதிகக்கருத்து உலகில் தீங்குதீர் மறையந்தணர் வேள்வித்திறம் பாராட்டுவதாதலின், அச்செயலால் உலகிற் கலிகடியப்பட்டுவிளங்குத லால், அலர்ந்த சொற்றொடை என்ற குறிப்புமாம்.

மதில்சூழ் - என்று மாற்றியுரைத்தலுமாம்.

பொற்பதி - பொன் அழகு குறித்தது. 251

திருவோமாம்புலியூர்

திருச்சிற்றம்பலம் பண் - புறநீர்மை

பூங்கொடி மடவா ளுமையொரு பாகம் புரிதரு சடைமுடி யடிகள்
வீங்கிரு ணட்ட மாடுமெம் விகிர்தர் விருப்பொடு முறைவிடம் வினவிற்
றேங்கமழ் பொழிலிற் செழுமலர் கோதிச் செறிதரு வண்டிசை பாடும்
ஓங்கிய புகழா ரோமமாம் புலியூ ருடையவர் வடதளி யதுவே. (1)

விளைதரு வயலுள் வெயில்செறி பவள மேதிகள் மேய்புலத் திடறி
யொளிதர மல்கு மோமமாம் புலியூ ருடையவர் வடதளி யரனைக்
களிதரு நிவப்பிற் காண்டகு செல்வக் காழியுள் ஞானசம் பந்தன்
அளிதரு பாடல் பத்தும்வல் லார்க ளமரலோ கத்திருப் பாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—உயிர்களை ஆளுடையவராகிய இறைவரது உறைவிடம் வினவில் "தீங்குதீர் மாமறைச் செம்மை யந்தணர் ஓங்கும், ஓமாம்புலியூர்" வடதளியதுவே.

குறிப்பு :—ஓமமாம்புலியூர் என்பது ஓமாம்புலியூர் என மருவி வழங்குகிறது ; பதிகம் பார்க்க. பதிகக் குறிப்பு ஆசிரியர் (2148) காட்டியருளியபடி கண்டுகொள்க. பதிகப்பாட்டுத்தோறும் இச்சிறப்பின் குறிப்பும் காண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) வீங்கிருள் - உலகம் சங்கரிக்கப்பட்டொடுங்கிய ஊழி. நட்டம் - புனருற்பவத்தின் பொருட்டுச் செய்யப்படுவது. ஓங்கிய புகழார் - தீயோம்பு மறையவர். புகழாவது உலகம் தீமை நீங்க வேள்வி யியற்றுதலாலாவது; ஓங்கும் என்பதை ஆசிரியர் (2148) எடுத்துக்காட்டியது காண்க ; புகழ்-பல்புகழ் 4 ; உலப்பில் பல்புகழ் 5 ; உலப்பில் புகழ் 8 ; ஒள்ளியபுகழ் 9 ; வட்தளி - கோயிலின் பெயர். தளி - கோயில் ; பழையாறை வடதளி, குரக்குத்தளி முதலியவை பார்க்க. உறைவிடம்-இனிதின் எழுந்தருளி யிருக்குமிடம் ; மேற்பாட்டுக்களிலும் பார்க்க.—(2) சம்பரன் - ஓர் அசுரன். சலந்தரன் - ஓர் அசுரன். ஆகுதியால் மழைபொழியும் - வேள்விகள் மழைக்குக் காரணம் என்பது.—(3) இழித்த - சிறுதுளி யளவில் இழியச் செய்த.—(4) அருந்தி - அன்பு.—(5) நிலத்தவர்...கீழோர் - மூவுலகரும் துயர்கெட வும், ஆசறவும் ஆழியளித்தவன் என்க. சலம் - சினம் முதலிய கீழ்மைக் குணம் என்ற பொருளில் வந்தது.—(6) இப் பாட்டு முதலிரண் டடிகளில் 8 முதலாக 1 வரை உள்ள எண்களை கீழ் வரிசைபடக் கோத்த எண்ணலங்காரம். கோள் பொருள் - குணங்களாற் கொள்ளப்பட்ட போகநுகரு மிடங்கள். குற்றம் - அவற்றால் வரும் குற்றங்கள். மற்றவை - ஏனைய பாகுபாடுகள். உணர்ந்தவர் -

உணர்ந்து அவ்வழியே குற்றம் தம்மையும் உலகையும் சாராமை ஒழுகுபவர்.—(8) **மாற்றவர்** - மாறுதவராய்; நிலையினராய்; முற்றெச்சம்;—(9) **கரியோன்** - திருமால்;—(10) **தேளியர்** - அறிவு தெளிந்தவர்; கலதி - கீழ்மகன்; **நள்ளிருள் யாமம் நான்மறை தெரிந்து** - யாம முதலிய அவ்வக்காலங்களுக்கேற்றபடி சந்தித் தெய்வ மந்திரங்களாற் சந்திபண்ணு முறைப்படி ஓதி. **ஒள்ளியார்** - ஒண்மையை யுடையார்;—(11) பவளம் ஒளிதரு என்க. இடறி - இடறுதலினால். நிவப்பு - உயர்வு. அளி - கருணை; அன்பு; இரக்கம் என்றலுமாம். "அளிவளருள்ளம்" (திருவிசைப்).

தலவிசேடம்:—திருவோமமாம்புலியூர் - இது சோழநாட்டில் காவிரிக்கு வடகரையில் 31-வது தலம்; கொள்ளிடத்துக்கு வடகரையில் உள்ளது. "தீங்குதீர் மாமறைச் செம்மையந்தணர்" (2148); விதிவழி எரிமூன்று ஓம்பி, ஓமஞ் (யாகம் - வேள்வி) செய்தொழுகும் சிறப்புப்பற்றி இப்பெயர் எய்தியது. **ஓமமாம்புலியூர்** என்ற பெயரும், பதிகக் குறிப்பும் பார்க்க. இக்கருத்துக்கொள்ளாது இது ஓம் என்னும் பிரணவ சத்தம் பற்றிய தொடர்பு கொண்டெழுந்ததென்று மயங்கிப் "பிரணவ வியாக்கிரபுரம்" என்று மொழி பெயர்த்துக்கொண்டனர் உபமந்யு பக்த விலாச ஆசிரியர். அதற்காதரவாக அம்மையார் தட்சிணாமூர்த்தியிடம் பிரணவோப தேசம் பெற்ற தலம் என்ற வரலாறும் வழங்கப்படுகின்றது. புலிக்குப் பயந்த வேடனொருவன் வில்வமரத்தில் ஏறி இரவு முழுதும் துயில்வாராமைப் பொருட்டு வில்வ இலைகளைப் பறித்துப்போட, அவை கீழே இருந்த சிவலிங்கப் பெருமான்மீது வீழ, அபுத்திபூர்வமாகக் கிடைத்த அப்புண்ணியப் பலனாக அவ்வேடன் முத்திபெற்ற தலமென்பதும் வரலாறு. இச்சரிதம்பற்றிப் புலியூர் என வந்தது போலும். அதுவன்றி திருப்பாதிரிப்புலியூர் என்பதுபோல இங்கும் புலிக்கால் முனிவர் பூசித்த தொடர்பும் உண்டுபோலும். சுவாமி - துயரந் தீர்த்தநாதர்; அம்மை - பூங்கொடி நாயகி; பதிகம் (1) பார்க்க. தீர்த்தம் - கொள்ளிடம்; பதிகம் - 2.

இது திருப்பந்தணைநல்லூரினின்றும் வடகிழக்கில் 3 நாழிகையளவில் கொள் ளிடக் கரைவழி ஆற்றைக்கடந்து அதன் வடகரையில் உள்ளது. திருவாழ்கொளி புத்தூரினின்றும் கொள்ளிடத்தைக் கடந்து 2 நாழிகையளவிலும் அடையலாம்; பந்தணைநல்லூரினின்றும் வாழ்கொளிபுத்தூர் வடகிழக்காக 3 நாழிகை யளவில் உள்ளது. கொள்ளிடத்துக்கு வடக்கே சிதம்பரம் - திருநாரையூர் - மன்னார்குடி கற்சாலை வழிவந்து மன்னார்குடியினின்றும் தென்கிழக்கில் மட்சாலைவழி 2 நாழிகை யளவிலும் அடையலாம். எவ்வழியும் இத்தலத்துக்குச் செல்லும் பாதை கடினம்.

ஆளுடைய பிள்ளையார் திருப்பந்தணைநல்லூரினின்றும் கொள்ளிடம் கடந்து போந்து இதனை அடைந்தருளினர் என்றறியப் படுகின்றது. வடதளி என்றிருத்தலின் இத்தலத்தில் தெற்கில் அல்லது வேறு திக்கில் மற்றும் ஒரு கோயில் இருந்திருத்தல் கூடும் என்று கருதப்படுகின்றது. பழையாறை வடதளி, பழையாறை மேற்றளி என்பன காண்க.

2150. சீர்வளர் கோயிலை யணைந்து, தேமலர்க்
கார்வளர் கண்டர்தாள் பணிந்து, காண்பவர்
பார்புகழ் பதிகங்கள் பாடி, நீடுவார்
வார்புகழ்க் கடம்பையும் வணங்கி வாழ்ந்தனர். உ௫௯

(இ - ள்) வெளிப்படை. சிறப்புமிக்க கோயிலினுட் சென்று வலங்கொண்டு அணைந்து, தேன்பொருந்திய கருங்குவளை மலர்போன்ற கருநிறம் வளர்தற்கிடமாகிய கண்டத்தினையுடைய இறைவரது திருவடிகளைப் பணிந்து, காண்பவராகி, உலகம் புகழும் திருப்பதிகங்களைப் பாடியருளி, எழுந்தருள்பவராகிய பிள்ளையார், நிறைந்த புகழினையுடைய திருக்கடம்பூரினையும் வணங்கி வாழ்ந்தருளினர்.

(வி - ரை) கோயில் - திருவாழ்கொளிபுத்தூர்த் திருக்கோயில்.

தேமலர் - இங்கு இடநோக்கிக் கருங்குவளை மலரைக்குறித்து நின்றது.

காண்பவர் - தரிசிப்பவராய் முற்றெச்சம். அகநோக்கிலே இறைவரைக்கண்டு கொண்டு என்ற குறிப்புமாம். "காண்போம்" என்ற பதிகக் குறிப்பு. பார் புகழ் பதிகத்துள் காண்போம் - சேர்வோம் என்று உலகுயிர்களையும் உளப்படுத்திக் கூறிப் போற்றிய குறிப்பு. மாமலரிட்டு அடியிணை "காண்போம்" என்ற தன்மையால் "அடியிணை தந்த அருள்" என்ற தலைப்பில் அகத்தியர் தேவாரத்திரட்டினுள் இப் பதிகத்தைத் தொகுத்துள்ளமை காண்க. "பொடியுடை யரவணை யந்த ணாளனடி யிணை தந்த வருளே யாகும்."

பதிகங்கள் - பிள்ளையார் பதிகங்களிரண்டு கிடைத்துள்ளன. இன்னும் பல விருத்தல் கூடுமென்பது பாடி நீடுவார் - என்றதனாற் கருதப்படும்.

கடம்பை - திருக்கடம்பூர். தலவிசேடம் பார்க்க.

வணங்கி மீண்டனர்—என்பதும் பாடம். 252

திருவாழ்கோளிபுத்தூர்

திருச்சிற்றம்பலம் பண் - தக்கராகம்

பொடியுடை மார்பினர் போர்விடை யேறிப் பூதக ணம்புடை சூழக்
கொடியுடை யூர்திரிந் தையங் கொண்டு பலபல கூறி
வடிவுடை வாணெடுங் கண்ணுமை பாக மாயவன் வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமல ரிட்டுக் கறைமிடற் றானடி காண்போம். (1)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—இறைவரைக் கண்ட பரிசு கூறியதுடன், (2150) பலி திரிந் தையம் வேட்டு அடியார்க்கருளும் பரிசும் போற்றியது.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(3) உண்டி - உண்டனை.—(5) புகுதி - புகுகின் றாய். (6) களைதலை - களையப்பட்ட - கிள்ளப்பட்ட - தலை ஓடு.—(7) கண்ணி—(8) கணி - கண்ணுடையவள்.— (9) உண்ணி - உண்பவன். (10) தல அம்மை பெயர்.

குறிப்பு: இப்பதிகப் பாட்டுக்கள் 1-3 அடிகள் 7 சீர்ப் பெருமையும், 2-4 அடிகள் 6 சீர்ச்சிறுமையும் கொண்ட விகற்பச்செய்யுட்கள்; தக்கராகத்தின் கட்டளை பேதம்.

தலவிசேடம் :—திருவாழ்கோளிபுத்தூர் - காவிரிக்கு வடகரையில் 29-வது தலம். இது வாளொளி புத்தூர் எனவும், வாளப்புற்றூர் எனவும் மருவி வழங்கப்படும். மகாவிட்டுணு பூசித்த மரகதலிங்கம் உள்ளமையால் "அரதனபுரம்" எனவும் வழங்கப் படும். வண்டுபூசித்தது-அருச்சுனன் பூசித்ததுமுதலியவரலாறுகள் பதிகத்துட்காண்க. அருச்சுனனது வாளைப் புற்றில் ஒளித்த வரலாறுபற்றி இது வாள் ஒளி புற்றூர் என்று காரணப் பெயர் கொண்டதென்பர். துர்க்கை பூசித்த தலம் : கோட்டத்தில் உள்ள துர்க்கைக்கு உபசாரங்களுடன் பூசை நிகழ்வது அவ்வரத்தின் காரணமாய் வரு கின்றது என்பர். சுவாமி - மாணிக்கவண்ணர் (திருமேனி ஒளி காரணம்) ; அம்மை-

வண்டமர் பூங்குழலி ; பதிகம் (10) பார்க்க. பதிகங்கள் 3. மீனாட்சுந்தரம் பிள்ளை பாடிய தலபுராணமுண்டு.

இது திருப்புன்கூரினின்றும் மண்ணிப் பள்ளத்தை யடைந்து அங்கிருந்து மேற்கே மட்சாலை வழி $1\frac{1}{4}$ நாழிகையளவில் அடையத்தக்கது. பழமண்ணிப்படிக் கரையினின்றும் கிழக்கே மட்சாலைவழி $\frac{1}{2}$ நாழிகை யளவிலும் அடையலாம்.

திருக்கடம்பூர் - (கடம்பைக் கரக்கோயில்)

திருச்சிற்றம்பலம் **பண் - காந்தாரம்**

வானமர் திங்களு நீரு மருவிய வார்சடை யானைத்
தேனமர் கொன்றையி னானைத் தேவர் தொழப்படு வானைக்
கானம ரும்பிணை புல்கிக் கலைபயி லுங்கடம் பூரில்
தானமர் கொள்கையி னானைத் தாடொழ வீடெளி தாமே. (1)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—கடம்பூரிறைவரைத் தொழ வீடு எளிதாம்.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) கலை - ஆண் மான்; பிணை - பெண் மான்.—(3) **தீத்தொழில்** - வேள்வி.—(4) கலையொலி - ஆடல்பாடல் முதலிய ஒலி; (7) பார்க்க.—(5) (6) (9) பாடல் - இறைவரைத் துதிக்கும் பாடல்.—(7) படுகில் - படுகரில். **படுகர்** - பள்ள நிலங்கள்.—(10) **சோடைகள்** - ஈரமிலாதவர்கள் ; (**சோஷணம்** - வறட்சி.) **சொல்லினும்** - நன்னெறி காட்டினும். சொல்அல - அவை நற்பயன் தருவனவாகா.—(11) **நடை** - ஒழுக்கம். **படை** - படுத்தல் ; இறைவன் புகழொடு படுக்கும் பாடல்.

தலவிசேடம் :—**திருக்கடம்பூர்** - காவிரிக்கு வடகரை 34-வது தலம். இது கடம்பைத் திருக்கரக்கோயில் என்று ஆளுடைய அரசுகளால் திருக்குறுந்தொகையுட் போற்றப்பட்டது. மேலைக்கடம்பூர் என்று வழங்கப்படும். இத்தலத்தை வணங்கிய இந்திரன் இதனைத் தன்னுலகத்திற்குக் கொண்டுபோக நினைத்துப் பாதாளம்வரை தோண்டியும், அஃது அப்பாலும்ஊடுருவிப்போவதுகண்டு அஞ்சி, முன்போல் அமைத்துப் பூசித்து அமிர்தம் உண்டாகும்படி வரப்பெற்றனன் என்ற வரலாறு கருதி **கரக்கோயில்** எனப்படும் என்பர். ''கடம்பூர் தன்னி லிடம்பெற விருந்தும்'' என்று திருவாசகத்துட் போற்றப்பட்டது மிக் கருத்து என்ப. கரக்கோயிலுக்குக் கிழக்கு 1 நாழிகையில் உள்ளது **கடம்பூர் இளங்கோயில்** என்ற வைப்புத் தலம். சுவாமி - **அமிர்தகடேசர்** ; அம்மை - **சோதிமின்னம்மை** ; பதிகம் 3.

இது திருவோமமாம்புலியூரினின்றும் வடமேற்கே மட்சாலைவழி 4 நாழிகை யளவில் அடையத்தக்கது. மன்னார் குடியிலிருந்து 3 நாழிகை.

2151. நம்பரை நலந்திகழ் நாரை யூரினிற்
கும்பிடும் விருப்பொடு குறுகிக் கூடிய
வம்பலர் செந்தமிழ் மாலை பாடிநின்
றெம்பிரான் கவுணியர் தலைவ ரேத்தினார். உருரு

(இ - ள்) நம்பரை......குறுகி - இறைவரை நன்மை விளங்கும் திருநாரையூரிலே கும்பிடும் விருப்பத்துடன் சென்று சேர்ந்து ; கூடிய......நின்று - தொகையாகச் சேர்ந்த சிவமணம் மிக்கு விரிகின்ற மாலைகளாகிய திருப்பதிகங்களைப் பாடிநின்று ;

எம்பிரான்......ஏத்தினர் - எமது பெருமானும் கவுணியர் தலைவருமாகிய பிள்ளையார் துதித்தனர்.

(வி - ரை) நலம்திகழ் நாரையூர்-"நலந்தாங்கு, தேம்புனல் சூழ்திகழ் மாமடுவிற் றிருநாரையூர்" (1) "நன்னலனோங்கு திருநாரையூர்" (7) "நலனோங்கு" (8) என்ற பதிகப்பாட்டுக் கருத்துக் காண்க. "நலந்தாங்கு" "நலனோங்கு" என்ற முக்காலத்துக்கும் பொதுவாகிய வினைத்தொகையால், பிள்ளையார் திருவாக்கின் பயனாகப், பின்னர் இத்தலத்திற் பொல்லாப் பிள்ளையார் திருவருள்பெற்றுத் தேவாரத் திருமுறைகளை வெளிப்படுத்தற்கும், திருத்தொண்டர் புராணத்துக்கு ஆதரவாக வழி நூலாகிய திருவந்தாதி தருதற்கும் காரணமாகிய நம்பியாண்டார்நம்பிகள் அவதரிக்கும் நலம் பெறும் குறிப்பும் பெறப்படுதல் காண்க.

நலந்திகழ் - என்று ஆசிரியரும் இக்குறிப்பினை உள்ளடக்கி எடுத்துக் காட்டியருளினர். " நாரையூர் நன்னகரிற் கண்டே னானே " என்ற திருத்தாண்டகமுங் கருதுக.

சூடிய வம்பலர் - மாலை - "மாலை" என்றதற்கேற்ப "வம்பலர்" என்றார். வம்பு - மணம்; இங்குச் சிவமணம்.

சூடிய மாலை - பழம்பஞ்சுரப் பண்ணில் "காம்பினைவென்ற" என்ற "திருநாரையூர் தன்மேற்" (11) பாடிய பதிகத்துடன் அந்தப்பண்ணிலேயே தொடர்ந்து "திருநாரையூரான்மேல்" (11) பாடியதனைச் சூடிய "கடலிடை" என்ற பதிகமும் கொள்க.

எம்பிரான் - இங்கு " நங்க ளாதனை நம்பியாண்டார் நம்பி " வர அருள் நோக்கம் செய்து திருவாக்களித்த தன்மை குறித்தது. 253

2152. அப்பதி பணிந்தருந் தமிழ்பு னைந்துதம்
மெய்ப்படு விருப்பொடு மேவு நாளரன்
பொற்பதி பலவுமுன் பணிந்து போந்தனர்
பைப்பணி யவர்கருப் பறிய லூரினில், உ௫௪

(இ - ள்) அப்பதி......மேவுநாள்-அந்தப் பதியினைப் பணிந்து அரிய தமிழாகிய திருப்பதிகத்தினைப் புனைந்து தமது உண்மைமிக்க பெருவிருப்பத்தினோடும் அங்கு எழுந்தருளியிருந்த நாட்களிலே; அரன்...பணிந்து - சிவபெருமானது அழகிய பதிகள் பலவற்றையும் முன்சென்று பணிந்து; போந்தனர்...கருப்பறியலூரினில் - பையினையுடைய பாம்பை யணிந்த இறைவர் எழுந்தருளியுள்ள திருக்கருப்பறியலூரினில் போந்து வந்தணைந்தருளினர் (பிள்ளையார்).

(வி - ரை) அருந் தமிழ் - "உரையினில் வந்த பாவம்" என்று தொடங்கிப் பியந்தைக் காந்தாரத்தில் அருளிய திருப்பதிகம். "உரையினில் வந்த பாவம் - உணர் (மனம்) நோய்கள் - செயல் (காயம்) தீங்கு - குற்றம்; வரையில் (அளவில்) நிலாமை; அவை தீரும் " (1) என்று தொடங்கிப் பதிகப் பாட்டுத்தோறும் துன்பந்தரும் இன்ப துன்பமுமாகியவை நீங்கும் பயன்களை உறுதிபடக் கூறியருளுதலினால் அருந்தமிழ் என்றார். இது இத்தலத்துப் பதிகத்துக்கு உரிய சிறப்பு. இப்பதிகம் இங்கு மேவு நாள்களில் அருளியது என்பது கருதப்படும்.

மெய்ப்படுதல் - உள்ளூற உணரப்படுதல்.

பொற்பதி - பொன் - இங்கு நிலைபெற்ற முத்தித் திருவளிக்கும் மேன்மை குறித்தது. பதிபல - குரக்குக்கா முதலியன போலும்.

பைப்பணி அவர் - பை - நச்சுப்பை. **பணியவர்** - பணியினைப் பூண்டவர். **பணி** - **பணம்** - படம் ; படத்தினை உடையது ; பாம்பு.

நாளமர் - **நாண்மலர்**—(பொற்பதி)-**தமிழ் புனைந்தங்கு**—என்பனவும் பாடங்கள்.

இப்பாட்டுச் சில பிரதிகளிற் கீழ்க்கண்டபடி பலவும் மாறுபட்டுக் காணப்படு கின்றது. " அப்பதி யணைந்துபோ யமரர் நாயகர், பொற்பதி பலவுமுன் பணிந்து போதுவார், மெய்ப்படு விருப்பொடு மேவி னார்பணி, பைப்பணி யவர்கருப் பறிய லூரினை." 254

திருநாரையூர்

I. *திருச்சிற்றம்பலம்* **பண் - பழம்பஞ்சுரம்**

காம்பினை வென்றமென் றோளிபாகங் கலந்தா னலந்தாங்கு
தேம்புனல் சூழ்திகழ் மாமடுவிற் றிருநாரை யூர்மேய
பூம்புனல் சேர்புரி புன்சடையான் புலியின் னுரிதோன்மேற்
பாம்பினை வீக்கிய பண்டரங்கன் பாதம் பணிவோமே. (1)

திருச்சிற்றம்பலம்

II. *திருச்சிற்றம்பலம்* **பண் - பழம்பஞ்சுரம்**

கடலிடை வெங்கடு நஞ்சமுண்ட கடவுள் விடையேறி
யுடலிடை யிற்பொடி பூசவல்லா னுமையோ டொருபாகன்
அடலிடை யிற்சிலை தாங்கியெய்த வம்மா னடியார்மேல்
நடலைவி னைத்தொகை தீர்த்துகந்தா னிடநாரை யூர்தானே. (1)

திருச்சிற்றம்பலம்

III. *திருச்சிற்றம்பலம்* **பண் - பியந்தைக்காந்தாரம்**

உரையினில் வந்த பாவ முணர்நோய்க ளும்ம செயதீங்கு குற்ற முலகில்
வரையினி லாமை செய்த வவைதீரும் வண்ண மிகவேத்தி நித்த நினைமின்
வரைசிலை யாக வன்று மதின்மூன் றெரித்து வளர்கங்கு னங்கை வெருவத்
திரையொலி நஞ்ச முண்ட சிவன்மேய செல்வத் திருநாரை யூர்கை தொழவே.

எரியொடு வண்ண மாய வுருவானை யெந்தை பெருமானை யுள்கி நினையார்
திரிபுர மன்று செற்ற சிவன்மேய செல்வத் திருநாரை யூர்கை தொழுவான்
பொருபுனல் சூழ்ந்த காழி மறைஞான பந்த னுரைமாலை பத்து மொழிவார்
திருவளர் செம்மை யாகி யருள்பேறு மிக்க துளதென்பர் செம்மை யினரே.

திருச்சிற்றம்பலம்

I. பதிகக் குறிப்பு :—திருநாரையூர் என்ற **தலத்தைப் போற்றியது.** 11-வது பாட்டுப் பார்க்க. இக்குறிப்பினை ஆசிரியர் "குறுகிப் பாடி" (2151) என்றறிவித் தருளினார்.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) **நலந்தாங்கு** - **நாரையூர்** என்று கூட்டுக. முன் "நலந்திகழ்" (2151) என்ற விடத்துரைத்தவை பார்க்க. **பண்டரங்கன்** - **சிவன். பாண்டரங்கம்** - சிவன் கூத்துவகை—(3) **மாயவன்** - மாயைவல்லவன் - **விட்டுணு. சேயவன்** - செம்மை நிறமுடையவன் - உருத்திரன் ; **வெள்ளியவன்** -

வெள்ளிய தாமரைப் பூவிலிருப்பவன் ; பிரமன் ; "செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான்" (திருவா)—(4) துஞ்சிருள் - ஊழி ; எம்சிவனுர் - பன்மை முழு முதன்மையாதலும் தமதுரிமையும் குறித்த அருமைப்பாடு குறித்தது.—(6) ஒன்றெடொன்று ஒவ்வாமையாவது இப்பாசுரத்து இவை எனக் கூறியவை ; அவை யாவன:—வாய்மையினுராற் பரவபடுதலும், பரமேட்டியாதலும் முதலியவை ; அவற்றோடு மலையின் தலைவனுதலும் மலை மகளைப் பாகம் வைத்தலும் முதலாயின ஒவ்வா ; முன்னவை அசிந்திதனுய தன்மையன ; பின்னவை சிந்திதனுய தன்மையன ; (8) தாம் ஓம் - ஒலிக் குறிப்பு.

II. பதிகக் குறிப்பு :—திருநாரையூரானைப் பாடியது. 11-வது பாட்டுப் பார்க்க. இதனை ஆசிரியர் கூடிய - மாலை - பாடி - நின்று - ஏத்தினுர் (2151) என்றறிவித்தருளினர்.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) அடலிடையில் - அடுதலிடத்தின்கண். இடை - சமயம்.—(3) தோடோநுகாது - "தோடுடைய செவியன்" என்றகருத்து—(4) நண்ணல் அமர்ந்து உறைவாக்குமின் - நண்ணுதலை விரும்பி உறுதியாக்குக. உறைவு - உறைவிடம் என்றலுமாம் ; நான் அமரும் - நான் விரும்பும்.—(6) புகல் - வெற்றி ; கதி என்றலுமாம். (9) ஆம் அளவும் - தமது ஆன்ம போத முயற்சி செல்லுமளவு வரையும் ; பா - சிவன் புகழ்பாடல்.—(11) ஆடிய - கொண்டாடிய.

III. பதிகக் குறிப்பு :—சிவன்மேய செல்வத் திருநாரையூர் கைதொழவே பாவங்களும் அவை காரணமாக வரும் அன்பங்களும் நீங்கும் ; தவமும் நேசமும் வளரும் ; நன்மைவரும். பாட்டுத்தோறும் கூறும் பயன்கள் பார்க்க.

இது இப்பதிகச் சிறப்பும் தலச்சிறப்புமாம். "நலந்திகழ்" (2151) என்றும் "அருந்தமிழ்" (2152) என்றும் ஆசிரியர் இதனைக் குறிப்பிட்டருளியது காண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) உரை - வாக்கு ; உணர் - உணர்வுக்குரிய கருவி - மனம் ; செயல் - செயலுக்குரிய காயம் ; மொழி மன மெய்கள் என்ற, குற்றம் வரும் கருவிகள் மூன்றையும் குறித்தபடி ; இவை முறையே பாவம், நோய், தீங்கு எனப்படும் என்பது ; உரையினில் வந்த பாவம் நான்கு : பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் என்பன. வரை - அளவு ; இம் மூவழியாலும் உலகில் அளவு படாது செய்த குற்றம் என்க. எண்ணும்மைகள் தொக்கன.—(2) ஊனடைகின்ற குற்றம்-ஊன்-ஆகுபெயர்-பிறவி. குற்றம் இங்குப் பிறவிக்குக் காரணமாகிய முன் வினை குறித்தது. ஒருங்கும்-அழியும்; வினைமுற்று. உயரும் வான் என்க; என்றும் உயர்கின்ற; விதி - விதிப்பவர். தலைவர். "விதியாள னென்னுயிர்மேல் விளையாடல் விடுத்தானே" (அரசு - பழனம் - பழந்தக்க) - (4); "அரன் விதி அருள்" (சித்தி - 2-51); ஆடி - பெயர் ஆடுபவர் ;—(3) செற்ற - செறும் தொழிலுடைய. தீங்கு - இறப்பு. உறுதிபற்றி இறந்தகாலத்தாற் கூறினுர்.—(4) செற்ற - செறுதலினுல் ; ஆடி - பெயர் ; தேய் - தேய்ந்த.—(6) நிற்கும் வண்ணம் - சிவனடியில் நிலைபெற்று நிற்கும்படி. திறை - கையுறை.—(7) ஐவர் - ஐம்புலன் ; வினயம் - மயக்கம்.—(8) வரைகின்ற - அளவு படுகின்ற.

தலவிசேடம் :—திருநாரையூர் - சோழ நாட்டில் காவிரிக்கு வடகரையில் 33-வதுதலம். நாரை பூசித்துப் பேறு பெற்றமையால் இப்பெயர் பெற்றது - பொல்லாப் பிள்ளையார் - சுயம்புமூர்த்தி. இவரை வழிபட்டு இவரது திருவருளால் நம்பியாண்டார் நம்பிகள் தேவாரத் திருமுறைகளைக் கண்டு வெளிப்படுத்தியருளினர்

திருத்தொண்டர் திருவந்தாதி பாடியருளினர்; அது திருத்தொண்டர் புராணத்துக்கு மூலமாயுள்ளது. சுவாமி - சவுந்தரேசுரர்; அம்மை - திரிபுரசுந்தரி; பதிகம் 5.

இது சிதம்பரத்துக்குத் தென்மேற்கே மட்சாலைவழி 10 நாழிகை யளவில் உள்ளது. வைத்தீசுரன் கோயில் என்ற நிலயத்தினின்று திருவோமாம்புலியூர் திருக் கடம்பூர் வழியாகவும் இதையடையலாம்.

2153. பரமர்தந் திருக்கருப் பறிய லூரினைச்
சிரபுரச் சிறுவர்கை தொழுது, செந்தமிழ்
உரையிசை பாடி,யம் மருங்கி னுள்ளவாஞ்
சுரர்தொழும் பதிகளுந் தொழுது, பாடினர். உருரு

(இ - ள்) பரமர்......தொழுது - சிவபெருமானது திருக்கருப்பறியலூரைச் சீகாழிச் சிறிய பெருந்தகையாராகிய பிள்ளையார் கைகூப்பித் தொழுது; செந்தமிழ் பாடி - செந்தமிழ்த் திருப்பதிகத்தைப்பாடி; அம்மருங்கு...பாடினார் - அந்தப் பக்கத்தில் உள்ளனவாகிய தேவர் தொழுகின்ற பிற பதிகளையும் தொழுது பாடியருளினார்.

(வி - ரை) சிரபுரம் - சீகாழியின் ஏழாவது திருப்பெயர். சிறுவர் - "சிறிய பெருந்தகையார்" (1970),

செந்தமிழ் உரை இசை - இசை - புகழ் என்றும், இன்னிசை என்றும் உரைக்க நின்றது. உரை - எடுத்து உரைக்கும்; தமிழ் - தமிழினால். "வானுலக மேத்தக் கற்றவன்" "கடந்தவன்" - "கடந்தவன்" - "கருத்தவன்" - "காய்ந்தவன்" என்று பாட்டுத்தோறும் இறைவரது புகழ்களை எடுத்துக் கூறுதல் குறிப்பு.

அம்மருங்கினுள்ளவாம் - பதிகள் - திருக்குரக்குக்கா, திருப்புன்கூர், திருப்புள்ளிருக்கு வேளூர், (திருக்கொண்டல்) முதலாயின என்று கருதப்படும்.

ஆம் - வழிபட்டாரைச் சிவனடிமைத் திறத்தில் ஆக்குவிக்கும் என்று பிறவினைப் பொருளும் கொள்ள நின்றது.

பரமர் தங்கழல் கருப்பறியலூரினில்—என்பதும் பாடம். 255

திருக்கருப்பறியலூர்

திருச்சிற்றம்பலம் திருவிராகம் பண் - இந்தளம்

சுற்றமொடு பற்றவை துயக்கற வறுத்துக்
குற்றமில் குணத்தினொடு கூடுமடி யார்கண்
மற்றவரை வானவர்தம் வானுலக மேற்றக்
கற்றவ னிருப்பது கருப்பறிய லூரே. (1)

நலந்தரு புனற்புகலி ஞானசம் பந்தன்
கலந்தவர் கருப்பறியன் மேயகட வுள்ளைப்
பலந்தரு தமிழ்க்கிளவி பத்துமிவை கற்று
வலந்தரு மவர்க்குவினை வாடலெளி தாமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—பெருமானது புகழ்களை உரைப்பது. கருப்பறியல் - அடைந்தவர்களது - கரு - பிறப்பு - பறிக்கப்படுதல் என்றது காரணப் பெயராதலால் அதன் தன்மைபற்றி உரைக்கு முகத்தால் இறைவர்புகழ் பாடுதலாம். "கலந்தவர் கருப்

பறியல்" என்று, பதிகப்பயன் கூறும் பாட்டினுனும், "உரையிசை" என்று ஆசிரியரும் குறித்தலானும் காண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) **துயக்கு** - தொடக்கு. கருப் பறியுண்ணப்படும் அடியார் தகுதியினை இறைவன் புகழுடன் சேர்த்துத் தலத்தின் பெயர்ப் பொருளை விளக்கியபடி.—(3) **போதினேடு** - உரியகாலத்தில்.—(4) **உடம்பினை விடக்கருதித் தொடர்ந்த** என்று கூட்டுக. **விட** - விடச் செய்ய. **உடம்பினை விடுதல்** - இறத்தல். **அணவு** - அணுகிய.—(6) **காலும்** - உமிழும்.—(7) **வடு** - மாணி - பிரமசாரி; மார்க்கண்டேயர். **வடு புக்கு** - வடுவினிடத்துப் புகுந்து. **சோதி** - தீபம். **புகை** - தூபம். **வளர்க்கும்** என்றது சந்த நோக்கி ஈற்று மகரவொற்றுக் கெட்டு நின்றது. **அரங்க** - கெடவிருந்த; **காதுதல்** - உதைத்தல்.—(10) **குற்றமறியாத பெருமான்** - தலச்சுவாமி பெயர். தலவிசேடம் பார்க்க. **கோகுடி** - ஒருவகைமுல்லை. **கோகுடிக் கோயில்** - இத்தலக் கோயிற் பெயர். அமைப்பினைப் பற்றியது. ஆளுடைய நம்பிகள் பதிகம் பார்க்க,—(11) **கலந்தவர்** - வந்தணைந்தவர். **பலந்தரு** என்றது இறைவனது உபகாரமாகிய புகழ் குறித்தது. **வினைவாடல்** - கரு பறிதல்.

தலவிசேடம்:—**திருக்கருப்பறியலூர்** - சோழநாட்டில் காவிரிக்கு வடகரையில் 27-வது தலம், மேலைக்காழி என்றும், தலைஞாயிறு என்றும் வழங்கப்படுவது. இந்திரன் ஒரு காலத்தில் அகந்தையினுடன் கயிலைக்குச் சென்றபோது, சிவபெருமான் ஒரு இயக்கனது வடிவுடன் தோன்ற, அவரை யறிந்துகொள்ள மாட்டாளுய், வச்சிராயுதம் எறிந்து போர் செய்தான்; அதன்பின் இறைவரென்றறிந்து வணங்கி மன்னிப்புப்பெற்று, அந்தக் குற்ற நீங்குதற் பொருட்டு இங்கு வந்து பூசித்துப் பேறு பெற்றனன். அது காரணமாகச் சுவாமி - **குற்றம் பொறுத்த நாதர்** எனப்படுவர். அம்மை - **கோல்வளை நாயகி**; தீர்த்தம் - **இந்திர தீர்த்தம்**; பதிகம் 2.

திருப்புன்கூரினின்றும் மேற்கே மட்சாலைவழி 2 நாழிகை யளவில் மண்ணிப் பள்ளத்தை யடைந்து, அதன் வடக்கே மட்சாலை வழி ½ நாழிகை யளவில் அடையத் தக்கது. திருநாரையூரினின்றும் கொள்ளிடங் கடந்து தென் கிழக்காக நான்கு நாழிகையளவில் திருக்குரக்குக்காவை அடைந்து அங்கு நின்றும் ½ நாழிகையளவிலும் இதனை யடையலாம். இது கடினமான வழி. குறிப்பு: இவ்வழி பிள்ளையார் போந்தவழி. சீகாழியினை விரைவில் அணையமேற்கொண்ட பிள்ளையார் இவ்வழிப் போந்தருளினர். ஆளுடைய அரசுகளும் தில்லையிலிருந்து போந்து திருநாரையூரினின்றும் சீகாழிக்கு இவ்வழியே பிள்ளையாரைக்காணும் ஆர்வத்தால் எழுந்தருளினர் என்பது மறியப்படும். 1444 பாட்டுப் பார்க்க. அந்நாளில் வழக்கில் இவ்வாறு சுருங்கியதொரு வழியுமிருந்தது போலும்.

வேறு

2154. மண்ணுலகு செய்ததவப் பயனு யுள்ள
வள்ளலா ரப்பதிகள் வணங்கி யேகி
எண்ணின்முரா சிரங்கியெழப், பணில மார்ப்ப,
விலங்கியகா ளஞ்சின்ன மெங்கு முதக்,
கண்வளர்மென் கரும்புமிடை கதிர்ச்செஞ் சாலி
கதலிகமு குடனோங்குங் கழனி நாட்டுத்
தெண்ணிலவு சூடியதம் பெருமான் வைகுந்
திருப்பிரம புரஞ்சாரச் செல்லும் போது, உரு௬

2155. பிள்ளையா ரெழுந்தருளக் கேட்ட செல்வப்
பிரமபுரத் தருமறையோர் பெருகு காதல்
உள்ளமகிழ் சிறந்தோங்கத் தோணி மேவு
முமைபாகர் கழல்வணங்கி யுவகை கூர
வெள்ளமறை யொலிபெருகு மறுகு தோறு
மிடைமகர தோரணங்கள் கதலி பூகந்
தெள்ளுபுன னிறைகுடங்க டீப தூபஞ்
செழுங்கொடிக ணிரைத்தெதிர்கோள் சிறப்பிற் செல்வார், உருள

2156. ஆரணங்கண் மதுரவொலி யெழுந்து பொங்க
வரசிலையுந் தருப்பையும்பெய் தணிந்த வாசப்
பூரணகும் பங்கணிறை கரக மேந்திப்
புதுமலரு நறுந்துகளும் பொரியுந் தூவி
வாரணங்கு முலையுமையாள் குழைத்த செம்பொன்
வள்ளத்தி லமுதுண்ட வள்ள லாரைச்
சீரணங்கு மணிமுத்தின் சிவிகை மீது
செழுந்தரளக் குடைநிழற்கீழ்ச் சென்று கண்டார். உருஅ

2154. (இ - ள்) மண்ணுலகு......எகி-இந்நிலவுலகம் செய்த பெருந் தவத்தின் பயனாகவுள்ள வள்ளலாராகிய பிள்ளையார் அந்தப் பதிகளை வணங்கி அப்பாற்சென்று; எண்ணில்......ஊத - அளவில்லாத முரசங்கள் இரங்கி எழுந்து சத்திக்கவும், சங்கங்கள் ஒலிக்கவும், விளங்கிய எக்காளங்களும் சின்னங்களும் எங்கும் ஊதவும், (ஆக இவ்வாறு); கண்வளர்...நாட்டு - கணுக்கள் வளர்கின்ற மெல்லிய கரும்புகளும், நெருங்கிய கதிர்களையுடைய செந்நெல்லும், வாழைகளும், கமுகுகளும் ஒருங்கே ஓங்கும் வயல்களையுடைய சோழநாட்டிலே; தெண்ணிலவு......செல்லும்போது - தெளிந்த நிலவினைச்சூடிய தமது இறைவர் எழுந்தருளியுள்ள திருப்பிரமபுரம் என்னும் சீகாழியை அணுகச் செல்லும் பொழுது; உருசு

2155. (இ - ள்) பிள்ளையார்......மறையோர் - பிள்ளையார் எழுந்தருளிவரும் செய்தியைக்கேட்ட செல்வமுடைய பிரமபுரத்தில் வாழும் அருமறையவர்கள்; பெருகு...ஓங்க - பெரும் காதலினால் தம் உள்ளங்களில் மகிழ்ச்சிபெருகி எழுதலாலே; தோணி......வணங்கி - திருத்தோணியில் எழுந்தருளிய பெரியநாயகியார் பாகரது திருவடிகளை வணங்கி; உவகைகூர - மகிழ்ச்சி பெருக; வெள்ளமறை...நிரைத்து - அனந்தமாகிய வேதங்களின் ஒலி பெருகும் திருவீதிகளிலெல்லாம் நெருங்கிய மகர தோரணங்கள், வாழை, கமுகு, தெளிந்த நீர்நிறை குடங்கள், விளக்குக்கள், தூபம், செழுங்கொடிகள், ஆகிய இவற்றை வரிசைபெற அமைத்து; எதிர்கொள் சிறப்பிற் செல்வார் - எதிர்கொள்ளும் சிறப்புக்களை மிகுதியும் செய்து செல்வாராகி, உருள

2156. (இ - ள்) வெளிப்படை. வேதங்களின் இனிய ஒலி எழுந்து பெருக, அரசிலையும் தருப்பையும் இட்டலங்கரித்த வாசனையுடைய பூரண கும்பங்களையும் நிறைந்தகரகங்களையும் தாங்கி, புதிய மலர்களையும் வாசனைச் சுண்ணத்தையும் பொரியையும் தூவி, வார்பூண்ட தனங்களையுடைய உமையம்மையார் செம்பொற் கிண்ணத்திற் சிவஞானத்துடன் குழைத்த பால் அமுதத்தை உண்டருளிய வள்ளலா

ராகிய பிள்ளையாரைச் சிறப்புடைய அழகிய முத்துச் சிவிகையின்மேல் செழிய முத்துக் குடையின்கீழ் விளங்கக் கண்டார்கள். உ௲அ

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு பொருள் கொண்டுரைக்க நின்றன. இவற்றால் பிரமபுரத் தந்தணர் பிள்ளையாரை எதிர்கொண்ட சிறப்புக் கூறப்பட்டது.

2154. (வி - ரை) **மண்ணுலகு செய்த தவப்பயனுயுள்ள வள்ளலார்** - "வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்பர்" என்றபடி ஏனைய மேல் கீழ் உலகர்கள் மண்ணுலகில் வந்தே சிவனை அடையத் தவம் செய்தல் வேண்டுமாதலின் மண்ணுலகுசெய்த என்றார். தவத்தின் பயனேயாவார் என்பது. தவப்பயனாவது சிவனைப் பெறுதல். அதற்கு வழிகாட்டிப் பெறுவித்தலின் பிள்ளையாரைப் பயன் என்றார். **வள்ளலார்** - வரையாது கொடுப்பவர். பசிநோய் தீர்த்தல் - பிறவிநோய் தீர்த்தல் என்ற பயன்களை எல்லையின்றி எல்லார்க்கும் அளித்தல் குறிப்பு. **உள்ள** என்பது அத்தன்மை பண்டு, மின்றும், இனி என்றும் நிகழ இருக்கும் குறிப்பு.

அப்பதிகள் வணங்கி ஏகி - **அப்பதிகள்** - முன்பாட்டில் "அம்மருங்கி னுள்ளவாம்" என உரைத்தவை. **அகரம்** - முன்னறிசுட்டு ; அப்பதிகளிற் சென்று வழிபட்டுப் பாடியமை முன்கூறினார். அவற்றை வணங்கிப் புறவிடைகொண்டு போந்தமை இப்பாட்டாற் கூறினார்.

பணிலம் - சங்குகள்.

இலங்கிய காளம் சின்னம் எங்கும் ஊத-இலங்கிய என்பது இறைவராற் றரப்பட்டமையும், முத்துக்களாற் புனையப்பட்டமையுமாகிய சிறப்பு விளக்கம் குறித்தது. **ஊத** - மரபு வழக்கு (2119 - 2121).

கண்வளர்மேன் கரும்பு - **கண்** - கணுக்கள், **கண் வளர்தல்** என்பது உறங்குதல் என்ற தொனிக் குறிப்பு முடையது. "தென்றலா ரடிவருடச் செழுங்கரும்பு கண்வளரும்" (தேவா). **மேன்கரும்பு** - கரும்பின் ஒருவகை ; புறத்தோல் மெல்லிதாய்க் கரும்பு பருத்துள்ளனவும், கரும்பு மெல்லிதாய்த் தோல் கடினமாய் இரசமுடையதாய் உள்ளனவும் என்றிரண்டனுள், ஏனை, மனிதர்க்கும் நரி முதலிய பிராணிகட்கும் சிறிதும் உதவாது ஊதிய நோக்கமேகொண்டு பின்னைய மேன்கரும்பு வகையினையே பெருக்குவது இந்நாண் மாக்களியல்பு. **மேன்கரும்பு** - இளம்பயிர் என்றலுமாம்.

மிடைகதிர்ச் செஞ்சாலி - **மிடை** - சாலி எனவும், **மிடை கதிர்** எனவும் இருவழியும் கூட்டுக. **மிடைசாலி**-பயிரின் நெருக்கமும், **மிடைகதிர்**-தூருகப்பெருகி நென்மணிகள் மிகும் கதிர்களின் நெருக்கமும் குறிப்பன. **செஞ்சாலி** - நெல்லின் சிறந்த வகை. அரிவாட்டாய நாயனார் புராணத்தும் (908), பிறண்டு முரைத்தவை பார்க்க.

கரும்பு - சாலி - கதலி - கமுகுடனேங்கி - இவை மிகுதியாய் வயல்களில் ஒருங்கே பலவும் காணப்பட்டன என்பது. கரும்பும் நெல்லும் கமுகும் மயங்க நின்ற திறமும் குறிப்பு. 65-ம் பாட்டு பார்க்க.

தேள் நிலவு - **தெள்ளுதல்** - அறிதல். அறிவு தெளிந்த ; சிவனை யடைதலே உய்திபெறும் வழி என்ற தெளிவு.

தம்பெருமான் - தமக்கு ஞான வமுதருளி யாண்ட பெருமான். "எனையறியாப் பருவத்தே யெடுத்தாண்ட பெருந்தகை" (புரா. 880) என்ற பிள்ளையாரது திருவுள்ளக் குறிப்புப்படக் கூறியது.

பிரமபுரம் - ஞானம்பெற்றபோ தருளிய முதற் றிருப்பதிகப் பெயர்க்குறிப்புப்பட இப்பெயராற் கூறினார். மேல் "பிரமபுரத் தருமறையோர்" (2155) என்பதுங் காண்க.

சார - "சார்பு" சைவ சித்தாந்த மரபுப் பெருமொழி. "சார்புணர்ந்து" (குறள்).
செல்லும்போது (2154), மறையோர் - வணங்கி-நிரைத்துச் - செல்வார் (2155); ஏந்தித் - தூவிச் சென்று - கண்டார் - (2156) என்று முடித்துக்கொள்க. 256

2155. (வி - ரை) தோணி...வணங்கி - பிள்ளையாரைத் தந்தருளி ஞான மளித்து ஆட்கொண்டமையும், இப்போது சிவிகை தந்து அளித்தமையும் உட்கொண்டு தோணியப்பரை வணங்கிப் புறப்பட்டனர். அடியாரைச் சென்று வணங்கு முன் அதற்குத் தகுதிதரும் பொருட்டு ஆண்டவரை வணங்கும் முறையுமாம்.

வெள்ளம்-சாகை உபசாகைகளாகப் (பெருங்கிளை - சிறு கிளைகளாகப்) பெருகும் தன்மை குறித்தது. அனேகம்.

மகர தோரணம் - மகரம் - சுறுமீன். சுறவின் வடிவுகாண அமைத்த தோரணம்.

செழுங்கொடிகள் - வெண் கொடிகளும், இடபம் முதலிய முத்திரைகள் பொறித்த கொடிகளும்.

நிரைத்து - வரிசைபெற அமைத்து.

எதிர்கோள் சிறப்பில் - தக்கபடி எதிர்கொள்ளும் சிறப்புக்களுடன். 257

2156. (வி - ரை) ஆரணங்கள் மதுரவொலி - ஆரணம் - வேதம். மதுரம் - ஏழு சுரமும் பொருந்த ஒத்திசைக்கும் இசையும் பயனும் குறித்தது.

அணிந்த பூரண கும்பங்கள் - நிறை கரகம் - அலங்கார மாத்திரையான பூர்ண கும்பங்களும், தெளித்தற்கான புனித நீர் நிறைந்த குடங்களும்.

நறுந்துகள் - பொற்சுண்ணம்; மஞ்சள் கலந்த வாசனைப்பொடி. தூவிச் சென்று என்க.

குழைந்த அமுது - என்க. குழைந்த - "எண்ணரிய சிவஞானத் தின்னமுதங் குழைத்தருளி" (1965); குழைத்தல் - கூட்டியிழைத்தல்.

சிவிகை மீது - குடைநீழற்கீழ் - முதலில் சிவிகையும், அதன் மேலே நோக்கப் பிள்ளையாரும், பின்னரும் மேல் நோக்க அவரது சிரத்திற் குடை நிழலும் ஆக இவ்வாறு கீழிருந்து மேனோக்கும் காட்சி. அடிமுதல் முடிவரை காணும் மேலாகிய பார்வை என்ற சிறப்புக் குறிப்பு.

வள்ளலார் - முன்னரும் இவ்வாற்றுல் கூறுதல் காண்க. (2154) 258

2157. கண்டபொழு தேகைகள் தலைமேற் கொண்டு
கண்களிப்ப மனங்களிப்பக் காதல் பொங்கித்
தொண்டர்களு மறையவருஞ் சென்று சூழ்ந்து,
சொல்லிறந்த மகிழ்ச்சியினுற் றுதித்த வோசை
யெண்டிசையு நிறைவித்தா ; ராடை வீசி
யிருவிசும்பின் வெளிதூர்த்தா ; ரேறு சீர்த்தி
வண்டமிழ்நா யகருமிழிந் தெதிரே சென்று
வணங்கியவ ருடன்கூடி மகிழ்ந்து புக்கார். உ௫௯

(இ - ள்) கண்டபொழுதே...பொங்கி - முன்கூறியவாறு கண்ட காட்சியினுல் அப்பொழுதே கைகளைத் தலைமேல் கூப்பிக்கொண்டு, கண் களிப்புக் கொள்ளவும், மனங்களிப்பவும், காதல் பெருகி ; தொண்டர்களும்......சூழ்ந்து - திருத்தொண்டர்களும் வேதியர்களும் சென்று பிள்ளையாரைச் சூழ்ந்து; சொல்லிறந்த...நிறைவித்தார்- சொல்லவொண்ணுத மகிழ்ச்சியின் பெருக்கினுலே துதிசெய்த ஓசையினை எட்டுத்

திசைகளிலும் நிறைத்தனர் ; ஆடைவீசி...தூர்த்தார் - மேலாடையை வீசுதலினால் பெரிய ஆகாய வெளியையும் மறைத்தனர் ; ஏறு...புக்கார் - ஏறும் பெருமையுடைய வளம் பொருந்திய தமிழ்த்தலைவராகிய பிள்ளையாரும் சிவிகையினின்றும் கீழே இறங்கி அவர்கள் எதிரிற்சென்று வணங்கி அவர்களுடனேகூடி மகிழ்ந்து நகரத்தினுள் புகுந்தருளினர்.

(வி - ரை) கண்டபொழுதே - ஏகாரம் தேற்றம் ; ஆர்வமிகுதி புணர்த்திற்று.

கை தலைமேற்கொண்டு...மனங்களிப்பக் காதல் பொங்கி - கைகளும் கண்களும் மனமும் முன்பின்னின்றி ஒருங்கே செயல் புரியும்படி காதல் பெருக. மனம் பிரேரித்துக் கலக்கக் கண்காணும் ; கண்கண்டு களிக்கப் பின் கை தலைமீது குவியும் ; இவ்வாறன்றி மாறிய வைப்பு முறையிற் செயல் ஒருங்கு நிகழ்ந்ததற்குக் காதல் மிகுந்தமை காரணமாம் என்பது குறிப்பு.

தொண்டர்களை முன் வைத்தது சிறப்புப்பற்றியும் பிள்ளையாரது திருவுள்ளத் தார்வம் செல்லும் நிலைபற்றியுமாம்.

ஓசை - ஓசையை. திசையும் - திசைகளினிடத்தும். வேற்றுமைஉருபுகள் தொக்கன.

ஆடை வீசி...தூர்த்தார் - உத்தரியம் மேலே வீசுதல் மகிழ்ச்சிக் குறிப்பாகிய செயல். 1992 பார்க்க.

வெளி தூர்த்தல் - வானவெளியை மறைத்தல்.

ஏறுசீர்த்தி - ஏறுதல் - பெருகுதல். அறிவோர்களுள்ளத்தில் ஏறுதல் என்ற குறிப்புமாம். "ஏறுமயி லேறிவிளை யாடுமுகம்" (திருப்புகழ்).

வண்தமிழ் நாயகர் - பிள்ளையார்.

வணங்கி - அடியார் திருவேடத்தினுள்ளே சிவனைக்கண்டு வணங்கி.

உடன் கூடி மகிழ்ந்து - "அடியேனுன் அடியார் நடுவு ளிருக்கு மருளைப் புரியாய்" (திருவா). "உடனுறைவின் பயன்பெற்றார்" (1809).

புக்கார் - பிரமபுரத் திருநகரத்தினுள்ளே புகுந்தருளினர். தொண்டர்களும் மறையவரும்கூடி நகர்ப்புறத்தே வந்து எதிர்கொண்டாராதலின் அவருடன்கூடி நகரினுள்ளே புகுந்தனர். 259

2158. திங்களணி மணிமாட மிடைந்த வீதி
சென்றணைந்து தெய்வமறைக் கற்பின் மாதர்
மங்கலவாழ்த் திசையிரண்டு மருங்கு மல்க,
வானவர்நா யகர்கோயின் மருங்கு சார்ந்து,
துங்கநிலைக் கோபுரத்தை யிறைஞ்சிப், புக்குச்,
சூழ்ந்து,திருத் தோணிமிசை மேவி னார்கள்
தங்கழிரு முன்புதாழ்ந், தெழுந்து, நின்று,
தமிழ்வேதம் பாடினார் தாளம் பெற்றார். உ௬௦

(இ - ள்) திங்கள்......அணைந்து - சந்திரனைத் தாங்கும்படி உயர்ந்த அழகிய மாடங்கள் நிறைந்த திருவீதியிற்சென்று அணைந்து; தெய்வ...மல்க - தெய்வத் தன்மை வாய்ந்த மறைவழிவந்த கற்பின் மிக்க மாதர்கள் முழக்கும் மங்கல வாழ்த்துக் கள் இருபுறமும் நிறைய ; வானவர்...சூழ்ந்து - தேவ தேவரது பெரிய நிலைகளையுடைய திருக்கோபுரத்தை வணங்கிக் கோயிலினுள்ளே புகுந்து வலம்வந்து ; தோணி மிசை...தாளம்பெற்றார் - திருத்தாளம் பெற்றவராகிய பிள்ளையார் திருத்தோணியில்

எழுந்தருளியவர்களுடைய திருமுன்னர் வீழ்ந்து எழுந்து நின்று தமிழ் வேதமாகிய திருப்பதிகம் பாடியருளினர்.

(வி - ரை) திங்களணி மணிமாடம்-உயர்ச்சி குறித்தது; "மாடம், விண்டாங்குவ போலும்மிகு வேணுபுரம்" (தேவா).

தெய்வ மறை...மல்க - மாதர்கள் வாழ்த்திசைக்கும் மரபு முன்னுள் வழக்கு; இந்நாளில் அருகியது. முன்னரும் இவ்வாறு சாண்க. (1994). இது தெய்விக நிகழ்ச்சிபற்றியும் பிள்ளையாரது இளம்பருவச் சிறப்புப்பற்றியுமாம்.

தோணிமிசை மேவினர்கள் - பெரிய நாயகியாரும் தோணியப்பரும். இவர்கள் பிள்ளையாருக்கு அமுதருளி யாட்கொண்டவர்கள்.

தமிழ் வேதம் - இறைவாருளிய வேதத்தையே தமிழில் அருளிய தென்பதாம். "என துரை தனதுரையாக" (தேவா). இறைவர் அருளிய வேதம் தமிழி னன்றென் பது குறிப்பு. இப்பதிகம் இன்னதென்று துணியக்கூடவில்லை.

தாளம் பெற்றர் - வினைப்பெயர்; முன்னர்த் தாளம் பெற்றமையே போல இஞ்ஞான்று சிவிகையும் குடையும் பெற்றார் என்பதும்; எவ்விடத்து எது பெறினும் அவையாவும் தோணியப்பரருளியனவேயாம் என்பது பிள்ளையார் திருவுள்ளக் கருத் தென்பதும் குறிப்பு. "மீனவ னவையெதிர் நதிமிசை வருகர னென்பார்" (புரா-954) என்ற திருவியமகமும் கருதுக. 260

2159. பரவுதிருப் பதிகவிசை பாடி, நீடும்
பரங்கருணைத் திருவருளின் பரிசு போற்றி,
விரவுமலர்க் கண்பனிப்பக் கைகள் கூப்பி,
வீழ்ந்தெழுந்து, புறம்போந்து, வேத வாய்மைச்
சிரபுரத்துப் பிள்ளையார் செல்லும் போது,
திருநீல கண்டயாழ்ப் பாணர் பின்னே
வர,வவரை வளம்பெருகு மனையிற் போக
வருள்செய்து, தந்திருமா ளிகையின் வந்தார்; உகூக

2160. மறையவர்க ளடிபோற்றத் தந்தை யாரு
மருங்கணைய மாளிகையி லணையும் போதில்,
நிறைகுடமு மணிவிளக்கு முதலா யுள்ள
நீதிமறைக் குலமகளிர் நெருங்கி யேந்த,
விறைவர்திரு நீற்றுக்காப் பேந்தி முன்சென்
றீன்றதா யார்சாத்தி யிறைஞ்சி யேத்த,
முறைமையவர்க் கருள்செய்து மடத்திற் புக்கார்
முதல்வர்பான் மணிமுத்தின் சிவிகை பெற்றார். உகூஉ

2159. **(இ - ள்)** பரவு...போற்றி - போற்றும் இசையுடைய திருப்பதிகத்தி னைப் பாடிப் பெருங்கருணை செய்ததிருவருளின் பரிசினைத் துதித்து; விரவு...போந்து- பொருந்திய மலர்போன்ற கண்கள் இன்பநீர் துளிப்பக் கைகளைச் சிரமேற் குவித்துக் கீழே விழுந்து வணங்கி யெழுந்து வெளியே போந்து; சிரபுரத்துப் பிள்ளையார் செல்லும்போது - சீகாழிப் பிள்ளையார் செல்லுகின்ற போதில்; திருநீலகண்ட யாழ்ப்பாணர்......அருள் செய்து - திருநீலகண்ட யாழ்ப்பாணர் தமது பின்னே

தொடர்ந்துவர அவரை வளம்பெருகும் அவரது திருமனையிற் செல்லும்படி அருளிச் செய்து; தம்...வந்தார் - தமது திருமாளிகையின் அணிமையில் எழுந்தருளினாராக;

2160. (இ - ள்) மறையவர்கள்...போதில் - வேதியர்கள் தமது திருவடியைத் துதிக்கத் தந்தையாரும் தமது பக்கத்தில் அணையத் திருமாளிகையில் அணையும் பொழுதில்; நிறைகுடமும்...ஏந்த - நீதி மறைக்குல மகளிர்கள் நிறைகுடத்தையும் அழகிய விளக்குக்களையும் ஏந்தி நிற்க; முன்சென்று...ஏத்த - பெற்ற திருத்தாயார் சிவபெருமானது திருநீற்றுக்காப்பினை ஏந்திக்கொண்டு முன்னே போந்து சாத்திப் பணிந்து பாராட்ட; முறைமை அவர்க்கு...பெற்றார் - முறைமைப்படி அவ்வவர்க்கும் அருளிச் செய்து, முதல்வரிடம் மணிமுத்துச் சிவிகைபெற்றவராகிய பிள்ளையார் திருமடத்தினுள் புகுந்தருளினர். உகூஉ

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டுரைக்க நின்றன.

2159. (வி - ரை) பரவும் - இறைவன் சீர்களைப் பரவச் செய்யும் - பரப்பும் - எனப் பிறவினைப் பொருளும் கொள்ள நின்றது.

பரங்கருணைத் திருவருளின் பரிசு - கருணை - இறைவனிடத்துச் சத்தி நிற்கு நிலை; **அருள்** - அது ஆன்மாக்களின் மாட்டுச் சென்று நிற்குநிலை. **பரிசு** - தன்மை.

கண் பனிப்ப - கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் துளிப்ப.

வளம்பெருகு மனை - "நண்ணியுறையிடம் சமைத்து" (2035) என்ற மனை. தமது மாளிகைக்கண், அவர் (பாணர்) வர, இனி நடக்கும் சிறப்புக்களிற் கலக்கக்கூடாது என்ற குலம்பற்றிய நினைவுகளால் பிள்ளையார் இவ்வாறு ஈண்டே பாணருக்கு விடை தந்தருளினர் என்று சில மந்தமதிகள் இங்குக் குறைகூறி யிடர்ப்படுவர். பாணனார் சண்பையிலே வந்தணைந்து பிள்ளையாரை அவரது திருமாளிகையில் கண்டதும், பிள்ளையார் அவரை எதிர்கொண்டு வரவேற்று உபசரித்துத் திருக்கோயிற்புற முன்றிலுக்கு அழைத்துச்சென்று இறைவருக்கு யாழியற்றச் செய்வித்ததும், பின்னர், அவர் பாடினியாருடனிருத்தலால் "நண்ணியுறை யிடஞ்சமைத்து நல்விருந்து சிறந்தளித்"ததும், பின்னர், அற்றை நாட்போலென்றும் அகலா நண்புடனமர்ந்ததும், தாம் செல்லும் தலயாத்திரைகளில் தலந்தோறும் அவரையும் பாணினியாரையும் உடன்கொண்டு சென்றதும், அவர் அழைப்புக்கிரங்கி அவரது பதியிற் சென்றது மாகிய நட்புரிமைச் செயல்கள் முன்னர் விரிக்கப்பட்டன. (2029 - 2035; 2074 - 2077). குலம்பற்றிய கொள்கைகளால் நகரத்தில் இருக்கைகளும் தெருவுகளும் அமைத்தல் முன்னாளிலும் இந்நாளினும் காணும் நன்மரபு; அவை தடுமாறுவது இந் நாளிற் காணும் தடுமாற்றநிலை. இக்குறையாகிய தவறுநிலை கொண்டு முன்னை நன் மரபுகளைக் குறைகாணுதல் பிழை. அன்றியும், இனி நிகழ்வன எல்லாம் பிள்ளையார் பொருட்டே மறையோராற் செய்யலாவன வாதலும், அவற்றைக் கண்டு வாளா நிற்கும் பரிசனங்களுடன் ஒருவராய்ப் பாணனாரும் பாணினியாரும் நிற்றல் சாலாமை யும் கருதுக. முன்னர் நாட்டுச் சிறப்பு முதலிய இடங்களில் உரைத்தவையும் பார்க்க.

மாளிகையில் - அணையும்போதில் என்று மேற்கூறுவதால், ஈண்டு மாளிகையி னணிமையில் புறமுன்றிலில் என்றுகொள்க. **வந்தார்** - வந்தாராக.

பரன் கருணை—என்பதும் பாடம். 261

2160. (வி - ரை) **மறையவர்கள் அடிபோற்றத் தந்தையாரும் மருங்குஅணைய** - மறையவர் சீகாழியில் வந்து எதிர்கொண்டவர்களும், **தந்தையார்** - தம்முடன் வந்தவரும் ஆதலின் வேறுபிரித்துக் கூறினார்.

நிறை குடமும்...ஏந்த - உலாப்போந்து மாளிகைக்கு மீளும் தலைவரை இவ்வாறு விளக்கு ஏந்தி உள் அழைத்தல் மரபு. மங்கலம் பற்றியதுமாம். நீதி - நியதியின்படி - மரபின்படி - என்பது குறிப்பு. இவையிரண்டும் தேவாஷ்டமங்களாகவும் இவற்றை மகளிர் ஏந்தி நிற்பதாகவும் சிவாகமங்களிற் கூறுதல் கருதத்தக்கது.

முன்சென்று ஈன்ற தாயார் திருநீற்றுக்காப்பேந்திச் சாத்தி இறைஞ்சி - என்க. ஈன்ற தாயார் - கருவுட்படாது முருகப்பெருமானே பிள்ளையாராய் வந்தார் என்போர் இதனை நோக்கக்கடவர். "தருமறைவியார்...திருமுலை சுரந்தமுது செய்தருளுவித்தார்" (1940) முதலியனவையும் கருதுக. முன்சென்று - விளக்கு முதலிய மங்கலங்களை ஏந்தும் மறைக்குல மகளிர்கூட்டத்தின் முன்னேசென்று. தாயார் - பகவதியார்.

இறைவர் திருநீற்றுக்காப்பு ஏந்தி - சாத்தி - "மரபிரண்டுஞ் சைவநெறி வழிவந்த கேண்மை" என்றும், "பரவுதிரு நீற்றன்பு பாலிக்குந் தன்மையினார்" என்றும் (1925) அருளியபடி தமது பிறந்த மரபும் புகுந்த மரபும் திருநீற்று நெறி நின்றமையாலும், இருமரபினும் சிவவேள்விகளிற் கலந்து திருநீற்றின் உண்மையினைக் கைவர அறிந்தாராதலாலும், திருநீற்றிற் பெரியதொரு மங்கலமும் காப்பும் (1941) செல்வமளிப்பதும் வேறின்மையாலும் தாயார் திருநீற்றினை ஏந்தியும் சாத்தியும் இறைஞ்சினர் என்க. நீறு மந்திரவேள்வியின் விளைவதாம். வேள்வியும் அதுபெறும் பொருட்டே செய்யப்படுவது. இறைஞ்சுதல் - மகனார் என்ற முறையானன்றிச் சிவன் திருவருள் விளங்கப்பெற்ற திருத்தொண்டினீர்மைக்கென்க.

முறைமை அவர்க்கு - முறைமைப்படி அவ்வவர்க்கு.

முதல்வர்...பெற்றார் - முன் தாளம் பெற்றார் (2158) என்றபடி ஈண்டுச் சிவிகை பெற்றதனைக் கூறினார். அதுமுதல் இதுவரை உள்ள அருளிப்பாடெல்லாம் பெறுதல் குறிப்பு. பெற்றார் - பெயர்.

நீடுமறைக் குலமகளிர்—என்பதும்பாடம். 262

2161. செல்வநெடு மாளிகையி லமர்ந்து நாளுந்
திருத்தோணி மிசையாரைச் சென்று தாழ்ந்து
மல்குதிருப் பதிகங்கள் பலவும் பாடி
மனமகிழ்ந்து போற்றிசைத்து வைகு நாளில்,
ஒல்லைமுறை யுபநயனப் பருவ மெய்த
வுலகிறந்த சிவஞான முணரப் பெற்றார்
தொல்லைமறை விதிச்சடங்கு மறையோர் செய்யத்
தோலொடுநூ லாங்கினார் சுரர்கள் போற்ற. உகூங

உபநயனம்

(இ - ள்) செல்வ......நாளில் - செல்வம் பெருகும் நீண்ட தமது திருமாளிகையில் விரும்பி எழுந்தருளியிருந்து ஒவ்வொருநாளும் திருத்தோணியின்மேல் எழுந்தருளியவரைச் சென்று பணிந்து பொருந்திய திருப்பதிகங்கள் பலவற்றையும் பாடி மன மகிழ்ச்சியுடன் போற்றி செய்து வைகும் நாட்களில்; ஒல்லை...எய்த - விரைந்து முறைப்படி சேரும் உபநயனப் பருவம் வந்து சார; உலகிறந்த சிவஞான முணரப் பெற்றார் - உலகங் கடந்த சிவஞானத்தை உணரப் பெற்றவராகிய பிள்ளையார்; தொல்லை...போற்ற - பழமையாக (தொன்றுதொட்டு) வழங்கிவரும் வேதவிதிகளின் படி உபநயனத்திற்குரிய சடங்குகளை மறையவர்கள் செய்தார்களாகத், தேவர்கள் போற்றும்படி தோலினுடனே நூலினையும் தாங்கிக்கொண்டருளினர்.

(வி - ரை) செல்வ நெடுமாளிகை - "செல்வநெடுமாடம்" (கோயில்-தேவா). செல்வமாவது என்றுமழியாத "சைவமெய்த் திருவின் சார்வு"; "செல்வத்துட் செல்வஞ் செவிச் செல்வம்" (குறள்) என்று ஞானக் கேள்வியை உள்ளுறையாக வைத்தோதினர் தெய்வப் புலவர்.

திருத்தோணி மிசையார் - நிலத்தைமூடி அதனின்மேல் உயர்ந்தது ஊழி வெள்ளம்; அதனைக் கீழ்ப்படுத்தி மேலுயர்ந்து மிதந்தது திருத்தோணி; அதன் மேலே இருந்தார் தோணியப்பர் என்பது **மிசையார்** என்ற குறிப்பு. "மேலையார் மேலையார் மேலையார்" (தேவா).

நாளும் - சென்று - தாழ்ந்து "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" (தேவா) என்ற உண்மையை உலகிற்காட்டி யருளும் ஞான ஆசாரியராதல் குறிப்பு. "கால மானவை யனைத்தினும் பணிந்துடன் கலந்தவன் பர்களோடும்" (புரா-989). கோயில் வழிபாடின்றி வீண்நாள் போக்கும் குருட்டு ஞானிகளும், உலகரும் இதனைக் குறிக் கொள்வாராயின் நலந்தரும்.

திருப்பதிகங்கள் பலவும் - இவை இன்னவென்று துணியக்கூடவில்லை. சீகாழிப் பதிகங்களாக இப்போதுகிடைத்துள்ள திருப்பதிகங்களுள் அரசுகளும் நம்பிகளுமருளிய பதிகங்கள் நான்கினை நீக்கிப் பிள்ளையாரது பதிகங்கள் அறுபத்தேழு உள்ளன. அவற்றுள், காலம் இடம் பொருள்கண்டு முன்னர்க் குறித்தனவும், இனிக் குறிப்பனவும் நீங்க ஏனையவற்றுட்பல இந்நாட்களிற் பாடியருளப் பெற்றவை போலும். மேலும், 2174-2175 பாட்டுக்களிற் குறித்த பதிகங்களும் இக்காலத்தில் அருளியவை. இந்தக் காலந்தான் பிள்ளையார் சில ஆண்டுகள் சீகாழியில் தங்கியருளிய காலம். இதன்பின் 2177-ல் கூறியபடி தொடங்கிய நீண்ட (ஐந்தாவது) யாத்திரை பாண்டி நாட்டிற் சைவத்தாபனம் செய்து திரும்புவதுடன் நிறைவேறுகிறது. அதன்பின் தொண்டை நாடு கண்டு திருமணத்தில் இறைவரை யடைகின்றனர் பிள்ளையார் என்ற குறிப்பினை இங்கு நினைவு கூர்தல் வேண்டும். அரசுகள் புராணத்தில் 1448-ம் பாட்டின் கீழ்க் குறித்தவையும் (பக். உசுங) பார்க்க. **வைகுநாளில்** என்ற குறிப்புமிது. இவ்வாறு பதிகங்களைத் தலமுறைப் பதிப்பிற்கண்டவாறு பாகுபடுத்திக் கண்டுகொள்ளுதல் நலந்தரும்.

ஒல்லைமுறை உபநயனப் பருவம் எய்த - ஒல்லை முறை - ஒல்லை - விரைவு; இருபிறப்பாளருள் ஏனையோரைவிட விரைவில் பிராமணர்க்குச் செய்யப்படுவது உபநயனம் என்ற குறிப்பு.

உபநயனம் - ஏனைய இரண்டுடன் மூன்றாவதாய்ப் பின்னர்வரும் உத்விக் கண் என்பது பொருள். மூன்றாவது கண். ஏனைய இரண்டும் (திரியக்) குறுக்காக இருப்பன; இது அவ்வாறன்றி (ஊர்த்துவம்) நெடுக்காக மேனோக்கி யிருப்பது. வி - விரோதம்; விருப - மாறுபட்ட வடிவுடைய. அக்ஷ - கண். இது பிரமஞானத்தாற் றிறக்கப்படும்; சிவனது அக்கினிக் கண் எனப்படும் நெற்றிக் கண்ணின் தன்மை குறிப்பது; விருபாக்ஷன் என்பது சிவன் திருநாமம். விருபாக்ஷ-(விரோதம் - மாறுபாடு;) குறுக்காகக் கிடக்கும் உலகத்தார் கண்போலன்றி நிமிர்ந்து நிற்பது. சிவன், சூரிய சந்திரர்களாகிய மற்றை இரண்டு கண்களினாலும் இரவு பகல்களைச் செய்து உலகம் காத்து நிறுத்தி, இறுதியிலே நெற்றி நாட்டத்தின் ஒரு பொறியால் சங்காரம் செய்கிறார். சிவனை "நீ ஒருவனே பிராமணன்" என்றது வேதம்; பிரமஞானம் என்னும் சிவஞானம் பெறுவிக்கும் சடங்கு-உபநயனம் எனப்படும். "நிகழு முறைமை யாண்டேழு நிரம்பும் பருவம் வந்தெய்த... உபநயனப் பொருவில் சடங்கு முடித்து" (1219) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க; உபநயனப்பருவம் - ஏழாவது வயது.

உலகிறந்த சிவஞானம் உணரப் பெற்றார்...தாங்கினார் - **உலகிறந்த** - பசு பாச ஞானங்களுக்கு மேற்பட்ட; **உணர்தல்** - சிவானுபவம் சுவானுபூதிகமாகக் கைவருதல்; **பெற்றார்** - பெற்றாராகியும்; ஏனையோர் இச்சடங்கின்பின் வேதம் பயின்று, பின் பக்குவம் நிகழ்ந்தபோது சிவஞானம் பெறுவர். பிள்ளையார் அவ்வாறன்றி முன்னரே உலகிறந்த பதிஞானங் கைவரப்பெற்றனர். அவர் மறை மறைவிதிச் சடங்கு செய்யத் தோலும் நூலும் தாங்கினார் என்க. ஆயினும்-என்ற சொல் வருவித்துக்கொண்டு, "இதனால் ஞானிகட்குப் புறக்கோலப் பூணூல், வேத மோதுதல், சடங்கு, சம்பிரதாயங்கள் முதலியவை வேண்டுவதில்லை என்பது புலனாகின்றது" என்று இங்கு விசேட ஆராய்ச்சி செய்வாருமுண்டு. அவர்கள் பிள்ளையார், சடங்குக் குட்பட்டமையால் பயனில்லாத செயல் செய்தனர் என்ற குறை சார்வதனைக் குறிக்கொண்டிலர். இவ்வாராய்ச்சியின் பயனாகப் பரம ஆசாரியருக்குப் பயனில செய்தார் என்ற பழிப்பும் சார்த்தினர்.

"**உணரப் பெற்றார் தாங்கினார்**" - என்றதனால் ஞானிகட்கும் புறச்செயல் உள்ளளவும் இவை வேண்டப்படுவன என்று முடிப்பதே அறிவின் நியமமென்க. மேல் வரும் பாட்டும் கருதுக.

தொல்லை மறை விதிச்சடங்கு மறையோர் செய்ய - என்றதனால் இவை வேதவிதியாதலும், யாவரும் பொருளற்ற வெறும் சடங்கு என்று இகழாது செய்தற் பாலனவாதலும் வற்புறுத்தப் பட்டன. புறப்பார்வையற்றுத் தன்வசமிழந்து சிவானுபவத்தில் மூழ்கிய நிலையே சடங்கற்ற நிலையாதல் முன் பலவிடத்தும் வற்புறுத்தப்பட்டது காண்க. "சாக்கிரத்தே அதீதத்தைப் புரியுந்தமக்கு இடையூறு சிறிது மணுகாமை யறிந்தாராயினும், ஆன்றோ ராசாரம் பாதுகாத்தற் பொருட்டும் மாணாக்கர்க் கறிவுறுத்தற் பொருட்டும் முதற்கண் இடையூறு நீங்குதற்குரிய மங்கல வாழ்த்துக் கூறுகின்றார்" (சிவஞான போதச் சிற்றுரை) என்றது காண்க.

சடங்கு செய்யத் தோலோடு நூல் தாங்கினார் - சடங்காவனவற்றுட் சில சொல்லி ஏனையவற்றை இனம் பற்றிக்கொள்ள வைத்தார். **தோல்** - கருமானின் தோல்; "கருமானி னுரியதளே யுடையா வீக்கி"; **நூல்** - முப்புரியாகிய பூணுநூல். இனம்பற்றிப் பஞ்சசிகையும், கோலும், முஞ்சிப்புல் நாணும் முதலியவையும் கொள்க.

தோலோடு நூல் - இரண்டங்குலமாய்ப் பூணூலினளவி லமையச்செய்த கருமானின் றோலொடு சேர்ந்த நூல். கிருட்டிணாசினம் பரிசுத்தத்தின் பொருட்டும், முஞ்சி அரைஞாண் பிராண அபானனை நிறுத்தும் பொருட்டும் ஆம். கமண்டலம் என்னும் பாத்திரம் முதலியவையும் சிவனடையாளம். குருகுல வாசமுடைய பிரமசாரிகள் பிச்சை ஏற்றுண்ணுவது மரபு. நவீன முறையிலும் (Bachelor of Arts) முதலிய பட்டங்களுக்கு அடையாளமாகத் தரப்படும் மேலுடையில் பிச்சை கொள்வது போன்ற பை ஒன்று அமைப்பதும் காண்க. (Bachelor = பிரமசாரி.)

சுரர்கள் போற்ற - உலகினில் வேத மந்திரங்கள் நிகழ்வதனால் தேவர்கள் கதி நலமாகச் செல்வதாதலின் பிள்ளையாரது உபநயனத்தால் அவர்கள் மிகப்பயன் பெறுதலின் போற்ற என்றார்.

தொல்லை முறை— என்பதும் பாடம். 263

2162. ஒருபிறப்பு மெய்தாமை யுடையார் தம்மை
உலகியல்பி னுபநயன முறைமை யாகும்
இருபிறப்பி னிலைமையினைச் சடங்கு காட்டி
யெய்துவிக்கு மறைமுனிவ ரெதிரே நின்று

"வருதிறத்தின் மறைநான்குந் தந்தோ"மென்று
மந்திரங்கண் மொழிந்தவர்க்கு, மதுரவாக்கால்
பொருவிறப்ப வோதினர் புகலி வந்த
புண்ணியனு ரெண்ணிறந்த புனித வேதம். உ௲௪

(இ - ள்) ஒரு...தம்மை - யாதொரு பிறப்பிலும் வராத நிலைமையுடைய பிள்ளையாரை; உலகியல்பின்...மறைமுனிவர் - உலகில் ஏனையோரின் இயல்பின் வைத்து உபநயன முறைமையான இருபிறப்பின் நிலையினைச் சடங்குகளாற் காட்டிப் பெறச் செய்கின்ற வேதமுனிவர்கள்; எதிரே நின்று...மொழிந்தவர்க்கு - எதிரில் நின்று "வழிவழிவரும் தன்மையில் நான்கு மறைகளையும் தந்தோம்" என்று உரிய மந்திரங்களைச் சொல்லிய அவர்களுக்கு; மதுரவாக்கால்...வேதம் - தமது மதுரமுடைய திருவாக்கினால் சீகாழியிலவதரித்த புண்ணியமே உருவான பிள்ளையார் ஒப்பில்லாத நிலையில் எண்ணிறந்த புனித வேதங்களையும் ஓதியருளினார்;

(வி - ரை) ஒரு பிறப்பு மெய்தாமை யுடையார் - கன்மத்துக்கீடாக எப்பிறப்பிலும் வாராதவர் பிள்ளையார்.

இருபிறப்பு - தாய்வயிற்றின் வந்த பிறப்பும், சிவத்துவம் விளங்கப்பெற்ற (உபநயனம்பெற்ற) பின் வேறு சிறப்பாகிய பிறப்பும் என்றிரண்டு. நிலைமை - தூல உடம்பு அதுவேயாகச், சூக்கும நிலைமட்டும் மாறுதலால் இரு பிறப்பின் நிலைமை என்றார். ஒரு பிறப்புமில்லார்க்கு இருபிறப்பின் நிலைமைகாட்டிக் காட்டினர் என்பது கவிநயம். இது பிள்ளையார்பால் உலகநெறி நிறுத்தற் பயத்ததாத ளவில் நின்றது என்பது குறிப்பு. இனி, ஒரே ஜென்மத்தில் தாயின் வயிற்றிற் பிறத்தலால் வருவது ஒன்றும், அதனை அடுத்து உபநயனத்தால் வருவது ஒன்றும், அதனை அடுத்துத் தீட்சையால் வருவது ஒன்றும் என்று மூன்றுவகைப் பிறவிகள் உண்டு என்றும், அவை முறையே ஒன்றற்கொன்று உயர்ந்தவை என்றும் கூறுப. "தீக்ஷா ஜன்மத் திரிதீயம் ஸ்யாது" என்பது காண்க. இது சிதம்பரம் ஸ்ரீ ந. சிவப்பிரகாச ஐயா அவர்கள் குறிப்பு.

மறைநான்கும் தந்தோமென்று - தந்தோம் - கொடுத்தோம் என்றும், தந்து ஓ மென்று என்று, மறைகளைக் கொடுத்து உரிய மந்திரங்களை உபதேசிப்பார் மறை முதலாகிய பிரணவத்தைத் தொடங்கிக் கொடுத்தனர் என்றும் உரைக்க நின்றது. "எல்லையிலா மறைமுதன்" (1973) என்றவிடத் துரைத்தவை பார்க்க. "ஓமென்று மறைபயில்வார்" (தேவா); வேதம் பிரணவத்துடன்தொடங்குதல் மரபென்பது "நின்ற தோர்தனி மொழியைமுன் னோதின னெறியால்" 'குடிலைமுன் சாற்றி, மாமறைத்தலை யெடுத்தனன்" (அயனைச் சிறைபுரிபடலம் - 8-9) என்ற கந்தபுராணத்தாலு மறிக.

ஓமென்று மந்திரங்கள் மொழிதலாவது - ஓமென்று தொடங்கிக் கொடுத்துக் காயத்திரி சம்மிதா மந்திரம் முதலிய பிரம மந்திரங்களை உபதேசித்தல். இது உபநயனத்தின் அங்கம். தீட்சை என்பது மரபு. காயத்திரிக்குப் பொருளாவார் சிவபெருமானே என்பது "காயத்திரீ வல்லபாதித்வாத்து" "உயர்கா யத்திரிக் குரிப் பொருளாதலின்" (அரதத்தாசாரியர் சுலோகபஞ்சகம்) என்பது முதலியவற்று லறிக. பர்க்கன் - எனக் காயத்திரியிற் கூறப்படும் நாமம் சிவனுடைய நாமமாக நிகண்டிற் படிக்கப்படும். பர்க்கன் - வறுப்பவன் - முளையாமல் விதையை வறுப்பவன் - பிறவியை அறுப்பவன் என்பது; சிவனது சத்தியின் அமிசங்களே ஏனைய எல்லாத் தேவர்களிலும் வியாபித்து அவரவர் தொழில்களைச் செய்விப்பது, என்பது, எத் தேவரது ஆண்பாற் பெயர்க்குமுரிய பெண்பாற் பெயராயினும் அவை உமையம்மை

யாரைக் குறிக்கும் பெயர்ப் பொருள் வழக்கினுலும் அறியப்படும். பைரவி - பிராமி - வைணவி - நாராயணி - முதலிய எல்லாம் உமையையே குறிப்பன காண்க. பிள்ளையாரது சிவபுரத் தேவாரமும் பார்க்க.

மந்திரம் - மந் - நினைப்பது ; திர - காப்பது என்று பொருள். "மநநத் திராண தர்மித்துவாத் மந்திர இத்திய பிதீயதே" என்பது ஆகமம்.

மொழிந்தவர்க்கு-ஓதினூர் - ஓமென்று தொடங்கி மந்திரங்களைச் சொல்ல வந்த வேதியர்க்கு விடையாக, அவரெதிரே எண்ணிறந்த வேதமெல்லாம் ஓதினூர். "அணைந்த மாமறை முதற்கலை யகிலமு மோதா, துணர்ந்த முத்தமிழ் விரகன்" (2121); முற்செய் தவத்தால் முன்னமே உணர்ந்தவராதல் குறிக்கப் **புண்ணியனூர்** என்றூர். வந்த என்ற குறிப்புமது.

பொருவிறப்ப - என்றது வேறு எவரிடமும் காணப்படாத வகையில் என்றதாம்.

புகலி - சீகாழியின் மூன்றூவது திருப்பெயர்.

எண்ணிறந்த - வேதங்கள் அனந்தம் எனப்பட்டு அளவுபடாது விரியும் தன்மை குறித்தது.

புனிதமாவது - புனிதம் செய்வது - பிறப்பில்லாமற் செய்வது ; "வேதத்தை யோதியே வீடுபெற் றூர்களே" (திருமந்திரம் - 57). - 264

2163. சுருதியா யிரமோதி யங்க மான
தொல்கலைக ளெடுத்தியம்புந் தோன்ற லாரைப்,
பருதியா யிரகோடி விரிந்தா லென்னப்
பரஞ்சோதி யருள்பெற்ற பான்மை மேன்மை
கருதி,யா தரவோடும் வியப்புற் றேத்துங்
கலைமறையோர், கவுணியனூர் தம்மைக் கண்முன்
வருதியா னப்பொருளென் றிறைஞ்சித், தாமுன்
வல்லமறை கேட்டையந் தீர்ந்து வாழ்ந்தார். ௨௬௫

(இ - ள்) சுருதி...தோன்றலாரை - அனந்தமாகிய வேதங்களையும் முன் கூறியவாறு ஓதியதுடன், அவற்றின் அங்கமாகிய பழமையாகிய கலைகளையும் எடுத்துச் சொல்லிய பெருமைபெற்ற பிள்ளையாரை ; பருதி...கருதி - ஆயிரங்கோடி இளஞ் சூரியர்கள் ஒருங்கே கூடிவந்து விரிந்தனபோலப் பரஞ்சோதியினது திருவருளைப் பெற்ற பான்மையினது மேன்மையினைக்கருதி; ஆதரவோடும்...கலைமறையோர்-அன்பும் ஆச்சரியமுங்கொண்டு துதிக்கும் அந்தக் கலைமறையவர்கள் ; கவுணியனூர் தம்மை... இறைஞ்சி - கவுணியர் பெருமானூகிய பிள்ளையாரைத் தங்கள் கண்ணின் முன்னே உரு வெளிப்பட்டு வரும் தியானப் பொருளேயாவர் என்று கொண்டு வணங்கி ; தாம்முன்...வாழ்ந்தார் - தாங்கள் முன்னே வல்ல மறைகளில் தமக்குள்ள ஐயங்களைக் கேட்டுத் தெளிந்து வாழ்வடைந்தனர்.

(வி - ரை) சுருதி ஆயிரம் - ஆயிரம் அனேகம் என்னும் பொருளில் வந்தது ; "சாகை யாயிர முடையார்" (தேவா) ; "அநந்தாவை வேதா :".

அங்கமான தொல்கலைகள் - வேதங்களுக்கு அங்கமெனப்படும் தருக்க முதலிய ஆறங்கங்களும் ஏனைக்கலைகளும்.

தோன்றலார் - இப்பெருமை இப்போதுதான் மறையவர்களறியத் தோன்ற நின்றவர் என்பது குறிப்பு.

பருதி...விரிந்தாலென்ன - அருள்பெற்ற - என்று கூட்டுக. **பருதி** - ஞாயிறு ; **ஆயிரகோடி** - அளவிறந்த எண். அளவிறந்த சூரியர்கள் ஒருங்கே விரிந்தாற்போல என்றது ஞானத்தின் பேரொளி; பூதகாரியமாகிய புறவொளியன்று. பயன்பற்றி வந்த உவமம். **பரஞ்சோதி** - சோதிகளை எல்லாம் கடந்த பெருஞ்சோதி. பரஞ்சோதிதான் பருதி முதலிய ஏனை ஒளிப் பொருள்கட்கெல்லாம் ஒளிதருபவர் என்பது குறிப்பு. "ஒளியா யொளியத னொளியா யொளியத னொளியுந் தெளிதரு மொளியாகி" (பேரூர்ப் புரா - திருத் - பட - 73) ; பருதியை உவமித்தார் உலகில் இருணீக்கி யின்பம் பயக்கும் பயன் நோக்கி. **ஆயிரகோடி பருதி** என்றார் - அளவிலாத அருமறைகளின் அளவிலாப் பொருள்களையும் எடுத்தோதும் தன்மை குறிக்க. **பரம்** - அப்பாற்பட்டது.

பான்மை மேன்மை - பால் - நியதி - ஊழ் - என்பன ஒருபொருள். இங்குப் பான்மையாவது முற்செய்தவம். பான்மையினது மேன்மை என ஆறனுருபு விரிக்க.

கண்முன் வருதியானப் பொருள் - "உருவெணத் தவமாமே" என்றபடி மந்திரங்களை விதிப்படி உரு எண்ணுதலினால் அவற்றுக்குரிய தெய்வம் உருவெளிப்பாடு பெற்று முன்வந்தருளும் என்ற உறுதியான உறைப்பின் பயன். இங்கு மறையவர் பலகாலம் மந்திரப் பொருளைத் தியானித்ததன் பயனாகப் பிள்ளையார் அவர்கள் கண்முன்பு உருவுகொண்டு வந்தனர் என்று கொண்டிறைஞ்சினர் என்பது. **இறைஞ்சி** - என்றதுமிக் குறிப்பு.

தாமுன்...தீர்ந்து வாழ்ந்தார்-தாம் மறைகள் பயின்று வல்லராயினும் தெளிதலில்லாது பலவும் ஐயப்பாடுற்றனர் என்றும், அதனால் நல்வாழ்வின்றி வருந்தினர் என்றும், பிள்ளையார்பால் கேட்டு அந்த ஐயங்களின் நீங்கித் தெளிந்தனர் என்றும், அதனால் முன்னர்ப் பெறாத பெருவாழ்வு பெற்றனர் என்றும் கொள்க.

கலைமறையோர் - சிவஞானங் கைவரப் பெறாது பாசஞானமாகிய கலைகள் மட்டில் அமைந்தோர். 265

2164. மந்திரங்க ளானவெலா மருளிச் செய்து
மற்றவற்றின் வைதிகநூற் சடங்கின் வந்த
சிந்தைமயக் குறுமையந் தெளிய வெல்லாஞ்
செழுமறையோர்க் கருளியவர் தெருளு மாற்றான்
முந்தைமுதன் மந்திரங்க ளெல்லாந் தோன்று
முதலாகு முதல்வனா ரெழுத்தஞ் சென்பார்
"அந்தியினுண் மந்திரமஞ் செழுத்து மே"யென்
றஞ்செழுத்தின் றிருப்பதிக மருளிச் செய்தார். ௨௬௬

(இ - ள்) **மந்திரங்கள் ஆனவெலாம் அருளிச் செய்து** - வேதத்துள் மந்திரங்களாகிய எல்லாவற்றையும் எடுத்து அவர்களுக்குச் சொல்லியருளி (அதன்பின்) ; **மற்றவற்றின்...அருளி** - மற்றிவைகளுள்ளே வேதத்தின் விதித்த வேள்விச் சடங்குகளில் வந்த அவர்களது சிந்தையிற் கூடிய ஐயப்பாடுகளை எல்லாம் தெளியும்படி அந்தச் செழுமறையவர்களுக்கு அருள் புரிந்ததுடன் ; **அவர் தெளியுமாற்றால்...... என்பார்** - அவர்களது மனந்தெளியும் வகையால் முந்தையாகிய முதன்மைபெற்ற எல்லாமந்திரங்களும் தோன்றுதற்குக் காரணம் சிவபெருமானது திருவைந்தெழுத்தே யாகும் என்று எடுத்து உபதேசிப்பாராய் ; **அந்தியிலுள்...அருளிச் செய்தார்** -

"அந்தியில் ஓதும் மந்திரமாவது திருவைந்தெழுத்துமே யாம்" என்று வரும் ஸ்ரீபஞ்சாக்கரத் திருப்பதிகத்தை அருளிச்செய்தனர்.

(வி - ரை) **மந்திரங்கள் ஆன எலாம்** - வேதத்தினுள் மந்திரம், பிராமணம், பிராமணசேடம் என்ற மூன்று பகுப்பினுள் மந்திரம் என்ற பகுதியில் வேத வேள்வி களுள் ஆளப்படும் மந்திரங்கள் எல்லாம் உள்ளன. அவற்றுள் ஆனவற்றையெல்லாம் என்க. **ஆன** - உயர்ந்த உயர்வான.

மற்றவற்றின்...சடங்கு - இவைகளைப் பயன்படுத்திச் செய்யும் வேள்வி முதலிய வைதிகச் சடங்குகள். இவை அக்கினிகோத்திரம் செய்க என்பனபோன்ற விதி வாக்கியப் பகுதிகளாகிய பிராமணமும் அவற்றின் பின்வரும் பிராமண சேடமாகிய அருத்தவாதமும் ஆம்.

முந்தை முதன் மந்திரங்கள் - **முந்தை** - முன் உதிப்பது; சிருட்டியிற் குடிலையி னின்றும் முன் தோன்றுவன நாதவிந்து முதலிய வடிவான மந்திரங்கள் என்பது.

எல்லாந் தோன்றுமுதல்-மந்திரங்கள் எல்லாம் அகர முதலிய சூக்கும பஞ்சாக்க ரத்தினின்றும் தோன்றுவன. பஞ்சாக்கரம், பிரணவம், பிராசாதம், அசபை முதலி யன எல்லாம் நாதவிந்துக்களின் கலாபேதங்களேயன்றி, அவை தம்முள் வேறுவன அல்ல; ஆதலின் **எல்லாந் தோன்று முதல் - எழுத்தைந்சு** - என்றார். சிவஞான மாபாடியம் 4 சூத். "அகார வுகாரம்" என்றவிடத் துரைத்தவை பார்க்க. "மந்திர நான்மறை யாகி" (பதிகம் - 2); "ஆதிமந்திரம் அஞ்செழுத்து" (புரா - 698).

அந்தியுள் - அந்தி நேரம் தேவயாமம் எனப்பட்டு எல்லா மந்திரங்களும் அவற்றின் அதிதெய்வங்களும் விளக்கம் பொருந்த வரும் காலமாதலின், முப்போதும் தீ ஓம்பும் முறைமை யந்தணர்க்கு அது சிறப்புடையதாதலின் அந்தியுண்மந்திரம் என்றார். திருப்பதிகத்தினுள் இரண்டாம் திருப்பாட்டில் இக்குறிப்புப்படச் "செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்கு" என்றதும் காண்க. இவர்கள் வைதிக சைவர்களாகிய சிரௌ திகள் எனப்படுவர்.

அஞ்செழுத்தின் திருப்பதிகம் - இது சீபஞ்சாக்கரத் திருப்பதிகம் என்று வழங் கப்படும். பிள்ளையார் அருளியவை திருஐந்தெழுத்துப்பதிகங்க ளிரண்டாம்; அவற்றுள் மற்றொரு பதிகமாகிய "காதலாகி" என்ற பதிகம் திருநல்லூர்ப் பெருமணத்தில் இறுதியாகப் பாடியருளியது. அது நமச்சிவாயத் திருப்பதிகம் எனப்படும். இவ்விரண்டன் ஒற்றுமை வேற்றுமைகளைப்பற்றிப் பின் உரைக்கப்படுவது காண்க.

ஸ்ரீ பஞ்சாக்கரப் பதிகம். (அஞ்செழுத்தின் திருப்பதிகம்)

திருச்சிற்றம்பலம்   **பண் - காந்தார பஞ்சமம்**

துஞ்சலுந் துஞ்ச லிலாத போழ்தினு
நெஞ்சக நைந்து நினைமி னாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்ச வுதைத்தன வஞ்சே ழுத்துமே. (1)

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையு ணின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுண் மந்திர மஞ்சே ழுத்துமே. (2)

ஊனி லுயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிட
ரான கெடுப்பன வஞ்செ ழுத்துமே. (3)

நல்லவர் தீய ரெனாது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ ;
கொல்ல நமன்றமர் கொண்டு போமிடத்
தல்லல் கெடுப்பன வஞ்செ ழுத்துமே. (4)

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமு மஞ்ச வைம்பொழிற்
றங்கர வின்பட மஞ்சுந் தம்முடை
யங்கை யிலைவிர லஞ்செ ழுத்துமே. (5)

தும்ம லிரும றொடர்ந்த போழ்தினும்,
வெம்மை நரகம் விளைந்த போழ்தினு
மிம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினு
மம்மை யினுந்துணை யஞ்செ ழுத்துமே. (6)

வீடு பிறப்பை யறுத்து, மெச்சினர்
பீடை கெடுப்பன ; பின்னை நாடொறு
மாடு கொடுப்பன ; மன்னு மாநட
மாடி யுகப்பன வஞ்செ ழுத்துமே. (7)

வண்டம ரோதி மடந்தை பேணின ;
பண்டை யிராவணன் பாடி யுய்ந்தன ;
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்
கண்ட மளிப்பன வஞ்செ ழுத்துமே. (8)

கார்வண னான்முகன் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வண மாவன வஞ்செ ழுத்துமே. (9)

புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்க டெளிந்து தேறின ;
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன வஞ்செ ழுத்துமே. (10)

நற்றமிழ் ஞானசம் பந்த னான்மறை
கற்றவன் காழியர் மன்ன னுன்னிய
வற்றமின் மாலையீ ரைந்து மஞ்செழுத்
துற்றன வல்லவ ரும்ப ராவரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—சீகாழி மறையவர்க்கு வைதிக நூற்சடங்கின் வந்த சிந்தை மயக்குறு மையந் தெளியும்படி, முந்தை முதல் மந்திரங்களெல்லாந் தோன்றும் மூத

லாகும் முதல்வனார் எழுத்தஞ்சு என்ற கருத்துப்பட அருளியது. இஃது ஆசிரியர் முன் (2164) அளந்து காட்டியருளியவாறு. சரித அகச்சான்றுமாதல் காண்க.

குறிப்பு :—இது "அஞ்செழுத்துமே" என்று பாட்டுத்தோறும் இறுதி முடிபு செய்து மகுடம் சூட்டியருளியபடியால் ஸ்ரீபஞ்சாக்கரத் திருப்பதிகம் என்றே பெயர் வழங்கும். முன்கூறிய மற்றைப் பதிகம், இவ்வாறன்றி மந்திரத்தையே யருளி மகுடம் பெறுதலின், நமச்சிவாயத் திருப்பதிகம் எனப்படும். "அஞ்செழுத்தற்றன" (11) என்றதும், பதிகப் பலனும் காண்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு :—(1) துஞ்சல் - உறக்கம் ; உறக்கத்திலும் ; "உறங்கிலும் விழிப்பிலும்" (தேவா). எல்லா அவத்தைகளிலும். உறக்கம் விழிப்பு வேறு ; மெய்வகை யஞ்சவத்தை வேறு ; அவை சுத்தாவத்தை என்பதாம். நெஞ்சக நைதல் - அன்பினாற் குழைதல். இஃது அழுந்திய நினைப்புக்கு (தியானத்துக்கு) அடிப்படை. நினைமின் - தியானியுங்கள். வஞ்சகம் அற்று அடி வாழ்த்த - வாழ்த்தியதனால். உதைத்தன ; மார்க்கண்டேயர் சரிதம். கூற்று அஞ்ச உதைத்தலாவது மேல் இறத்தல் பிறத்தலுட்படாது செய்தல். உதைப்பன என்பது பாடமாயின் எதிர்காலம் இயல்பு குறித்ததென்க. இப்பொருட்கு, வந்த என்ற இறந்த காலம் விரைவுப் பொருட்டு. திருவைந்தெழுத்தினுள் ஒவ்வோரெழுத்தும் பொருள் பற்றியனவாதலின் பன்மை முடிபு கொண்டது.—(2) மந்திரம் நான்மறை - மந்திரமாகத் தோற்றுவிக்கப்பட்ட மறை. மறையினுள் மந்திரம் என்னும் பகுதி என்றலுமாம். செந்தழல்...மந்திரம் - வைதிகநெறியில் தீ வேட்கும் வேதியர் மூன்று போதும் சந்தி செய்யும் மறையின் மந்திரம் இதனை உடையது என்பது. இதனையே பதிகக் கருத்தும் குறிப்புமாக ஆசிரியர் 2164-ல் எடுத்துக் காட்டியருளினர். ஆண்டுரைத்தவை பார்க்க. ஓம்புதல் - இடையறாது பாதுகாத்தல் ; அந்தி - சந்திகள் ; செம்மை - முத்தித்திரு.—(3) ஊனில் உயிர்ப்பை ஒடுக்குதல்-பிராணாயாமமும் சிவராஜயோகநிலையும். ஊன்-உடல் ; உயிர்ப்பு - பிராணவாயு ; "உயிராவண மிருந்து" (தேவா). ஞானவிளக்கினை ஏற்றுதல் - அகப்பூசையிற் சோதி வழிபாடு. அந்தரியாகம் என்பர். ஞானவிளக்கு - சிவச்சோதி. "உடம்பெனு மனையகத்தே" (நேரிசை) ; நன்புலத்து ஏனைவழிதிறந்து ஏத்துவார் - "இருவழியைச் சிக்கெனும்படி யடைத்தொரு வழியைத் திறந்து" (திருவாதவூ - புரா.) உயிர்ப்பை ஒடுக்குதல் - இடகலை பிங்கலை என்னும் இரண்டு நாடிகளின் வழியாகப் பிராணவாயுச் செல்லாது நிறுத்துதல். ஏனைவழி - சுழுமுனை ; ஏத்துதல் - தகராகாய உபாசனை ; இடர் - பிறவித்துன்பமும் அதற்கேதுவாகிய ஆணவமலமும் ; ஆன - ஆணவ நீக்கத்திற்காக வரும் மாயை கன்மங்கள். கெடுத்தல்-வலியிலவாகச் செய்தல்.—(4) நச்சினர்- விரும்பிப் போற்றியவர். செல்லல் - துன்பம் ; பிறவியிற் செல்லுதல் என்றலுமாம் ; சிவமுத்தி - பரமுத்தி ; அல்லல் - இயமவாதனை.— (5) கொங்கு அலர் - மணத்துடன் மலரும் பூக்களாகிய ; வன்(மை)யாவது சிவனிடத்தும் சிவஞானிகளிடத்தும் அன்றி ஏனை எல்லாரையும் மயக்கவல்ல தன்மை. வாளி ஐந்து - வன்மதன் - வலிய மதனனது பூ அம்புகளாகிய தாமரை - மா - அசோகு - முல்லை - நீலம் ; அகத்து அங்குளபூதம் அஞ்சு - பூத தன்மாத்திரைகள் ஐந்தும் அவற்றின் வழிவரும் காரியங்களாகிய புலன்களும் ; அ(வ்) ஐம்பொழில் - அப்புலன்களுக்கிடமாகிய நிலங்கள் - புவனங்கள் ; பொழில் - உலகம். "பொய்யாது பொழிலேழுந் தாங்கிநின்ற" ; (தேவா) ; "புவிமுதலைம் பூதமாய்ப் புலனைந்தாய் நிலனைந்தாய்" (தேவா). அலர் என்றதற்கேற்பப் பொழில் என்றார் ; ஐந்திணைப் பாகுபாடு என்ற குறிப்பு

மாம்; **அரவின் படம்** - இறைவரணியும் ஐந்தலை யரவின் பணா முடிகள்; **அங்கையில் ஐவிரல்** - ஐந்தெழுத்தினை எண்ணிச் செபிக்கும் சாதனம்; "அக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்" (தேவா); "அஞ்சுகொல்லாம்" என்ற அரசுகள் தேவாரம் பார்க்க; **மதனன் வாளிகள்** - உயிர்கள், தத்தமது கன்மத்துக் கீடான போகம் புசிக்கச் செய்தற்கும்; **அகப்பூதம்** - முதலியவை அவ்வாறுபுசித்தற் குரிய கரண முதலியவை பெறுதற்கும்; **அரவின்படம், ஐவிரல்** - அதற்குரிய சாதனங்கள் பெறுதற்கும், ஆகின்ற இவையே ஐந்தெழுத்தின் உட்குறிப்பு என்பதும் கருத்து.—(6) **தும்மல் இருமல்** - இம்மையில் அனுபவத்திற்கு வரும் பிராரத்தத் துன்பங்களின் பொதுமை; "தும்மலொ டருந்துயர் தோன்றிடினும்" (தேவா); மரணக்குறி என்றலுமாம்; **நரகம்** - வினைக்கீடாக மறுமையில் வரும் துன்பானுபவம்; **இம்மைவினை அடர்த்தெய்தும்** - பழவினைகளின் மூட்சி; **அம்மையினும்** - இம்மை மறுமை அம்மை என்ற மூன்றினும்; **அம்மையினும் துணை** - தாயினும் சிறந்த பற்றுக்கோடு என்றலும் குறிப்பு.—(7) **வீடு** - வீடுதல்; இறத்தல். முதனிலைத் தொழிற்பெயர்; "சாதலும் பிறத்தலும் தவிர்த்து" (நம்பி-தேவா). **பீடை** - வினைத் தொடக்காக வரும் துன்பம்; **பீடா** - என்ற வடசொல் "ஆவீ றையும்" என்பதனால் பீடை என வந்தது. **மாடு** - நிலைபெற்ற சிவச் செல்வம்; **ஆடி** - ஆடுபவர்; பெயர்; ஆடியினால் உகக்கப்படுவன;—(8) **அண்டம்**-சிவனுலகம்; "அண்ட மாள்வதற் கியாது மையுற வில்லையே" (தேவா); **வண்டமரோதி** - உமையம்மையார்; இவருக்கு இறைவர் பஞ்சாக்கரோபதேசம் செய்தமையும், அதனால் இவர் அதனைப் போற்றிய தும் "அணிகொண்ட கோதை யவணன்று மேத்த வருள்செய்த" (தேவா) முதலிய மறைகளாலு மறியப்படுவன.—(9) **பேர்வணம்** - பற்பல பெயர்களானறியப்படும் பெருமைகள்; **ஆர்வணம்** - பற்றுக்கோடு; **ஆர்தல்** - அனுபவித்தல்;—(9) **சமண் கழக்கையர்** - கழுவைக் கையில் ஏந்திய சமணர்; இது சமணரது சமய மரபுகளுள் ஒன்று; தமது சமயத்துக்குத் தீங்கு - இழுக்கு - தவறு - வந்தபோது கழுவை நாட்டி அதன்மேற் பாய்ந்து உயிர்துறத்தல் வேண்டுமென்றது அவரது சமயக் கொள்கைகளுள் ஒன்று. இது பற்றியே திருவாலவாயிற் பிள்ளையாருடன் செய்த சமய வாதத்தினில் "தனிவாதி லழிந்தோ மாகில், வெங்கழு வேற்றுவா னிவ் வேந்தனே" (புரா - 798) என்று ஒட்டினார் என்பதும் காண்க. இத்திருப்பாட்டினால் திருத்தெளிச்சேரியில் புத்தநந்தி தலையில் இடி வீழ்ந்ததென்ற சரித விளைவும் காண்க; (புரா - 908). **அத்திரம்** - அங்க மந்திரங்கள் ஆறனுள் அத்திரமந்திரம். இது பாவம் போக்கி மலச்சேதம் செய்வது. இறைவரது சூலப்படையாகிய பாசுபதம் எனப்படும். விரிவு சிவாகமங்களுட் கண்டுகொள்க. **பித்தர்** - சிவன்பால் பித்துடைய அடியார். "பித்துப் பத்தரினத்தாய்" (போதம்). **புத்தர்** - புத்திதத்துவப் பொருளே பொருளாக் கொள்வோர். **சித்தத்தவர்** - சிவனடியார். **வித்தகம்** - மலங்கழுவிச் சிவஞானம் தருதல் பொருள்.—(11) **நற்றமிழ்** - நன்மை பாச நீக்கமும் சிவப்பேறும் பயனாக உடைமை.

குறிப்பு:—இங்குப் பிள்ளையார் வேதமோதிய வேதியர்க்கு ஐயம் தெளிய அருளியமையால் மந்திரோபதேசம் வேண்டாமையின் அஞ்செழுத்து என்று பெயர் மாத்திரையாலுணர்த்தினார். "வேதியர்க் கந்தியுண மந்திரம்" என்றும், "மந்திர நான்மறையாகி" என்றும் வரும் உ-வது பாட்டுப் பார்க்க. முத்திபெறுவிக்க அருள் வதனாற் பின்னர்ப் பிள்ளையார் அருளும் "காதலாகி" என்ற **நமச்சிவாயத் திருப் பதிகத்தினுள்** அம் மந்திரத்தினையே பொறித்து வைத்துணர்த்தி உபதேசிப்பது காண்க. இந்த இரண்டு பதிகங்களும் ஒப்புநோக்கி உள்ளீடு உணர்தற்பாலன.

2165. அத்தகைமை பிள்ளையா ரருளிச் செய்ய
வந்தணர்க ளருடலைமேற் கொண்டு தாழ்ந்து
சித்தமகிழ் வொடுசிறப்பத், தாமுந் தெய்வத்
திருத்தோணி யமர்ந்தாரைச் சென்று தாழ்ந்து
மெய்த்தவிசைப் பதிகங்கள் கொண்டு போற்றி
விரைமலர்த்தாள் மனங்கொண்டு மீண்டு போந்து
பத்தருட னினிதமரும் பண்பு கூடப்
பரமர்தாள் பணிந்தேத்திப் பயிலு நாளில், ௨௬௭

வேறு

2166. பந்தணை மெல்விர லாளும் பரமரும் பாய்விடை மீது
வந்துபொன் வள்ளத் தளித்த வரம்பின்ஞா னத்தமு துண்ட
செந்தமிழ் ஞானசம் பந்தர் திறங்கேட் டிறைஞ்சுதற் காக
அந்தணர் பூந்தராய் தன்னி லணைந்தனர் நாவுக் கரசர். ௨௬௮

2165. (இ - ள்) அத்தகைமை...அருளிச் செய்ய - அத்தன்மை பிள்ளையார் அருளிச் செய்யவே; அந்தணர்கள்...சிறப்ப - அந்தணர்கள் அவ்வருளிப்பாட்டினைச் சிரமேற்றாங்கி வணங்கி மனமகிழ்ச்சியோடு சிறந்தார்களாக; தாமும்.....போந்து - பிள்ளையார் தாமும் தெய்வத் திருத்தோணியில் எழுந்தருளிய பெருமானைச் சென்று பணிந்து உண்மையுடைய இசையுடன் கூடியபதிகங்களினாற்றுதித்து அவரது வாசனை பொருந்திய மலர்போன்ற பாதங்களை மனத்திலே வைத்து மீண்டு புறம்பே எழுந்தருளி; பத்தருடன்...நாளில் - அடியார்களுடன் இனிதே அமரும் தன்மை கூடும்படி இறைவரது திருவடிகளைப் பணிந்து போற்றிப் பயின்றிருந்த நாளில், ௨௬௭

2166. (இ - ள்) பந்தணை...அமுதுண்ட - பந்தினைப் பயின்ற மெல்லிய திருவிரல்களையுடைய உமாதேவியாரும் சிவபெருமானும் பாய்விடையின்மேல் எழுந்தருளி வெளிப்பட்டு வந்து பொற்கிண்ணத்தில் அளித்தருளிய எல்லையில்லாத ஞானப்பாலமுதினை உண்டருளிய; செந்தமிழ்...இறைஞ்சுதற்காக - செந்தமிழ்த் தலைவராகிய திருஞானசம்பந்த நாயனாரது திறங்களைக் கேட்டு அவரைக் கும்பிடுவதற்காக; அந்தணர்...நாவுக்கரசர் - அந்தணர்கள் சிறக்க இருக்கும் சீகாழிப் பதியில் திருநாவுக்கரசு நாயனார் அணைந்தருளினர். ௨௬௮

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

2165. (வி - ரை) அத்தகைமை - செந்தழலோம்பும் வேதியர்க்கு அந்தியுள் மந்திரம் திருவைந்தெழுத்தே யாமென்னும் தன்மை.

அருள் தலைமேற் கொண்டு - அருள் - அருளிப்பாடு; தலைமேற் கொள்ளுதல் - மிக உயர்ந்த பொருளாகக் கொண்டாடுதல்.

தாமும் - ஆளுடைய பிள்ளையாரும்; அருளை அவர்கள் தலைமேற்கொண்டது போலத் தாமும் தோணி யமர்ந்தார்தாள் தலைமேற் கொண்டார் என்று உம்மை இறந்தது தழுவியது.

பதிகங்கள் - இவை இன்னவென்பது துணியக்கூடவில்லை. "திருப்பதிகங்கள் பலவும்" (2161) என்ற விடத்துரைத்தவை பார்க்க.

தாள் மனங்கொண்டு மீண்டு - இறைவரைப்போற்றி மீள்வார் அவரது திருத்தாள்களை எண்ணிக்கொண்டவாறே புறம்போந்தனர். "காளத்தி எந்தையா ரிணை

யடி யென்மனத் துள்ளவே" "ஆரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்ச னெஞ்சே" முதலியவற்றின் கருத்து.

பத்தருடன் இனிதமரும் பண்புகூடத் தாள் ஏத்திப் பயிலும் - அடியாரோ டினிதிருக்கும் பேறு சிவனருளாற் பெறப்படுவது. கூட - அதனைக் கூடுதற்பொருட்டு. கூட - கூடியதனால் என்றலுமொன்று. அடுத்துத் திருநாவுக்கரசரது கூட்டம் விகழவுள்ளமை திருவுள்ளக் குறிப்பு. 267

2166. (வி - ரை) பந்தணை மெல்விரலாள் - பெரியநாயகி யம்மையார். "பந்துசேர் விரலாள்" (தேவா); "பந்தணை விரலாள் பங்க" (திருவா). (பந்தாடுதலை மகளிர்களிடை நின்றும் ஆடவர் இந்நாளிற் பெரிதும் கைக்கொண்டு தங்கிலை நீங்கினர்.) இது மகளிரின் பொது வியல்பு குறித்ததன்றி உமையம்மையார் பந்தாடு கின்றார் என்பதன்று. "மனைகடொறும் இறைவனது தன்மை பாடிக், கருந்தடங் கண் ணார்கழல்பந் தம்மானைப் பாட்டயரும் கழுமலமே" என்ற திருவாக்கு இதன் தன்மையை இனிது விளக்குகின்றது. புவனங்களாகிய பந்துகளை இறைவரது சத்தியாகிய அம்மை தன்னிடம் நின்று வெளியே விட்டு அவை மீண்டும் தன்பால் அணையும்படி நிற்கின்றார் என்ற உட்குறிப்பும் காண்க. அணை என்ற குறிப்புமது.

திறம் கேட்டு - திறம் - நற்செய்தி. "பந்தணை...ஞானசம்பந்தர்" என்ற பகுதி; இதுவே அரசுகள் கேட்ட திறமாவதென்பார், ஞானசம்பந்தர் என்றதனோடு உடம் பொடு புணர்த்தி ஓதினர். 1442 - 1443 பார்க்க. ஆண்டும் "அமுது செய்த பிள்ளையார் திருவார்த்தை" என்றும், "பெருந்தகை சீர்" என்றும் கூறியவை காண்க. கேட்டவர் ஆண்ட அரசுகளாதலின் ஆண்டு அதனை விரித்து இங்குச் சுருக்கிக் கூறிய நயமும் கண்டுகொள்க.

வரம்பில் ஞானத்தமுது - வரம்பில் ஞானம் - எல்லாவற்றையும் அடக்கித் தான் மேம்பட்டு நிற்றலின் வரம்பில் ஞானம் எனப்பட்டது. ஞானத்தைக் குழைத்த அமுது.

திறம் - பெருமை - வன்மை - முதலிய எல்லாம். "திறங்கொண்ட வடியார்" (தேவா).

இறைஞ்சுதற்காக - அணைந்தனர் - "கேட்டலுமே யதிசயமாங் காதல்கூர, வாழியவர் மலர்க்கழல்கள் வணங்குதற்கு மனத்தெழுந்த விருப்பு வாய்ப்ப" (1443). இறைஞ்சுதற் பொருட்டே அரசுகள் அணைந்தனர் என்க.

நாவுக்கரையர் ஆதலின் செந்தமிழின் வரும் ஞானத்தமுதத்தை விரும்பி வந்தனர் என்றதும் குறிப்பு. 268

அரசும் பிள்ளையாரும் சந்திப்பு - I

2167. "வாக்கின் பெருவிறன் மன்னர் வந்தணைந் தா"ரெனக் கேட்டுப்
பூக்கமழ் வாசத் தடஞ்சூழ் புகலிப் பெருந்தகை யாரும்
"ஆக்கிய நல்வினைப் பேறே"என் றன்பர் குழாத்தொடு மெய்தி
யேற்கும் பெருவிருப்போடு மெதிர்கொள வெய்தும்பொழுதில்,

2168. சிந்தை யிடையறு வன்புந், திருமேனி தன்னி லசைவுங்,
கந்தை மிகையாங் கருத்துங், கையுழ வாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும், வடிவிற் பொலிதிரு நீறும்
அந்தமி லாத்திரு வேடத் தரசு மெதிர்வந் தணைய, ௨௬௯

2169. கண்ட கவுணியக் கன்றுங் கருத்திற் பரவுமெய்க் காதற்
றொண்டர் திருவேட நேரே தோன்றிய தென்று தொழுதே
அண்டரும் போற்ற வணைந்தங் கரசு மெதிர்வந் திறைஞ்ச
மண்டிய வார்வம் பெருக மதுர மொழியருள் செய்தார். உகக

2167. (இ - ள்) வாக்கின்...கேட்டு - பெருவிறலுடைய வாக்கின் மன்னவனார் வந்து அணைந்தார் என்று கேட்டு; பூக்கமழ்......பெருந்தகையாரும் - நீர்ப் பூக்கள் மணம் வீசும் தடங்கள் சூழ்ந்த சீகாழியில் வந்தருளிய பெருந்தகையாராகிய பிள்ளையாரும்; "ஆக்கிய நல்வினைப்பேறு" என்று - இது முன் செய்த நல்வினையினால் வந்தபேறு ஆகும் என்று கொண்டு; அன்பர்...பொழுதில் - அன்பர் திருக்கூட்டத்தினோடும் கூடி அவரை வரவேற்கும் பெருவிருப்பத்தினோடும் எதிர்கொள்வதற்காக வந்து சேரும் பொழுதிலே; உசுகூ

2168. (இ - ள்) சிந்தை...திருநீறும் - சிந்தையினிடத்தே இடையறாது பெருகுகின்ற அன்பின் பெருக்கும், திருமேனியில் அசைவும், கந்தையும் மிகையாம் என்ற கருத்தும், கையினிடமாகத் திருவுழவாரப்படையும், வந்து பெருகி வழிகின்ற கண்ணீர் மழையும், திருமேனியில் விளங்குகின்ற திருநீறுமாக; அந்தமிலா...அணைய - அந்தமில்லாத திருவேடத்தையுடைய அரசுகளும் எதிரில் வந்தணைந்தாராக; உஎ0

2169. (இ - ள்) கண்ட...தொழுதே - அவ்வாறு வரக்கண்ட கவுணியப் பிள்ளையாரும் "கருத்திற் பரவுகின்ற உண்மையன்பின் பெருக்குக் கிடமாகிய தொண்டர் திருவேடம் நேரே வந்து தோன்றியது" என்று கொண்டு தொழுது கொண்டவாறே; அண்டரும் போற்ற அணைந்து - தேவர்களும் துதிக்கும்படி அங்குச் சேர்ந்து; அரசும்...எதிர்வந்து இறைஞ்ச - அப்போது அரசுகளும் எதிரில் வந்து பணிய; மண்டிய...அருள் செய்தார் - கூர்ந்த ஆசை பெருக அவர்க்கு மதுர மொழிகளை யருளிச் செய்தார். உஎக

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

2167. (வி - ரை) பிள்ளையார் திறங்கேட்டு இறைஞ்சுதற்காக என அரசுகள் செயலை (2166) ஒரு பாட்டினாற் கூறினார். இச் செயலை முன் அரசுகள் புராணத்துள் (1443 - 1444 - 1445) மூன்று திருப்பாட்டுக்களினால் விரித்தருளினர். அதுபோலவே அரசுகளைக் கண்ட ஆளுடையபிள்ளையார் செயலை முன் (1446) ஒரு பாட்டாற் கூறியதனை ஈண்டு இம்மூன்று பாட்டுக்களால் விரித்தருளினர். பிள்ளையாரைக் கண்டிறைஞ்சுதற்கண் அரசுகளுக்கு இருந்த ஆர்வத்தினளவு அரசுகளைக் கண்டு தொழுதலிற் பிள்ளையார்பாலும் ஆர்வமும் அன்பும் நிறைந்திருந்தன என்பது குறிப்புப்போலும். அரசுகளது உட்கொண்ட கருத்தை அம்மூன்றாலும் பிள்ளையாரது உட்கிடையை இம்மூன்றாலும் உணர்த்தியதும் காண்க.

வாக்கின் பெருவிறன் மன்னர் - திருநாவுக்கரசர். திருஞானசம்பந்தராயின திறத்தினை அரசுகள் கேட்டதுபோலப் பிள்ளையாரும் வாக்கின் பெருவிறன் மன்னராயின செய்தியைக் கேட்டருளினர் என்பது இவ்வடைமொழிகளின் குறிப்பு.

வந்தணைந்தார் - தாம் சென்றடையாது அவர் தாமே வந்து கூடினர் என்பது வந்து என்ற குறிப்பு. "உடையவர் தாமே வந்தார்" (475)

பெருந்தகையார் - "விண்டொழிந்தன நம்முடை வல்வினை......நாதன்மெய்த் தொண்டரோ டினிதிருந் தமையாலே" (திருவலஞ்சுழி - 2) என்ற திருவுள்ளக் குறிப்புடைமை குறிப்பு.

ஆக்கிய நல்வினைப் பேறு - இது பிள்ளையார் கொண்ட கருத்து. முன்செய்து முற்றிய நல்வினையின் பயன் என்க. சமைத்து ஆக்கிய சோறு என்புழிப்போல. மேலொன்றும் செய்ய வேண்டாது உடனே பயன் துய்க்கநின்ற நிலை என்பதாம்.

அன்பர் குழாத்தோடும் எய்தி - "பத்தருட னினிதமரும் பண்பு" கூடுதலால் (2165) அப்பண்பினை இருபாலும் உடனிருந்து அமரும் தன்மை யுடையது அன்பர் குழாமேயாதலின், பிள்ளையார், ஏனை வேதியர் பரிசனம் முதலியோரை உடன் கொள்ளாது அன்பர் குழாத்தொடும் எய்தினர்.

ஏற்றும் - நல்வரவு கொண்டு எதிரேற்கும். எய்தும் பொழுதில்-எதிர்வந்தணையக் (2168) - கண்ட - கன்றும் - தொழுதே - அணைந்து - அரசும் - இறைஞ்ச - மதுர மொழியருள் செய்தார் (2169) என்று இம்மூன்று பாட்டுக்களையும் கூட்டி முடிக்க.

2168 (வி - ரை) இப்பாட்டு அரசுகளைப் பிள்ளையார் கண்ட நிலையை ஓவியம் போலச் சித்திரித்துக் காட்டும் அருமைப்பாடுடையது. முன் 1405 - 1490 பாட்டுக் களில் உரைத்தவையும் ஈண்டு வைத்துக் காண்க. அங்குக் கூறியவை அரசுகளைத் திருவதிகை அடியார்கள் கண்ட காட்சியும், திருவாரூரில் அரசுகள் சரித்தநிலைபற்றிய ஆசிரியர் மனத்துட் கண்ட காட்சியுமாம். இங்குக் காணும் காட்சி பிள்ளையார் தம் திருமுன்பு கண்ட காட்சி.

அவ்வவர் காணும் நிலைகள்பற்றி இம்மூன்று காட்சிகளின் ஒற்றுமை வேற் றுமை நயங்களை உய்த்துணர்ந்து கொள்க. திலகவதியம்மையார் அஞ்செழுத்தோதி அளித்த திருவாளன் றிருநீற்றை உருவார அணிந்து உய்ந்த திருக்கோலத்துடன் சமணச் சார்பான மன்னவன் அழைக்க அரசுகள், முன், அமணர் சூழலில் உடன்செல்லக் கண்ட திருவதிகை அடியார்கள், அச்சூழலைவிட்டு அவர் கரையேறித் திருவதிகைத் திருவீதியில் அத்திருவேடத்துடன் வர மீண்டும் கண்டாராதலின் "தூயவெண் ணீறு துதைந்த பொன்மேனி" (1405) முதன்மைபெற அவர்க்குப் புலனாயிற்று. திருவாரூர்த் திரு வீதிப் பணிசெய்தமர்ந்த அரசுகள், "குண்டர் முன்னே தொண்டர்க்குத் தொண்ட ராம் புண்ணியம் நமக்கு உண்டு கொல்லோ ?" என்ற திருவுள்ளக் குறிப்புடன் திரு வீதிப் பணி செய்தும் பாடியும் வந்த சரிதநிலையினைத் தாம்கண்டு "மார்பாரப் பொழி கண்ணீர்" (1490) என்ற பாட்டினால் ஆசிரியர் நமக்குக் காட்டியருளினர். அது கவிக் கூற்று. அரசுகளின் அகக்கருத்தினால் நைந்த மனம் மார்பார மழைபோலக் கண்ணீர் பெருகுதற்குக் காரணமாயிற்று. இங்குப் பிள்ளையார் காண்பது முதன்மையாக அரசு களது அகத்தோற்றமாகிய இடையறாத அன்புக் காட்சியேயாதலின் அதனை முதலில் வைத்துக் கூறினர். இக்கருத்தையும் இதன் பெருமையினையும் குறித்தே எமது மாதவச் சிவஞான முனிவர் "இடையறாப் பேரன்பு" என்று கூறியருளியதும் காண்க. "விருப்புறு மேனி கண்ணீர் வெண்ணீற்று வண்ட லாட" (1436) என்றநிலை; "கண்ணப்பர் தாமறிதல் காளத்தி யாரறிதல், அல்லதுமற் றியாமறியு மன்பன் றது" என்றதுபோல, அருட்பெருங் கூத்தரும் அரசுகளுமே அறிய நின்றதாதலின் அது பற்றி ஈண்டெடுத்துக் கூறவியலாதென்க.

இடையறா அன்பு - எக்காலத்தும் மறத்தலின்றித் தொடர்ந்து செல்லும் அன்பு. "இடையறா வன்பெனக்கு, வாழிநின் பாத மலர்க்கே மருவ விருளுகண்டாய்" (கோயி - விருத் - 37) என்று நம்பியாண்டார் நம்பிகள் அருளியதும், "மறக்குமா

றிலாத வென்னை மையல் செய்திம் மண்ணின்மேற், பிறக்கு மாறு காட்டினாய்'' (தேவா) "பண்டு திருவடி மறவாப் பான்மையோர்" (1952) என்பனவும் காண்க.

திருமேனி தன்னில் அசைவு - மேனியசைதல் அன்பு மீதூர்தலின் மெய்ப்பாடு. "ஆகம் விண்டு கம்பம் வந்து குஞ்சி யஞ்ச லிக்கணே, யாக வென்கை கண்க டாரை யாற தாக" (திருவா).

கந்தை மிகையாம் கருத்து - கந்தை - மேல் உடையாகிய ஒற்றைத்துணி. "கந்தை கீளுடை கோவணங் கருத்தறிந் துதவி" (504); மிகையாங் கருத்தாவது கந்தையும் வேண்டப்படுவதின்று என்ற துறவாகிய மனநிலை; இழிவு சிறப்பும்மை தொக்கது. கந்தம் மிகையாம்-என்று பாடமோதிக், கந்தம் - உலகப் பற்றாகிய வாதனை என்பாருமுண்டு. கந்தம் - இந்திரியங்களால் உணரப்படும் விடயத் தொகுதிகள்; மிகையாம் - குற்றமாம் என்பது ஆறுமுகத் தம்பிரானாருரை. திருமேனி தன்னி லசையும் கந்தை - என்று பாடங்கொண்டு மேனியிற்கொண்ட என்பாருமுண்டு.

கை - கையினிடத்து; ஏழனுருபு தொக்கது. T. 1961.

கண் வந்து இழிநீர் - என்க. அன்பு மீதூர்தல் காரணமாகவந்து மேல் வழி கின்ற கண்ணீர்.

திருநீறு - திலகவதியாரால் அளிக்கப்பட்டு உருவார அணிந்த அன்று முதல் இடைவிடாது அணிந்துகொண்ட திருநீறு.

பொலிதல் - நாயனாரது திருமேனியில் விளக்கம் பெறுதல்.

அந்தமிலாத் திருவேடம் - இறைவரது திருவேடமாதலின் அழிவிலாத - என்றார். "தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத், தன்னுணரத் தன்னு ளிருத்தலால் - தன்னுணரு, நேசத்தார் தம்பா னிகழுந் தநிநெய்போல்" (போதம் - 12) என்பதும், அச்சூத்திரத்தின்கீழ் எமது மாதவச் சிவஞான முனிவர் திருவேடத்தியல்பு பற்றி உரைத்தவையும், முன்னர்த் "தூயவெண்ணீறு" (1405) என்ற திருப்பாட்டின் கீழ் உரைத்தவையும் காண்க. "ஆதியந் தம்மிலா வடிகள்வே டங்களே" (தேவா); இறைவரது வேடமே இவ்வரசுகள் என்பார் வேடத்தரசு என்றார். 270

2169. (வி - ரை) **கருத்தில் பரவும் மெய்க்காதல் தொண்டர் திருவேடம் நேரே தோன்றியது என்று** - பிள்ளையார் பத்தரது திருவேடத்தையும் சிவாலயத்தைப் போன்று பரமேசுரனெனவே கண்டு வழிபடும் கருத்துடையார் என்பது (போதம் 12); **திருவேடம் நேரே தோன்றியது** என்றது திருவேடம் என்ற இலக்கணங்களெல்லாம் உருப்பெற்று இலக்கியமாகத் தம் கண்முன் நேர்தோன்றியது என்றதாம். அரசுகளைப் பிள்ளையார் அரசுகளுடைய உருவம் என்று காணாது தொண்டர் திருவேடத் தன்மையின் தொகுதி என்று கண்டார் என்க. 1446-ம் பார்க்க.

தொழுதே-அணைந்து - தொழுது கொண்டபடியே வந்து; "தொழுதெழுவாள்" (குறள்)

அண்டரும் போற்ற - திருவேடத்தின் பெருமையினை ஆசாரியராகப் பிள்ளையார் உணர்த்த அண்டர்களும் உணர்ந்து உய்ய என்றதனால் ஏனையோர் உணர்ந்தது தானே பெறப்படும் என்க.

அணைந்து - அருள் செய்தார் - என்று முடிக்க. பிள்ளையார் தொழுதே அணைந்தாராக அவ்வேளையில் அரசுகளும் வந்திறைஞ்ச என்க.

மண்டுதல் - மிகுதி பெறக்கூடுதல்.

மதுரமொழி - வரவேற்றலாகிய இன்மொழி. 271

2170. பேரிசை நாவுக் கரசைப் பிள்ளையார் கொண்டுடன் போந்து
போர்விடை யார்திருத் தோணிப் பொற்கோயி லுட்புகும் போதில்
ஆர்வம் பெருக வணையு மவருடன் கும்பிட் டருளால்
சீர்வளர் தொண்டரைக் கொண்டு திருமா ளிகையினிற் சேர்ந்தார்.

(இ - ள்) பேர் இசை......போந்து - பெரும் இசையினையுடைய திருநாவுக்கரசரைப் பிள்ளையார் உடன் வரவேற்றுக் கொண்டு சென்று; போர் விடையார்...கும்பிட்டு - போர்விடையினையுடைய இறைவரது திருத்தோணியாகிய அழகிய திருக்கோயிலினுள்ளே புகும்போதில் ஆர்வம் மிக்கதனால் அணையும் அவருடனே கூடி இறைவரைக் கும்பிட்டு; அருளால்......சேர்ந்தார் - திருவருளினாலே சிறப்பு மிகச் செய்யும் அத்திருத் தொண்டராகிய அரசுகளை உடன் அழைத்துக்கொண்டு தமது திருமாளிகையினைச் சேர்ந்தருளினர்.

(வி - ரை) கொண்டு - முன்னையது, மதுரமொழியுடன் நல்வரவேற்றுக் கோயிலுக்கு உடன் சென்றதனையும், பின்னையது, அவ்வழிபாடு முற்றியபின், தமது திருமாளிகைக்கு உடன் அழைத்துச் சென்றதனையும் குறித்தன. எதிர்கொண்டு வரவேற்றணைந்தது நகர்ப்புறத்தே என்பது கருதப்படும்.

கொண்டுடன் போந்து கோயிலுட்புகும் - தலத்தில் அணைந்தவுடன் செய்யும் முதற் கருமமாவது அத்தலத்தில் இறைவரை வணங்குதலேயாம் என்பது இவ்விருவரது துணிபும் முந்தையோர் மரபுமாம். சிவபாதவிருதயர் பிள்ளையாரைக் காணத் திருவாலவாய் சென்றபோது முதலில் திருக்கோயிலிற் சென்று வணங்கிப் பின்னரே திருமடத்தினைக் கேட்டறிந்து சென்றணைந்தனர் (புரா - 877) என்பதும் காண்க. இவ் வுண்மைமர பறியாதொழுகும் இற்றைநாளின் நம்போல்வாரது நழுவிய வொழுக்கமும் காண்க.

ஆர்வம் பெருக அணையும் அவருடன் கும்பிட்டு - ஆர்வம் பெருகுதலாவது தாம் கருதிவந்தபடி பிள்ளையாரை முன்பு கண்டு இறைஞ்சப் பெற்றதனுடன், அவருடனே கூடி அவர்க்கு ஞானமளித்த இறைவரையும் வணங்கப்பெற்ற ஆசை. "விருப்பின் மிக்கார்" (1449), அவருடன் கும்பிட்டு - இதனை முன் 1450 - 1451 பாட்டுக்களில் விரித்தருளினர். ஆண்டுக் காண்க. பிள்ளையாரும் உடன் கும்பிட்டாலும், அரசுகளைக் கொண்டு கும்பிடச் செய்தலே கருத்தாதலின், அவ்வழிபாடு அரசுகளது செயலேயாக நிகழ்ந்த செயலாதல்பற்றி அவர் புராணத்துள் விரித்தோதினர்.

அருளாற் கொண்டு - அரசுகளைக் காணப்பெற்றது திருவருள் கூட்டக் கிடைத்த பேறென்று பிள்ளையார் கொண்டனர். ஆதலின் தோணியப்பரின் அருள் விடை பெற்றபின் கொண்டு சென்றனர்.

சீர்வளர் - இறைவரது சீர்களை உலகில் வளரச் செய்கின்ற.

திருமாளிகை மாடம்—என்பதும் பாடம். 272

2171. அணையுந் திருத்தொண்டர் தம்மோ டாண்ட அரசுக்கு மன்பால்
இணையி றிருவமு தாக்கி யியல்பா லமுதுசெய் வித்துப்
புணரும் பெருகன்பு நண்பும் பொங்கிய காதலிற் கும்பிட்
டுணருஞ்சொன் மாலைகள் சாத்தி யுடன்மகிழ் வெய்தி யுறைந்தார்.

(இ - ள்) அணையும்......அரசுக்கும் - அணையும் திருத்தொண்டர்களுடன், ஆளுடைய வரசுகளுக்கும்; இணையில்...அமுது செய்வித்து - ஒப்பற்ற திருவமுதினை

ஆக்குவித்து ஏற்ற இயல்பினாற் பொருந்தும்படி அன்பால் அமுது செய்வித்தருளி; புணரும்...கும்பிட்டு-பொருந்தியதனாற் பெருகிய அன்பும் நண்பும் மேலும் அதிகரித்த காதலினாலே கும்பிட்டு; உணரும்...உறைந்தார் - சிவனை உணர்ச்சியிற் கண்டு சொல்லும் திருப்பதிகங்களைச் சாத்தி மகிழ்ச்சி பொருந்தி உடன் உறைந்தார்கள்.

(வி - ரை) இப்பாட்டு - முன் அரசுகளது புராணத்தினுள் "பிள்ளையார்தந் திருமடத்திலெழுந் தருளியமுது செய்து, மருவியநண் புறுகேண்மை யற்றைநாள் போல் வளர்ந்தோங்க வுடன்பலநாள் வைகுநாளில்" (1452) என்றுரைத்ததனைப் பிள்ளையாரது செயல்பற்றி விரிக்கின்றது. ஆண்டுரைத்தவை பார்க்க.

அணையும் - அரசுகளோடு உடன் அணையும் என்றும், மேலும் இருவரும் கூடிய மகிழ்ச்சி கண்டு களிக்க அணையும் என்றும் உரைக்க நின்றது.

இணையில் - இணையில்லாத பெருமையுடையார்க்குச் செய்விக்கும் அமுதாதலின் இணையில் திருவமுது என்றார்.

ஆக்கி - ஆக்குவித்து. பிறவினைப் பொருளில் வந்தது.

இயல்பால் அமுது செய்வித்தலாவது - அவர் பெருமைக்கு ஏற்ற இயல்பினால் உண்பிப்பது. "அரசர்க் கமைத்த சிறப்பினுமே லடியார்க் கேற்கும் படியாக" (கழறிற். புரா - 73). அவ்வவர்க்கேற்ற இடத்தில் அமைத்து என்ற குறிப்புமாம்.

புணரும் பெருகு அன்பும் நண்பும் பொங்கிய காதல்-புணரும் - முன் உணர்ச்சியினாற் புணர்ந்ததன்பயனாக உளதாகிய. புணர்தல் - ஈண்டு அடியார் உடன் உறையும் பேரின்பநிலை குறித்தது. அன்புடைமையும் நண்புடைமையும் வெவ்வேறு நிலைகள். அன்பு முற்றி நண்பாக விளையும்; அது மேலும் முதிரக் காதலாக முதிரும். இந்நிலைகள் உலக வழக்கில் சிற்றின்பச் சார்புபற்றி வழங்குதல் உபசாரம். அன்பு - இறைவனிடத்தும், நண்பு - அதனால் இவ்விரு பெருமக்கள் பாலும் நிகழ்ந்தன என்பதுமொன்று. "புணர்ச்சி பழகுதல் வேண்டா" (குறள்).

உணரும் சொன்மாலைகள் - இறைவரைக் கும்பிட்டு அதனால் விளையும் சிவஞானனந்த அனுபூதி உணர்வு வசப்பட்டுத் தம்வயமின்றி எழும் சொன்மாலைகள். தேவாரத் திருப்பதிகங்கள்.

மகிழ்வெய்தி உடன் உறைந்தார் - என்க. உடனாதல் - சைவ சித்தாந்தத்தின் உயர்ந்த மரபுமொழி. "உடனுறைவின் பயன்பெற்றார்" (1509).

கும்பிட்டு - இவ்வாறு ஒருவரையொருவர் கூடும்படி தந்தருளியதன் பொருட்டுக் கும்பிடுவார் போல என்ற குறிப்புமாம். "வன்றொண்டர் கூட்டம் வைத்தாய்" (வெள் - சருக் - 47)

எய்தியிருந்தார்—என்பதும் பாடம். 273

2172. அந்நாள் சிலநாள்கள் செல்ல வருட்டிரு நாவுக் கரசர்
மின்னார் சடையண்ண லெங்கு மேவிடங் கும்பிட வேண்டிப்
பொன்மார்பின் முந்நூல் புனைந்த புகலிப் பிரானிசை வோடும்
பின்னாக வெய்த விறைஞ்சிப் பிரியாத நண்போடும் போந்தார்.

(இ - ள்) அந்நாள்......செல்ல - அவ்வாறுள்ள சில நாட்கள் கழிய; அருள் திருநாவுக்கரசர்......கும்பிடவேண்டி - சிவனருள் பெற்று விளங்கும் திருநாவுக்கரசுகள் மின்போன்ற சடையினையுடைய இறைவர் எங்கும் பொருந்தி விளங்க வீற்றிருந்தருளியிருக்கும் தானங்களைச் சென்று கும்பிடும் பொருட்டு; பொன் மார்பில்......

இசைவோடும் - அழகிய மார்பில் முப்புரி நூல் அணிந்த சீகாழித் தலைவராகிய பிள்ளையாரது இசைவு கொண்டு; பின்னுக எய்த இறைஞ்சி - பின்னர் வந்துகூடும்படி நினைத்துக் கொண்டபடியே வணங்கி; பிரியாத நண்பொடும் போந்தார் - பிரிதலில்லாத நண்புரிமையோடும் எழுந்தருளிப் போயினர்.

(**வி - ரை**) **அந்நாள்** - முன் பாட்டிற்கூறிய அத்தன்மையனவாகிய நாட்களாய். அகரம் - முன்கூறிய அந்தத் தன்மை என்று முன்னறி சுட்டு. சில நாள்கள் அந்நாள்கள் போலச் செல்ல என்க.

எங்கும் - இவ்வுலகில் பற்பல தானங்களிலும்; பல கோயில்களிலும். "நிலவு பல கோயில் கண்டால்" (தேவா).

பொன்மார்பில் முந்நூல் புனைந்த - அணிமையில் உபநயனம் செய்யப் பெற்ற குறிப்பு. (2161)

இசைவோடும் - எங்கும் கும்பிட வேண்டுமாதலின் பிரான் இசைவு கொண்டனர் என்பது குறிப்பு.

பின்னுக எய்த - பிரியாத நண்பொடும் போந்தார் - "உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதலனைத்தே புலவர் தொழில்" (குறள்) என்ற உண்மைக்கு இச்செயலையே எமது மாதவச் சிவஞான முனிவர் எடுத்துக்காட்டாகக் காட்டியருளியமை காண்க. **பின்னுக எய்துதல்** - பிரியும்போது இருவர் திருவுள்ளத்து மிருந்த கருத்து. இக் கருத்துப் பின்னர்த் திருப்புகலூரில் இருவரும் எதிர்பாராதவண்ணம் நிறைவேறியது காண்க. (புரா - 492). 1498-ம் பார்க்க. **பிரியாத நண்பொடும் போதலாவது** - திருமேனிகள் பிரிவெய்தினும் நண்புரிமை பிரிதலில்லை என்பது. திருப்பூந்துருத்தி நிகழ்ச்சியும் இங்குக் கருதற்பாலது. புரா - 927-ம் 1657-ம் பார்க்க. இங்குக் கூறியது அரசுகளது மனநிலைபற்றியதும், மேல்வரும் பாட்டில் "**மாறாத் திருவுள்ளத் தோடும்**" (2173) என்பது பிள்ளையாரது மனநிலைபற்றியதுமாம்.

போந்தார் - அரசர் - வேண்டி - இசை வோடும் - போந்தார் என்க. **போந்தார்** - சீகாழியினின்றும் புறப்பட்டருளினர்.

இசைவோடும் பின்னுக எய்த - உடன்பாட்டோடும் பின்னேவர என்றுரைப்பாருமுளர். அது பொருளல்லாமை உணர்க. 274

2173\. வாக்கின் றனிமன்ன ரேக, மாறாத் திருவுள்ளத் தோடும்
பூக்கமழ் பண்ணைகள் சூழ்ந்த புகலியின் மீண்டும் புகுந்து
தேக்கிய மாமறை வெள்ளத் திருத்தோணி வீற்றிருந் தாரைத்
தூக்கின் றமிழ்மாலை பாடித் தொழுதங் குறைகின்ற நாளில், ௨௭௫

2174\. செந்தமிழ் மாலை விகற்பச் செய்யுட்க ளான்மொழி மாற்று
வந்தசொற் சீர்மாலை மாற்று வழிமொழி யெல்லா மடக்குச்
சந்தவி யமகமே கபாதந் தமிழிருக் குக்குறள் சாத்தி
எந்தைக் கெழுகூற் றிருக்கை யீரடி யீரடி வைப்பு, ௨௭௬

2175\. நாலடி மேல்வைப்பு மேன்மை நடையின் முடுகு மிராகஞ்
சால்பினிற் சக்கர மாதி விகற்பங்கள் சாற்றும் பதிகம்
மூல விலக்கிய மாக வெல்லாப் பொருள்கோளு முற்ற
ஞாலத் துயர்காழி யாரைப் பாடினார் ஞானசம் பந்தர். ௨௭௭

(இ - ள்) வாக்கின் தனிமன்னர் ஏக - ஒப்பற்ற திருநாவுக்கரசர் போந்தனராக; மாறாத் திருவுள்ளத்தோடும்......புகுந்து - மாறுதலில்லாத திருவுள்ளத்துடனே பூக்கள் மணங்கமழும் வயல்கள் சூழ்ந்த சீகாழிப் பதியினுள் மீண்டுவந்து புகுந்து; தேக்கிய...வீற்றிருந்தாரை - நிறைந்த பெரிய வேதங்களின் மிகுதியின் வடிவாகிய திருத்தோணியில் எழுந்தருளிய இறைவரை; தூக்கின்...நாளில் - தூக்குடைய இனிய தமிழ் மாலைகளைப் பாடித் தொழுது கொண்டு அங்கு எழுந்தருளியிருக்கின்ற நாளில்,

2174. (இ - ள்) செந்தமிழ்மாலை விகற்பச் செய்யுட்களால் - விகற்பச் செய்யுட்களாலாகிய செந்தமிழ் மாலைகளாக; மொழி மாற்று - திருமொழிமாற்று என்னும் பதிகமும்; வந்த சொற் சீர் மாலைமாற்று - சொற் சீர்மாற்றி வந்த திருமாலை மாற்றுப் பதிகமும்; வழிமொழி - வழிமொழித் திருவிராகப் பதிகமும்; எல்லாம் மடக்கும் சந்த இயமகம் - எல்லா அடிகளினும் எல்லாச் சீர்களும் மடங்கி வரும் இயமகமாகிய; ஏகபாதம் - திருஏகபாதப் பதிகமும்; தமிழ் இருக்குக்குறள் - தமிழ் சிறந்த திரு இருக்குக்குறள் என்னும் பதிகமும்; சாத்தி - என்ற இவற்றைச் சாத்தியதோடு; எந்தைக்கு எழுகூற்றிருக்கை - எமது தந்தைக்கு அருளிய திருவெழுகூற்றிருக்கையும்; ஈரடி - ஈரடி என்ற திருப்பதிகமும்; ஈரடிமேல் வைப்பு - ஈரடிமேல் வைப்பு என்ற திருப்பதிகமும், உஎசு

3175. (இ - ள்) நாலடி மேல் வைப்பு - நாலடி மேல் வைப்பு என்ற திருப் பதிகமும்; மேன்மை நடையின் முடுகும் இராகம் - மேம்பட்ட முடுகும் நடையிலமைந்த திருவிராகம் என்ற பதிகங்களும்; சால்பினில் சக்கரம் ஆதிவிகற்பங்கள் சாற்றும் பதிகம் - சால்புடைய திருச் சக்கரமாற்று முதலிய திருப்பதிகங்களையும்; மூல இலக்கியமாக எல்லாப் பொருள் கோளும் முற்ற - இவை மூல இலக்கியமாக உலகுக்கு வழிகாட்டியிருக்கும்படி எல்லாப் பொருள் கோள்களும் முற்றிக் காணும்படி; ஞாலத்து......ஞானசம்பந்தர் - உலகத்தில் உயரும் சீகாழி யிறைவரைத் திருஞான சம்பந்தர் பாடியருளினர். உஎஎ

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

2173. (வி - ரை) மாறத் திருவுள்ளத்தோடு - முன் "பிரியாத நண்பொடும்" (2172) என்றது காண்க.

புகலியின் மீண்டும் புகுந்து - சீகாழியின் திரு எல்லைப்புறம் போந்து இரு பெருமக்களும் விடைகொண்டனர்களாதலின் அவ்விடை நின்று மீண்டும் புகலியிற் புகுந்து என்றார். மீண்டும் - விடைகொண்டு மீளுதல் என்ற குறிப்பும் தருவது. முன்னர் எதிர்கொண்டு அரசுகளையும் உடன் கொண்டு மீண்டமை போல இன்று மீண்டும் என உம்மை இறந்தது தழுவியது.

தேக்கிய மாமறை வெள்ளத் திருத்தோணி - தேக்குதல் - பலவாற்றாலும் வந்து திரண்டு கூடுதல். அனந்தமாகிய மறைகளின் பல நெறிகளும் இங்கு வந்து ஒருங்கே கூடுதல் குறிப்பு. "அன்றென்று மாமென்று மாறு சமயங்கள், ஒன்றொன்றொ டொவ்வா துரைத்தாலும் - என்றும், ஒருதனையே நோக்குவா ருள்ளத் திருக்கும், மருதனையே நோக்கி வரும்" (திருவிடை - மும் - கோ - 17) என்ற பட்டினத்தடிகள் திருவாக்குக் காண்க. வெள்ளம் - மிகுதி; இரட்டுறமொழிதலால் தோணிமிதக்கும் வெள்ளம் (நீர்ப்பெருக்கு) என்ற குறிப்பும் தருவது.

தூக்கின் தமிழ்மாலை - தூக்கு - செய்யுள்; இரட்டுற மொழிதலால் இசைத் தமிழின் பகுதியாகிய எழுவகைத் தூக்குக்களின் அமைதியும் குறிக்க வைத்தார்.

என்னை ? மேற்கூறும் விகற்பச் செய்யுட்களின் பெரும்பான்மை சந்த இசைத்தமிழ் அமைதிகள் குறித்தற்கென்க. இவை தாளக் கூறுபாடுகள். தூக்கு - உயர்ச்சியுடைய என்ற குறிப்பும் பட நின்றது. உயர்ச்சியாவது சொல்லும் சந்த இசையும் உயர்ந்த நிலையிற் காணப்படுதலுடன் பொருள் உயர்வும் கொண்டு அருளுருவாய் அழியாது நிலவும் தன்மை.

பூக்கமழும் பணைசூழ்ந்த—என்பதும் பாடம். 275

2174. விகற்பச் செய்யுட்கள் - மிறைக் கவிகள் என்ப. சொல்லும் சந்தமும் விரவிப் பற்பல ஓசை மாறுபாடுகள்படப் பாடப்படுவன மிறைக்கவிகள். விகற்பம் - வேறுபாடு. மேற்கூறப்படும் பதிகங்களின் பொது வியல்பை எடுத்துக் கூறியபடி.

மொழிமாற்று - மாலைமாற்று - வழிமொழி - இயமகம் - ஏகபாதம் - இருக்குக் குறள் - ஈரடி - ஈரடி மேல்வைப்பு - இவை பதிகப் பெயர்கள். இவையும் மேற் பாட்டில் வரும் நாலடிமேல் வைப்பு - சக்கரம் (மாற்று) என்பவையும் விகற்பச் செய்யுட்களாதல் கண்டுகொள்க.

எழுகூற்றிருக்கை - 1, 1, 2 - 1 ; 1, 2, 3 - 2 - 1 ; 1, 2, 3, 4 - 3 - 2 - 1 ; என்றிவ்வாறு 1 முதல் ஏழுவரை ஏறியும் இறங்கியும் எண்ணலங்காரம்படப் பாடப் படும் ஒருவகைப்பாட்டு. பதிகக் குறிப்புப் பார்க்க.

எந்தைக்கு - எமது பிரானுகிய சீகாழி இறைவருக்கு என்றும், எமது தந்தை யாகிய சிவபாத விருதயரின் பொருட்டு என்றும் இரட்டுற மொழிந்துகொள்ள நின்றது. பதிகக்குறிப்புப் பார்க்க. தந்தையார்க்காக அருளினர் என்பது வழக்கு.

வழிமொழி - சீகாழியின் பன்னிரண்டு பெயர்களும் வந்த வழி - வரலாறு - மொழியப் பெறும் பதிகம் என்க. இது வழிமொழித் திருவிராகம் எனப்படும் ; பதிகக் குறிப்புப் பார்க்க.

எல்லாம் மடக்குச் சந்த இயமகம் - ஏகபாதம் - அடிதோறும் எல்லாச் சீர்களும் மீண்டும் மடக்கி வருதலாகிய சந்தம்பெற்ற இயமகமாகிய திரு ஏகபாதம் என்க ; அடிமுழுதுமாகிய எல்லாச் சீர்களும் மடக்கி வருதலாகிய சிறப்புடைய தென்பார் எல்லா மடக்குச் சந்தவியமகம் என்று விசேடித்தார். மடக்கு - தமிழ்ப் பெயர். இயமகம் - வடமொழி ; மரபு விளக்கவும் இயல்பு குறிக்கவும் இரண்டுங் கூறினர். "உற்றுமைசேர்வது" என்னும் திருவியமகப் பதிகம் பின்னர் அருளியது. புரா-954 பார்க்க. ஏகபாதமும் இயமக வகையுட் சேர்வதாயினும் எல்லாச் சீர்களும் மடங்கி வரும் சிறப்புடையது.

இருக்குக்குறள் - குறள் - இருசீரானியன்ற அடியுடைய பாட்டு. இருக்கு - மந்திரப் பொதுமை யுணர்த்திற்று. செய்யுள் விகற்பமுமாம்.

ஈரடி - இரண்டடிகளாலியன்ற பாட்டுக்கள் கொண்ட பதிகம். ஆகுபெயர்.

ஈரடிவைப்பு - செய்யுளின் நான்கடிகள், முன் ஈரடிகள் ஒரு பெற்றியாகவும், பின்னீரடிகள் வேறொரு பெற்றியாகவும் அமைவது. வைப்பு - சந்தமும் பொருளும் மேல் ஒட்டிவைத்தது போலக் காணப்படுவது. இவ்வாறு வைப்பாகவுள்ள பின்னீரடி கள் பதிகமுழுதினும் ஒன்றேயாக வருவனவும், வெவ்வேறாக வருவனவும் உண்டு.

மடக்குஞ் சந்தவியமகம் - ஈரடி வைப்பும்—என்பனவும் பாடங்கள். 276

2175. (வி - ரை) நாலடி மேல்வைப்பு - பாட்டின் முன் நான்கடிகள் ஒரு பெற்றியாகவும், மேல்வரும் இரண்டடிகள் வேறமொர் பெற்றியாகவும் ஒட்டியது போன்று வருவன ; ஈரடிமேல் வைப்புப்போல.

நடையின் முடுகும் இராகம் - இராகம் - என்ற பெயரின் தன்மையை விளக்கும் வகையால் உடம்பொடு புணர்த்தி ஓதினர். நடை - ஓசை ; முடுகுதல் - விரைந்த -

அழுந்திய - தாள விசைகூடுதல். மேன்மை - கதியின் மேம்பாடும் பொருளின் உயர்வும்.

சக்கரம் - திருச்சக்கரமாற்று. கடைக்குறை.

மூல இலக்கியமாக - இந்த விகற்பச் செய்யுட்களுக்கு இலக்கணம் காண் போர்க்கு இலக்கியம் இவையே என்று தெளிய. முன்னர் இவற்றுக்கு இலக்கியம் கிடையாத நிலையில் இவையே மூல இலக்கியமாக அமைய என்க. தமிழ் கற்போர் இவற்றையே அவ்வவ் விகற்பச் செய்யுட்களுக்கு இலக்கியமாகக் கொள்ள.

எல்லாப் பொருள்கோளும் முற்ற - பொருள்கோள் - பொருள் கொள்ளும் முறை. இவை யாற்றுநீர், கொண்டு கூட்டு முதலாக எட்டுவகையா மென்பர்.

காழியாரை - இத்திருப்பதிகங்களனைத்தும் சீகாழியைப் பற்றியன.

மோனைநடையின் - எல்லாப் பொருள்களு முற்ற—என்பனவும் பாடங்கள். 277

2176. இன்னிசை பாடின வெல்லா மியாழ்ப்பெரும் பாணனார் தாமும்
மன்னு மிசைவடி வான மதங்கசூ ளாமணி யாரும்
பன்னிய வேழிசை பற்றிப் பாடப் பதிகங்கள் பாடிப்
பொன்னின் றிருத்தாளம் பெற்றார் புகலியிற் போற்றி யிருந்தார்.

(இ - ள்) இன்இசை பாடின எல்லாம்-இனிய இசையில் முன்கூறியவாறு பாடிய எல்லாப் பதிகங்களையும்; யாழ்ப் பெரும்பாணனார் தாமும்......பாட - பெரும் யாழ்ப் பாணனாரும் பொருந்திய இசையொரு உருவெடுத்தாற் போன்ற மதங்கசூளாமணி யாரும் போற்றப்படும் ஏழிசைகளைப்பற்றிப் பாட ; பதிகங்கள் பாடி - திருப்பதிகங் களைப் பாடி ; போற்றி - சிவபிரானைத் துதித்துக்கொண்டு ; பொன்னின் - திருத் தாளம் பெற்றார் - திருப்பொற்றாளம் பெற்ற பிள்ளையார் ; புகலியில் இருந்தார் - சீகாழியிலே எழுந்தருளியிருந்தனர்.

(வி - ரை) பாடின எல்லாம் - முன்கூறியவாறு பாடிய விகற்பச் சந்தச் செய்யுட்கள் எல்லாவற்றையும்.

இசைவடிவான - இசையே இவரது திருவுருவம் என்று சொல்லத்தக்க; முழுதும் இசைமயமான.

பன்னிய ஏழிசைபற்றிப் பாட - "பன்னியாதரித் தேத்தியும் பாடியும்" (தேவா); பாணனார் தாமும் - மதங்க சூளாமணியாரும் பாட - கலத்தினும் அதனோடியையக் கண்டத்திலுமாகப்பாட. பன்னிய - ஏழிசைபற்றி என்றதில் பன்னுதல் - ஏழிசை களுள் ஒன்றும் பலவும் விரவ என்ற குறிப்பும் தருவது. பற்றுதலாவது இசையுடன் சொல்லும் பொருளும் பொருந்துதல்.

பாடப் - பாடி - பின்றொடர்ந்து பாடும்படி பாடியருளி.

பொன்னின் திருத்தாளம் பெற்றார் - பிள்ளையாரை இத்தன்மையாற் கூறியது அவர்கள் பாடத் தாம் பாடியருளியதுடன் இசை திருத்தாளத்தினொலிசைய ஒத்தி யருளினர் என்று குறிப்பித்தற்கு.

போற்றி - இறைவரைத் துதிக்கொண்டு. "வாழ்த்த வாயும்" என்றபடி மக்கள் வாழ்த்தலெல்லாம் போற்றுதற்கென்றேயாம் என்று உலகறியும்படி போற்றி என்க.

இந்நான்கு பாட்டாலும், அரசுகள் போந்தபின்னரும், தமது திருவவதாரப்பயன் தரும் ஐந்தாவது தலயாத்திரை தொடங்குமுன்னும், சீகாழியில் எழுந்தருளியிருந்த இடைநாட்களின் சரித நிகழ்ச்சிகள் கூறப்பட்டன. 278

திருமொழிமாற்று

திருச்சிற்றம்பலம் பண் - வியாழக் குறிஞ்சி

காட தணிகலங் காரர வம்பதி காலதனிற்
றோட தணிகுவர் சுந்தரக் காதினிற் றூச்சிலம்பர்
வேட தணிவர் விசயற் குருவம்வில் லுங்கொடுப்பர்
பீட தணிமணி மாடப் பிரம புரத்தாரே. (1)

கல்லுயர் கழுமல விஞ்சியுண் மேவிய கடவுடன்னை
நல்லுரை ஞானசம் பந்தன்ஞா னத்தமிழ் நன்குணரச்
சொல்லிடல் கேட்டல்வல் லோர்தொல்லை வானவர் தங்களோடுஞ்
செல்குவர் சீரரு ளாற்பெற லாஞ்சிவ லோகமதே. (12)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—காடதுபதி - காரரவம் அணிகலம் என்றிவ்வாறு மொழிகளை மாற்றிக் கூட்டிப் பொருள் கொள்ள வைத்த விகற்பச் செய்யுள் என்னும் மிறைக்கவி. இறைவரது நடத்த சொருப வியல்புகளை எடுத்து அதிசயம்பட இவ்வாறு போற்றுதல் கருத்து. "ஞானத்தமிழ்" (12) என்று இதன் இயல்புரைத்துப் பயன் அருளியதும் காண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) காடு - பதி; அரவம் அணிகலம்; காதினில் தோடு; காலதனில் தூச்சிலம்பர்; வேடது உருவம்; விசயற்கு வில்லும் கொடுப்பர்; —(2) கங்கை கற்றைச் சடையது; கங்கணம் முன்கையில்; படைத்தோன் (பிரமன்) தலைபற்றித்து; முப்புரம் சுட்டது; கூற்றை எற்றித்து (உதைத்தது); பாம்பை அணிந்தது;—(3) கூவிளம் சடைமுடிக் கூட்டத்தது. (கூட்டம் - கற்றை; தொகுதி) பேரி - துடி - கையது; பொடி (நீறு) பூசிற்று; துத்தி பூண்டது; துத்தி - படம்; படமுடைய பாம்புக்கு வந்தது. ஆகுபெயர்; நுதலாளைப்பாகம் (வைத்தனர்); நாகம் - (யானை) உரித்தனர்;—(4) களிற்றை உரித்தது, பாம்பை உடல் மிசையிட்டது; எரித்தது முப்புரத்தை; ஓர் ஆமை (ஆமையின் ஓடு)யைப் பூண்டது; (விட்டுணு தமது கூர்மாவதாரத்தில் முதுகோட்டை அர்ப்பணம் செய்து வழிபட்ட வரலாறு குறித்தது); இன்புறு - ஆதனல் விட்டுணு இன்பமுற; தக்கனை வேள்வி செருத்தது; ஏந்திற்றுச் சூலத்தை; **பன்னூல் விரித்தவர்** - மறை முதலிய கலைகளில் வல்லவர்;—(5) கொட்டுவர் தக்கை; (தக்கை - இயங்களுள் ஒன்று); அரையார்ப்பது அக்கு; (அக்குவடம்); குறுந்தாளனபூதம் கலப்பிலர்; இன்புகழ் விட்டுவர்; மட்டுவரும் மத்தம் சூடுவர் - (மட்டு - மணம்); தழல் ஏந்துவர்; **வான்தோட்டுவரும் கோடி** - விண்ணளவுயர்ந்த கொடி;—(6) சாத்துவர் கோவணம்; பாசம் கையிலேந்துவர்; கச்சுக் குலாவிநின்று அவர்கூத்து ஆடுவர்; கொக்கிறகும் சூடுவர்; பல்படை பேயவை போர்த்தவர்; படை - படைகளாக; **போர்த்தல்** - சூழக் கொள்ளுதல்; **பேரெழிலார் பூத்தவர்** - மிக்க எழிலுடைய பெண்கள்.—(7) காலது கழற் சிலம்பு (கழல் - காலணி மணிவடம்);, சடையுள்ளார் கங்கை; மாலது பாகம்; மழுஅது ஏந்தல் (ஏந்துவது); ஆலதன்கீழ் இருப்பர்; ஆல் - கல் ஆலமரம்; கோடு - கொம்புகள்; ஏறு ஊர்வர்; சேலதுகண்ணி - சேல்மீன் போன்ற கண்ணையுடைய உமையம்மையார்;—(8) நெருப்புறு மேனியர்; வெள்விடை ஏறுவர்; நெற்றியின் கண் கண்ணர்; மருப்புருவன் - (விநாயகர்) தாந்த

மாமுருகன் விருப்புறு தந்தையார்; பாம்புக்கு மெய் காட்டுவர்; பொருப்பு உறு - மலைபோன்ற; உறு - உவமவுருபு:—(9) இலங்கைத் தலைவனை இறுத்தது; இரலை (மான்) ஏந்திற்று; கூற்று குமை பெற்றது; மாணி உயிர் பெற்றது; மாணி - பிரமசாரி - மார்க்கண்டேயர்; காட்டகத்து ஆடுவர்; மொந்தை (ஒருவகை இயம்) கொட்டுவர்;—(10) மால் அடியிணை கண்டிலன்; தாமரையோன் முடிகண்டிலன்; புலித்தோல் உடுப்பர்; ஏறு ஏறுவர்; பிடிநடையாள் ஓர் கூறுடையார்; வெற்பு இருப்பது; (வேற்பு - மலை - கயிலை);—(11) கையது சூலம்; காதது குழை; தம்மைச் சமணர் புத்தர் எய்தார்; அடியார் எய்துவர்; ஏனக் கொம்பு பூண்பது; ஏனம் - பன்றி; கோவணம் உடுப்பது;—(12) ஞானத்தமிழ் - இறைவரது சொரூப தடத்த இலக்கணங்களையும், சாதனங்களையும் அறிவிப்பது; "பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத், துறவியெனுந் தோற்றோணி கண்டீர்...சம்பந்தன், தன்மாலை ஞானத் தமிழ்" (ஆளு. பிள். மும். 11); நன்குணர்தல் - மொழிமாற்றின் கூறறிந்து பொருளை உள்ளுணர்தல்.

குறிப்பு:—பிரமபுரம் முதலாகக் கழுமல மீறுகச் சீகாழிப் பன்னிரு பெயர்களையும் அம் முறையே இப்பதிகத்தினுள் பன்னிரண்டு பாட்டினும் போற்றுதல் காண்க. இம்முறையே பின்வரும் வழிமொழி, ஏகபாதம், இயமகம்,இருக்குக்குறள், ஈரடி, ஈரடி மேல்வைப்பு, நாலடி மேல்வைப்பு, சக்கரமாற்று என்ற விகற்பச் செய்யுட் பதிகங்களிலெல்லாம் அமைத்துப் பன்னிரண்டு பாட்டுக்களாற் பதிகமருளியமை காண்க. திருவெழுகூற்றிருக்கையிலும் அப் பெயர்களை அவ்வரிசையிலே அமைத்துப் போற்றியதும் காண்க. 1912-ம் ஆண்டுரைத்தவையும் நினைவு கூர்க.

திருமாலைமாற்று

திருச்சிற்றம்பலம் சீகாழி பண் - கௌசிகம்

யாமா மாநீ யாமாமா, யாழீ காமா காணாகா,
காணா காமா காழீயா, மாமா யாநீ மாமாயா. (1)

நேரக ழாமித யாசழிதா, யேனநி யேனனி ளாயுழிகா
காழியு ளாயநி னேயநியே, தாழிச யாதமி ழாகரனே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—இறைவர் மாயையைஆள்பவர்; (மாயேசர்); ஞான ஆகாயத்தில் விளங்குபவர் என்பனவாதி இறைமைக் குணங்களைப் போற்றியது.

பதிகப்பாட்டுக் குறிப்பு:—இப்பாட்டுக்களின் சொற் பொருள்கள், அறிவும் புலமையும் அன்பும் அருளும் சான்ற பெரியோர்பாற் கேட்டறியத் தக்கன.

குறிப்பு:—மாலை மாற்றென்பது பாட்டினை முன்னிருந்து பின் படிப்பினும், மாற்றிப் பின்னிருந்து முன் படிப்பினும் ஒன்று போல் வருவது. மாலை - வரிசை; மாற்று - மாறுதலுடையது; "ஒரு செய்யுள் முதலீறுரைக்கினு மஃதாய் வருவதை மாலை மாற்றென மொழிப" (மாறனலங்காரம்). இப்பாட்டு ஓரடி முன்னிருந்து செல்வதும், ஓரடி பின்னிருந்து செல்வதுமாக அமைந்து அதுவே ஈரடியால் வந்த வஞ்சித் துறைப்பா. 8-9-10-11 பாட்டுக்கள் ஏனைப் பதிகங்கள்போலக் கருத்தமைந்தன. யாளி வாகனமாதற்கு, "யாமா மாநீ யாமாமா யாழி" என்பது மேற்கோள் காட்டப்பட்டது; (தக்கயாகப்பரணி 594 உரை)

திருவழிமொழித் திரு இராகம்

திருச்சிற்றம்பலம் பண் - காந்தாரி

சுரருலகு நரர்கள்பயி றரணிதல முரணழிய வரணமதின்முப்
புரமெரிய விரவுவகை சரவிசைகொள் கரமுடைய பரமனிடமாம்
வரமருள வரன்முறையி னிரைநிறைகொள் வருசுருதி சிரவுரையினாற்
பிரமனுய ரரனெழில்கொள் சரணவிணை பரவவளர் பிரமபுரமே. (1)

ஒழுகலரி தழிகலியி லூழியுலகு பழிபெருகு வழியைநினையா
முழுதுடலி லெழுமயிர்க டழுவுமுனி குழுவினொடு கெழுவுசிவனைத்
தொழுதுலகி லிழுகுமல மழியும்வகை கழுவுமுரை கழுமலநகர்ப்
பழுதிலிறை யெழுதுமொழி தமிழ்விரகன் வழிமொழிகண் மொழிதகையவே.

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :— சீகாழிப் பன்னிரு பெயர்களும் வந்த வரலாற்றினை அவ்வழியே மொழிதலினால் **வழிமொழி** (த் திருப்பதிகம்) எனப் பெயர் பெற்றது ; முடுகிய சந்தமுடைமையின் **இராகம்** எனப்பட்டது ; பாட்டின் ஒவ்வோரடியினும் எல்லாச் சீர்களும் அப்பாட்டில் கூறப்படும் அப்பெயர் பற்றிய வழியெதுகையாக அமைந்த செய்யுள்யாப்பமைதியுடைமையும் **வழிமொழி** என்றதனாற் குறிக்கப்பெறும். பிரமபுரம் என்ற முதற் பெயர்ப் பாட்டு, சுரருலகு நரர்கள்பயில் என்றும், கழுமலம் என்ற பன்னிரண்டாம் பெயர்ப் பாட்டு அவ்வாறே ஒழுகலரி தழிகலியி லூழியுலகு என்றும் இவ்வாறு வருதல் காண்க. "**வழிமொழிகள்**" (12) என்று இறுதிப் பாட்டினுள் பதிகப் பெயரினைப் பொறித்தருளியமையும் காண்க. "பல்பெயர்ப்பத்து" என்ற பதிகத்தினுமிவ்வாறே காண்க

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) பிரமபுரமே பரமனிடமாம் என்று முடிக்க. முன்னடிகளில் இறைவரது தன்மையும் பின்னடிகளில் அத்தலத்திற்கு அப்பெயர் போந்த வரலாறும் கூறப்பட்டன. இவ்வாறே ஏனைப் பாட்டுக்களினும் கண்டு கொள்க ; **சுரருலகும் - நரர்கள்பயில் தரணிதலமும்** - என்க. **முரண் அழிய** - முரணின் அழிதலினால் ; மதில் அரணம் என்க. **சரவிசை** - சரத்தின் விசை ; சரத்தின் இசை என்றும் உரைக்க நின்றது ; **சரம் -** அம்பு ; **இசை -** புகழ் ; **விசை -** வன்மை ; **நிரை நிறைகொள் சுருதி** - எல்லாச் சுரங்களும் வரிசைபெற அமைந்த ; **சுருதி சிரவுரை** - வேதசிரமாகிய உபநிடதவுரைகள் ; **பிரமன் சிரவுரையினால் சரணவிணை பரவ** - என்க. பிரமன் பூசித்தமையாற் பிரமபுரம் எனப்பட்டதென்பது ;—(2) **தாணு -** நிலைபெற்றவர் ; தம்பம்போலத் தாங்குபவர் ; **கோணும் -** வளைவாகிய ; **நீள் நயனி -** நீண்ட கண்ணையுடைய அம்மை ; **கோணில் -** குற்றமற்ற ; **பிடி -** பிடிபோன்றவர்; பிடியும் கரியுமாகப் பிரணவத்தினின்று கரிமுகவரைத் தோற்றுவித்த வரலாறுங் குறிப்பு ; **அமரர்கோன் -** இந்திரன் ; **வேணு -** மூங்கில் ; **வேணு -** என்பான் ஓரிந்திரன் ; **காணிறிவி -** சூரபதுமனுக்கு அஞ்சிய இந்திரன் வந்து மூங்கிலில் மறைந்துறைந்து பூசித்த வரலாற்றினாற் போந்த பெயர் வேணுபுரம் என்றது ;—(3) **பகல்ஒளி செய் -** ஞாயிறு போலும் ஒளிவீசும் ; **நகமணி -** நாகரத்தினம் ; **முகைமலர் -** அலரும் தாமரை ; **நிகழ் -** உவமவுருபு ; பேடல உள்ள ; **சரணஅகவு -** திருவடிகளைப் பாடுகின்ற ; **அகலம் -** பெருமை ; எல்லா ஞானங்களையும் தன்னுள் அடக்குதல் ; **உரை செய்முகம் -** சிவனைம்முகங்களுள் ஈசானமுகம் ; **பகை -** தேவர்க்குப் பகையாகிய சூர்முதல் ; **அறுமுகவிறை** - முருகக் கடவுள் ; **அருள -** கொடுக்கும்படி. **இமையோர்புக நிகழ் -** தேவர்கள் புகலடைந்தமையால்

புகலி என்ற பெயர் பெற்றநகர் என்பது ;—(4) அங்கிநிகர் - எரியுருவுடைய; புலன்கள் களைவோர் வெங்குரு - தவமுனிவர்களுக்குட் பெரியரான வியாழன் ; தேவகுரு வழிபட்டமையால் வெங்குரு எனப் பட்டது ; வெங்குரு - அசுரகுரு வாகிய சுக்கிரன், நாரத முனிவர் உபதேசத்தால் பூசித்து உயர்ந்த வரலாறு என்பது மொன்று ;—(5) ஆண் இயல்பு - ஆண்மைத் தன்மை ; வீரம் ; வனவாண இயல் - வேடவுருவம் ; பேணி - மேற்கொண்டு ; பாணமழை...நாணி - விசயனுடன் செய்த விற்போர் ; ஏனுசிலை - பெருமையுடைய வில் ; பாணியமர் - மற்போர் ; பாணி - கை. அருள்மாணும் - பேர் அருள்புரிந்த. மாண் அருளும் என்க. ; பிரமாணி - பிரமாணமாகிய மறைகளுக்கு இலக்கியமாக - வாச்சியமாக - உள்ளவர் ; ஏனுமுறை - காலாந்தரம். ஊழிநியதி ; பாணி உலகாள - நீர்ப்பெருக்கு உலகை விழுங்க ; ஊழி வெள்ளத்தில் தோணி போன்று மிதத்தலாற் றோணிபுரம் என்று பேர் பெற்றது ; (6) நிராமய என்பது முதலியன இறைமைக் குணங்கள் பற்றிப் போற்றிய பெயர்கள் ; புராணன் - பழமையானவன். முன்னைப் பழம்பொருள் ; அரா - விட்டுணுவின் பாம்பு அணை ; அர பராயண - அரனைத் தியானிக்கின்ற ; வராக உரு - பன்றி உருவெடுத்த ; வாதராயனே - விட்டுணுவை ; (பன்றி) வராக வுருவெடுத்து விட்டுணு இரணியாக்கனைக் கொன்று பூமியைக் கொம்பிலேற்று வருத்தியபழி போக வழிபட்ட காரணத்தால் பூந்தராய் எனப்பட்டதென்பது. பூ - பூமி; தராய் - தரித்தல்; பூந்தாராய் என்பது தராய் என நின்றது ; மொழி - பெயர் :—(7) அரணை - காவ லுடையமதிலை ; முரணர் - பகைவர். முப்புரவாணர் ; படைக்கரம் விசிறு - அம்பு எய்த - தொடுத்தமட்டில் நின்ற என்க ; கரணமமர்வன் - உள் இருப்பவர் ; எறிகோள் கரன்-எறி - படை ; ஏந்திய கையுடையவர்; அமுதுவிரவ - உடல்புரள உறும் அரவை- புரளும் உடலுடைய பாம்பினை ; அரி - அமுதுபடைத்து வந்த விட்டுணு ; சிரமரிய சட்டுவத்தினால் தலையை வெட்ட ; சிரம் - இராகு ; அரன - அரனுடைய ; இருகிரகம் இவ்வாறு இராகு கேதுக்களான இரண்டு கிரகங்கள் ; சிரபுரம் என்ற பெயர் போந்த வழி ;—(8) அறம் அழிவுபெற - தருமம் சிதைய : உலகுதேறும் - உலகினை அலைக்கும். புயவன் - புயவலிமைபெற்ற இராவணன் ; அழிய விரல் நிறுவி - என்க ; மா...உற அருளும் - பின்னர், வளைந்த பற்களை (வக்ரதந்தம்) யுடைய அவ்வரக்கன் சாம வேதத் தால் முறைப்படி துதிக்கவே அருள் செய்த ; மறை அமரர் - பருந்தும் புறுவுமாக முறையே மறைந்த உருவொடும் வந்த இந்திரனும் அக்கினியுமாகிய தேவர்கள் ; நிறை - புறுவின் எடைக்குத் தக்க தசை ; புறவன் - புறு உருவாய் வந்த தீக்கடவுள் ; நிறை நிலவு - அரிந்த தசை போதாமைகண்டு சிபிச்சக்கிரவர்த்தி தான் துலையேறி எடை சமன்பெற நிலவச்செய்த ; பொறையன் - பாவம் பொறுத்தவனை; தீக்கடவுள்; புறவம் - அப்பழி போகப் புறு பூசித்ததால் வந்தபெயர்;—(9) பிரமன் விண்பயில, மால்மண்பகிர் என நிரனிறை யாக்குக ; கண்பரியு மொண்பொழிய - காணும் முயற்சி யொழிய ; ஒண்பு - ஊக்கம். நுண்பொருள் - காணமாட்டாது நீண்ட தன்மை ; மண்புரியும்...நுண்புசகர் - மண்ணின் நுண்புழுதிபோல அராவிய இருப்பு உலக்கைத்தூள் ; விண்படர அச்சண்பை - அவை சண்பைப் புல்லாக முளைக்க அவற்றால் யாதவ குமரர்கள் அனைவரும் இறந்தொழியும்படி ; மொழி - பண்பு அ - முனி - சொல்லிய அக்கபில முனிவர் சாபம் பலிக்க; கண்பழி செய் பண்புகளை - அச்சாபம் தன்னைப் பற்றாதப்படி களைந்து கண்ணனுக்கு அருளிய ; அக்காரணத் தால் சண்பை என்ற பெயர் பெற்ற நகரம் ; கண்ணுதல் - அடைதல்; களை - நீக்கிய; —(10) பாழி - சமணகுருமார் தங்குமிடம் ; வேழம் - பருத்த உடலுடைய என்ற பொருளில் வந்தது ; "மந்திபோற் றிரிந்து" (தேவா) ; ஏழை - உமையம்மை ;

தாழும் - விரும்பும் ; கீழ் - மேல் உலகில் வாழுரைசு - சூழ் அரசு - காளிதன் என்னும் நாகராசன் பூசிக்க; காளிதன் பூசித்தமையால் காளி - காழி-யாயிற்று ; காளி பூசித்ததனாலும் இப்பெயர் வந்ததென்பதும் வரலாறு.—(11) அசைச்சு - அசைத்து - வீக்கி ; மிலைச்சு - சூடி ; மெய்ச்சிரம் ஒர் கையால் அணைச்சு - பிரமன்தலை ஓட்டினை ஒரு கையில் ஏந்தி ; அமர் - விரும்பும் ; பிச்சன் - பித்தன் ; பிச்சை வேண்டுபவன் என்றலுமாம் ; மச்ச...சிறுமியை - மச்சகந்தியை ; அவச்சவிரகக் கோச்சை - வசமிழந்து ஆற்றினிடையிற் செய்த காமச் செயலுடைய - புணர்ந்த - அச்சர் - பராசரமுனிவன் ; அம்முனிவன் பூசித்து அக் கொச்சை நீங்கியதனால் கொச்சைவய மாயிற்று ;—(12) ஒழுகல் அரிது அழிகலியில்...நினைந்து - நல்லொழுக்கத்தினிற்றல் அரிதாகி அழிகின்ற கலிகாலத்தில் உலகில் பழிபெருகுதலை நினைந்து வருந்தி ; முழுது உடலில் எழும் மயிர்கள் தழுவுமுனி - உடல் முழுதும் மயிர் உடைய உரோமச முனிவர் ; உரோமசர் வழிபட்டு மலம் நீங்கச் சிவஞான உபதேசம்பெற்றதனாற் கழுமலமாயிற்று ; வழிமொழிகள் - பெயர்வந்த வழியைச் சொல்லும் பாட்டுக்கள் ; பதிகப்பெயர். மொழிதகைய - பயிலும் தகைமையுடையன.

திருஏகபாதம்

திருச்சிற்றம்பலம் — பண் - வியாழக் குறிஞ்சி

பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான். (1)

கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை. (12)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—ஒரு அடிபோலவே எல்லா அடிகளும் வருதலால் இது ஏகபாதம் எனப்படும். இயமகம் அடிதோறும் ஒன்றும் பலவுமாகிய சீர்கள் மடக்கி வருவது ; இஃது அதனுட் சிறப்பு வகை என்பார் "எல்லா மடக்குச், சந்த விய மகம்" என்று இதன் இலக்கணத்தை ஆசிரியர் காட்டியருளினர் ; (2174). சீகாழிப் பன்னிரு பெயர்களையும் சார்த்தி இறைவர் புகழ்களைப் போற்றுவது.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—கண்ணுடைய வள்ளலார் இப்பதிகத்தின் திருவுள்ளக் கருத்துக்களாக உரை செய்தருளியவை காஞ்சிபுரம் சபாபதி முதலியார் தந்தபிஞூ ஆடிமீ பதித்த அடங்கன் முறைப்பதிப்பிலும், பின்வந்த பதிப்புக்களிலும் உள்ளன. அவற்றுள் மேற்காட்டிய முதலிறுதிப் பாட்டுக்களின் திருவுள்ளக் கருத்துக்களை ஸ்ரீ ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் உரையிலும், திரு. சூளை சுப்பராய நாயகர் பொழிப்புரையிலும் எடுத்துப் பதித்துள்ளார்கள். விரிவுகள் ஆண்டுக்காண்க. அவற்றைத் தழுவிச் சில குறிப்புக்கள் ஈண்டுத் தரப்படுகின்றன:—(1) 1. பிரமம் - ஞானு காயமாகிய பராசத்தி; புரத்துறை - அதனை மிகுதியாக வியந்து; பெம்மான்-எம்மான்- எந்தப் பெரியோன் ; ஞானுகாயமாகிய பராசத்தியான பரிபூரணத்தை மிக வியந்து அதற் கதீதமான பெரியோன் ; 2. பிரமபுரத்து - மேல் நிலத்து ; உறை - தண்ணீர் ; பேம் - விருப்பம் ; மான் - மான்போன்ற பெண் ; எம் - எம்முடைய;

ஆன் - ஆன்மா; மேல் நிலமாகிய ஆகாயத்தில் ஓடும் கங்கையை முடியில் வைத்தவன் எமதுயிர்; 3. **பிரமம்** - பிரமத்துவம்; **புரம்** - சக்கரம்; உறை - எண்ணுதல்; பெம் - ஆசை; **ஆன்** - அமையாமை; **எம்மான்** - என்னை ஒக்க வந்தவன்; பிரம ரூபத்திலே என்னை முத்தியில்விட விரும்பி என்னையொக்க வந்தவன்; 4. பிரம புரம் என்னும் சீகாழியில் உள்ள இறைவர் எனது கடவுள்:—வெளிப்படை; பெரி யோனும் எனக்குயிரானவனும் என்னை ஒக்க வந்தவனும் சீகாழியில் வீற்றிருக்கும் கடவுள் என்று முடிக்க.—(2) 1. **விண்டு** - மலை; **அலர்** - ஒலி; **பொழில்** - உலகம்; **அணிவு** - அகப்படுத்தல்; **ஏண்** - பெருமை; **நுபுரம்** - சிலம்பு; நூபுரம் என்பது நுபுரம் எனக் குறுகி நின்றது; திருச் சிலம்பின் பருமையும் ஒலியின் பெருமையும் குறித்தது; சிலம்பினைத் தரித்தவன். **தரன்** - தரித்தவன்; 2. **விண்டு** - விட்டுணு; **அலர்** - புறனுரை; **பொழில்** - அரசினிழல்; **அணி** - பொருந்தி; **வேணு** - விருப்பம்; **புரத்து அரன்** - புரத்தை அரித்தவன்: புத்தனாக வந்த விட்டுணுவின் புறனுரையை அரசமர நிழலிலிருந்து கேட்டு விரும்பிய புரத்தை எரித்தவன்; 3. **விண்தலர்** - தேவர்; **பொழில்** - கற்பகச் சோலை; **அணிவு** - சூடுதல்; **ஏனு** - எண்ணும்; **புரத்தரன்** - தேவேந்திரனுடைய:—எனு - ஏனு என நீண்டது - புரந்தரன் - புரத்தரன் என வலித்து நின்றது. தேவர்கள் கற்பக மலர்களால் ஏத்தும் இந்திரனால் வழிபடப்பட்ட காரணப்பெயர் பெற்ற; 4. வெளிப்படை.—(3) 1. **புண்டரிகத்தவன்** - இதய கமலத்திலுள்ளவன்; **மேவிய புகலியே** - எனக்கின்பந்தருவானு மாய் மீளாத புகலிடமாயுள்ளவன்; (**புகல்** - அபயம் புகுமிடம்) 2. **புண்டரிகம்** - திரிபுண்டரம்; **த்வன்** - மிக்க பெருமையையுடையவன்; **மேவிய** - சொல்லப்பட்ட; **புகலி** - சொல்லப்பட்டவன்; (**புகல்** - சொல்) **ஏ** - ஈற்றசை:—உயிர்களுக்கு இரட்சையாகத் திருநீற்றை யணிபவனே என் பாடலுக் கிசைந்தவன்; 3. **புண்டரிகம்**- புலி; **தவன்** - முனிவன்; **மே** - கூத்து; **வியம்** - பொன். **பு** - பொது; **கலி** - கற்றவன். (**கல்** - பகுதி); கனகசபையில் புலிமுனிவருக்கு நடங்காட்டக் கற்றவன். 4. **புண்டரிகத்தவன்** - பிரமன். (**புண்டரிகம்** - தாமரை); **மேவிய** - பணிந்த; **புகலி** - சீகாழி.—(4) 1. **விள** - விளாம்பழத்தை; **கோளி** - கன்று குணிலாக எறிந்து கொண்டவன். **விட்டுணு**; **கோளி** - கொள்பவன் கொண்டவன்; **தீ** - விட்டுவிளங்கும்; **கீழ்தரு** - நின்மலநீடிய; **எங்கு** - எவ்விடத்தில்; **உருமேவினன்** - தன்னுடைய உருவில் பொருந்தியவன்:—கன்று குணிலாக எறிந்து விளங்கனி கொண்ட மாலை மேனியில் ஒரு பாகத்தில் வைத்தவன்; தீ எனற்பாலது தி எனக் குறுகியும், கழுதரு என்பது கீழ்தரு எனவும் நின்றன; 2. **விளங்கு** - (விலங்கு) இடை விட்டுவிட்டு; **ஒளி** - ஒளியுடைய; **தி** - தீயுடனே; **கீழ்(ழு)தரு** - மிக்க பயத்தோடும் விழுகின்ற; **எங்கு** (ஏங்கு) - ஒலிக்கின்ற; **உருமு** - ஏவினன் - உருமு என்னும் இடியாகவும் வந்து உலகை ஆள்பவன்; "முழங்கியுரு மெனத்தோன்றி மழையாய் மின்னி யிடித்தவன்காண்" (கச்சி - தாண் - 7); இதற்கு இவ்வாறன்றி, மாறுபடும் ஒலியுடைய புத்தன் தலையில் இடியை ஏவினவன் என்ற சரிதவரலாறுபற்றி உரை கூறினர் முன் உரைகாரர்; அது பின் நிகழ்வதாகலின் மேற் கூறியபடி உரைக்கப் பட்டது. (புராணம் - 909 பாட்டுப் பார்க்க.) **தீ** - தி எனவும், **காழ்தரு** என்பது கீழ்தரு எனவும், ஏங்கு - எங்கு எனவும் நின்றன. **ஏங்குதல்** - ஒலித்தல் - குமுறுதல். 3. **விள்** - நீங்குதல்; **அங்கு** - அவ்விடத்தில்; **ஒளிது** - ஒள்ளியது; **இகழ்தருஎம்** - கீழாயின எம்மிடத்தும்; **குருமேவினன்** - குருவாக வந்து கலந்தவன்; **அங்கு** "மறக்குமா றிலாத வென்னை மையல் செய்திம் மண்ணின்மேற் பிறக்குமாறு காட்டினாய்" (தேவா) என்ற அவ்விடத்தினின்றும்; **விள்** - நீங்கிய; **இகழ்தரும்**

என்றது மையன்மானிடமாய்ப் பிறந்த என்னிடமும் ; ஒள்ளிது - சிவஞானம் ; குருமேவினன் - குருவாக வந்து முன்னின்று ஞானவமுது தந்த செயல் குறித்தது ; "தோடுடைய" என்றபதிகம் குருவருள் என்ற கருத்தினைக் கொண்டது. "தோடு கூற்றுப் பித்தா மூன்றும், பீடுடைத் தேசிகன் பேரரு ளாகும்" 4. வெளிப்படை. வெங்குரு - சீகாழியின் நான்காவது பெயர்;—(5) 1. சுடர் (சூடுஆர்) மண் ; இம் - ஈமம் ; ஆளி - ஆள்பவன் ; கைத்தோணி-போர் தொலைத்த தும்பைமாலை ; புரத்து அவன் - புரத்தை அவம் பண்ணினவன் ; சூடார் என்பது சுடர் எனவும், ஈமம் - இம் எனவும் குறுகி நின்றன ; துரோணம் (தும்பை) என்பது தோணி என மருவிற்று; 2. சுடர்மணி - (என் உச்சிக்குச்) சூடாமணி போன்றவர் ; மாளி (மாவி) - ஆன்மாக்களை ஈடேற்றும் பித்துக்கொண்டவர் ; கைத்தோள் - துதிக்கையினையுடைய யானையை ; நிபுரத்தவன் - வடிவில்லாமற் செய்தவன் அழித்தவன் ; தோல் - என்பது தோள் என நின்றது ; தோல் - யானை ; 3. சுடர் - சூரியன் ; மணி - கழுவி ; மாளி - கெட்டவன் ; கைத்தேணி - தெப்பம் ; புரத்தவன் - புரந்தவன் ; காத்தவன்;—சூரியனது களங்கத்தைக் கழுவும் கடல்போன்ற பிறவியில் கெடும் உயிர்கள் கரையேறும் தெப்பமாகப் பிரணவத்தைச் செவியில் உண்டாக்குபவர் ; "பெரும் பிறவிப் பௌவத்து...அஞ்செழுத்தின் புணை பிடித்து"—(திருவா) ; மண்ணி - மணி என நின்றது இடைக்குறை ; புரந்தவன் - புரத்தவன் என வந்தது வலித்தல் ; 4. வெளிப்படை.—(6) 1. பூ - பூமியில் உள்ளவர் ; சுரர் - தேவர் ; சேர் . தோன்றுதல் ; பூ - உந்திக்கமலம் ; தாரயவன் - தரித்தவன் ; போன் - பொலிவு ; அடி - (ஆடி) கண்ணடி; பூவுலகரையும் தேவரையும் தமது உந்திக்கமலத்தில் தோற்றுவிக்கும் பிரமா-விட்டுணுவின் போதத்தில் கண்ணடியும் நிழலும் போலப் பிரதி விம்பிப்பவன். ஆடி - அடி எனக் குறுகி நின்றது ; 2. பூசுரர் - மும்மலத்தையும் கழுவிய சிவஞானிகள் ; சேர் - திரட்சி ; பூ - பொலிவு ; தராய் - பெறப்பட்ட ; அவன் - அக்கடவுள் ; போன் - வனப்பு ; நடி - நாடக நடிப்பவன் :—சிவஞானிகளின் கூட்டம் பொலிவு பெறத்தக்க வனப்புடைய நடம் செய்பவர் ; 3. பூசு - திருநீற்றை உத்தூளணமாகப் பூசும் ; உரர் - மார்பையுடையோர் ; சேர்பு - அரிதல் ; ஊந்தராய் - தள்ளுதல் ; யவன் - யௌவனம் ; போன் - அழகு ; அடி - மூலம் :—நீறுபூசுமார்புடைய சிவஞானிகளும், பாவத்தை அரிந்து விசுவத்தைத் தள்ளும் சிறப்புடையாரும் ஆகியவர்களுக்கு மூலமாயுள்ளவன் ; உந்தராய் என்பது ஊந்தராய் என நீண்டது ; 4, வெளிப்படை. பொன்னடி காப்பனவாக என்க.—(7) 1. செருக்கு - மயக்கம் ; வாய்ப்பு - மேலீடு ; உடையான் - கேடுசெய்யான் ; சிரபுரம் - மேலாகிய இருப்பு ; என்னில் - என்னுடைய போதமே ; தனது திருவருள் ஞானம் வாய்க்கப் பெறுதார்க்கு மலமேலீட்டைக் கெடாத சிவனுக்கு விசுவாதீதமான இருப்பிடம் எனது அறிவே ; 2. சேர் - சத்தாதிகள் ஐந்தும் சேரப்பட்ட ; உக்கு - அந்தப்பூமி ; வாய்ப்புடையான் - தன்வாயினிடமாயுள்ள விட்டுணு ; சீர் - சிறப்பு ; அபுரம் - உயிர் போன களேபரம் ; என்னில் - மேனிலை ; பூமியை வாயில் உண்ட மாலின் களேபரத்தை மேற்றரித்தவன் ; சேர் என்பது சேர் என்றும், சீர் என்பது சிர் என்றும் குறுகி நின்றன ; 3. செருக்கு - ஆத்தும விகாரமாகிய கர்வம் ; வாய் - இந்திரியம் ; புடையர்ன் - இடத்தான் ; சிரம் - மேல் ; புரம் - சரீரம் ; என்னில் - சத்தியம் :—கர்வத்தினுல் இந்திரியங்களுக்கு விடயமாகிய சுவர்க்கத்தில் இச்சையுடையானுக்கு அது மெய்யாக விசேடித்திருக்குமன்றே !; 4. செருக்கு - இந்திரியப் போருக்கு ; ஆய்ப்பு - இளைப்பு ; உள்தையான் - உள் தைக்கப்படான் ; சிரபுரம் - என்னில் - சிரபுரம் என்று சொன்னுல் ; கருத்து : ஒருகால் சிரபுரம் என்முல் இந்திரியங்களை

யும் அவியப்பெருது சிவனடியில் அடைவன் ;—(8) 1. பொன் - பொலிவு ; நடி - நடிப்பவன் ; மாது - காளி ; அவர் - பூதகணங்கள் ; சேர் - தங்குதல் ; புறவத்தவன்- புறங்காட்டிலுள்ளவன் ; 2. பொன் - தூய்மையான ; அடி - வழி ; மாதவர் - தபோதனர் ; சேர் - திரட்சி ; புறவம் - முல்லைநிலம் ; தவன் - தவம் புரிந்தவன் ; தூயமாதவர் தவம் புரியும் காட்டில் அவர்கட்குத் தவசியாயுள்ளான் ; 3. பொன் - இலக்குமி ; அடி - அணிகளின் தொகுதி ; மாது அவர் - இருடியர் மனைவிமார் ; சேர்பு உறு - பிச்சையிட வந்தணைதல் ; அவத்தவன் - கற்புக்குலையச் செய்த நக்கன் ; 4. அடிகளிற் பொன்னணிபூண்ட மாதர்கள் சேரும் புறவத்தில் (சீகாழியில்)உள்ளவன் ; —(9) 1. தசமுகன் - தயவுடையவனும் ; எரிதர - எரிவீச ; ஊன்று - அழுந்து ; சண் - வேகம் ; பையான் - படமுடைய பாம்பை உடையவனும் ; 2. த - அது ; சமுகம் - திரட்சி ; நேரி - நேரானவன் ; தர - புலி ; ஊன் - புலால் ; துசு - தூசு. (உடை) ; அண்பையான் - விரித்துடுத்தான் :—ஞானிகளின் கூட்டத்துக்கு அது என்ற மெய்ப்பொருளைத் தோற்றுவிப்பான் ; புலி உரி உடையான் ; 3. தசம் - தைசதம் (அகங்காரம்) ; உக - கெட ; நேரி - எதிர்ப்பட்டவனும் ; தாம் - மலை ; ஊன் - திருவுள்ளத் தடைத்தல் ; து - விசேடஞானமுள்ளவனும் ; சண் - ஆறு சமயம் ; பையான் - பயனுகவுள்ளவனும் ; 4. தசமுகன் - இராவணன் ; நேரித்ர - முறிய ; ஊன்று - விரல் ஊன்றிய ; சண்பையான் - சீகாழியில் இறைவர்.—(10) 1. காழியானயன் - நிலைபெற்ற நின்மலசித்தமுடைய பத்தரிடத்து ; உள்ளவா - மெய்ப்பொருள் விளையும் பொருட்டு ; காண்பரே - நோக்குவார் ; (அருட்கண்ணுல் நோக்குவர்) ; 2. காழியான் - களங்கமுள்ளவன் ; (களங்கம் - மிடற்றின்விடம்) அவனது கருணையை ; நயனுள்ளவா - ஞானக்கண்ணுள்ளவாறு ; காண்பரே - நிலைமையாக நினைப்பரே :—ஞானிகள் சிவனருளை நினைப்பர் ; 3. காழியான் - விட்டுணு (காளிமம் - கறுப்புநிறம்) ; அயன் - பிரமன் ; உள்ள - நினைக்க ; ஆ - அதிசயம் !; காண் - கண் - கருதுதல் ; பரே - அன்னியம் ; கண் எனற்பாலது காண் என நீண்டது. கண்ணுதல் - கருதுதல் ; 4. அயன் - ஐயன் ; உள் - அறிவில் உண்டான ; அவா - ஆசை ; காண்பரே - தரிசிப்பரோ ? சீகாழியில் உள்ள என் ஐயனை - ஆசையை - அவ்விருவரும் தேடி மறத்தலொழிந்து எவ்வாறு காண்பர் ; —(11) 1. கோச்சை - அறியாமை செய்யும் ஆணவம்; அண்ணலை - பொருந்துதலை ; கூடகில்லார் - மாறுபட்டார் ; உடல் - உடலாலே ; மூடாரே - மூடப்படார் ;. ஆணவமயக்கத்தினின்றும் மாறுபட்டார் பிறவிபெருர் ; 2. கோச்சை - புலால் நாற்றம் ; அண்ணல் - அணுகுதல் ; கூடகிலார் - மனம் பொருந்தமாட்டார் ; உடல் மூடரே - உடலைப் புதைப்பரே ; மூடரே - இரட்டுறமொழிதலால் எதிர்மறையில் புதைக்காதவரே :—புலாலுடம்பை அழுக்கென்று மனங்கொள்ளாமல் மூடுபவராகிய புத்தரும். மூடாதசமணரும் ; 3. கோச்சையள் - துர்நாற்றமுடைய மச்சகந்தி ; நலை - புலப்பட்ட அவளது நலத்தைக் கருதி ; கூடு - சரீரம் ; அகில்ஆர் - அகில் மணம் பொருந்திய ; உடன் - அவளுடன் ; மூடரே - பொருந்தியவர் ; பராசரர் ; (காரணமாக) 4. கோச்சை அண்ணலை - கொச்சை என்ற பெயர்பெற்ற சீகாழியிறைவரை ; கூடகிலார் - நேர்படமாட்டார் ; உள்தல் - உள்ளுதல் ; மூடரே - இருளுடைய போதத்தவரே ;—(12) 1. கழமல் - மிகுதிப்பட்ட குற்றம் ; அழுது - சலம் ; பதிக்க - விளைவிக்க ; உள்நி - உள்ளநீ ; கட்டு - வடிவாகக் கட்டுண்ணல் ; உரை - தேய்தல் :—மிக்க தோடமுள்ள சுக்கில சுரோணிதமாகிய இருவகை நீரிற் பதிந்து விளையும் உடலுடைய நீ பின்தேய்ந்து மரிக்கும் இப்பிறவி; 2. கழ் - கழுவப்படுல் ; மலம் - உது - ஆணவ மலமும், உடன் கூடிய மாயை கன்ம

மலங்களுங்கூடிய விளைவாகும்; (மலத்தால் வருவதாம்); பதி - பாதி; **கவுணி** - உள்ளே அகப்படுத்திக் கவுளீகரித்துக் கொள்ளுதல்; **அன்கண்**-ஆன்மாவினிடத்து; **துரை** - இறைவர்; தம் பாதியாகிய அருளினால் என்னைக் கவுளீகரித்து என்னுள் விளங்கும் இறைவர்; பாதி என்பது பதி எனக் குறுகி நின்றது; 3. **கழும்** - மயக்கம்; **அலக்கம்** - அலக்கண் (துன்பம்) படுதல்; அமுதபோன்றவரும்; பதி - கருத்தரும்; **க** - தலை (பிரம கபாலம்)யில்; உண்ணியன் (பலி) - உண்பவரும்; கட்டு - விளக்கம்; **உரை** - பொன் போன்றவரும்; 4. **கட்டு** - காட்டும் உபதேசமிதனை - **உரை** - உரைத்துய்வீராக; வெளிப்படை.

திருஇருக்குக்குறள்

திருச்சிற்றம்பலம் **பண் - குறிஞ்சி**

அரனை யுள்குவீர்!; பிரம னூருளெம்; பரனை யேமனம்; பரவி யுய்ம்மினே. (1)
தொழுமனத்தவர்!; கழுமலத்துறை; பழுதில் சம்பந்தன்; மொழிகள் பத்துமே. (12)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—சிவனையடைந்து உய்யும் நினைவுடையாரை வழிப்படுத்தி அருளும் வகையால் சீகாழிப் பன்னிரு பெயர்களையும் துதித்தது.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) **உள்குவீர்** - விளி; உள்கும் மனமுடையவர்களே!—(3) புகல் - புகலி;—(4) **பங்கம்** - பாதி;—(5) **ஆணிநற்பொன்** - **ஆணி** - பொன்னை உரையிட்டளக்கும் உரையாணி; ஆணிப் பொன் போன்றார். "அடித் தொண்டராணிப்பொன்" (தேவா - அரசு). உயிர்களது பக்குவங்களை அளந்து ஏற்றவாறு அருள்பவர் என்பது குறிப்பு; இயல்பாகவே பாசங்களினீங்கியவர் என்றதாம்;—(6) **பாந்தள்** - பாம்பு;—(9) **தென்றில்** - பகை; **தென்றி** - தெற்கு உன்றலுமாம். இதனால் இராவணனுக்குத் தென்னவன் என்று ஒரு பெயருமுண்டு; "தென்னவன் மலை எடுக்க" (அரசு)—(10) **பெயலவை** - அருள்பொழிதல்; **பெயல்** - அருண்மழை; **இயலும்** - திளைக்கும்;—(11) **நேர்** - ஒப்பு;—(12)தொழுது உய்யும் மனத்தவர்க்கு மொழிகள் பத்துமே பற்றுக் கோடாவன. **பத்து** - பெரும்பான்மை பற்றி வந்தது.

திருஎழுகூற்றிருக்கை

திருச்சிற்றம்பலம் **பண் - வியாழக் குறிஞ்சி**

ஓருரு வாயினை மானாங் காரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய விருசுட ரும்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை;
இருவரோ டொருவ னாகி நின்றனை;
ஓரா னீழ லொண்கழ லிரண்டு
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை; நாட்டமூன் றாகக் கோட்டினை;
யிருநதி யரவமோ டொருமதி சூடினை;
ஒருதா ளீரயின் மூவிலைச் சூலம்
நாற்கான் மான்மறி யைந்தலை யரவ
மேந்தினை; காய்ந்த நால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி யீடழித் துரித்தனை;

யொருதனு விருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானில மஞ்சக்,
கொன்று தலத்துற வவுணரை யறுத்தனை ;
யைம்புல னலா மந்தக் கரண,
முக்குண மிருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை ; யொருங்கிய மனத்தோ,
டிருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறை யோதி யைவகை வேள்வி,
யமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்,
பிரமபுரம் பேணினை ;
யறுபத முரலும் வேணுபுரம் விரும்பினை ;
இகலி யமைந்துணர் புகலி யமர்ந்தனை ;
பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை ;
பாணிமூ வுலகும் புதையமேன் மிதந்த,
தோணிபுரத் துறைந்தனை ; தொலையா விருநிதி
வாய்ந்த பூந்தரா யேய்ந் தனை ;
வரபுர மென்றுணர் சிரபுரத் துறைந்தனை ;
யொருமலை யெடுத்த விருதிற லரக்கன்,
விறல்கெடுத் தருளினை ; புறவம் புரிந்தனை ;
முந்நீர்த் துயின்றோ னான்முக னறியாப்,
பண்பொடு நின்றனை ; சண்பை யமர்ந்தனை ;
ஐயுறு மமணரு மறுவகைத் தேரரு,
மூழியு முணராக் காழி யமர்ந்தனை ;
எச்சனே ழிசையோன் கொச்சையை மெச்சினை ;
யாறு பதமு மைந்தமர் கல்வியும்
மறைமுத னான்கும், மூன்று காலமுந்
தோன்ற நின்றனை :
யிருமையி னொருமையு மொருமையின் பெருமையு,
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை,
கழுமல முதுபதிக் கவுணிய னறியு
மனைய தன்மையை ; யாதலி னின்னை,
நினைய வல்லவ ரில்லைநீ ணிலத்தே.

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—இது இணைக்குறள் ஆசிரியப்பா ஆகிய ஒரே பாட்டு : ஆயினும் மரபுபற்றிப் பதிகமெனப்படும் ; பிள்ளையாரது பதிகத்தில் 8-9-10-11 பாட்டுக்களின் பெரும்பான்மை நியதியாக வைக்கப்பெறும் பொருள்களாகிய இராவண னருள்பெற்றமை, அயன்மாலருள் பெற்றமை, சமணபுத்தர் நிலை, பதிகப் பயன் என்ற இவை 12 பாட்டுக்கள் கொள்ளும் தலப்பெயர்ப் பதிகங்களுக்கேற்ப 47 அடிப்பெருமை கொண்ட இப்பாட்டிலும் அமைதலுங் காண்க.

இறைவரது தன்மைகள் பலவற்றையும் தொகுத்து அவரை முன்னிலைப் படுத்திப் போற்றப்பட்டது. பிள்ளையாரது திருப்பதிகங்களை நாடோறும் ஓதிப் பயின்றுவந்த பிதா சிவபாத விருதயர், அவை நாடோறும் பெருகிவருதலின் தம்கருத்துப்படி முற்றும் பயிலப்பெறாது வருந்த, அவர் பொருட்டுப் பிள்ளையார் இதனை அருளி, இஃதொன்றனையே விதிப்படி ஓதினால் எல்லாப் பதிகங்களையும் ஓதிய பயன் கிடைக்கும் என்று வகுத்தருளினர் என்பது வரலாறு. "எந்தைக் கெழுகூற்றிருக்கை" (2174) என்ற ஆசிரியர் திருவாக்கும் இக்குறிப்புடன் நிற்பதென்பர். அவ்வாறு இதனை நாடோறும் விதிப்படி பயிலும் அன்பர் பலர். இதனுள் சீகாழிப் பன்னிரு பெயர்களும் முன் பதிகங்களிற் குறித்த அம்முறையிலே போற்றப்படுதலும் குறிக்க.

அகத்தியர் தேவாரத்திரட்டு திரு. க. சதாசிவ செட்டியார் உரையிலும், முன் தேவாரப்பதிப்புக்களிலும் கண்டவற்றைத் தழுவி இங்குப் பொருட் குறிப்புக்கள் வகுக்கப்படுகின்றன.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) **ஓருருவாயினை** - தத்துவங்கள் எல்லாம் கடந்து வாக்குமனாதீதகோசரமாய் நின்ற சிவனது சொரூப நிலையினின்ற தேவரீரே உயிர்களுக்கிரங்கி யைந்தொழில் செய்யத் தன்னிச்சையாகவே ஒரு திருமேனி தாங்கினீர் ; சொரூபம் தடத்தமாயிற்று : "அகளமா யாரு மறிவரி தப்பொருள், சகளமாய் வந்த தென் றுந் தீபற ; தன்னையே தந்ததென் றுந் தீபற"; **மான் ஆங்காரத்து ஈர் இயல்பு** - சத்தி சிவமாகிய இரண்டு இயல்பு. ஐந்தொழில் நடத்துதலை நினைந்து மேற்கொண்ட நிலை. பொருள் இருவேறன்று என்பார் ஈர் இயல்பு என்றார் ; **மான்** - சத்தி ; **ஆங்காரம்** - உலகுய்யச் செய்யும் நினைவு ;—(2) **ஒரு** - சத்தியுடன் ஒன்றாயினை ; **படைத்தளித் தழிப்ப - மும்மூர்த்திகளாயினை** - முத்தொழில்களை இயற்றற்குப் பிரமன் விண்டு உருத்திரன் எனத் திருப்பெயர் பெறும் மூன்று திருமேனி தரித்தனை; இங்குக் கூறிய மும்மூர்த்திகள் முதல்வன் கொண்ட திருமேனிகள் ; இவற்றோடு மற்றை அயன்மால் உருத்திரன் என்னும் மூவர் வடிவங்களை ஒன்றாக வைத்தெண்ணி மயங்காமைப் பொருட்டு "இருவரோ டொருவ னாகி நின்றனை" என வேற்றுமையும் உடன் உபதேசித்தருளினர். இம் மும்மூர்த்திகள் முதல்வன் கொண்ட சுதந்திர வடிவமாதலின் **ஆயினை** என்றும், அவை அதிட்டான பக்கமாதலின் **ஆகி நின்றனை** என்றும் வேறுபாடு தோன்றக் கூறினார் ; அதிட்டித்தல் - நிலைக்களமாகக் கொண்டு செலுத்தல். (5) **இருவரோடு ஒருவன்** - பிரமவிட்டுணுக்களை இடத்திலும் வலத்திலும் அடக்கிய ஏகபாதத் திரிமூர்த்தி ; "ஏழுலகுமாய் நின்ற ஏகபாதர்" தாண்) —(7) **நால்வர்** - அகத்தியர் - புலத்தியர் - சனகர் - சனற் குமாரர் ; சனகர், சனற் குமாரர், சனந்தனர், சனந்தனர் என்றும் கூறுவர். **ஒளிநெறி** - ஞானநெறி. ஆணவ இருளைப் போக்குதலின் சிவஞானம் ஒளி எனப்பட்டது ;—(8) **நாட்டம் மூன்று** - சூரியன் - சந்திரன் - தீ என்னும் மூன்று கண்கள் ;—(9) **இரு** - பெரிய. **நதி** - கங்கை ; **ஒருமதி** - ஒருகாலத்திலு முதிராதபிறை ;—(10) **ஒருதாள்** - பிரணவமாகிய காம்பு; **ஈர்அயில்** - ஈருகின்ற - பிளக்கின்ற - கூர்மையுடைய ; **மூவிலை** - அயன் அரி அரன் என்று மூவரையும் அதிட்டிக்கும் சனனி ரோதயித்திரி ஆரணி என்னுஞ் சத்திகளை மூவிலையாகவுடைய; "மூன்று மூர்த்தி யுணின்றிய லுந்தொழில், மூன்று மாகிய மூவிலைச் சூலத்தன்" (தேவா - திருக்குறுந்) மூவிலைகளை "மூவிலைச் சூல மேந்துதல், மூவரும் யானென மொழிந்த வாறே" (ஒற்றி - ஒருபா ஒரு பஃது) என்பதும் காண்க.—(11) **நாற்கால் மான்மறி** - நான்கு மறைகளையும் நான்கு கால்களாகவுடைய மான்கன்று ; **ஐந்தலை அரவம்** - திருவைந்தெழுத்தை ஐந்தலையாக

வுடைய மாநாகம் ;—(12) நால்வாய் - தொங்கும்வாய் - துதிக்கை ; நாலுதல் - தொங்குதல் ;—(14) ஒருதனு - மாமேருவாகிய ஒப்பற்றவில் ; இருகால் - இரண்டு கால்களையும் ;—(18) இருவளி - இடைபிங்கலை வழி செல்லும் வளி ; ஒருங்கிய - மூலாதாரத்தில் ஒடுக்கிய ; இருபிறப்பு - உடற்பிறப்பும், உபநயன உபதேசங் களாற் பெற்ற ஞானப் பிறப்பும் ; துறை-சந்திக்கடமைகள் ;—(21)ஐவேள்வி - சிவபூசை - குருபூசை - மாகேசுவரபூசை - மறையவர்க்குணவு - அதிதிப்புசிப்பு என்பன ; பிரமயாகம், தேவயாகம், மானுடயாகம், பிதிர்யாகம், பூதயாகம் என்பாருமுண்டு ;—(22) ஆறங்கமுதலெழுத்தோதி வரன் முறைபயின்று - ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் ஆறு செயல் களையும் மறைவழியே செய்தும், பிரணவமாதி மந்திரங்களுடன் வேத வேள்வி கள் செய்தும் ; ஆறங்கம் - சிக்கை, வியாகரணம், கற்ப சூத்திரம், சந்தோ விசிதம், நிருத்தம், சோதிடம் என்ற வேதஅங்கங்கள் ஆறு என்றலுமாம்;—(27) பாணி- நீர்ப்பெருக்கு ;—(36) ஐயுறும் அமணர் - உண்டு இல்லை என்ற ஐயப்பாட்டில் பொருணிச்சயம் செய்பவர். "தெளியா தொருபொருளே பொய்யு மெய்யுமா மென் னும்" (புரா -); "அத்திநாத்தி" என்ற அவரது மந்திரம் இப்பொருட்டு ; அறுவகைத்தேரர் - "ஞானம் கணந்தோறும் தோன்றியழியும் ; மற்றும் உள்பொருள் எனப்பட்டவையெல்லாம் கணந்தோறும் தோன்றி யழியும்; இந்த ஞானத்திற் றோன்றிய வாசனை அழிவதே முத்தி என்ற கொள்கையுடைய புத்தர் ; அறுவகை - அழிதலை முத்தி என்னும் கொள்கையுடைய ; இதற்கு அறுசுவை உணவும் உச்சிக்கு முன் புசிக்கிறதே பொருள் என்னும் புத்தர் என்றுரைத்தார் முன் உரைகாரர் ;—(38) எச்சன் ஏழிசையோன் - பராசர முனிவன் ; எச்சன் - எச்சம் - (யக்ஞம்)எச்சத் தைச்செய்தவன் ; ஏழிசை - மிக்க புகழ்; கோச்சை என்ற பெயர் போந்தவரலாற்றுக் குறிப்பு. "வழிமொழி" பார்க்க.—(39) ஆறுபதம் - பிரத்தி, பிரத்தியாகாரம், துல்லியம், துல்லியாதீதம், வித்தை, அவித்தை என்பன ; ஐந்தமர் கல்வி - சிவா கமம் ; மகாசதாசிவ மூர்த்தியின் ஈசான முகத்துள்ள ஈசான முதலிய ஐந்து முகங் களினின்றும் சிவபெருமான் சிவாகமங்களை அருளிச் செய்தனர். "கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ, னற்றா டொழாஅ ரெனின்" (குறள்) என்ற படி கல்விப் பயன் சிவனைத் தொழுதலே; ஆதலின் சிவாகமம் கல்வி எனப்பட்டது ; "மாவேட் டாகிய வாகமம் வாங்கியும், மற்றவை தம்மை மகேந்தி ரத்திருந், துற்றவைம் முகங் களாற் பணித்தருளியும்" (திருவா. கீர்த். 18 - 20); அமர் - விரும்புதல்.—(41) மூன்று காலம் - இறப்பு - நிகழ்வு - எதிர்வு ; மூன்று காலமுந்தோன்ற நிற்றலாவது - கால தத்துவம், மாயையிற் றோன்றுமாறு தனது சத்தியால் நோக்கி நிற்றல் ;—(42) இருமையினொருமை - அத்துவிதக் கலப்பு ; சத்தி சிவம் கலந்த அர்த்தநாரீசுர வடிவம் என்றலுமாம். ஒருமை - தனி முதற் பொருள்.—(44) கழுமல முதுபதிக் கவுணியன் - தீக்கைகளால் மலத்தைக் கழுவும் பழமையாகிய சீகாழியிற் கவுணிய கோத்திரத்தில் வந்தவர்.—(45) கழுமலமுது பதிக்கவுணியன் - கம் என்கின்ற பிரமசிரசிலே உண்கின் றவன்.—(47) நினையவல்லவரில்லை நீணிலத்தே - நினைக்கவல்லார்கள் இந்நிலவுலகத் திற் பிறப்பிலராவர். முடிப்பு:—ஒருருவாயினை; ஆயினை; நின்றனை; காட்டினை; சூடினை; ஏந்தினை ; உரித்தனை ; அறுத்தனை ; பிரமபுரம் பேணினை ; வேணுபுரம் விரும் பினை ; புகலி யமர்ந்தனை ; வெங்குரு விளங்கினை ; தோணிபுரத் துறைந்தனை ; பூந்தரா யேய்ந்தனை ; சிரபுரத் துறைந்தனை ; புறவம் புரிந்தனை ; சண்பை நின்றனை ; கழுமலமுதுபதிக் கவுணியனறியும், அனைய தன்மையை ; ஆதலின், நின்னை நினைய

வல்லவர் இந்நீணிலத்தில் (இனி வருதல்) இல்லையாவர்—என்று கூட்டி வினை முடிபு படுத்திக் கொள்க.

பிரமபுரம்

திருச்சிற்றம்பலம் திருவீரடி பண் - பழம்பஞ்சுரம்

வரம தேகொளா வுரம தேசெயும் புரமெ ரித்தவன் பிரம நற்புரத்
தரனன் னாமமே பரவு வார்கள்சீர் விரவு நீள்புவி யே. (1)
கழும லத்தினுட் கடவுள் பாதமே கருது ஞானசம் பந்த னின்றமிழ்
முழுதும் வல்லவர்க் கின்ப மேதரு முக்க ணெம்மிறை யே. (12)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—ஏனையவிருத்தங்கள் போல நான்கடி பெறாது இரண்டடிகளால் வருவதால் **ஈரடி** எனப்பட்டது. இரண்டாமடி இறுதிச் சீர்குறைந்து வந்தது. சீகாழித் தலத்தைப் பரவுமடியார் களுடைய சீர்களைப் பரவும் வகையாற் பன்னிரு பெயர் களையும் சந்தவிகற்பப் பாவினத்தின் நயம்படவைத்துப் போற்றியது.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) **கொளா** - கொண்டு ; **உரம்** - வன்மை.—(2) **வேணு மண்ணுளோர்** - வேண்டும் உலகர் ; **ஆணி** - ஆணிப்பொன் ;—(5) கற்றவர்க்குக் காணியும் (நிலமும்) பொருளும் ஈகையுடையோர் ; 8வதும் பார்க்க.—(6) **ஓதி** - கூந்தல்.—(7) **சுரபுரம்** - தேவருலகம்.—(8) **அற்றவர்கள்** - நல்கூர்ந்தவர். தரித்திரர் ;—(11) **விச்சை** - வித்தை ; ஞானம் ; ஒன்றும் என்க. உம்மைதொக்கது ; **பிச்சர்** - பித்தர் ; **கரிசு** - குற்றம்.

பூந்தராய்

திருச்சிற்றம்பலம் திருவீரடி மேல்வைப்பு பண் - காந்தார பஞ்சமம்

தக்கன் வேள்வி தகர்த்தவன் பூந்தராய்
மிக்க செம்மை விமலன் வியன்கழல்
சென்று சிந்தையில் வைக்க மெய்க்கதி
நன்ற தாகிய நம்பன் றானே. (1)

புந்தி யாண்மிக நல்லவர் பூந்தராய்
அந்த மில்லெம் மடிகளை ஞானசம்
பந்தன் மாலைகொண் டேத்தி வாழுநும்
பந்த மார்வினை பாறிடுமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—முன் ஈரடி ஒரு எதுகை ஒரு சந்தமாகவும், பின் ஈரடி அவற்றின் மேல் ஒட்டிவைத்ததுபோல வேறு எதுகையும் வேறு முடுகு சந்தமாகவும் வரும் விகற்பச் செய்யுளாதலின் **ஈரடிமேல் வைப்பு** எனப் பெயர் பெற்றது. மேல் வைப்பாகிய பின்வைப்பு அடிகள் (மகுடம்போல) ஒன்றுகவே எல்லாப் பாட்டுக் களிலும் வருதலும், வெவ்வேருய் வருதலும் உண்டு. இப்பதிகத்துள் வெவ்வேருய் வந்தன. திருக் கொள்ளம்பூதூர்ப் பதிகத்துள் ஒன்றுக வந்தது காண்க. இது **பூந்தராய்** என்ற பெயரால் இறைவரது அருளின் எளிமையைப் போற்றியது.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) **செம்மை** - சிவத்தன்மை ; **சென்று** - உலக நிலையின் மேம்பட்டுச் செலுத்தி ;—(2) **புள்ளினம் வெள்ளந்தாங்கு** - நீர்ப்பெருக்கில் பறவையுருவுடன் தேவர்கள் திருத்தோணியைத் தாங்கின வரலாறு. "நாலைந்து புள்ளின மேந்தின வென்பர்" (திருவிருத்) **வெள்ளம்** - கங்கை - தாங்கு சடை

என்றலுமாம்.—(4) இந்து - சந்திரன்.—(6) பூதம் - கணங்கள் ; நளிர்புனல் - குளிர்ந்த கங்கை.—(7) சே - இடபம் ;—(8) போதகம் - யானை ;—(9)மத்தம் - செருக்கு. உன்மத்தம் - மத்தம் என நின்றது ; இருவர் - அயனரி.—(11) வாழும் - வாழுங்கள்.

திருப்புகலி

திருச்சிற்றம்பலம் நாலடி மேல்வைப்பு பண் - காந்தார பஞ்சமம்

இயலிசை யெனும்பொரு ளின்றிறமாம்
புயலன மிடறுடைப் புண்ணியனே
சுயலன வரிநெடுங் கண்ணியொடும்
அயலுல கடிதொழ வமர்ந்தவனே
கலனாவது வெண்டலை கடிபொழிற் புகலிதன்னுள்
நிலனுடைமாற மின்புற நிறைமதி யருளினனே. (1)

புண்ணியர் தொழுதெழு புகலிநகர்
விண்ணவ ரடிதொழ விளங்கினானை
நண்ணிய ஞானசம் பந்தன்வாய்மை
பண்ணிய வருந்தமிழ் பத்தும்வல்லார்
நடலையவை யின்றிப்போய் நண்ணுவர் சிவனுலகம்
இடராயின வின்றித்தா மெய்துவர் தவநெறியே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—ஒரெதுகை ஒரு சந்தமுள்ள நான்கடிகளின் மேல் வேறெதுகையும் முடுகிய வேற்றுச் சந்தமாகிய இரண்டடிகள் வைக்கப்பட்டுவரும் விகற்பப் பாவினம். ஈரடி மேல்வைப்பின்கீழ் உரைத்தவை பார்க்க. இயலிசைகளுக்குப் பொருளாயுள்ளவரே ! இரவொடு பகலுமா மெம்மானே! என்று பலவாற்றாலும் சிவனது இறைமைத் தன்மைகளை ஏத்தி முன்னிலைப்படுத்தி, 'உம்மை இடர்கெட ஏத்துதும்யாம் ; எமக்குத் தவநெறியருள்புரிவீராக'' என்றது. "இடராயின வின்றித்தாம் எய்துவர் தவநெறியே'' (11) என்ற பதிகப்பயன் காண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) இயல் - இயற்றமிழ் ; இசை - இசைத்தமிழ் ; பொருளின்றிறமாம் - இவற்றால் கருதப்படும் முடிந்த பொருள் ; அயலுலகு - விண்ணுலகம். கலன் - உண்கலம்; பலிப்பாத்திரம். அணிகலம் என்றலுமாம் ; "வெண்டலை மாலை விரிசடை யோற்கே'' (திருமந்). நிறைமதி - ஞானம் ;—(2) நிலையுறும் இடர் - சகசமலமாகிய ஆணவம். நிலையாத வண்ணம் - வலிகெடும்படி.— (3) தவநெறியருள் எம்க்கே - பதிகக் குறிப்பு - பதிகப்பயன் (11) பார்க்க. நம்பிகளது திருத்துறையூர்ப் பதிகமும் பார்க்க. தவநெறி - சிவபூசை - 2-ம் பாட்டுப் பார்க்க.— (6) அரிமா - சிங்கம் ; தருவாய் - அவ்வவர்க்கேற்ற பயன்களைப் பொருந்தச் செய்வாய் ;—(8) இரவோடு பகலதாம் - காலமானாய் ; துன்பவின்பங்களைக் கூட்டிவைப்பாய் என்ற குறிப்புமாம். வழியடியேன் - இப்பிறப்பிலும் முன்னை நிலையினும் வழிவழி அடிமையே பேணினேன் ; குர - குராமலரும் ; இனமார்தரு - ஒன்றுபோல உயர்ந்த.—(9) ஊடலினுள்ளாற் பருகிடும் அமுது - அழுந்திய உணர்வினுள் ஊறிப் பருகநிற்கும் தேன். இனி......நல்கிடு - மறக்குமாறிலாத என்னை மயக்கிப் பிறவி காட்டினாய்; இனி, அது மாற்றி உன்பால் முன்போல் பிரியாதிருக்க அருள் ; (10) கனிகை நோன்பர் - குரத்தியர்களோடும் பாழியிற்றங்கி நோன்பியற்றும்

சமணர். பெருங்கோயில் - தோணி. —(11) விண்ணவரடிதொழ - தேவர்கள் தாங்கி நிற்க என்ற குறிப்பு. இடரானவை......தவநெறியே - 2-3 பார்க்க.

திருச்சண்பை நகர்

திருச்சிற்றம்பலம் திருவிராகம் பண் - சாதாரி

எந்தமது சிந்தைபிரி யாதபெரு மானென விறைஞ்சி யிமையோர்
வந்துதுதி செய்யவளர் தூபமொடு தீபமலி வாய்மையதனு
லந்தியமர் சந்திபல வர்ச்சனைகள் செய்யவமர் கின்றவழகன்
சந்தமலி குந்தளநன் மாதினொடு மேவுபதி சண்பைநகரே. (1)

வாரின்மலி கொங்கையுமை நங்கையொடு சங்கரன் மகிழ்ந்தமருமூர்
சாரின்முர றெண்கடல் விசும்புற முழங்கொலிகொள் சண்பைநகர்மேற்
பாரின்மலி கின்றபுகழ் நின்றதமிழ் ஞானசம் பந்தனுரைசெய்
சீரின்மலி செந்தமிழ்கள் செப்புமவர் சேர்வர்சிவ லோகநெறியே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—"மேன்மை நடையின் முடுகும் இராகம்" (2175) என்று ஆசிரியர் அறிவித்தபடி முடுகிய சந்தத்திசையிற் செல்ல அமைந்தது இத்திருப்பதிகம். அழகராகிய பெருமான் மாதினொடு மிருந்தபதி சண்பைநகரே என்பது குறிப்பு.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) "**எந்தமது......பெருமான்**" **என** - **இது** விண்ணோர் துதிப்பது. சூரனுக்கஞ்சிய இந்திரன் புகலடைந்த குறிப்புமாம்; **குந்தளம்** - கூந்தல்;—(2) **விரிதுத்தி** - விரிகின்ற படம்;—(3) **போழும்** - பிளந்தது போன்ற; **மாழை** - மாவடு; "மாவடு வகிரன்ன கண்ணிபங்கா" (திருவா); **தாழை முகிழ்** - தாழையின் மொட்டு; **வேழமிகு தந்தம் என** - யானைக் கொம்புபோல; "முள்ளிலைத் தாழை பெருங்களிற்று மருப்பினன்ன" (நற்றி - 19)—(4) **மட்டு** - மணம்; தேன் என்றலுமாம்; **மதிதட்டுபொழில்** - மதியைத் தடவும் படி உயர்ந்தசோலை; **சட்டகலை** - ஆறங்கம்; **எட்டுமரு எட்டும்** - 64 கலைஞானங்கள்; (6) **அணவு** - அணுகிவந்த; **நீலம்** - நீலோற்பல மலர்;—(7) **விண்போய்...... ஒழியினும்** - வானம் பிழைத்தல்; "விண்ணின்று பொய்ப்பின்" (குறள்) **மண் போய்** - மண்ணுலகின் நல்லொழுக்கத்தவறு; இவை பருவ மழை விழா மைக்கும் விளைவுக்குறைவுக்கும் காரணமா மென்றது. **வண்மை வழுவார்** - உலகம் வறண்ட காலத்தும் காழிப்பதியவர் வள்ளற்றன்மை குறையார்; "ஒருநாளுங் கரவா வண்கைக் கற்றவர்" (குறிஞ்சி - காழி - 1); **அதுவே அடியார் தன்மை** என்க. அவ்வாறு வழுவாதிருத்தல் அடியாராந் தன்மையால் வருவது என்றபடி; பின்னர்ப் பிள்ளையார் இறைவன்பாற் பெற்ற உலவாக்கிழிகொண்டு திருக்கழுமலத்து வேதவேதியரனைவரும் வேள்வி செய்யவு மிகுந்திருக்கும் வரலாற்றை இங்கு நினைவுகூர்க.—(8) **மறுக்கம்** - அச்சம்; **உரம்** - மார்பு; **ஏழ்** - எழும்;—(9) **பறவை** - அன்னம்; **மாலு மலரானும்** - முறையே கேழலுரு - நீள்பறவையும் ஆக என்று நிரனிறை; **வரதன்** - தீயுருவாகிய அறியப்படாத நிலையினின்றும் பின் வெளிப்பட்டு வரமும் தந்தவன் என்பது குறிப்பு :—(10) **போதியர்** - போதியடியில் அமர்ந்தவனது சமயத்தினர் (புத்தர்); **பிண்டியர்** - அசோகினடியில் அமர்ந்த அருகனது சமயத்தினர் (சமணர்). **போது வழுவாதவகை** - காலந்தவறுது. நாட்காலையில்; **திரை - மணி - எறி** என்க.

பிரமபுரம்

திருச்சிற்றம்பலம் திருச்சக்கரமாற்று பண் - காந்தாரம்

விளங்கியசீர்ப் பிரமனூர் வேணுபுரம் புகலிவெங் குருமேற் சோலை
வளங்கவருந் தோணிபுரம் பூந்தராய் சிரபுரம்வண் புறவ மண்மேற்
களங்கமிலூர் சண்பைகமழ் காழிவயங் கொச்சைகழு மலமென் றின்ன
விளங்குமரன் றன்னைப்பெற் றிமையவர்தம் பகையெறிவித் திறைவ னூரே. (1)

அக்கரஞ்சேர் தருமனூர் புகலிதராய் தோணிபுர மணிநீர்ப் பொய்கை
புக்கரஞ்சேர் புறவஞ்சீர்ச் சிலம்பனூர் புகழ்க்காழி சண்பை தொல்லூர்
மிக்கரஞ்சீர்க் கழுமலமே கொச்சைவயம் வேணுபுர மயனூர்மேவிச்
சக்கரஞ்சீர்த் தமிழ்விரகன் முன்சொன்ன தமிழ்தரிப்போர் தவஞ்செய்தோரே.

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—இது சீகாழியிலருளியது. சக்கர வடிவாக அடைத்துச் சுழன்று வருவதுபோலச் சீகாழியின் பன்னிரண்டு பெயர்களும் மாறிச் சுழன்றுவரப் பாடியருளிய சித்திரகவி ; இதுபோன்று "பிரமனூர்" என்று தொடங்கு மற்றொரு பதிகம் உண்டு; அது மதுரையிற் பின்னர்க் கூன்பாண்டியன் அவைக்களத்தே அருளுவது; (புரா - 754 - பார்க்க) ;அது "நாம் கருதும் ஊரே" என்ற குறிப்புடையதாய், "உமது பதி யாது?" என்று அரசன் கேட்ட வினவுக்கு விடையாக அமைந்தது. இஃது இப் பன்னிரண்டு பேர் படைத்தது இறைவனூர் என்று போற்றிய குறிப்புடையது.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) களங்கம் இல்லூர் - ஆணவமலக் குற்றத்தை இல்லையாகச் செய்யும் ஊர் கொச்சைவயம் என்க. இளங்குமரன் - முருகப் பெருமான் ; பகை - சூரன் ; எறிவித்த இறைவன் - என்க. பெயரெச்சத் தகரம் விகாரத்தாற்றொக்கது.—(4) பூமகன் - பிரமன் ;—(5) தரைத் தேவர் - பூசுரர், அந்தணர் ; உணர்ந்த அயனூர் - என்க ;—(8) மோடி - காளி ; சிலையன் ; வில்லுடையவன் ; அருளி - அருள்பவன் ; பெயர் ;—(10) மேல் - மேலோர் - மெய்ம்மைநூல் - வேதம் ;—(12) சக்கரம் - பதிக அமைதியின் பெயர் ; தரிப்போர் - மனங்கொள்வோர்.

குறிப்பு :—"ஆதிவிகற்பங்கள்" (2175) என்றதனால் ஈண்டுப் பல்பெயர்ப் பத்து என்ற - தக்கேசி - "எரியார்மழு" என்னும் பதிகமும், "பூமகனூர் புத்தேளுக் கிறைவனூர்" என்னும் - காந்தாரம் - கோமுத்திரிப் பதிகமும் இவை முதலாயின பிறவும் வைத்துக் கருதப்படும்.

ஐந்தாவது தலயாத்திரை

2177. அங்க ணமர்கின்ற நாளி " லருந்தமிழ் நாடெத்தி னுள்ளுந்
திங்கட் சடையண்ண லார்தந் திருப்பதி யானவையுங் கும்பிட்
டெங்குந் தமிழ்மாலை பாடி யேத்தியிங் கெய்துவ " னென்று
தங்குலத் தாதைய ரோடுந் தவமுனி வர்க்கருள் செய்தார். ௨௭௧

(இ - ள்) அங்கண்......நாளில் - அத்தலத்தில் விரும்பி எழுந்தருளியிருக்கும் நாள்களில் ; "அருந்தமிழ்நாடு......எய்துவன்" என்று - அரிய தமிழ்நாடுவெற்றி னுள்ளும் திங்களைச் சூடிய சடையையுடைய பெருமான் எழுந்தருளியுள்ள

திருத்தலங்கள் எல்லாவற்றையும் சென்று கும்பிட்டு எவ்விடத்திலும் தமிழ்மாலைத் திருப்பதிகங்களைப் பாடித் துதித்து இங்குவந்து சேர்வேன்'' என்று; தம்குலத் தாதையாரோடும்......அருள் செய்தார் - தமது பெருமையுடைய தந்தையர் சிவபாத விருதயரோடும் தவமுனிவர்களுக்கு அருளிச் செய்தார்.

(வி - ரை) அருந் தமிழ்நாடு எத்தினுள்ளும் - தமிழ்நாடும் வேறும் உள்ள எல்லா நாடுகளினும் என்க. இந்த ஐந்தாவது யாத்திரை பிள்ளையாரது பெருந் திருத்தலயாத்திரையாகும். இதனுள் அவரது திருஅவதார உட்கிடையாகிய சமணம் பவுத்தமென்னும் பரசமய நிராகரணமும் சைவ விளக்கமுந்தாபனமும் நிகழ உள்ளன; தமிழ்நாடு - வடவேங்கடம் தென்குமரி இடைப்பட்ட தமிழ் வழங்கும் நிலப்பரப்பு.

நாடு எத்தினுள்ளும் திருப்பதி யாவையும் கும்பிட்டு - பாடி - ஏத்தி - "நாடு நகரமு நற்றிருக் கோயிலுந், தேடித் திரிந்து சிவபெருமா னென்று, பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின், கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே'' (திருமந் - 5) என்றும், "சுத்த சைவத்துக் குயிரதே'' என்றும் சைவ நாற்பாதத்தினுள் வைத்து இச் சரியையின் இயல்பினையும் பயனையும் வற்புறுத்தியருளினர் திருமூலதேவர். உலகம் இதிற்புகுந்து மேல் எழும் பொருட்டு வழிப்படுத்தும் வகையால் பிள்ளையார் இவ்வாறு தலயாத்திரைகளை மேற்கொண்டருளினர்.

"ஏத்தி இங்கு எய்துவன்'' என்று - விடைகொண்டு தாம் புறப்படும் குறிப்பு. ஆதலின் அக்குறிப்பறிந்த தாதையார் பிரிவாற்றாது "இன்னும் சிலநாள் உடன் எய்து வேன்'' என்று கேட்டனர் என்பது மேல்வரும் பாட்டிற் காண்க.

தவமுனிவர் - அடியார்களும் அந்தணர்களும். 279

2178\. பெருகு விருப்புட னோக்கிப் பெற்ற குலத்தாதை யாரும்
"அருமையா லும்மைப் பயந்த வதனாற் பிரிந்துறை வாற்றேன்;
இருமைக்கு மின்ப மளிக்கு மியாகமு மியான்செய வேண்டும்
ஒருமையா லின்னஞ் சிலநா ளுடனெய்து வே''னென் றுரைத்தார்.

(இ - ள்) பெருகு......நோக்கி - மேன்மேலும் பெருகுகின்ற விருப்பத்தோடும் பிள்ளையாரை நோக்கி; பெற்ற குலத்தாதையாரும் - ஈன்றெடுத்த குலத்தந்தை யாராகிய சிவபாத விருதயரும்; "அருமையால்...எய்துவன்'' என்று மொழிந்தார் - அரிய தவஞ்செய்து அதன்பயனாக உம்மை ஈன்றெடுத்தேனாதலினால் உம்மைப் பிரிந்து இங்கிருத்தலைச் சகிக்கமாட்டேன்; இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் கொடுக்கும் சிவவேள்வியையும் யான் செய்யவேண்டும்; ஆதலால் ஒருப்பாட்டுடனே இன்னும் சில நாட்கள் உம்முடனே இருப்பேன்'' என்று மொழிந்தனர்.

(வி - ரை) பெருகுவிருப்புடன் நோக்கி - பிரிந்திருக்கலாற்றாமையான் எழுந்த விருப்பமும், அதனால் நிகழ்ந்த நோக்கமும்.

அருமையால்......உடன் எய்துவேன் - "திருப்பதியாவையும் கும்பிட்டு - இங்கு எய்துவன்'' (2177) என்று விடைகொண்டு தாமேயேகும் குறிப்பினுடன் கூறிய பிள்ளையார்க்கு, அவரது கருத்துக்குமாறுபாடாகத் தாமும் உடன் வருதலைக் கூறுகின்றா ராதலின் அதற்கு இரண்டு காரணங்கள் காட்டிக் கூறுகின்றார். அவை, அருந்தவஞ் செய்து பெற்றாராதலின் பிரிவாற்றாமை ஒன்று; உடன் சென்று யாகஞ் செய்தற்கு வேண்டும் பொருளை உரியகாலத்திற் பெறுதல் மற்றொன்று. இவற்றை எடுத்துக்கூறி,

"ஆதலால் இன்னுஞ் சிலநாள் உடன்எய்துவேன்" என்றார் என்க. "எய்துவன்" (2177) என்ற பிள்ளையார் செயலுக்கு உடன்பாடும் உடனே குறிப்பார் போன்று தாமும். "உடன் எய்துவேன்" என்றசொல் ஒற்றுமை நயமும் குறிக்க.

அருமையால் - அரிய தவஞ்செய்து அதன் பயனாக ; "ஈறில் பெருந்தவ முன் செய்து" (1983); "பெறப் போற்றும் தவம் புரிந்தார்" (1917).

பயந்த - தந்தையின் அன்பினால் பிள்ளையார் திருமேனிக்கு யாங்கு யாது நிகழுமோ என்று பயமடைந்த என்ற குறிப்புமாம். (புரா. 872 - 873-ம், 616-ம் பார்க்க.)

பிரிந்து உறைவு ஆற்றேன் - மகவின்மேல் வைத்த காதல் ; வாத்சல்யம் என்பர் வடவர். தன் மகனாகிய இராமன் பிரிந்த செயல் கேட்டலும் தசரதன் உயிர்நீத்த வரலாறும் கருதுக.

இருமைக்கும் இன்பம் பயக்கும் யாகம் - இருமை - இம்மையும் மறுமையும் ; இம்மையின்பமாவது "வேள்வி நற்பயன் வீழ்புனலாவது" என்றபடி வேள்வியாற் பெறும் மழையினாலும், அதன் மூலமாகக் கலிகெடுதலானுமாம். மறுமையின்பயனாவது அது தரும் சிவபுண்ணியத்தால் பரம்பரையில் சிவநெறி கைகூடச் செய்து வீடு பேற்றுக்கு வழியாகுதல். ஈண்டு வேள்வி என்றது வேதவேள்வியாகிய பசுவேட்டலை; அதனையே அமணொடுதேரர் நிந்தனை செய்துழன்றனர். மற்றுஞ் சிவபூசை முதலிய வற்றையன்று.

யாகம் - சிவனைக் குறித்த ஐவகை வேள்வி - "ஐவகை வேள்வியமைத்து" (எழுகூற்).

யான் செயவேண்டும் - அதற்கு ஆம் பொருளையும் அருளையும் உரிய காலத்திற் பெறவேண்டும் என்பது குறிப்பு. புரா, 422-423 பார்க்க. இவ்வாறு பெறும் குறையினைக் குறிப்பில் பெறவைத்து மொழிதல் பெரியோர் மரபு.

ஒருமையால் - உம்முடைய ஒருமைப் பாட்டினால். ஒருமை - இசைவு, மேல் "இசைந்து" (2179) என்பது காண்க. உடன்-உம்முடன். "With your permision" "If you please" என்னும் உயர் நவீனர் வழக்கும் காண்க. உடன்வராவிட்டால் உயிர் அங்கும் உடல் இங்குமாக இருக்குமாதலின் அப்படிக்கன்றி உயிரும் உடலும் ஒருவழிச் செல்ல என்ற குறிப்புமாம். 280

2179. ஆண்டகை யாரு மிசைந்தங் கம்பொற் றிருத்தோணி மேவும்
நீண்ட சடையா ரடிக்கீழ்ப் பணிவுற்று நீடருள் பெற்றே
ஈண்டு புகழ்த்தாதை யார்பின் னெய்திட யாழ்ப்பாண ரோடுங்
காண்டகு காழி தொழுது காதலி னாற்புறம் போந்தார். ௨௮௧

(இ - ள்) ஆண்டகையாரும் இசைந்து - ஆண் தகையாளராகிய பிள்ளையாரும் அதற்கு உடன்பாடு செய்து ; அங்கு......பெற்றே - அங்கு அழகிய பொன்னார்ந்த திருத்தோணியில் எழுந்தருளிய நீண்ட சடையினை உடைய இறைவரது திருவடிக் கீழே வீழ்ந்து வணங்கி நீடிய திருவருளைப் பெற்றுக்கொண்டவராகி ; ஈண்டு...... எய்திட - மிக்க புகழினையுடைய தந்தையார் பின்பற்றித் தமது பின்னேவர ; யாழ்ப் பாணரோடும்......புறம்போந்தார் - திருநீலகண்ட யாழ்ப்பாணனார் தம்முடனேவர காண்டக்க சீகாழிப் பதியைத் தொழுதுகொண்டு நீங்காத காதலுடன் புறம்போந் தருளினர்.

(**வி - ரை**) **ஆண்டகையார்** - தமது குறிப்புக்கு மாறுபட்டுத் தந்தையார் கூறிய போதும் அவர் கருத்தின் நேர்மை கருதி உடன்படுதல் ஆண்டகைமைப்பாலது என்றபடி ; ஒழுக்கத்தின் உயர்வு.

இசைந்து - தந்தையார் வேண்டுதலை உட்ன்பட்டு.

அம்போன்......அருள்பெற்றே - தலத்தினின்றும் புறப்படுவார் இறைவரை வணங்கி அருள் விடைபெற்றுப் புறப்படும் நியதிமட்டிலன்றி, இங்குச் சிறப்பாக நீடிய திருவருளின் குறிப்பினைப் பெற்றார் என்க.

நீண்ட...சடையார் - என்றும், நீடருள் - என்றும் கூறினார். நீண்டசடை - இடத்தின் நீட்சிக்கும், நீடுஅருள் - காலத்தின் நீட்சிக்கும் குறிப்புத்தந்தன. இந்த ஐந்தாவது யாத்திரை நிகழ்ச்சிகளின் நீண்ட அளவும் சிறப்பும் கருதுக. நீடு - என்றகுறிப்புமது.

நீண்ட சடையார் - "நீள் சடையார்" (831) என்ற விடத்துரைத்தவை இங்கு நினைவு கூரத்தக்கன.

நீடருள் - பரசமய நிராகரிக்கவும், நீறு ஆக்கவும் தாதையார்க்குக் கொடுத்த வரத்தினை நிகழ்விக்கும் அருள், தோணியப்பருடைய திருவருளே திருவாலவாயில் வந்து கை தந்து நிகழ்வித்ததென்பது பிள்ளையார் திருவுள்ளம் ; திருக்கழுமலத் திருவியமகத்தில் "பருமதின் மதுரைமன் னவையெதிரே பதிகம தெழுதிலை யவையெதிரே, வருநதி யிடைமிசை வருகரனே வசையொடு மலர்கெட வருகரனே, கருதலி விசைமுர றருமருளே கழுமல பமரிறை தருமருளே" என்றருளுவதனால் இனிது விளங்கும்.

தாதையார் பின்எய்திட - யாழ்ப்பாணரோடும் - தாதையார் ஏனைப் பரிசனங்களுடன் தம்மைப் பின்பற்றிவந்த அளவி லமைந்தனர், அவர் வேண்டியவாறு உடன் எய்துவதன்றி ஏனைப் பணிகள் ஒன்றும் அவர்க்கில்லாமையால் ; யாழ்ப்பாணர், அவ்வாறன்றித் திருப்பதிகங்களை அவ்வப்போது யாழிலிட்டுப் பணி செயவேண்டியிருத்தலின் அவர் பிள்ளையாருடனே முன்சென்றனர். திருக்கூட்டச் செலவின் இந் நிகழ்ச்சிகள் குறிக்கற்பாலன என்று ஆசிரியர் எடுத்துக் காட்டியவாறு. பின்னர் இவ்யாத்திரையில் ஆளுடைய அரசுகள் கலந்து செல்லும்போது, அவர் முன்பு செல்ல, அவரைப் பின்பற்றிப் பிள்ளையார் செல்லும் அமைதியும் இங்கு வைத்துக் காண்க. (புரா. 527 பார்க்க.)

காழிதொழுது - நகர்ப்புறம் போந்து பதியினை நோக்கித் தொழுது விடைகொண்டு.

காதல் - புறம்போந்து செல்லினும் அகலாத விருப்பம்.

புறம் போந்தார் - பதியினின்றும் புறப்பட்டருளினார். 281

2180. அத்திரு மூதூரி னுள்ளா ரமர்ந்துடன் போதுவார் போத,
மெய்த்தவ ரந்தணர் நீங்கா விடைகொண்டு மீள்வார்கண் மீள,
முத்தின் சிவிகைமேற் கொண்டு மொய்யொளித் தாம நிரைத்த
நித்தில வெண்குடை மீது நிறைமதி போல நிழற்ற, ௨௮௨

2181. சின்னந் தனிக்காளந் தாரை "சிரபுரத் தாண்டகை வந்தார்"
என்னுந் தகைமை விளங்க வேற்ற திருப்பெயர் சாற்ற,
முன்னெம் மருங்கு நிரந்த முரசுடைப் பல்லிய மார்ப்ப,
மன்னுந் திருத்தொண்ட ரானோர் வந்தெதிர் கொண்டு வணங்க,

2182. சங்கநா தங்க ளொலிப்பத், தழங்குபொற் கோடு முழங்க,
மங்கல வாழ்த்துரை யெங்கு மல்க, மறைமு னியம்பத்,
திங்களும் பாம்பு மணிந்தார் திருப்பதி யெங்குமுன் சென்று
பொங்கிய காதலிற் போற்றப் புகலிக் கவுணியர் போந்தார். ௨௧௮௨

2180. (இ - ள்) அத்திரு......போத - அந்தச் சிவச் செல்வமுள்ள பழம்பதியின் உள்ளவர்களுள்ளே, மெய்த்தவர் (உண்மைத் தவசிகள்) விருப்பத்தோடும் உடன் போதுவார்களாகிக் கூடத் தொடர்ந்து செல்லவும் ; அந்தணர்...மீள - அந்தணர்கள் பிரியா விடைபெற்று பதியில் மீண்டு செல்பவர்கள் மீளவும் ; முத்தின் சிவிகை மேற்கொண்டு - முத்துச் சிவிகையின்மேல் பிள்ளையார் எழுந்தருளி ; மொய் யொளி......நிழற்ற - மொய்த்துக் கூடிய முத்துமாலைகளை வரிசைபெறக் கட்டிய வெள்ளிய முத்துக் குடையானது மேலே முழுமதிபோலக் கவிந்து நிழலைச் செய்யவும், ௨௧௮௦

2181. (இ - ள்) சின்னம்......சாற்ற - முத்துத் திருச்சின்னமும், ஒப்பற்ற முத்துக் காளமும், முத்தினாலியன்ற தாரையும், "சிரபுரத்தில் அவதரித்த ஆண்டகையார் வந்தருளினார்" என்ற தன்மை உலகுக்கு விளங்கும்படி ஏற்றவாறு அவரது பற்பல திருப்பெயர்களையும் எடுத்து ஊதிப் பிடிக்கவும் ; முன்......ஆர்ப்ப - திருமுன்பு எப்பக்கங்களினும் வரிசையாக முரசங்களும் மற்றும்பல இயங்களும் முழங்கவும் ; மன்னும்......வணங்க - நிலைபெற்ற திருத்தொண்டராயினார்கள் வந்து எதிர்கொண்டு வணங்கவும் ; ௨௧௮௧

2182. (இ - ள்) சங்க......ஒலிப்ப - சங்குகளின் நாதம் ஒலிசெய்யவும் ; தழங்கு...முழங்க - விளங்கிய அழகிய கொம்புகள் முழங்கவும் ; மங்கல......மல்க - மங்கலமாகிய வாழ்த்து உரைகள் எங்கும் பொருந்தவும் ; மறைமுன் இயம்ப-முன்னே வேதங்கள் பயிலவும் ; திங்களும்......போற்ற - சந்திரனையும் பாம்பினையும் அணிந்த சிவபெருமானது திருத்தலங்கள் எங்குமுள்ளனவற்றில் முன்சென்று மேன்மேலும் பொங்கும் விருப்பத்தினுடன் துதிக்க ; புகலிக் கவுணியர் போந்தார் - சீகாழிக் கவுணியர் குலதனமாகிய பிள்ளையார் எழுந்தருளிச் சென்றனர். ௨௧௮௨

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

2180. (வி - ரை) உடன் போதுவார் போத - மீள்வார்கள் மீள - பிள்ளையார் மேற்கூறியவாறு புறம்போதும் பொழுது சீகாழியிலுள்ள அடியார்களும் அந்தணர்களும் ஆகிய கூட்டத்தினுள் பலர் பின்றொடர்ந்து உடன் சென்றார்கள் ; பலர் உடன் செல்லாவிடினும் மனம் பிரியாநிலையில் விடைகொண்டு மீண்டனர். இவ்விரு திறத்தாரையும் பற்றி அறிவிக்கின்றனர்.

மெய்த்தவர் அந்தணர் - என்பதைப் போத என்பதனுடனும் மீள என்பதனுடனுமாக முன்னும் பின்னும் கூட்டியுரைக்க இடையில் வைத்தார். மெய்த்தவர் அடியார்கள். சிறப்புப்பற்றி முன்வைத்தார்.

மொய் ஒளித்தாமம் நிரைத்த - முத்துக்குடையில் மொய்த்து வீசும் ஒளியுடைய முத்துமாலைகள் வரிசைபெறக் கட்டித் தொங்கவிட்ட. பெருநன் முத்துக்களாதலின் மொய்யொளி என்றார். குளிர்ந்த ஒளியாதலின் நிறைமதியை உவமித்தார். உருப்பற்றிவந்த உவமம். பிறவி வெப்பத்தை மாற்ற உதவும் பிள்ளையாரைச் சூழ்ந்து கதிர்விடுதலின் அக்குறிப்புப்பற்றி வினைபற்றிவந்த உவமமெனினுமமையும். ௨௧௮௦

2181. (வி - ரை) சின்னம் - காளம் - தாரை - இவை திருவரத்துறை யிறைவர் முத்துச் சிவிகையுடனருளியவை, இவையும் முத்துக்களால் அணியப் பட்டவை. சிவிகையிற் செல்லும் சிறப்புக்கு இவை இன்றியமையாத அங்கமாக உள்ளனவாதலின் ஒருங்கே அருளப்பெற்றன. வெறும் ஆரவாரநீர்மையன என்றெண்ணுதல் தவறு. இவை சைவ அரசாங்கத்தின் பெருமைதேற்றும் திருவடையாளங்களேயாம். "பிரபஞ்சமெல்லாவற்றிற்கும் மூலகாரணமாகிய ஒரு பெரு வெண்கொற்றக் குடையும்" (போத. 8. சிற்) என்றது காண்க. குடைக்குப் போல ஏனையவற்றுக்கும் கொள்க. "சைவநெறி தழைத்தோங்க வுரைசெய்" (புரா. 653) என்பதும் பார்க்க.

என்னும் தகைமை விளங்க - சின்னம் முதலியவைகூறி ஊதிப் பிடிக்கும் திருப் பேர் பலவும், திருமெய்ப்புகழ் பலவும் பிள்ளையாரது ஆண்டகைமையினையே கருத் தாகக்கொண்டு விளக்குவன என்பது. தகைமையாவது ஆண்டகைமை. (2119 - 2120 - 2121 பார்க்க) அஃது உலகரை உய்ய ஆளும்தன்மை; பரசமயத் தகள் நீக்கிச் சைவம் விளங்கச் செய்து அதனால் உலகுயிர்களை உய்யச் செய்தல்.

ஏற்ற திருப்பெயர் - எடுத்துக்கூறும் தன்மைகளுக்கு ஏற்றபடி உள்ள பிள்ளை யாரது திருப்பெயர்கள்.

சாற்ற - இவை பெயர்களையும் தகைமைகளையும் எடுத்துக்கூறி ஊதுதலால் சாற்ற என்றார். திருவருள் தர வரப்பெற்றமையாலும் இவை தலைமையாக ஏனையவற்றின் வேறு ஓதப்பட்டன.

முரசுடைப்பல்லியம் - பேரொலி செய்தற்றன்மையால் முரசை முன்னாக வைத்து ஏனைய இயங்களை அதனுள் அடக்கிக் கூறினார். ஆர்ப்ப - என்ற குறிப்புமது.

மன்னும் திருத்தொண்டர் ஆனார் - வணங்க - மன்னுதல் திருத்தொண்டில் நிலை பெறுதல். ஆனார் - ஆக்கச் சொல், வணங்கியதனால் ஆக்கமிகுதி பெற்றார் என்ற குறிப்புத்தருவது. இவர்கள் சீகாழிப் புறநகரிலும் பக்கங்களிலும் உள்ளவர்கள். 283

2182. (வி - ரை) கோடு - கொம்பு; இயங்களுள் ஒருவகை.

மங்கல வாழ்த்து உரை - அத்திருப்பதியின் அந்தணர் மாதர் முதலியவர் களுடைய வாழ்த்துரை; (1994 - 2160 - புரா - 956 முதலியவை பார்க்க.)

மறைமுன் இயம்ப - மறை முனிவர்கள் முன்னே மறைகளை ஓதிக்கொண்டு செல்ல; மறை - தமிழ் மறையுமாம். திருப்பதிகங்களை ஓதிச் செல்பவரு முன்செல்ல என்பதாம்.

திங்களும் பாம்பும் அணிந்தார் திருப்பதி எங்கும் - போற்ற - மதியும் பாம்பு மாகிய பகைப் பொருள்களை ஒரு சேரவைத்து அணிந்ததுபோல அடியார்களுடனே புறச்சமயிகளையும் தாங்கி வரும் இறைவர் என்ற குறிப்பு. இவ்யாத்திரையில் சமணர் புத்தர் மிக்க திருவாலவாய், திருத்தெளிச்சேரி முதலிய தலங்களைச்சென்று வணங்குதலும் குறிப்பு.

முன்சென்று பொங்கிய காதலிற் போற்ற - நேரிற் செல்லாது புறத்தே நின்று காதலாற் போற்றிய ஈழநாட்டுத் தலங்களும் குறிப்பு.

சங்கநாதங்கள் ஒலிப்ப - பிரணவாகாரமாய்ப் புரித்த வடிவுடைய சங்கங்களில் மறைமூலமாயுள்ள பிரணவநாதம் எப்போதும் ஒலிப்பதால், ஓசை செய்ய என்னாது ஒலிப்ப என்றார்.

குறிப்பு :— எங்கும் - கொங்கு, பாண்டி, ஈழ முதலிய நாடுகளும் குறிப்பு (2177). இவ்வெழுச்சியினை இவ்வாறு மூன்று பாட்டுக்களாற் சிறப்பித்துக் கூறித் "திங்களும் பாம்பு மணிந்தார் திருப்பதி" என்று முடித்துக் காட்டியது பரசமய நிராகரிப்பும் திருநீற்றின் ஆக்கமுமாகிய பின்னிகழ்ச்சிகளின் குறிப்பாம். இத்தொடக் கக் குறிப்பினைப் பின்னர் புரா. 648 முதல் 653 வரை ஆறு பாட்டுக்களால் நிறை வாக்குதலும் காண்க. 284

2183. திருமறைச் சண்பைய ராளி சிவனார் திருக்கண்ணார் கோயில்
பெருவிருப் பாலணைந் தேத்திப், பிஞ்ஞகர் கோயில் பிறவும்
உருகிய வன்பா லிறைஞ்சி வுயர்தமிழ் மாலைகொண் டேத்தி,
வருபுனற் பொன்னி வடபாற் குடதிசை நோக்கி வருவார், ௨அ௫

2184. போற்றிய காதல் பெருகப் புள்ளிருக் குந்திரு வேளூர்
நாற்றடந் தோளுடை மூன்று நயனப் பிரான்கோயி லணணி
யேற்றவன் பெய்தவ ணங்கி யிருவர்புள் வேந்த ரிறைஞ்சி
யாற்றிய பூசனை சாற்றி யஞ்சொற் பதிக மணிந்தார். ௨அ௬

2183. (இ - ள்) திருமறைச் சண்பையர் ஆளி - திருமறையவர் பதியாம் சீகாழியவர்களுக்குத் தலைவராகிய பிள்ளையார் ; சிவனார்......ஏத்தி - சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கண்ணார் கோயில் என்னும் தலத்தைப் பெருகிய விருப்பத் தினாலே அணைந்து திருப்பதிகம் பாடித்துதித்து ; பிஞ்ஞகர்......ஏத்தி - இறைவ ருடைய தலங்கள் பிறவற்றையும் உருகிய அன்பினாலே சென்று வணங்கி உயரும் தமிழ்மாலைகளாகிய தேவாரத் திருப்பதிகங்களைப் பாடித் துதித்து ; வருபுனல்...... வருவார் - வரும் புனலினை உடைய காவிரியின் வடகரை வழியாக மேற்குத் திசை நோக்கி வருவாராகி, ௨அ௫

2184. (இ - ள்) போற்றிய காதல் பெருக - போற்றிய விருப்பம் மேன்மேல் அதிகரிக்க ; புள்ளிருக்கும் திருவேளூர்......நண்ணி - திருப்புள்ளிருக்கு வேளூரில் நான்கு பெருந் தோள்களையுடைய முக்கட்பெருமான் எழுந்தருளிய திருக்கோயிலை அடைந்து ; ஏற்ற அன்பு எய்த வணங்கி - தக்க பேரன்பு பொருந்த வணங்கி ; இருவர்...அணிந்தார் - புள்ளரசர்களான சம்பாதி, சடாயு என்றிருவர்கள் வணங்கிச் செய்த பூசனையின் பெருமையை எடுத்துப் பாராட்டிப்போற்றி அழகிய சொற்களா லமைந்த திருப்பதிகத்தினை இறைவர்க்குச் சாத்தியருளினார். ௨அ௬

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

2183. (வி - ரை) மறைச் சண்பை - மறையவர்கள் வாழும்பதி. மறை களாற்றுதிக்கப்படும் பதி என்றும், மறை மூலவடிவாகிய திருத்தோணியிருக்கும் பதி என்றும் உரைப்பினுமமையும். ஆளி - ஆள்பவர், தலைவர் ; சிங்கம் போன்றவர் என்றலுமாம்.

திருக்கண்ணார் கோயில் - தலப்பெயர் ; தலவிசேடம் பார்க்க.

கோயில் பிறவும். - இவை திருக்கண்ணார் கோயிலை அடுத்து அணிமையில் உள்ளனவாகிய திருக்கடைமுடி, திருக்காட்டுப்பள்ளி, திருநாங்கூர் முதலியன என்பது கருதப்படும்.

உயர் தமிழ்மாலை - ஆன்மாக்கள் உயர்தற்கேதுவாகிய அருளுபதேசங்களைக் கட்டளையிட்டருளிய தமிழ்மாலை.

வருபுனல் - காலம் பொய்யாதுவரும் புனலையுடைய. "வான்பொய்ப்பினும் தான் பொய்யா" "பொன்னி எந்நாளும் பொய்யாதளிக்கும் புனல்" (1206).

வடபால் குடதிசை நோக்கி - வடகரையில் மேற்கு நோக்கி.

வருவார் - வருவாராகி. முற்றெச்சம்; **வருவார்** - நண்ணி என வரும்பாட்டுடன் முடிக்க. 285

2184. (வி - ரை) **போற்றிய** - போற்றும் வண்ணம்; துதிக்கும் பொருட்டு;

திருப்புள்ளிருக்கு வேளூர் - என்க. புள்வேந்தர் பூசை செய்து பேறு பெற்ற சிறப்பைப் பிள்ளையார் எடுத்துக் காட்டியருளியமையால் அத்தொடர்ச்சியை அச் செய்திபற்றி விளக்கமாயறிதற் பொருட்டுத் தலப்பெயரை இவ்வாறு புள்ளிருக்கும் திருவேளூர் என கூறினார். மேலும் அங்குச் செவ்வேளின் சிறப்புடைப் பூசையினை அறிவித்தற்குத் திரு என்பதனை அப்பெயருடன் சாரவைத்த நயமும் குறிக்க. ஆசிரியர் புள்ளிருக்கும் எனப் புள்ளரசர் சரித காரணம்பற்றிவிரித் தாரேனும் புள்ளிருக்கு வேளூர் என்பதே பதிகம். "புள்ளிருக்கு வேளூரானைப் போற்றாதே" என்பது காண்க.

கோயில் நண்ணி - இத்தலம் வைத்தீசுவரன் கோயில் என்று விளக்கமாயறியப் படுதலின் அது குறிக்க வேளூர் நண்ணி என்னாது **கோயில் நண்ணி** என்றார்.

ஏற்ற அன்பு எய்த - அத்தலத்திற் பொருந்திய அன்பு. ஏற்றமுடைய அன்பு என்ற குறிப்புமாம்.

இருவர்......சாற்றி - "தள்ளாய சம்பாதி சடாயுவென்பார் தாமிருவர், புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே" என்பதாதியாகப் பதிகத்துட் பிள்ளையார் சம்பாதி சடாயு என்னும் கழுகரசரிருவரும் இத்தலத்தில் பூசித்துப் பேறுபெற்ற சிறப் புக்களைப் பதிக முழுமையும் பலவாறும் எடுத்துப் போற்றிய திறம் காண்க. "யோசனை போய்ப் பூக்கொணர்ந்தங் கொருநாளு மொழியாமே, பூசனைசெய் தினிதிருந்தான்" (3); பத்தியினால் வழிபட்டுப் பலகாலந் தவஞ்செய்து, புத்தியொன்ற வைத்திருந் தான்" (7); "ஆதித்தன் மகனென்ன வகன்ஞாலத் தவரோடும், போதித்த சடாயென்பான்" (9) முதலியவை பார்க்க. **சாற்றி** - எடுத்துப் பாராட்டிப் போற்றி.

அணிந்தார் - சொன்மாலை அழகுபடச் சாத்தினார். 286

திருக்கண்ணார் கோயில்

திருச்சிற்றம்பலம் **பண் - குறிஞ்சி**

தண்ணார் திங்கட் பொங்கர வந்தாழ் புனல்சூடிப்
பெண்ணா ணாய பேரரு ளாளன் பிரியாத
கண்ணார் கோயில் கைதொழு வோர்கட் கிடர்பாவம்
நண்ணா வாகு நல்வினை யாய நணுகும்மே. (1)

மறுமா ணுருவாய் மற்றிணை யின்றி வானோரைச்
செறுமா வலிபாற் சென்றுல கெல்லா மளவிட்ட
குறுமா ணுருவன் றற்குறி யாகக் கொண்டாடுங்
கறுமா கண்டன் மேயது கண்ணார் கோயிலே. (5)

முன்னொரு காலத் திந்திர னுற்ற முனிசாபம்
பின்னொரு நாளவ் விண்ணவ ரேத்தப் பெயர்வெய்தித்
தன்னரு ளாற்கண் ணுயிர மீந்தோன் சார்வென்பர்
கன்னியர் நாளுந் துன்னமர் கண்ணார் கோயிலே (7)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—திருக்கண்ணார் கோயிலைத் தொழுவோர்களுக்குப் பாவம் நண்ணா ; முன் உள்ள பழிபோகும் ; நல்வினை நணுகும்.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) பேர் அருளாளனாதலின் பெண்ணும் ஆணுமாய் நின்றவன் ;—(2) **மண்ணி** - காவிரியின் பிரிவுகளுள் ஒன்று ; **கோகிலம்** - குயில் ; **வண்டு** - அடியார்களேயன்றி வண்டுகளும். எச்சவும்மை தொக்கது. **செந்து** - பெரும் பண்களுள் ஒன்று.—(3) **பாணி** - தாளம். **பாரிடம்** - பூதகணம் ; **எல்லி** - ஊழியிரவு ; **கல்இயல் இஞ்சி** - கல்மதில் ; **மஞ்சு** - மேகம் ;—(5) **குறுமாண் உருவன்** - **மாண்** - மாணி - பிரமசாரி ; வாமன உருவுடைய மால் ; **தற்குறியாக** - தன்னால் குறிக்கொண்டு வணங்கப்படும் குறியாக. சிவலிங்கக்குறி. விட்டுணு வாமனாவதாரத்திற் பூசித்த தலவரலாற்றுக் குறிப்பு. இத்தலத்துக்கு குறுமாணக்குடி. என்ற பெயர் வழங்குதலும் காண்க.—(7) கண்ணார் கோயில் என்ற பெயர்வந்த காரணம் குறிக்கும் தலவரலாறு குறித்தது. கோதம முனிவன்பால் இந்திரன் பெற்ற சாபமும், அது தீர்ந்த வகையுமாகிய வரலாறு. **முனி** - கோதமன் ; **விண்ணவர்** - இந்திரனும் அவனைச் சார்ந்த தேவர்களும் என்றலுமாம் ; **கண்ணார் கோயில்** என்ற பெயர்க் காரணம் கூறியபடி.—(8) **கண்ணார்** - கண்ணார் கோயில் ;—(9) செல்வனும் என உம்மை விரிக்க ; அந்த அமலக்கண்கொண்டு - என்க. **மலக்கண்** - யான் காண்பேன் என்று அகங்கரித்த கண் ; **அழலானன் தங்கு அமலக்கண்ணார் கோயில்** - அழலாகிய இறைவர் தங்குமிடமாகிய ; **அமலம்** - மலமின்மை செய்யும். **உள்ளமாகிய அம்(அழகிய) கமலம்** - இதயதாமரை. **ஓடு** - ஏழனுருபாய் வந்த உருபு மயக்கம். தமதுள்ளமாகிய அந்த அமலத்தோடு (அகங்கரமாகிய மாசு நீங்கிய) தூய்மையோடு என்றலும் ஆம்.

தலவிசேடம்:—திருக்கண்ணார் கோயில் - தலவரலாறுகள் பதிகம் 5 - 7 பாட்டுக்களுட் குறிப்பிடப்பட்டன. இது **குறுமாணக்குடி** என்று வழங்கப்படுகின்றது. **சுவாமி** - கண்ணாயிர நாதர் ; **அம்மை** - முருகுவளர் கோதை ; **தீர்த்தம்** - இந்திர தீர்த்தம் - இது வைத்தீசுவரர் கோயில் நிலயத்தினின்று தெற்கே 4 நாழிகையில் அடையதக்கது.

திருப்புள்ளிருக்கு வேளூர்

திருச்சிற்றம்பலம்   பண் - சீகாமரம்

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானா ருறையுமிடந்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே. (1)

செடியாய வுடறீர்ப்பான் றீவினைக்கோர் மருந்தாவான்
பொடியாடிக் கடிமைசெய்த புள்ளிருக்கு வேளூரைக்

கடியார்ந்த பொழிற்காழிக் கவுணியன்சம் பந்தன்சொன்
மடியாது சொல்லவல்லார்க் கில்லையாம் மறுப்பிறப்பே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—சம்பாதி சடாயு என்ற கழுகரசர் இருவர் பூசித்துப் பேறு பெற்றதனுற் புள்ளிருக்கும் வேளூர் என்ற பெயருடைய இத்தலத்தை வழிபட்டவர் வினைக்கீடாகிய பிறவிநோய் நீங்கி யின்பம் பெறுவர்.

பதிகப் பாட்டுக் குறிப்பு :—(1) சம்பாதி - சடாயு என்பார் - புள்ளானுர் இருவர்க்கு அரையன் என்க. அரையன் - தலைவன். அரசன் என்பது மருவிவந்தது. பாட்டுத்தோறும் இவ்விரு கழுகுகளது பூசனையை எடுத்துச் சாற்றியமை காண்க. ஐயறிவேயுடைய புட்களும் வழிபட்டுப் பேறடையுமானுல் அதைக் கண்டேனும் மக்கள் வழிபட்டுத் துன்ப நீங்கக் கடவர் என்று வழிப்படுத்தியது.—(2) ஒருபாகம் தையலாளோடும் என்க. தையலாள் - உமையம்மை ; தலஅம்மை தையனுயகி என்ற பெயர்க் குறிப்புமாம் ; ஐயந்தேர்ந்துழல்வான் - மூலமாகிய மல நோயுடைய உயிர்களின் துன்பங்களாகிய பலியைத் தாம் ஏற்றுத் தமது இன்பத்தை அவர்களுக்குக் கொடுப்பவர்; வைத்தியநாதர் என்ற குறிப்புக் காண்க ; மெய் சொல்லா இராவணன்· போய் சொல்லாது என்பன இராமன் கதையுள் இராவணனும் சடாயுவும் எதிர்ந்த போது அவரவர் தத்தம உயிர் தங்கும் பிராண நிலைகளை முறையே பொய்யாகவும், மெய்யாகவும் தெரிவித்துக் கொண்டு அதனுல் சடாயு உயிரிழக்க நேர்ந்த வதத்தின் வரலாறு குறித்தன ; உயிர்போனுன் - உயிரை இழந்த சடாயு ; அவன் பூசித்தபதி. அதனுல் சடாயுபுரி எனப் பெயர் பெற்ற பதி என்றலுமாம் ;—(3) யோசனை...... இனிதிருந்தான் - சம்பாதி தான் பூசிப்பதற்காகக் காவிரிப்பூம்பட்டினத்தில் நந்தன வனம் வைத்து அங்கு நின்றும் நாடோறும் மலர் கொண்டுவந்து வழிபட்ட வரலாறு. புகார் நகரம் இங்கு நின்று ஒரு யோசனைவழி (10 நாழிகையளவு) யுள்ளதும், மணிமேகலையுட் (3-53-54) புகார் நகரிற் சம்பாதிவனம் பற்றிப் பேசப்படுவதும் காண்க. இமையோர் நாடோறும் மலர்தூவ - சூரியன், செவ்வாய் முதலியோர் பூசித்திருத்தல் தலவரலாறு.—(4) ஏகாயம் - ஏகாசம் - மேலாடை.—(5) கீதம் - இறைவரது புகழ் பாடும் இசை. வேதத்தின்......வழிபட்டான் - சடாயு பூசித்த வரலாறு ; போதம் - சிவஞானம் ;—(6) திறங்கொண்ட......சிவதன்மமுரைத்த பிரான் - தலவரலாற்று ளொன்றன் குறிப்பு —(7) புந்தி ஒன்ற வைத்துகந்தான் - "ஒருநெறிய மனம் வைத்துணர்ந்து" வழிபட்டான் ; (சடாயு).—(8) மூக்கோடிவாளுளுடையான் - இராவணன் ; —(9) ஆதித்தன்மகன்......சடாயென்பான் - சடாயு-சம்பாதி என்ற இருவரும் சூரியனது மக்கள் என்பது வரலாறு. இவர்கள் ஞாயிற்று மண்டலம்வரை பறந்து சென்று, சிறகுகள் கரிந்து வீழ்ந்து, இத்தலத்தில் வழிபட்டுச் சிறகும் பேறும் பெற்றனர் என்பது தலச் சிறப்பு. "வெங்கதிர் வெம்மையின் விரிசிறை யிழந்த, சம்பாதி யிருந்த சம்பாதி வனமும்" (3-53-54) என்று மணிமேகலையினும் குறிக்கப் பட்டது. போதித்தல் - ஆற்றலால் எடுத்துக் காட்டுதல்.—(10) விடைத்துவரும்... பொருதழித்தான் - இராவணன் சீதையை வெளவிச் செல்லாமற் றடுத்து அவனுடன் சடாயு போர் புரிந்தான் என்ற இராமன் கதைக் குறிப்பு,—(11) சேடியாய...... மருந்தாவான் - இத்தல இறைவர் வைத்தியநாதர் எனப்படும் பொருள் ; 2-வது பாட்டும், "மந்திரமுந் தந்திரமு மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான்" என்ற தாண்டகமும் பார்க்க. மடியாது - மடி (சோம்பல்) யில்லாது ; உலகில் வாளாபிறந்தும் செத்தும் கழியாமல் என்றலுமாம். இல்லையாம் மறுபிறப்பே என்று பலன் அருளுதல் காண்க.

தலவிசேடம்:—திருப்புள்ளிருக்கு வேளூர் - இது வைத்தீசுவரர் கோயில் என்று விளக்கமாய் அறியப்படும்; சடாயு, சம்பாதி என்ற கழுகரசர் இருவர் பூசித்துச் சிறகும் பேறும் பெற்றனர். சடாயுபுரி, சம்பாதிபுரி என்று அவர்கள் பேருடன் சேர்த்து ஊர்ப் பெயர் வழங்கப்படும்; அவர்களைப்பற்றி இராமன் கதைத் தொடர்புகளும் அவர்கள் பூசித்த சிறப்பும் பதிகத்துள் விதந்து பேசப்படும். வேதங்களும், முருகப் பெருமானும், சூரியன், செவ்வாய் முதலிய தேவர்களும், இராமன், இலக்குவன் அனுமன் முதலியோரும் பூசித்துச் சித்திபெற்றனர். புள்-(சடாயு-சம்பாதி); இருக்கு-(வேதம்); வேள் - (முருகக் கடவுள்), ஊர் - (சூரியன்) என்று இவ்வரலாறுகள் ஊர்ப் பெயரினுள் அமைந்தமை காண்க. முத்துக்குமாரசுவாமி மிக விளக்கமாய் வீற்றிருந்து வேண்டுவார்க்கு வேண்டும் வரங்கொடுத்து விளங்கியருள்கின்றார். இது பற்றிக் குமரகுருபர சுவாமிகளது முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் சிறப்புடையது. சுவாமி - வைத்தியநாதர் - அம்மை - தையனாயகி; தீர்த்தம் - சித்தாமிர்த தீர்த்தம். இது மிகச் சிறப்புடையது. மூழ்கினோர் நோய்களைத் தீர்த்து இன்பந்தருவது.

இது வைத்தீசுவரன் கோயில் என்ற இருப்புப்பாதை நிலயத்தினின்றும் கிழக்கே ½ நாழிகை யளவில் உள்ளது.

2181. நீடு திருநின்றி யூரி னிமலனார் நீள்கழ லேத்திக்
கூடிய காதலிற் போற்றிக் கும்பிட்டு வண்டமிழ் கூறி
நாடுசீர் நீடூர் வணங்கி நம்பர் திருப்புன்கூர் நண்ணி
யாடிய பாத மிறைஞ்சி யருந்தமிழ் பாடி யமர்ந்தார். ௨௮௭

(இ - ள்) நீடு......கூறி - நீடும் திருநின்றியூரில் இறைவரது நீண்ட பாதங்களைத் துதித்துப் பொருந்திய விருப்பத்தினாற் பரவி வணங்கி வண்மையுடைய திருப்பதிகத்தை அருளிச் செய்து; நாடுசீர் நீடூர் வணங்கி - நாடும் சிறப்புடைய திருநீடூரைப் பணிந்து; நம்பர்......அமர்ந்தார் - இறைவரது திருப்புன்கூரைச் சேர்ந்து அருட் கூத்தியற்றும் திருவடிகளை வணங்கி அருந்தமிழ்ப் பதிகம்பாடி அங்கு விருப்புடன் எழுந்தருளியிருந்தனர்.

(வி - ரை) நாடுசீர்நீடூர் - திருநீடு என்ற குறிப்புமாம். "நெல்லால் விளை கழனி நீடூர்" "நிலையார் மணிமாட நீடூர்" "நிறைபுனற் கழனிச் செல்வ நீடூர் (தேவா) என்ற சிறப்புக்களின் குறிப்பும் காண்க. நிமலனார் - இயல்பாகவே பாசங்களி னீங்கியவர். இது சிவனெண்குணங்களுள் ஒன்று.

கூடியகாதல் - அங்குச் சேர்ந்ததனால் உண்டாகிய காதல் என்க. கழலை ஏத்துதலாற் கூடிய - பெருகிய - காதல் என்றலுமாம். "சிந்தை செயச் செயக், கருப்புச் சாற்றிலு மண்ணிக்குங் காண்மினே" (தேவா - திருப்புத்தூர்),

ஏத்தி - போற்றி - ஏத்தும் வகையிற் போற்றி; கூறி - சொன்மலர் மாலையாகச் சொல்லி.

ஆடிய - அருட்பெருங் கூத்தியற்றிய. 287

திருநின்றியூர்

திருச்சிற்றம்பலம் பண் - நட்டபாடை

சூலம்படை சுண்ணப்பொடி சாந்தஞ்சுடு நீறு
பாலம்மதி பவளச்சடை முடிமேலது பண்டைக்

காலன்வலி காலின்னொடு போக்கிக்கடி கமழும்
நீலம்மலர்ப் பொய்கைநின்றி யூரின்னிலை யோர்க்கே. (1)

அச்சம்மிலர் பாவம்மிலர் கேடும்மில ரடியார்
நிச்சம்முறு நோயும்மிலர் தாமுந்நின்றி யூரில்
நச்சும்மிட றுடையார்நறுங் கொன்றைநயந் தாளுப்
பச்சம்முடை யடிகடிருப் பாதம்பணி வாரே. (2)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—நின்றியூர் நிமலரையல்லாது எனது உள்ளம் வேறொன்றையும் உணராது ; பதிகம் 3-6 - 9 - பார்க்க. அவர் பாதம் பணியும் அடியார் அச்சம், பாவம், கேடு, நோய் முதலிய தீமைகள் என்றும் இலராவர். உ-பாட்டுப் பார்க்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) பாலம்மதி - பால் போன்ற மதி ; இளையமதி என்றலுமாம் ; பாலம் - நெற்றி ; நெற்றி மேற்றிங்கள் என்றலுமாம். 4-வது பாட்டும் பார்க்க. (2) அடியார் - அடிகள் திருப்பாதம் பணிவார் ; அச்சம், பாவம், கேடு, நோய் இலராவர். நஞ்சம் என்பது எதுகை நோக்கி வலிந்துநின்றது ; நச்சும்மிடறு - மென்றொடர்க் குற்றுகரம் மெல்லொற்று வல்லொற்றாயது ; அம் - சாரியை ; மகரவொற்று விரித்தல் விகாரம். பச்சம் - பக்ஷம் என்பதன் றிரிவு.—(4) கழல் தொழல் அல்லது அவர் அறிவு வேறு அறியார் ;—(5) குழல் - புல்லாங்குழல் ; குழலும் வண்டும் இசை செய்தலைக் கேட்டுக் குயில் எதிர் இசைபோலக் கூவும் என்பது தற்குறிப்பேற்றம் ;—(5) களைகண் - பற்றுக் கோடு.—(6) சலவம் - கங்கை,—(9) அல்லரேன ஆவாரேன - இன்னரென்றறியப் படாது நின்ற இவ்வழற்றுணர், பகைவரோ அன்றி நட்டாரோ என்ற ஐயம்.—(10) நெறியில்......நினைவு ஒன்றை - அயராதே - சிவஞானக் குறியில் வைத்த நினைப்பை மறவாமல் ; ஆதர் - கீழ்கள் ; சிவநெறி நினைவினை மறவாமலும், அவநெறிக் குறிகளை நினையாமலும் அடிவாழ்த்து மதுவே வாழ்த்தாவது ;

தலவிசேடம்:—திருநின்றியூர் - III பக்கம் - உஅரு பார்க்க.

திருநீரேர் -

பிள்ளையார் பதிகம் கிடைத்திலது ! தலவிசேடம் பக்கம் III உஅ0 பார்க்க.

திருப்புன்கூர்

திருச்சிற்றம்பலம் பண் - தக்கராகம்

முந்தி நின்ற வினைக ளவைபோகச், சிந்தி நெஞ்சே சிவனார் திருப்புன்கூர்
அந்த மில்லா வடிக ளவர் போலுங், கந்த மல்கு கமழ்புன் சடையாரே. (1)

மாட மல்கு மதில்சூழ் காழிமன், சேடர் செல்வ ருறையுந் திருப்புன்கூர்
நாட வல்ல ஞான சம்பந்தன், பாடல் பத்தும் பரவி வாழ்மினே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—அந்தமில்லா அடிகள் சடையார் ; பிறை வைத்தார் ; எயில் மூன்றெரித்தார்; கபாலி ; இத்தன்மையான இறைமைக் குணங்களையுடையவர் திருப்புன்கூர்ச் சிவனார் ; அவர் எங்கள் உச்சி உறையும் இறையார்.

பதிகப் பாட்டுக் குறிப்பு :—(1) சிவனார் - தலச்சுவாமி பெயர் சிவலோகநாதர் என்ற குறிப்பு.—(2) மூவராய முதல்வர் - அயனரியரனென்று மூவரையும் அதிட்டித்து

நிற்கும்முதல்வனார். "மூவரும் யானேன மொழிந்த வாறே"—(3)உச்சி-துவாதசாந்தத் தாமரை.—(4) சேவடியார் - 3-ல் கூறிய உச்சியிற் சேவடி வைத்தார் என்ற குறிப்பு.—(8) மலைஅது அ(ன்)னார் - மலைபோன்றார் ;—(9) பாடல் - வேதாகமங்களும், புனருற்பவத்தின் பொருட்டு நாத தத்துவத்தினின்று செய்யும் வீணையொலியும் ; ஆடல் - ஐந்தொழிற்கூத்தும் ;—(10) கூறை - உடை; துணி ; பிண்டம் - சோற்றுக் கவளம்; பிராந்தர் - மயக்க அறிவினர். கபாலி வேடம் கண்டுதொழுமின் - நக்க உருவமும் பலியுண்ணுதலும் ஒத்திருப்பினும், அவர்கள் பிராந்தர். ஆதலின் அதனுள் மயங்காதீர்; அடிகளது கபாலி வேடமே மருளை நீக்குவது ; அதனைத் தொழுமின் என்றது குறிப்பு.

தலவிசேடம்:—திருப்புன்கூர்—261-வது பாட்டின் கீழ்ப் பார்க்க. (1 - பக். ௩௬௨); அதனுள் "சீகாழிக்கு" என்பதை "வைத்தீசுவரன் கோயிலுக்கு" என்று திருத்தி வாசித்துக்கொள்க. III பக். உஅ௦ ம் பார்க்க.

2186. அங்குநின் றேகியப் பாங்கி லரனார் மகிழ்கோயி லான
எங்கணுஞ் சென்று பணிந்தே யேத்தி யிமவான் மடந்தை
பங்க ருறைபழ மண்ணிப் படிக்கரைக் கோயில் வணங்கித்
தங்கு தமிழ்மாலை சாத்தித் திருக்குறுக் கைப்பதி சார்ந்தார் ;

2187. திருக்குறுக் கைப்பதி மன்னித் திருவீரட் டானத் தமர்ந்த
பொருப்புவில் லாளரை யேத்திப் போந்தன்னி யூர்சென்று போற்றிப்
பருக்கை வரையுரித் தார்தம் பந்தணை நல்லூர் பணிந்து
விருப்புடன் பாட லிசைத்தார் வேதந் தமிழால் விரித்தார். ௨அ௬

2186. (இ - ள்) அங்கு நின்று ஏகி - அத்தலத்தினின்றும் புறப்பட்டுச் சென்று; அப்பாங்கில்......ஏத்தி - அந்தப் பக்கத்தில் இறைவர் மகிழ்ந்து வீற்றிருக்கும் திருக்கோயில்களாயினவற்றை எங்கும் சென்று பணிந்து துதித்து ; இமவான்......சாத்தி- பார்வதியம்மையாரது பங்கராகிய சிவபெருமான் எழுந்தருளிய திருப்பழமண்ணிப் படிக்கரைக் கோயிலை வணங்கி நிலைபெற்ற தமிழ் மாலையைச் சாத்தி ; திருக்குறுக் கைப்பதி சார்ந்தார் - திருக்குறுக்கைப் பதியினைச் சார்ந்தருளினார். ௨அ

2187. (இ - ள்) திருக்குறுக்கைப்பதி.........போந்து - திருக்குறுக்கையில் பொருந்தி அங்குத் திருவீரட்டானத் திருக்கோயிலில் விரும்பி எழுந்தருளிய மேரு மலை வில்லாளராகிய இறைவரைத் துதித்துப் புறப்பட்டுச்சென்று ; அன்னியூர் சென்று போற்றி-திருஅன்னியூர் சென்று துதித்து ; பருக்கை......விரித்தார்-பெரிய கையினையுடைய மலை போன்ற யானையை யுரித்த இறைவரது திருப்பந்தணை நல்லூரைப் பணிந்து, வேதங்களைத் தமிழால் விரித்துரைத்தருளிய பிள்ளையார் விருப்பத்துடனே பாடல்களைப் பாடியருளினார். ௨அ௬

2186. (வி - ரை) அப்பாங்கில் - அந்தப்பக்கங்களில்; திருநின்றியூர் - திருநீடூர் - திருப்புன்கூர் - என்ற இத்தலங்களின் பக்கங்களில்.

கோயிலான எங்கணும் - இவை திருக்கருப்பறியலூர், திருக்குரக்குக்கா, திருவாழ்கொளிபுத்தூர் முதலாயின என்பது கருதப்படும். ஆன - வெளிப்படலான ; இறைவர் எங்கணும் நிறைந்து வீற்றிருப்பவராயினும், அவர் வெளிப்படலாயின இடங்களே திருக்கோயில்களாக வழிபடப் பெறுவன என்பது குறிப்பு.

இமவான்மடந்தை - இமவான் - இமயமலையரசன் ; பர்வதராசன் என்பர். இக் காரணத்தால் உமையம்மையாரைப் பார்வதி என்ப.

பழமண்ணிப் படிக்கரை - பதிகம் கிடைத்திலது ! தலவிசேடம் பார்க்க. 288

2187. (வி - ரை) திருக்குறுக்கைப்பதி மன்னித் திருவீரட்டானத்தமர்ந்த - குறுக்கை - தலப்பெயரும், வீரட்டானம் கோயிலின் பெயரும் ஆம். தலவிசேடம் பார்க்க.

பொருப்பு வில்லாளர் - (பொன்) மலையை வில்லாகக் கொண்டவர். சிவ பெருமான்.

பருக்கைவரை - பரு - பருத்த. பெரிய; "பனைக்கை மும்மத வேழம்" "பருங்கை யானை" (தேவா); (2569)

கைவரை - கையையுடையமலை ; யானை ; வரைபோன்றதனை வரை என்றார்.

வேதம்தமிழால் விரித்தார் - பிள்ளையார். வேதப் பொருள்களைத் தமது தேவாரத் தமிழ்ப் பதிகங்களில் விரித்து உரைத்து உலகுக்கு எடுத்து உபதேசித்தருளியவர்.

விரித்தல் - மறைந்தும் சுருங்கியும் கிடந்த பொருள்களை விரித்து வெளிப்படுத்தலும், வேதம் பயிலும் ஒரு சிலரேயன்றிப் பலரும் அறியவிரித்தலுமாம்.

வேதம் தமிழால் - என்றதனால் ஆளுடைய பிள்ளையாரும் ஆசிரியர் சேக்கிழார் பெருமானும் கண்டும் கொண்டும் கூறிய வேதம் தமிழ்மொழியின் உள்ளதன்று என்பது பெறப்படும். இதுபற்றிய ஆராய்ச்சியாளர் இதனைக் குறிக்கொள்வாராக.

வேதந் தமிழால் விரித்தார் - பாடல் இசைத்தார் - என்க. விரித்தார் - விரித்தாராகிய பிள்ளையார் ; வினைப்பெயர் ; இவ்வாறன்றி, விரித்தார் - முற்றெச்சமாகக் கொண்டு, விரித்தாராய்ப் பாடல் இசைத்தார் என்று முடித்தலுமொன்று. ஈண்டு வேதம் விரித்தல் இறைவரது எங்கு நிறைந்த தன்மை முதலிய பலவும் எடுத்துரைக்கப்படுதல்; பதிகக் குறிப்புப் பார்க்க.

விருப்புறுபாடலிசைத்தார் - என்பதும் பாடம். 289

திருப் பழமண்ணிப்படிக்கரை - இத்தலத்திற்கு ஆளுடைய பிள்ளையாரருளிய பதிகம் சிதலரித் தொழிந்தது போலும்,

தலவிசேடம் :—பழமண்ணிப் படிக்கரை - காவிரி வடகரை 30-வது பதி ; மண்ணி - காவிரியினின்றும் பிரியும் கிளைகளுள் ஒன்று. பழமண்ணி - முன் காலத்தில் வந்த கிளை, நாளடைவில் தூர்வைப்பட்டோ, வேறு அதிகமான நிலங்களின் பயன்கருதியோ, பிற காரணங்களாலோ கையாளப்படாமற் போயினமையின் இப்போதுள்ள மண்ணியாறு வெட்டியமைக்கப் பட்டதென்றும், அதனால் அது பழமண்ணி என்று வழங்கப்பட்டதென்றும் கூறுவர். இத்தலம் இலுப்பைப்பட்டு என்று வழங்கப்படுகின்றது ; இறைவர் நஞ்சுண்டபோது அது உள்ளே போகாமல் அம்மையார் கையாற் றடுத்து நிறுத்தினமையால் சுவாமி இங்கு நீலகண்டம் காட்டினர் என்ற வரலாறு இத்தலம்பற்றிக் கேட்கப் படுகின்றது. "திருநீலமிடற் றெம்பிரான்" என்ற நம்பிகள் திருப்பதிகக் குறிப்பும், தலத்துச் சுவாமி - அம்மை - பெயர்களும் காண்க. பாண்டவர் வழிபட்ட சிவலிங்கங்கள் ஐந்து உள்ளன. சுவாமி - நீலகண்டர் ; அம்மை - அமிர்தகரவல்லி ; பதிகம் 1.

இது திருவாழ்கொளி புத்தூரினின்றும் மேற்கே மட்சாலைவழி ஒருநாழிகை யளவில் உள்ளது.

திருக்குறுக்கை வீரட்டனம் - இதற்கும் பிள்ளையார் பதிகம் கிடைத்திலது!

தலவிசேடம் - இறைவர் வீரஞ் செய்த (எட்டு) வீரட்டங்களுள் காமனை எரித்த வீரம் நடந்த தலம். "**தீர்க்கவாகு**" (நீண்ட கையினையுடையவர்) என்னும் முனிவர் ஆகாய கங்கை நீரினால் திருமஞ்சன மாட்டவிரும்பி தம் நீண்ட கைகளை உயர்த்த அவை குறுகின காரணத்தால் திருக்குறுக்கை எனப் பெயரெய்தியது என்பது தல வரலாறு. இத்தலத்துச்சபை "காமாங்க நாசனி சபை" என்றும், "சம்பு விநோத சபை" என்றும் திருமறைக்காட்டுத் தலபுராணம் கூறும். பதிகம் 2. (III - உஅ௯ பக்கம் பார்க்க.) குறுக்கையிற் காமதகன மூர்த்தியும், கடுக்காய் மரமும், ஊரின் தென்மேற்கில் தகனகுண்டமும் மனதை உருக்குவன என்பர் திரு. வ. சு. ஷண்முகம் பிள்ளை.

திருஅன்னியூர்

திருச்சிற்றம்பலம் பண் - குறிஞ்சி

மன்னி யூரிறை, சென்னி யார்பிறை, அன்னி யூரமர், மன்னு சோதியே. (1)
பழகுந் தொண்டர்வம், மழக னன்னியூர்க், குழகன் சேவடி, தொழுது வாழ்மினே.
இன்பம் வேண்டுவீ, ரன்ப னன்னியூர், நன்பொ னென்னுமின், உம்பராகவே. (6)
பூந்த ராய்ப்பந்தன், ஆய்ந்த பாடலால், வேந்த னன்னியூர், சேர்ந்து வாழ்மினே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—அன்னியூர் இறைவர் உயிர்க்குயிராகிய ஞானஒளி உருவர். அவரை அடைந்து வாழ்மின்.

பதிகப் பாட்டுக் குறிப்பு :—(1) **மன்னி ஊர் இறை** - உயிர்க்குயிராய் நிலை பெற்று உயிர்களை நடத்தும் தலைவர்; **சோதி** - ஞானஒளி உருவர்;—(2) **வம்** - வம்மின்;—(3) **நீதி** - நியதி; **பேணுதல்** - அதன்படி ஒழுக ஒருப்படுதல்.—(4) **சித்தர்**-சித்தத்துள் நிலைபெறுபவர். சித்திகளைத் தருபவர் என்றலுமாம்,—(5) **நிறைவு** - உயிர்களின் குறைகள் நீங்க இறைவனது நிறைவாம் தன்மை பெறுகிலை; **உறவு** - அன்பு; **அறவன்** - தரும உருவினன்.—(7) **பந்தம்** - மலம்;—(8) **தீர்த்தன்** - தூய்மை செய்பவன்;—(9) **அரவன்** - அரவு பூண்பவன்;—(11) **ஆய்ந்த** - மறையின் நுட்பங்களைக் கூறிய.

தலவிசேடம்:—**திருஅன்னியூர்** - காவிரிக்கு வடகரையில் 22-வது தலம். இது **பொன்னூர்** என்று வழங்கப்படுகின்றது. வருணன் பூசித்ததலம். இறைவரது ஒளியுருவம் இரண்டு பதிகங்களிலும் போற்றப்பட்டது. அடியார்களை வழிப்படுத்திப் பிள்ளையார் அருளிய பதிகப் பெருமையுடையது. சுவாமி - **ஆபத்சகாயர்**; அம்மை - **பெரியநாயகியம்மையார்**; தீர்த்தம் - **வருண தீர்த்தம்** - பதிகம் உ.

இது காவிரியின் வடகரையில் 21-வது தலமாகிய திருநீடூரினின்றும் மேற்கே மட்சாலைவழி மூன்று நாழிகையளவில் அடையத்தக்கது.

திருப்பந்தணைநல்லூர்

திருச்சிற்றம்பலம் பண் - புறநீர்மை

இடறினார் கூற்றைப் பொடிசெய்தார் மதிலை யிவைசொல்லி யுலகெழுந் தேத்தக்
கடறினா ராவர் காற்றுளா ராவர் காதலித் துறைதரு கோயில்
கொடிறனார் யாதுங் குறைவிலார் தாம்போய்க் கோவணங் கொண்டுகூத் தாடும்
படிறனார் போலும் பந்தணை நல்லூர் நின்றவெம் பசுபதி யாரே. (1)

கல்லிசை பூணக் கலையொலி யோவாக் கழுமல முதுபதி தன்னில்
நல்லிசை யாளன் புல்லிசை கேளா நற்றமிழ் ஞானசம் பந்தன்
பல்லிசை பகுவாய்ப் படுதலை யேந்தி மேவிய பந்தணை நல்லூர்
சொல்லிய பாடல் பத்தும்வல் லவர்மேற் றொல்வினை சூழகி லாவே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—பந்தணைநல்லூர் இறைவர் பசுபதி என்று வேதங்கள் ஏத்தும் தன்மையுடையவர்; (பதிகம் 3-வது பாட்டுப் பார்க்க); அவர் கடறு - காற்று - கழி - கடல் முதலாகிய எங்கும் நிறைந்தவர்; ஆனால் அவர் இருக்கும் சுவடு அறியப்படாதவர்; நல்லவர் அவரை நல்லரென்றேத்துவர்; அல்லவர் தீயர் என்னினும் அதுவும் அவரை ஏத்தியதே யாகும்; அவர் யாதும் குறைவிலார்; உயிர்களின் துயர்கண்டுருகி அவற்றுக்குறுதி செய்பவர்.

பதிகப் பாட்டுக் குறிப்பு ;—(1) இடறினர் - உதைத்தார்; கடறு - கானம்; பாலை என்றலுமாம்; கோடிறு - குறடு. கோடிறனர் - குறடுபோல உயிர்களைத்தாவி இறுகப்பற்றிவிடாதவர்; பசுபதியார் - தலத்துச் சுவாமி பெயர்; கோவணம்......படி றனர் - கோவணம் பற்றிய அமர்நீதியார் சரிதக் குறிப்புமாம்: "கிழிபட" (தேவா)—வ. சு. செ. அவர்கள் குறிப்பு.—(2) வாய்வந்தன சொல்லும் பழி - நிந்தைத்துதி. சுவடு தாமறியர் - தாம் தங்கிய அடையாளம் அறியப்படாதவர்; 3-வது பாட்டும் பார்க்க. (3) வேதப்பாட்டினர் - பாட்டினை உடையவர்; பாட்டின் பொருளானவர்.—(4) பல் கணங்கள் - உயிர்கள். அசுரரும் தேவகணங்களும் என்றலுமாம் (1899); மேனி கருகினர் - ஆலால மெழுதலால் உடல் கருகிய தேவர்.—(5) இருவடம் - பெரியமாலை; தோற்றமும் கேடும் பன்னினர் - உலக சிருட்டி சங்காரம் முதலியவற்றின் உண்மைகளை உணர்த்தியருளினர்.—(6) அண்மினர் - அணுகி ஏத்துமவர்; தீயர் என்றேத்தும் பண்பு - தீயர் என்று சொல்லினும் அதுவும் அவர்க்குத் துதியேயாகும் என்பது;—(7) எற்றினர் - கொன்றவர்; இடைகோள்வார் - தப்புபவர்; தெற்றினர் - அழித்தவர்; அடியிணை...முற்றினர் - முப்புரத்தில் வாழ்ந்த அடியர்களான மூன்று அசுரர்;—(8) இடவே - பாணி (தாளம்) கொட்டவே;—(9) ஆற்றலோம் என்ன - நாங்கள் ஆற்றலில்லோம் என்று அபயம்புக; பாற்றுதல்-அழித்தல்;—(11) புல்லிசை-புன்மைச் சொல்; ஏந்தி - ஏந்தியவர்; பெயர். கல்லிசை கல்விப்புகழ்;

தலவிசேடம்:—திருப்பந்தணைநல்லூர் - காவிரிக்கு வடகரையில் 35-வது தலம். உமைஅம்மையார் ஆடியபந்து அணைந்த காரணத்தால் இப்பெயர் பெற்ற தென்பது வரலாறு. தேவகன்னியரும் காமதேனுவும் பூசித்த தலம் என்பர்; இது பந்தநல்லூர் என்று வழங்கப்படும்; சுவாமி - பசுபதீச்சுரர்; பதிகம் பார்க்க; அம்மை - காம்பன்னதோளியார்; தலமரம் - கொன்றை; (பிள்ளையார் பதிகம் 5-வது பாட்டு). பதிகம் 2.

இது குற்றாலம் நிலயத்தினின்று வடகிழக்கே $1\frac{1}{2}$ நாழிகையளவில் காவிரிக்கு வடகரை மஞ்சிவாய்க்கால் பாலத்தினின்றும் வடமேற்கில் மட்சாலைவழி $4\frac{1}{2}$ நாழிகையில் உள்ளது. ஆடுதுறை நிலயத்தினின்று மேற்கே 11 நாழிகையிலும் அடையலாம். திருவிடைமருதூர் நிலயத்தினின்றும் வடகிழக்கே $5\frac{1}{2}$ நாழிகை சென்று கஞ்சனூரை அடைந்து அங்கு நின்றும் பின்னும் வடகிழக்கே 2 நாழிகை சென்று அடைவது மற்றொரு வழி.

2188. அப்பதி போற்றி யகல்வா ரரனுர் திருமணஞ் சேரி
செப்பருஞ் சீர்த்தொண்ட ரோடுஞ் சென்று தொழுதிசை பாடி
எப்பொரு ளுந்தரு மீச ரெதிர்கொள்பா டிப்பதி யெய்தி
யொப்பில் பதிகங்கள் பாடி, யோங்குவேள் விக்குடி யுற்ருர். ௨௯0

(இ - ள்) அப்பதி - அகல்வார் - அத்திருப்பதியினைப் போற்றி மேற்செல்வா ராகி ; அரனுர்......பாடி - சிவபெருமானது திருமணஞ்சேரியினைச் சொல்லுதற்கரிய சிறப்பையுடைய திருத்தொண்டர்களுடனே சென்று வணங்கித் திருப்பதிகம்பாடி ; எப்பொருளும்......பாடி - எல்லாப் பொருள்களையும் தருகின்ற இறைவரது திரு எதிர்கொள்பாடிப் பதியினையடைந்து ஒப்பற்ற திருப்பதிகங்களைப் பாடியருளி ; ஓங்கு......உற்ருர் - ஓங்கும் திருவேள்விக்குடியினைச் சேர்ந்தார்.

(வி - ரை) **அரனுர்** - அரன் - பசுக்களின் பாசங்களை அரிப்பவன். பந்தணைநல்லூரில் வேதமூலப் பொருள்களை விரித்தருளிய பிள்ளையார், திருமணஞ்சேரியில் அம்முதல்வரே முதல்வராந்தன்மையை உலகுக் கறிவுறுத்தியருளினுர் என்பது குறிக்க அரனுர் என்ருர். பதிகக் குறிப்புப் பார்க்க.

எப்பொருளும் தரும் ஈசர் எதிர்கொள்பாடி - உலகுக்கு முதல்வராதலின் தமது அருளைந் தொழிற்பாட்டிற்கு இடமாயுள்ள உயிர்களுக்கு வேண்டுவன எல்லாம் தரும் இறைமைத் தன்மையையுடையராதலை ஈண்டு உலகுக் கறிவுறுத்தினுர் என்பது குறிப்பு. பதிகக் குறிப்புப் பார்க்க. நம்பிகள் பதிகமும் பார்க்க. ஒப்பில் **பதிகங்கள்** என்ற குறிப்புமிது. " அடியவ ரிச்சையி லெவையெவை யுற்றன வவைதரு வித்தருள் பெருமாளே " (திருப்புகழ்)

பதிகங்கள் - தலப்பதிகங்கள் பலவும் குறிப்பு. 290

2189. செழுந்திரு வேள்விக் குடியிற் றிகழ்மண வாளநற் கோலம்
பொழிந்த புனற்பொன்னி மேவும் புனிதத் துருத்தி யிரவிற்
றழும்பிய தன்மையுங் கூடத் தண்டமிழ் மாலையிற் பாடிக்
கொழுந்துவெண் டிங்க ளணிந்தார் கோடிகா விற்சென் றடைந்தார்.

(இ - ள்) செழுந்திரு......கோலம் - செழுமையாகிய திருவேள்விக் குடியில் விளங்கும் திருமணவாளக் கோலமானது ; பொழிந்த......துருத்தி - பொய்யாது வருகின்ற நீர்வளத்தையுடைய தூய்மையாகிய திருத்துருத்தியில் பகலில் காணக் காட்டி ; இரவில்...பாடி - இரவில் இங்கு (வேள்விக்குடியில்) எழுந்தருளிய தன்மையினையும் சேர்த்து அறிவுறுத்தித் தண்ணிய தமிழ்மாலையாகிய திருப்பதிகத்திற் பாடியருளி ; கொழுந்து......அடைந்தார் - முளைக்கும் கொழுந்துபோன்ற வெள்ளிய பிறைச் சந்திரனை அணிந்த இறைவரது திருக்கோடிகாவிற் போய் அடைந்தனர்.

(வி - ரை) **மணவாள நற்கோலம் - துருத்தியிலே (பகலிற் காட்டி) - இரவில் வேள்விக் குடியில் தழும்பிய தன்மை** என்க. பகலிற் காட்டி என்பது தொக்கு நின்றது. **துருத்தி** - திகழ்மணவாள நற்கோலம் வேள்விக் குடியில் இரவில்-தழும்பிய என்றதனுல் துருத்தியில் பகலில் விளங்குதல் பெறப்படும். " பகலிடம் புகலிடம் வீங்கு நீர்த்துருத்தியார் " என்ற பதிகம் காண்க.

கூட - இந்த இரண்டும் ஒரே தலமாகக் கருதப்படுதல் மரபு. தலவிசேடம் பார்க்க.

போழிந்த......துருத்தி - துருத்தி - ஆற்றிடைக்குறை. காவிரியின் நீர்ச் செழிப்பினால் உளதாகிய ஆற்றிடைத்திடர் என்பது குறிப்பு. பொழிந்தபுனல் - பருவந் தவறாது வரும் தன்மையும் மிகுதியாய் வரும் நிலையும் குறிப்பு. திடர் உண்டாதலுக்குரிய காரணமும் குறித்துணர்த்தியபடி.

புனிதத்துருத்தி - ஆற்றிடைக் குறையானது, இறைவரை வணங்குதற்குரிய தூய இடங்கள் பலவற்றுள் ஒன்றாக வைத்தெண்ணப்படுதல் குறிக்கப் புனிதம் என்றார். "காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்" (திருமுருகு).

தழும்புதல் - விளங்க வெளிப்பட்டு எழுந்தருளியிருத்தல்.

கோழுந்து - புதிதாய்த் தோன்றுதலிற் கொழுந்து போலும் என்பதாம்; 291

சில குறிப்புக்கள் ;—இறைவர் வேள்விக்குடியும் துருத்தியுங்கூட வீற்றிருந்த தன்மைபற்றிப் பிள்ளையார் அருளியதுபோல, ஆளுடைய நம்பிகளும் "மூப்பதுமில்லை" என்ற பண் - நட்டராகப் பதிகத்துள் "காப்பது வேள்விக்குடி தண்டுருத்தி யெங் கோன்" என்று சேர்த்துப்பாடி அருளியதும் காண்க. துருத்தி காவிரிக்குத் தென் கரையில் 37-வதாகத் தனித் தலமாகவும் போற்றப்பட்டு மூவர் முதலிகள் திருப் பதிகங்களும் பெற்ற சிறப்புடன் விளங்குகின்றது. பிள்ளையாரும் இவ்வியாத்திரையில் பின்னர்த் தொடர்ந்து காவிரிக்குத் தென்கரைத் தலங்களை வணங்கிச் சென்றருளிய போது திருவாவடுதுறையிற் பொற்கிழிபெறப் பாடிப் பின் திருத்துருத்தியினையும் வணங்கி "வரைத்தலைப் பசும்பொன்" (நட்டராகம் - திருவிராகம்) என்ற பதிகம் பாடியருளினர். புரா. 436 பாட்டுப் பார்க்க. இதில் ஆளுடைய நம்பிகள் வடகுளத் துக் குளித்துப் புதியபிணி நீங்கினர். அரசுகளது திருநேரிசைப் பெருமையும் கருதுக. இது (துருத்தி) குற்றாலம் என வழங்கப்படும். (பாண்டி நாட்டுத் திரு குற்றாலம் வேறு.)

திருமணஞ்சேரி

திருச்சிற்றம்பலம் — பண் - இந்தளம்

அயிலாரு மம்பத ளாற்புர மூன்றெய்து, குயிலாரு மென்மொழி யாளொரு கூறாகி
மயிலாரு மல்கிய சோலை மணஞ்சேரிப், பயில்வானைப் பற்றிநின் றார்க்கில்லை பாவமே.
கண்ணாருங் காழியர் கோன்கருத் தார்வித்த, தண்ணார்சீர் ஞானசம் பந்தன் றமிழ்மாலை
மண்ணாரு மாவயல் சூழ்ந்த மணஞ்சேரி, பண்ணாரப் பாடவல் லார்க்கில்லை பாவமே.

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—மணஞ்சேரி யிறைவரைப் பணிபவர் வினை தீரும். அவர்மேல் வினைசேரா ; அவர்க்கு இன்பம் எய்தும்.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) அயில் - கூர்மை ;—(3) எய்ப்பானார் - தொண்டு செய்து இளைத்தவர் ; (5) எறி - பறித்தல் ; வெறி - மணம் விரித்தல் என்றலுமாம் .

தலவிசேடம் :—திருமணஞ்சேரி காவிரிக்கு வடகரை 25-வது தலம். கீழைத் திருமணஞ்சேரி என்று வழங்கப்படும் ; காமவேள் பூசித்துப் பேறு பெற்றதலம் என்ப. வணிகப் பெண்களிருவர் தங்கள் சந்ததிகளுட் கொண்டுங் கொடுத்தும் சம்பந்தம் செய்துகொள்ளஉடன்பட்டிருக்க, ஒருத்தி வயிற்றில் மகவு ஆமையாயிருக்கக்கண்டு மற்றவள் பெண் கொடுக்க மறுக்கவே, அந்த ஆமை பூசித்து மனித உருவம்பெற்று

அப்பெண்ணை மணக்கும் பேறு பெற்றது என்பது தலவரலாறு. சுவாமி - அருள் வள்ளனநாதர் ; அம்மை - யாழினு மென்மொழியம்மை - பதிகம் 2.

இத்தலம் 24-வது திரு எதிர்கொள்பாடியினின்றும் கிழக்கே ½ நாழிகையளவில் உள்ளது.

திருஎதிர் கோள்பாடி - பிள்ளையாரது பதிகம் கிடைத்திலது. அத்திருப்பதிகக் குறிப்பு இறைவர் எப்பொருளுந்தரும் ஈசராவார் என்பது போலும். 2188-ல் ஆசிரியர் காட்டியருள்வது காண்க. நம்பிகள் பதிகம் பார்க்க. தலவிசேடம் III - பக்கம் உஅகூ பார்க்க. ஐராவதம் பூசித்த காரணத்தால் சுவாமி ஐராவதேசுவரர் எனப்பெறுவர். அம்மை - மலர்க்குழல் நாயகி.

திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும்

திருச்சிற்றம்பலம் பண் - சாதாரி

ஓங்கிமே லுழிதரு மொலிபுனற் கங்கையை யொருசடைமேற்
றாங்கினா ரிடுபலி தலைகல னாக்கொண்ட தம்மடிகள்
பாங்கினா லுமையொடும் பகலிடம் புகலிடம் பைம்பொழில்சூழ்
வீங்குநீர்த் துருத்தியா ரிரவிடத் துறைவர்வேள் விக்குடியே. (1)

விண்ணுலாம் விரிபொழில் விரைமணற் றுருத்திவேள் விக்குடியும்
ஒண்ணுலா மொலிகழ லாடுவா ரரிவையோ டுறைபதியைத்
தண்ணுலாம் புகலியு ளருமறை ஞானசம் பந்தன்சொன்ன
பண்ணுலா மருந்தமிழ் பாடுவா ராடுவார் பழியிலரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—இறைவர் உமையொடும் பகலில் திருத்துருத்தியிலும் இரவில் திருவேள்விக் குடியிலுமாக மணவாளக் கோலமாக எழுந்தருளியுள்ளார். இரண்டும் ஒரே தலமாகக் கருதப்படுவன.

பதிகப் பாட்டுக் குறிப்பு :—(1) வீங்குநீர் - நீர்ச்செழிப்பு மிக்க. துருத்தி - ஆற்றிடைக் குறை.—(3) மழைவளர் - மழை - இங்குக் குளிர்ச்சியுடைய என்ற பொருள்தந்து நின்றது ; விழை - விருப்பம் ;—(5) களம்கொள - இருக்குமிடமாக ;—(9) கரைகடல் - கரையும் கடல். கரைதல் - ஒலித்தல் ; அரவணைக் கடவுள் - திருமால் ;—(10) அயமுக வெயில் - கொடிய வெயில் ; வியனகர் - இடமகன்ற நகரம் ;—(11) விரைமணல் துருத்தி - மலர்த் தாது படிந்த மணமுடைய மணற்பரப்புடைய துருத்தி ; "தூமணற் றுருத்தி யானை" (அப் - தேவா) ;

தலவிசேடம்:—திருவேள்விக்குடி - காவிரியின் வடகரையில் 23-வது தலம். காவிரியின் தென்கரை 37வது தலமாகிய துருத்தியுடன் சேர்த்து ஒருதலமாகக் கருதப்படுவது. "துருத்தி வேள்விக்குடியும்......அரிவையோடுறை பதியை" என்று பதிகத்துள் பிள்ளையார் அருளுதல் காண்க. இரண்டனையும் சேர்த்து ஒரே பதிகத்தாற் போற்றியதும் குறிக்க. தலவிசேடம் III - பக்கம் உஅஅ - பார்க்க.

2190. திருக்கோடி காவி லமர்ந்த தேவர்சி காமணி தன்னை,
எருக்கோ டிதழியும் பாம்பு மிசைந்தணிந் தானை,வெள் ளளனப்
பருக்கோடு பூண்டபி ரானைப், பணிந்துசொன் மாலைகள் பாடிக்
கருக்கோடி நீப்பார்கள் சேருங் கஞ்சனூர் கைதொழச் சென்றார்.

(இ - ள்) திருக்கோடிகாவில்...பாடி - திருக்கோடிகாவில் விரும்பி எழுந்தருளிய தேவர்களுக்குச் சிகாமணி போன்ற இறைவரை, எருக்குடனே கொன்றையினையும் அணிந்தவரை, வெள்ளைப் பன்றியாகிய திருமாலினது பரிய கொம்பினைப் பூண்ட பெருமானைப் பணிந்து சொன்மாலையாகிய திருப்பதிகத்தினைப் பாடி ; கருக்கோடி... சென்றார் - கருவின் கோடியை நீப்பவர்கள் சேர்தற்கிடமாகிய திருக்கஞ்சனூரைத் தொழுவதற்குச் சென்றருளினர்.

(வி - ரை) தேவர்சிகாமணி - தேவர்கள் தலைமேற் சூடும் முடிமணி போன்றவர். சிகா - சிகை ; முடி என்ற பொருளில் வந்தது. சிகாமணி ; முடிமேற் சூடும்மணி. மணிபோன்றவரை மணி என்றார். தரித்தார்க்குச் செல்வ நலங்களையும், கண்டார்க்கு விருப்பத்தையுந் தருவன மணிகள் ; அவைபோல இறைவரும் தம்மைச் சென்னிமீது தரித்தார்க்குப் போகமும் வீடும் தருபவர் ; ஆதலின் சிகாமணி எனப் பெறுவர். தேவரும் தம் சிகாமணியாகக் கொண்டு சென்னி மேல் தரித்துக் கொள்ளும் இறைமைத் தன்மையுடையோன் என்றபடி.

எருக்கோடு இதழியும் - புல்லியதாகிய எருக்குடன் நல்லதாகிய இதழியும் என்க. இரண்டும் ஒப்பாக. எருக்கு...அணிந்தான் - விருப்பு வெறுப்பு இல்லாத இறைமைத் தன்மையின் குறிப்பு.

சிகாமணிதன்னை - அணிந்தானை - பிரானைப் பணிந்து என மூன்றும் ஒரு பொருள் மேனின்றன ; கோடிகா - மூன்று கோடி - (திரிகோடி) இருடிகள் பூசித்த தலமென்று தலப்பெயர் வரலாற்றுக் குறிப்புமாம்.

வெள்ளேனப் பருக் கோடு பூண்டானை - வெள்ளேனம் - திருமால் கொண்ட வெள்ளைப்பன்றி யவதாரம். கோடுபூண்டது - அந்த அவதாரத்தில் அப்பன்றியின் ஆற்றலைச் சிவபிரான் அடக்கி அதன் கொம்பைப் பறித்தணிந்து கொண்டவரலாறு குறித்தது. "ஏன முளைக்கொம் பவை பூண்டு" (தேவா)

கருக்கோடி நீப்பார்கள் - கரு - பிறவி ; கோடி - எல்லை; பிறவியின் எல்லையினைக் கடப்பவர்களே திருக்கஞ்சனூரினை அணுகி வணங்குவார் என்பது. கோடிக்கணக்கான பிறவி என்று எண்பதற்றி உரைப்பாருமுண்டு. நீத்தல் - கடத்தல் ;

பருக்கோடணிந்த - என்பதும் பாடம். 292

திருக்கோடிகா

திருச்சிற்றம்பலம் பண் - நட்டராகம்

இன்றுநன்று நாளைநன் றென்றுநின்ற விச்சையாற்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்றயங்கு சோதியான் வெண்மதி விரிபுனற்
கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே. (1)

கொந்தணி குளிர்பொழிற் கோடிகாவு மேவிய
செந்தழ லுருவனைச் சீர்மிகு திறலுடை
யந்தணர் புகலியு ளாயகேள்வி ஞானசம்
பந்தன தமிழ்வல்லார் பாவமான பாறுமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு ;—வாழ்க்கை நிலையாமை கூறி மக்களை இறைவன் திருநெறியில் வழிப்படுத்தியது. "கோடி காவனைக் கூறாத நாளெல்லாம், பாடி காவலிற்பட்டுக்

கழியுமே" (தேவா).; "காலைக் கரையிழையாற் கட்டித்தாங் ஞைகயார்த்து, மாலை தலைக் கணிந்து மையெழுதி, மேலோர், பருக்கோடி மூடிப் பலரழா முன்னம், திருக்கோடி காவடைநீ சென்று", (ஐயடிகள் - க்ஷேத் - வெ - 6 11-ம் திருமுறை) என்பன முதலிய திருவாக்குக்களின் கருத்தும் காண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு:—(1) பொன்றுகின்ற - கழிந்துபோய்க் கொண்டிருக் கின்ற; உறுதியாய் இறந்துபடுகின்ற - "பொன்றுங்காற் பொன்றாத் துணை" (குறள்); விரிபுனல்- கங்கை;—(2) ஆதரித்து - அபிமானித்து; விரும்பி; நல்ல தோர் நெறி - இவ்வாழ்க்கை போலாது துன்பமற்ற நெறி; சிவநெறி - "தக்க தோர் நெறி" (3) என்பதும் காண்க; வெள்வளை - வளையணிந்த அம்மை; (6) ஏவம் - எவ்வம்; குற்றம்;—(7) ஏண் - பெருமை; மாண் - மாட்சி.— (8) தசமுகன் - இராவணன்; வரை - மலை; கயிலை;—(10) தட்டு - தடுக்கு; விட்ட - தொங்கவிட்ட.

தலவிசேடம்:—திருக்கோடிகா - 3 கோடி முனிவர்கள் பூசித்தபதி. திருத் தாண்டகமும் திருக்குறுந்தொகையும் பெற்றதலம். சுவாமி - திரிகோடீசுரர்; அம்மை - வடிவம்மை; தீர்த்தம் - காவிரி - சிருங்கதீர்த்தம் - (கோயிலுக்கு வடக்கில் உள்ள குளம்.) பதிகம் - 4.

நாரசிங்கன்பேட்டை நிலயத்தினின்று 1 நாழிகை யளவும், 36-வது கஞ்சனூரி னின்றும் கிழக்கே மட்சாலைவழி 2 நாழிகை யளவிலும் அடையலாம். திருவிடைமரு தூரினின்றும் $1\frac{1}{2}$ நாழிகை; இடையில் காவிரியைக் கடந்து அடைவது மற்றொருவழி.

2191. கஞ்சனூ ராண்டதங் கோவைக் கண்ணுற் றிறைஞ்சிமுன் போந்து,
மஞ்சணை மாமதில் சூழு மாந்துறை வந்து வணங்கி
யஞ்சொற் றமிழ்மாலை சாத்தி யங்ககன் றன்பர்முன் னாகச்
செஞ்சடை வேதியர் மன்னுந் திருமங் கலக்குடி சேர்ந்தார். ௨௯௩

(இ - ள்) கஞ்சனூர்...போந்து - திருக்கஞ்சனூரில் ஆட்சிபுரிந்து வீற்றிருந் தருளும் தமது பெருமானைக் கண்டு கும்பிட்டு மேலே சென்று; மஞ்சு...சாத்தி - மேகந் தவழும் மதில் சூழ்ந்த திருமாந்துறையிற்போய் வணங்கி அழகிய சொன்மாலை யாகிய திருப்பதிகம் சாத்தி; அங்ககன்று...சேர்ந்தார் - அங்கு நின்றும் புறப்பட்டு அன்பர்கள் எதிர் கொள்ளச் சிவந்த சடையினையுடைய வேதியராகிய சிவபெருமான் நிலைபெற வீற்றிருந்தருளும் திருமங்கலக்குடியினைச் சேர்ந்தருளினர்.

(வி - ரை) கஞ்சனூராண்ட தம் கோவை - "கஞ்சனூ ராண்ட கோவை" என்ற ஆளுடைய அரசுகளது இத்தலத் திருத்தாண்டகத்தின் ஆட்சிபோற்றப்பட்டது.

கண்ணுற்று - தமது மனத்துப்பொருந்தக் கண்டு. கண்ணுறல் - காதல்.

மாந்துறை - இது மேற்கில் காவிரிக்கு வடகரை 58-வது தலமாய்த் திருஅன்பிலாலந்துறைக்கு அணிமையில் உள்ள மற்றொரு திருமாந்துறையுடன் மயங்கியறிதற்பாலதன்று. இதற்குப் பிள்ளையார் பதிகம் கிடைத்திலது! இது வைப்புத் தலங்களுள் ஒன்று. கஞ்சனூருக்கும் திருமங்கலக்குடிக்கும் இடையில் அணிமையில் உள்ளது. அன்பர் முன்னாக - அடியார்கள் முன்வந்து எதிர்கொள்ள.

மஞ்சணிமாமதில் - என்பதும் பாடம். 293

தலவிசேடம்—திருக்கஞ்சனூர் - பிள்ளையார் பதிகம் கிடைத்திலது! கஞ் சனது (கம்சன்) நகரம் என்பது தலப்பெயர். பிரமதேவரும் அனற் கடவுளும்

பூசித்த தலமென்ப. "அனலோன் போற்றும்" (தேவா); அரதத்த சிவாசாரிய சுவாமிகள் அவதரித்துச் சிவவிளக்கமுடையராய் வீற்றிருந்து பல அற்புதங்களாற் சைவத்தாபனஞ் செய்த சிறப்புடையது; தலத்துக்கு மேற்கே இவரும் இவர் வழிபட்ட சிவலிங்கமூர்த்தியும் தாபிக்கப்பட்டு வழிபடப் பெறுகின்றனர். நடராசர் சிவகாமித் திருவுருவங்கள் சிலா உருவமாக உள்ளன, பதிகம் 1.

நாரசிங்கன் பேட்டை நிலயத்திலிருந்து வடக்கே காவிரிக்கு வடகரையில் 1 நாழிகையளவில் உள்ளது.

2192. வெங்கண் விடைமேல் வருவார் வியலூ ரடிகளைப் போற்றித்
தங்கிய வின்னிசை கூடுந் தமிழ்ப்பதி கத்தொடை சாத்தி
அங்க ணமர்வார்தம் முன்னே யருள்வேடங் காட்டத் தொழுது
செங்கண்மா லுக்கரி யார்தந் திருந்துதே வன்குடி சேர்ந்தார். ௨௧௯௪

(இ - ள்) வெங்கண்...சாத்தி - வெவ்விய கண்ணுடைய இடபத்தின் மேல் வருவாராகிய திருவியலூர் இறைவரைத் துதித்துத் தங்கிய இனியஇசை பொருந்திய தமிழ்ப் பதிகமாலை சாத்தி; அங்கண்...தொழுது - அத்தலத்தில் விரும்பி எழுந்தருளி யிருக்கும் தமது முன்பு இறைவர் அருட்டிருவேடம் நேரே காட்டிடத் தொழுது; செங்கண்...சேர்ந்தார் - செங்கண்மாலுக்கு அறிவரியவராகிய இறைவரது திருந்து தேவன்குடியினைச் சென்று சேர்ந்தருளினர்.

(வி - ரை) வருவாராகிய - அடிகளை என்க.

தங்கிய இன்னிசைகூடும் - தங்கிய ஓசை பெற்று மேற் செல்லும் பதிக யாப்பிசையமைதிக் குறிப்பு.

அங்கண்...தொழுது - இத்தலத்தில் பிள்ளையாருக்கு இறைவர் நேரே அருள் வேடம் காட்டிய செய்திக் குறிப்பு. "கண்ணார்தரு முருவாகிய கடவுள்ளிடம்" "விண்ணோரொடு மண்ணோர்தொழும்" என்ற பதிகம் (5) இக்குறிப்புப் போலும்.

அமர்வார் - இறைவர் என்று கொண்டு அமர்வார் - காட்ட என்று கூட்டி யுரைப்பாருமுண்டு.

விடைமீதுமேவும் - என்பதும் பாடம். 294

திருவியலூர்

திருச்சிற்றம்பலம் பண் - நட்டபாடை

குரவங்கமழ் நறுமென்குழ லரிவையவள் வெருவப்
பொருவெங்கரி படவென்றதன் னுரிவையுட லணிவோன்
அரவும்மலை புனலும்மிள மதியுந்நகு தலையும்
விரவுஞ்சடை யடிகட்கிடம் விரிநீர்விய லூரே. (1)

விளங்கும்பிறை சடைமேலுடை விகிர்தன்விய லூரைத்
தளங்கொண்டதொர் புகலித்தகு தமிழ்ஞானசம் பந்தன்
துளங்கிறமிழ் பரவித்தொழு மடியாரவ ரென்றும்
விளங்கும்புக ழதனோடுயர் விண்ணும்முடை யாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—இறைவரது இடம் விரிநீர் வியலூரே.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) குரவம் - குராமலர் ;—(2) ஏறு - இடபம் ; நிலையானன் - அழிவில்லாதவன் ; எல்லா உயிருள்ளும் நிலைபெற்றவன் ;—(4) கழை முத்தம் நிரை சிந்தி - மூங்கிலினின்று முத்துத் தோன்றுதல் குறிப்பு.(492) —(6) நிலையவன் - தவத்தின் உறைத்து நின்ற அருச்சுனன்.—(7) இரவு - இரத்தல் - பலி ஏற்றல். உயிரான் - உயிர்க்குயிராயுள்ளவன் ; விளைபொருள்கள் தானாகிய தலைவன் - புவனங்களை மாயையாகிய தனது பரிக்கிரக சத்தியினின்றும் தோற்றுவிப்பவன்.—(9) அளம்படுதல் - வருந்துதல் ; விளம்பட்டு - வெளிப்பட்டு ;—(10) தடுக்கு - பாய். பிடக்கு - பிடகநூல்

தலவிசேடம்:—திருவியலூர் - காவிரிக்கு வடகரையில் 43-வது தலம். இங்குக் காவிரி பரந்து செல்லுதலின் விரிநீர் வியலூர் என்று பதிகத்துப் போற்றப்பட்டது. இது பண்டாரவாடைத் திருவிசநல்லூர் என்று வழங்கப்படுகின்றது. இங்கு ஆளுடைய பிள்ளையாருக்கு இறைவர் அருள்வேடங் காட்டிய வரலாற்றுக் குறிப்புப் பதிகத்துள் 5-ம் பாட்டினும் புராணத்துள்ளும் காண்க. சுவாமி - யோகாநந்தேசுவரர் ; அம்மை - சாந்தநாயகி ; பதிகம் 1.

இது திருவிடைமருதூர் நிலயத்தினின்றும் வடமேற்கே வேப்பத்தூர் மட்சாலை வழி 2½ நாழியளவில் அடையத்தக்கது.

2193. திருந்துதே வன்குடி மன்னுஞ் சிவபெரு மான்கோயி லெய்திப்
பொருந்திய காதலிற் புக்குப் போற்றி வணங்கிப் புரிவார்
" மருந்தோடு மந்திர மாகி மற்று மிவர்வேட " மாமென்
றருந்தமிழ் மாலை புனைந்தா ரளவில்ஞா னத்தமு துண்டார். உகருரு

(இ - ள்) திருந்து தேவன்குடி......புரிவார் - திருந்துதேவன்குடியில் நிலைபெற வீற்றிருந்தருளும் சிவபெருமானது திருக்கோயிலினைச் சேர்ந்து ; பொருந்திய...... புரிவார் - பொருந்திய காதலினாலே புகுந்து துதித்து வணங்கி நினைவாராகி ; மருந்தொடு......என்று - இவர்வேடம் மருந்தும் மந்திரமும் ஆம் என்று ; அருந்தமிழ்மாலை......அமுதுண்டார் - அளவில்லாத ஞான அமுதினை உண்டாராதலின் பிள்ளையார் அரிய தமிழ்மாலையைச் சாத்தியருளினர்.

(வி - ரை) திருந்து தேவன்குடி - தலப்பெயர் ; திருந்து என்பது காரணக் குறியாகிய அடைமொழியாய்த் தேவன் குடி என்ற தலப்பெயரோடு சேர்த்து வழங்கலாயிற்று. திருந்துதலாவது உயிர்கள் சீர்திருந்துதற் கேதுவாதல். பிறவினை தன்வினையாய் வந்தது. தேவன் - சிறப்புப்பற்றித் தேவதேவனாகிய சிவபெருமானைக் குறித்தது. 'தேவர் தேவு" (1) - (11) பதிக ஆட்சி காண்க. சிவபெருமான் என்று இறைவரது சிறப்பாகிய பெயராற் கூறியதும் இக்குறிப்பு.

புரிவார் - புரிதல் - இடைவிடாது நினைத்தல்; புரிவார்-முற்றெச்சம். புரிவாராகி ; "புரிந்து கேட்கப்படும்" (பதிகம்). புரிதல் - வலம்வருதல் என்ற குறிப்பும் படநின்றது.

" மருந்தொடு......வேடமாம் " என்று - பதிகக் கருத்து. பதிகக் குறிப்புப் பார்க்க.

அளவில் ஞானத்தமுதுண்டார் - அணைந்தார் - உண்டாராதலின் எனக்காரணக் குறிப்புப்பட உரைக்க நின்றது. என்னை ? அடிகள் வேடங்களின் தன்மையும், அது உயிர்களுக்குத் துன்பநீக்கி இன்பமளித்து உறுதி பயக்கும் நிலைமையும் அள்ந்து

காட்டும் இயல்பு அளவில்லா ஞானத்தினலன்றி வேறு எதனாலும் அமையாதாதலின். "அருந்தமிழ்" என்ற கருத்தும் இது.

வேடம் - இறைவரது திருவடையாளங்கள் ; **மருந்து** - துன்பநீக்கமும், **மந்திரம்** - இன்ப ஆக்கமும் செய்வன என்பதும், இவை இகந்துபடாமல் காவல் செய்வது திருவேடத்தினியல் பென்பதும் ஞானநூல்களின் முடிபுகளாய்ச் சிவஞானபோதம் 10 - 11 - 12 சூத்திரங்களானுணர்த்தப்படுவன. **வேடம்** - திருவேடம் ; ஆண்டவன் வேடத்தையும் அதனை உட்கொண்ட அடியார் வேடத்தையு முளப்படுத்திக் கூறிய படி ; "நேய மலிந்தவர் வேடமும்" ; "தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான் கொடுத்துத், தன்னுணரத் தன்னுளிருத்தலாற், றன்னுணரு நேயத்தார்," என்ற சிவ ஞானபோதமும் (12 - சூத்-உதா) "தேவர்கள் போற்றும் திருவேடத் தாரையும்" என்ற திருமந்திரமும், பிறவும் இங்கு இப்பதிகக் கருத்துடன் வைத்துச் சிந்திக் கற்பாலன. 295

திருந்துதேவன்குடி

திருச்சிற்றம்பலம் பண் - கோல்லீ

மருந்துவேண்டில் லிவை மந்திரங்கள் ளிவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங்கள் ளிவை
திருந்து தேவன்குடித் தேவர்தே வெய்திய
அருந்தவத் தோர்தொழு மடிகள் வேடங்களே. (1)

சேடர் தேவன்குடித் தேவர் தேவன்றனை
மாடமோங் கும்பொழில் மல்குதண் காழியான்
நாடவல் லதமிழ் ஞானசம் பந்தன
பாடல்பத் தும்வல்லார்க் கில்லையாம் பாவமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு ;—திருந்து தேவன்குடித் தேவதேவனது திருவேடங்கள் மருந்தொடு மந்திரமாவன ; வீதிபோக்காவன ; வினையை வீட்டுவன ; வீடுகாட்டு நெறியாவன.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) **மருந்து** - தலஅம்மை பெயர்க் குறிப்புமாம். **வேண்டில்** - "தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி" விரும்பியபோது ; **புரிந்து** - இடைவிடாது நினைந்தும் சொல்லியும்; விரும்பி என்றலுமாம். **அருந்தவத்தோர்-வேடங்கள்** - "தேவர்கள் போற்றுந் திருவேடத்தார்" (திருமந்)—(2) **வீதி** - விதி என்பது வீதி - என முதனீண்டுவந்தது. **வீதிபோக்கு** - விதியையும் வெல்வது ; **ஓதியோர்** - [அபரஞானம்] கலைஞானம் - மட்டும் கைவந்தார். **தீதில்**-தீமையை இல்லையாகச் செய்யும் ; "திருந்து" என்ற பொருள்.—(3) **வான்**-சிவனுலகம் ;—(4) **அவிகள் உய்க்கப்படும்** - வேள்விகளின் கருத்தாய் நிகழும்;—(6) **புங்கம்**- உயர்வு; "புங்கமே யுயர்ச்சியம்பு பொருவில்லின் குதைமுப் பேரே" (நிகண்டு). **புங்கம் என்னப்படா** - உயர் வென்று சொல்லப் படாநின்ற என்க.—(7) **கரைதல்** - மெலிதல் ;—(10) **ஆதர்** - அறிவிலிகள் - கீழ்கள் ; உரு - காண்டகைய தோற்றம்.

தலவிசேடம்:—திருந்து தேவன்குடி காவிரியின் வடகரை 42-வது தலம். இது சுற்றிலும் குடியிருக்கைகள் ஒன்றுமின்றி வயல்மத்தியில் தனிக்கோயிலாக உள்ளது. கோயிலைச் சூழ்ந்து ஒரு தீர்த்தம் (திருப்புகலூரின் வாவிபோல) மூன்று பக்கமும் அகழிபோல உள்ளது. நண்டு பூசித்த தலமாதலின் சுவாமிக்குத் **கர்க்கடகேசுவரர்**

என்ற காரணப் பேர் வழங்கும் ; சுவாமியின் திருமுடியில் நண்டு உருவம் காணப் படுகின்றது. ஒரே நிறமுள்ள பசுப்பால் (ஓரளவு) திருமஞ்சனமாட்டினால் சுவாமியின் உள்ளிருந்து நண்டு வெளிவருதல் இன்றும் காணலாகும் அற்புதம். இங்கு அம்மை யார் சந்நிதிகள் இரண்டு ; சுவாமி - தேவதேவேசர் ; கர்க்கடகேசர் ; அம்மை - அருமருந்தம்மை பதிகம் 1.

இத்தலம் 43-வது திருவியலூரினின்று வடக்கே வரப்புவழி ஒரு நாழிகை யளவில் அடையத்தக்கது. மழை நாளில் செல்வது கடினம் ; திருவிடைமருதூர் நிலயத்தினின்றும் வடமேற்கில் மட்பாதை வழி $4\frac{1}{2}$ நாழிகையிலும் அடையலாம்.

2194. மொய்திகழ் சோலையம் மூதூர் முன்னகன் றந்நெறி செல்வார்
செய்தரு சாலி கரும்பு தெங்குபைம் பூகத் திடைபோய்
மைதிகழ் கண்டர்தங் கோயின் மருங்குள்ள வெல்லாம் வணங்கி
யெய்தினர் ஞானசம் பந்த ரின்னம்ப ரீசர்தங் கோயில். ௨௯௬

(இ - ள்) மொய்திகழ்...அகன்று - மலர் அரும்புகள் விளங்கும் சோலைகளை யுடைய அந்த மூதூரினின்று நீங்கி ; அந்நெறி செல்வார் - அவ்வழியே செல்வாராகி ; செய்தரு...போய் - வயல்களில் விளையும் நெல்லும், கரும்பும், தென்னையும், பசிய கமுகும் ஆகிய இவற்றினிடையே சென்று ; மைதிகழ்...வணங்கி - விடம் விளங்கும் கண்டத்தினையுடைய சிவபெருமானது கோயில்களுள் அப்பக்கத்தில் உள்ளவை எல்லாவற்றையும் வணங்கிக்கொண்டு ; இன்னம்பர்...கோயில் - திருவின்னம்பர் இறைவரது திருக்கோயிலினை ; ஞானசம்பந்தர் எய்தினர் - திருஞானசம்பந்தப் பிள்ளையார் அடைந்தனர்.

(வி - ரை) மொய் - அரும்புகள். மொய்திகழ் என்பதற்கு மொய்த்து விளங்கும் என்றுரைப்பாருமுண்டு ;

அந்நெறி - காவிரி வடகரையின் வழியே மேற்கு நோக்கிய வழியாக.

செல்வார் - செல்வாராகி முற்றெச்சம். செல்வார் - செல்வாராகிய ஞான சம்பந்தர் என்று வினைப்பெயராகக் கொள்வதுமாம்.

செய்தரு - பின்குறித்த சாலி முதலியவை எல்லாம் மருதநிலமாகிய வயல்களில் விளைவன என்பது.

கோயில் மருங்குள்ள எல்லாம் - திருக்கொட்டையூர் - திருவிசயமங்கை - திருப்புறம்பயம் - திருவைகாவூர் முதலாயின என்பது கருதப்படும்.

இன்னம்பர் நம்பர்தம் - என்பதும் பாடம். 296

2195. இன்னம்பர் மன்னும் பிரானை யிறைஞ்சி யிடைமடக் கான
பன்னுந் தமிழ்த்தொடை மாலைப் பாடல் புனைந்து பரவிப்
பொன்னங் கழலிணை போற்றிப் புறம்போந் தணைந்து புகுந்தார்
மன்னுந் தடங்கரைப் பொன்னி வடகுரங் காடு துறையில். ௨௯௭

(இ - ள்) இன்னம்பர்...இறைஞ்சி - திருஇன்னம்பரில் நிலைபெற்று வீற்றிருந்தருளும் பெருமானை வணங்கி ; இடைமடக்கான...போற்றி - இடைமடக்காகிய யாப்பிலமைந்த திருமுக்கால் என்கின்ற இறைவரது புகழ்களைப் பரவும் திருப்பதிகத் தமிழ்ப்பாடல் மாலைகளைச் சாத்தித் துதித்து இறைவரது பொன்னார்ந்த திருவடிகளைப் போற்றி ; புறம்போந்து - புறப்பட்டுச்சென்று ; மன்னும்...வடகுரங்காடு துறையில்.

நிலைபெற்ற பெரியகரைகளையுடைய காவிரியின் வடகரையில் உள்ள வடகுரங்காடு துறையின்கண் ; புகுந்தார் - வந்து புகுந்தருளினர்.

(வி - ரை) இடைமடக்கு - யாப்பின் விகற்பம். இது திருமுக்கால் எனப் பெயர் பெறும். அஃதாவது செய்யுளின் நான்கு அடிகளுள் இரண்டாவது அடி மூன்றாவது அடியினுள் மீண்டும் மடக்கப்பட்டு விரவிவருதலால் மூன்று அடியுள்ளது போல இயல்வது. முதல் அடி நான்காமடிகளில் மடக்குவராது இடையின் இரண்டின் வருதலால் இடைமடக்கென்னப்பட்டது.

பன்னும் - மீண்டும் எடுத்துச் சொல்லும் தொடைவகை என்ற குறிப்புமாம். பதிகப்பாட்டுக்கள் பார்க்க.

மன்னுந் தடங்கரை - ஏனைப் பெருநதிகளிற் போலவும், காவிரியின்மேல் ஏனைய யிடங்களிற் போலவும் பெருவெள்ளங்களாற் கரையினை ஈண்டுக் காவிரி அழிவு படுத்தாது பரவிச் செல்லுதலால் மன்னும் என்றார். காவிரி பெருகிக் கரைபுரண்டு ஊர்க்குள்வராது நிலையான கரைகளை யிருபுறமும் உடைமையும் குறிப்பு. 297

திரு இன்னம்பர்

திருச்சிற்றம்பலம் பண் - சாதாரி

எண்டிசைக் கும்புக ழின்னம்பர் மேவிய
வண்டிசைக் குஞ்சடை யீரே
வண்டிசைக் குஞ்சடை யீருமை வாழ்த்துவார்
தொண்டிசைக் குந்தொழி லோரே. (1)

ஏடமர் பொழிலணி யின்னம்ப ரீசனை
நாடமர் ஞானசம் பந்தன்
நாடமர் ஞானசம் பந்தன நற்றமிழ்
பாடவல் லார்பழி யிலரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—இன்னம்பர் ஈசரை விளித்து, உம்மைச் சார்ந்தவர் துன்ப நீங்கப் பெறுவார் என்று புகழ்ந்தது.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) தொண்டு இசைக்கும்-தொண்டின் நெறியிலே தம்மை இசைவிக்கும் ;—(2) ஆழ்துயர் - ஆழ்ந்த துயரம் பிறவினை.—(3) இளமதி நுதலி - பிறைவடிவாக வளைந்த நெற்றியினை உடைய உமையம்மை.—(4) இடி - இடித்தலால்வரும் முழா முதலிய ஓசை.—(5) அன்பே அமைகிலர் ஆகிலர் - அன்பினால் உள்ளம் முற்றுப்பெருது பெருகுபவர்.—(6) விண்ணவர் அடைவு - தேவர்களால் சாரப்படும்நிலை.—(7) நிழல் - ஒளி ; (8) கூர்ந்த - மிகுந்த.—(9) இயல் - நல்லியல்பு.

தலவிசேடம்:—திரு இன்னம்பர் - காவிரியின் வடகரை 45-வது தலம் ; இன்னம்பூர் என வழங்கப்படும் ; ஞாயிறு (இனன்) - ஐராவதம் - அகத்திய முனிவர் முதலியவர் பூசித்த தலமென்பர்; இனன் நம்பு ஊர் என்பது இன்னம்பர் என மருவிற்று என்று கூறுவர். சுவாமி - தான்றோன்றியீசர் ; எழுத்தறிந்தநாதர் ; அம்மை - பூங்கொம்பு நாயகி ; தீர்த்தம் - ஐராவத தீர்த்தம். பதிகம் 5.

இது கும்பகோணம் நிலயத்திலிருந்து வடக்கில் 4½ நாழிகையிலும், சுவாமிமலை நிலயத்தினின்று வடகிழக்கில் 3½ நாழிகையிலும் அடையத்தக்கது. 44-வது திருக் கொட்டையூரினின்றும் வடமேற்கே மட்சாலைவழி 1½ நாழிகையில் அடையலாம்.

2196. வடகுரங் காடு துறையில் வாலியார் தாம்வழி பட்ட
அடைவுந் திருப்பதி கத்தி லறியச் சிறப்பித் தருளிப்
புடைகொண் டிறைஞ்சினர் போந்து புறத்துள்ள தானங்கள் போற்றிப்
படைகொண்ட மூவிலை வேலார் பழனத் திருப்பதி சேர்ந்தார். ௨௬௮

(இ - ள்) வடகுரங்காடு துறையில்...போந்து - திருவடகுரங்காடு துறையில் வந்து வாலியார் வழிபட்டுச் சரணடைந்த வரலாற்றைத் திருப்பதிகத்தில் உலகறியும்படி சிறப்பித்துப் பாடியருளித் திருக்கோயிலினைச் சூழ வலம்வந்து வணங்கிப் புறப்பட்டு; புறத்துள்ள தானங்கள் போற்றி - அதனப்புறத்தே உள்ள திருத்தலங்களைத் துதித்து வணங்கிக்கொண்டு; படை...சேர்ந்தார் - மூவிலைச் சூலத்தினைப் படையாகக் கைக்கொண்ட இறைவர் எழுந்தருளிய திருப்பழனமாகிய திருத்தலத்தைச் சென்று சேர்ந்தனர்.

(வி - ரை) வடகுரங்காடுதுறையில் - தென்குரங்காடு துறையினின்றும் பிரித்துணர்தற் பொருட்டு வடக்கில் உள்ள என்று அடைமொழி தந்தோதினார்; பிறிதினியைபு நீக்கிய விசேடணம். தென்குரங்காடுதுறை ஆடுதுறை என வழங்கப்படும். காவிரிக்குத் தென்கரை 31-வது தலம். அது அனுமனும் சுக்கிரீவனும் பூசித்ததலம்.

வாலியார் தாம் வழிபட்ட அடைவு - அருளி - "வாலியார் வழிபட" என்ற பதிகச் சொற்பொருளாட்சி போற்றப்பட்டது.

அடைவு - வழிபட்டுச் சரணடைந்த வரலாறு. அறிய - உலகறியும்படி. தலவிசேடம் பார்க்க. வாலியார் - பன்மை சிறப்புக் குறித்தது.

புடைகொண்டு - புடைவலங்கொண்டு; கோயிலினையும் தலத்தையும் சூழ்ந்து வலம்வந்து விடைகொண்டு என்க.

புறத்துள்ள தானங்கள் - திருத்திங்களூர் முதலாயின என்பது கருதப்படும்.

மூவிலைவேல் படைகொண்டார் - என்க. வேல் - ஆயுதப் பொதுமை யுணர்த்திற்று. 298

திருவடகுரங்காடுதுறை

திருச்சிற்றம்பலம் **பண் - சாதாரி**

• கோங்கமே குரவமே கொழுமலர்ப் புன்னையே கொகுடிமுல்லை
வேங்கையே ஞாழலே விம்முபா திரிகளே விரவியெங்கும்
ஓங்குமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
வீங்குநீர்ச் சடைமுடி யடிகளா ரிடமென விரும்பினாரே. (1)

நீலமா மணிநிறத் தரக்கனை யிருபது கரத்தொடொல்க
வாலினாற் கட்டிய வாலியார் வழிபட மன்னு கோயில்
ஏலமோ டிலையில வங்கமே யிஞ்சியே மஞ்சளுந்தி
ஆலியா வருபுனல் வடகரை யடைகுரங் காடுதுறையே. (8)

தாழிளங் காவிரி வடகரை யடைகுரங் காடுதுறைப்
போழிள மதிபொதி புரிதரு சடைமுடிப் புண்ணியனைக்
காழியா னருமறை ஞானசம் பந்தன கருதுபாடல்
கோழையா வழைப்பினுங் கூடுவார் நீடுவா னுலகினூடே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—வாலியார் வழிபட இறைவர் நிலைபெற வீற்றிருந்தருளிய கோயில் வடகுரங்காடுதுறையே.

பதிகப்பாட்டுக் குறிப்பு ;—(1) ஏகாரங்கள் எண்ணுப் பொருளில் வந்தன ; கோதுடி - முல்லையின் ஒருவகை. விம்முதல் - செழித்தல். இவை மலர்கள்.—(2)மந்தமாய் - மிக்கு ; மெதுவாக என்றலுமாம்—(3) ஆரம் - சந்தனமரம் ;—(4) நுந்தி - அலைத்து ; உள்ளக்குறி - குறிக்கோள் ;—(5) ஓடு-ஓடுதல். முதனிலைத் தொழிற்பெயர்; —(6) "வாலியார் வழிபட" - சொல்லும் பொருளும் புராணத்துட் போற்றப்பட்டது. இராவணனை வாலி வாலினாற் பிணித்த வரலாறு இராமன் கதையுட் காண்க. 8-வது பாட்டும்பார்க்க ; வாலி வழிபட்டமையால் தலம் குரங்காடுதுறை என்ற காரணப் பெயர் பெற்றது.—(8) நீலம் - கருமை குறித்தது. அரக்கன் - இராவணன் ; ஆர் - பன்மை விகுதி சிறப்பு ; ஏலம் முதலியவை ஆறுவரும் வழியில் உள்ள சோலைகளிற்படும் பொருள்கள். ஆலியா - கலித்து ;—(9) அனங்கமாக - அங்கமழிய ; வேவ ; இருவர் - அரி அயன்.—(10) கோளலும் - கொள்ளற்க ; கோளல் - அல்லீற்று எதிர்மறை வியங்கோள் ; உம் - சாரியை. வரைப்பண்டம் - மலைபடு பொருள்கள் ;—(11) தாழ் - மலையினின்று கீழே வருகின்ற ; இளங்காவிரி - இளமை என்றும் புதிய பொற்புடன் விளங்குதல். "பூந்தண்பொன்னி" ; போழ் - போழப் பட்டது ;கோழையா - மிடற்றிற் கோழை அடைப்புண்டு ஒலி நயமின்றி; "கோழைமிடறாக"(தேவா); தாழிளம் - முன்னைய பாட்டுக்களிலும் பல வளங்களையும் காவிரி அலைத்து வருதல் கூறப்பட்டமை குறிப்பு.

தலவிசேடம்:—திருவடகுரங்காடுதுறை:—காவிரியின் வடகரையில் 49-வது தலம். வாலி வழிபட்ட காரணத்தால் இப்பெயர் பெற்றது, பதிகம் 6-8 பாட்டுக்கள் பார்க்க. நிறைந்த கருப்பத்துடன் வழிவருத்தத்தோடும் நீர்வேட்கையோடும்வந்த ஒரு பெண்ணுக்குத்தென்னங்குலையை வளைத்துக்கொடுத்தருளிய காரணத்தால் சுவாமி குலைவணங்குநாதர் எனப் பெற்றனர் என்ப ; அம்மை - அழகு சடைமுடியம்மை; பதிகம் - 1.

இது ஐயம்பேட்டை நிலையத்துக்கு மேற்கே ½ நாழிகையில் திருச்சக்கரப் பள்ளியினின்றும் 3 நாழிகையளவில் வடக்கே குடமுருட்டியாற்றினையும் காவிரி யாற்றினையும் பரிசினாற் கடந்து கணபதி அக்கிரகாரத்துக்குக் கிழக்கே ½ நாழிகை யளவில் அடையத்தக்கது.

2197. பழனத்து மேவிய முக்கட் பரமேட்டி யார்பயில் கோயில்
உழைபுக் கிறைஞ்சிநின் றேத்தி யுருகிய சிந்தைய ராகி
விழைசொற் பதிகம் விளம்பி விருப்புடன் மேவி யகல்வார்
அழனக்க பங்கய வாவி யையாறு சென்றடை கின்றார் ; உ௯௯

வேறு

2198. மாடநிரை மணிவீதித் திருவையாற் றினில்வாழு மல்கு தொண்டர்
"நாடுய்யப் புகலிவரு ஞானபோ னகர்வந்து நண்ணி னா"ரென்,
றாடலொடு பாடலறா வணிமூதூ ரடையவலங் காரஞ்செய்து
நீடுமனக் களிப்பினொடு மெதிர்கொள்ள, நித்திலயா னத்து நீங்கி, ௩00

2199. வந்தணைந்த திருத்தொண்டர் மருங்குவர மானேந்து கையர் தம்பால்
நந்திதிரு வருள்பெற்ற நன்னகரை முன்னிறைஞ்சி நண்ணும் போதி

"ஐந்துபுல னிலைகலங்கு மிடத்தஞ்ச லென்பார்த மையா" றென்று
புந்திநிறை செந்தமிழின் சந்தவிசை போற்றிசைத்தார் புகலி வேந்தர்.

2197. (இ - ள்) பழனத்து...ஏத்தி - திருப்பழனத்தில் மேவிய மூன்று கண்ணுடைய சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயிலினுள் புகுந்து நின்று துதித்து ; உருகிய சிந்தையராகி - உருகிய மனத்தையுடையவராகி ; விழை சொல்...அகல்வார் - விரும்பும் தமிழ்ச் சொற்பதிகத்தினைப்பாடி விருப்பத்துடனே அங்கு எழுந்தருளியிருந்து அங்கு நின்றும் நீங்குவாராகி ; அழல் நக்க...அடைகின்றார் - தீயைப் பழித்த தாமரைகள் பூத்த தடாகங்களையுடைய திருவையாற்றினைச் சென்று அடைகின்றவராகி ; ௨௯௯

2198. (இ - ள்) மாடநிரை...தொண்டர் - மாடங்களின் வரிசையினைக் கொண்ட அழகிய வீதிகளையுடைய திருவையாற்றில் வாழ்கின்ற திருத்தொண்டர்கள் நாடுய்ய...என்று - "உலகம் உய்யும் பொருட்டுச் சீகாழியில் அவதரித்து ஞான முண்ட பிள்ளையார் வந்தணைந்தார்" என்று உட்கொண்டு ; ஆடலொடு...எதிர்கொள்ள - ஆடலுடன் பாடல் நீங்காது நிறைந்த அழகிய அந்தப் பழவூரினை முற்றும் அலங்காரங்கள் செய்து பெருகிய மன மகிழ்ச்சியினோடும் எதிர்கொள்ளும் போது ; நித்திலயானத்துநீங்கி - முத்துச் சிவிகையினின்றும் நீங்கி வந்து, ௩௦௦

2199. (இ - ள்) வந்தணைந்த...மருங்குவர - வந்துகூடிய திருத்தொண்டர்கள் தமது பக்கத்தில் சூழ்ந்துவர ; மான்ஏந்து...போதில் - மானை ஏந்தியகையினையுடைய இறைவரிடத்தில் திருநந்திபெருமான் திருவருள்பெற்ற அந்த நல்ல நகரத்தை முன் வணங்கி அடையும் பொழுதில் ; ஐந்துபுலன்...என்று - ஐம்புலன்களும் நிலைகலங்கும் காலத்தில் "அஞ்சாதே" என்று அபயம் கூறுமிறைவரது திருவையாறு இது என்ற கருத்துடன் ; புந்திநிறை...புகலிவேந்தர் - உள்ளம் நிறைந்து எழுந்த செந்தமிழினது சந்தவிசைத் திருப்பதிகத்தால் துதி செய்தனர், புகலியின் தலைவராகிய ஞானசம்பந்த நாயனார் ; ௩௦௧

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டு உரைக்கநின்றன.

2197. (வி - ரை) பரமேட்டி - சிவபெருமான். பரம்பொருள் ; பயிலல் - விளங்க வீற்றிருத்தல். உழை - ஏழனுருபு.

விழை - விரும்பும் ; தாம் விழையும் ; இறைவர் விழையும் ; உய்யும் உயிர்களும் அடியார்களும் விழையும் ; சொல்வோரும் கேட்போரும் விழையும். "பேசற்கினிய மாலை" பதிகம்.

அழல்நக்க - அழலை நகுதலாவது சிவந்த பொலிவினால் அழலினும் மேற்படுதல்; உருவகம் ; 1868 பார்க்க. "பங்கயமாம் பொங்கெரியில்" (1905) என்றதும், பிறவும் காண்க.

அடைகின்றார் - அடைகின்றாராகி ; முற்றெச்சம். அடைகின்றாராகி - நீங்கி என மேற்கூட்டுக. அடைகின்றாராகி - நீங்கி (2198) - இறைஞ்சி நண்ணும் போதில் - என்று போற்றிசைத்தார் - புகலிவேந்தர் - (2199) என மேல்வரும் பாட்டுக்களுடன் கூட்டி முடித்துக் கொள்க. 299

2198. (வி - ரை) திருவையாற்றில் பிள்ளையாரருளிய தேவாரத் திருவாக்கின் சிறப்பினை அறிவுறுத்தும்படி ஆசிரியர் இதுவரை சரிதங்கூறிவந்த யாப்பினைமாற்றி அத்திருப்பதிக யாப்பினிற் சரிதங்கூறத் தொடங்குகின்றார்.

மாடநிரை மணிவீதி - "கமழ்தார் வீதித், தேரோடு மரங்கேறிச் சேயிழையார் நடம்பயிலும்" என்ற திருப்பதிகக் கருத்தை விளக்கியபடி.

மல்குதல் - நிலைபெற்றுப் பெருகி நிகழ்தல்.

"**நாடுய்ய......நண்ணினார்**" என்று - இஃது அத்தொண்டர் பிள்ளையாரது பெருமையினை உளங்கொண்டெழுந்தநிலை. **நாடுய்ய** - வரும் என்க. **வருதல்** - ஈண்டு வந்தவதரித்தல் என்ற பொருள்தந்து நின்றது. **நாடுய்தல்** - தாவில் சராசரங்க ளெல்லாஞ் சிவம் பெருக்குதல் (1924). திருவவதார வரலாறு காண்க.

வந்து - தாமேவந்து ; அடியார்களுய்யத் தாமே அத்திருநகரினை விரும்பிவந்து.

ஆடலோடு பாடலறு - "வலம்வந்த மடவார்கள் நடமாட" (1); "அரங்கேறிச் சேயிழையார் நடம்பயிலும்" (5); "கவினார்வீதித், தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார் நடமாடும்" (6) ; "கோலோடக் கோல்வளையார் கூத்தாடக் குவிமுலை யார் முகத்தி னின்று, சேலோடச் சிலையாடச் சேயிழையார் நடமாடும்" (9) ; என வரும் பதிகக் கருத்துக்கள் பார்க்க.

அடைய - முழுதும். பிள்ளையாரை அடைந்துய்யும் பொருட்டு என்ற குறிப்பு மாம். ஆளுடைய அரசுகளது திருவாரூர்க் குறிஞ்சிப் (முத்துவிதானம்) பதிகக் கருத் துக்கள் காண்க. தொண்டர் எதிர்கொள்ளப் புகலிவேந்தர் நீங்கி என்க. எதிர் கொள்ள என்ற வினையெச்சம் நீங்கி எனப் பிறவினைமுதல் வினைகொண்டு முடிந்தது. **எதிர்கொள்ள** - எதிர்கொண்டாராக.

நித்தில யானத்து நீங்கி - யானத்தினின்றும் இறங்கி; ஐந்தனுருபு தொக்கது. **நீங்குதல்** - இங்குக் கீழ் இறங்குதல் என்ற பொருளில் வந்தது.

நீங்கி - நகரை முன் இறைஞ்சி நண்ணும்போதில் - என்றதனால் தொண்டர் நகரின்புறத்து வந்து எதிர்கொண்டனர் என்பது பெறப்பட்டது. **நித்தில யானம்** - முத்துச்சிவிகை. 300

2199. (வி - ரை) **வந்து அணைந்த** - எதிர்கொள்ள வந்துகூடிய.

மருங்குவர - தம்மைப் பின்பற்றித் தமதுபக்கத்தில் வர. **மருங்குவர - முன் இறைஞ்சி நண்ணும் போதில்** என்று கூட்டுக. **முன்** - அவர்கட்கெல்லாம் முன்பு.

மான் ஏந்து கையர் தம்பால் நந்தி திருவருள்பெற்ற நன்னகர்-"நங்க ணுதனை நந்தி தவஞ்செய்து, பொங்கு நீடரு ளெய்திய பொற்பது" (45) ; "முந்தை மாதவப் பயன் பெறு முதன்மையான்" (1643) என்றவையும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. நந்தி தேவர் தவஞ்செய்து அருள்பெற்ற இத்தலத்து வரலாறுகள் முன் உரைக்கப்பட்டன. **நன்னகர்** - நன்மையாவது இறப்புத்துன்பநீக்கி யின்பமளித்தல் குறிப்பு. இது மேல் உரைக்கப்படுதல் காண்க.

நகரை இறைஞ்சி நண்ணும் போதில் - ஐயாறென்று போற்றிசைத்தார் - இப் பதிகம், நகரை அணுகும்போது புறத்தே அதனைத் தொழுது நின்று போற்றியது. "ஆலவா யாவது மிதுவே", "இடைமரு தீதோ" முதலிய பதிக வரலாறுகள் இங்கு நினைவு கூர்தற்பாலன. பதிகக் குறிப்புப் பார்க்க.

சந்த இசை - மேகராகக் குறிஞ்சி என்ற இப்பதிகப் பண்ணின் இசைச் சிறப்புக் குறித்தது.

செந்தமிழின் - இப்பதிகப் பாட்டுக்களில் இயல் இசை நாடகமென்னும் முத்தமி ழும் பொருந்தவரும் தமிழ்ச் சொற் பொருட் சிறப்புக் குறித்தது. **இசை - காந்தார**

மிசையமைத்து (4) ; நாடகம் - "தென்றலா ரடிவருடச் செழுங்கரும்பு கண்வளரும்" (7) முதலியவை காண்க.

வந்தணைந்து - என்பதும் பாடம் 301

திருப்பழனம்

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கேசி**

வேத மோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை யெருதேறிப்
பூதஞ் சூழப் பொலிய வருவார் புலியி னுரிதோலார்
நாதா வெனவு நக்கா வெனவு நம்பா வெனநின்று
பாதந் தொழுவார் பாவந் தீர்ப்பார் பழன நகராரே. (1)

வேய்முத் தோங்கி விரைமுன் பரக்கும் வேணு புரந்தன்னுள்
நாவுய்த் தனைய திறலான் மிக்க ஞான சம்பந்தன்
பேசற் கினிய பாடல் பயிலும் பெருமான் பழனத்தை
வாயிற் பொலிந்த மாலை பத்தும் வல்லார் நல்லாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—"பரமன் பகவன் பரமேச்சுரவன் பழன நகரார்" என்றது. "பரமேட்டியார்" (2197) என்று ஆசிரியர் காட்டிய குறிப்பு. சந்தவிசையும் பண்ணிசையும் பொருந்த இறைவரது முதல்வராந் தன்மை பேசப்பட்டது. "பேசற் கினிய மாலை" - பதிகம்.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) **"நாதா...என"** - அடியார் போற்றும்வகை ; பழனநகரார் - புலியினுரிதோலார் - தொழுவோரது பாவந்தீர்ப்பார் என்க. ஏனைய பாட்டுக்களினும் இவ்வாறே கூட்டுக.—(2) **புண் ஆறு** - புண்வழியாக ; **எண்ணாது** - எளிதில்.—(3) **பறைபோல்விழி** - பரந்து உருண்ட தன்மை உவமை ; **தலைமகன்** - தலைவர். பற்றுக்கோடு ; **ஆடல்...ஓவா** - சிறப்பும் பூசையும் என்ற இவற்றின் அங்கங்கள் ;—(4) **நறவம்** - குருதி - இரத்தம்-செந்நீர் ; **பரமன் பகவன் பரமேச்சுவரன்**- இறைவன் இயல் ; **பரமன்** - கடந்தவன் ; **பகவன்** - இறைமைக் குணங்கள் ஆறும் உடையவன் ; **பரமேச்சுவரன்** - தேவதேவன்.—(5) **துதிகொண்டு** - குதிக்கச் செய்தல் போலத் திரையால் அலைத்து.—(6) **வீளைக்குரல்** - சிள் என்ற ஓசை ; "வீளைப்பருந்தின்" (அகநா. 33) ; **குரல்** - ஓசை. **விளிசங்கொலி** - சாவின்சடங்கில் ஊதும் சங்குஒலி. "கடைச்சங்கம் ஆம்போதனலூட்டும்" (பட் - தனிப்) ; **விழவின் ஒலி** - இங்கு ஈமச்சடங்கின் ஒலி குறித்தது ; **மூளைத்தலை** - முன்னர் மூளைக்கிடமா யிருந்த படுதலை ; **மூளை** - மண்டையின் உள்ளீடு ; **கொண்டு** - ஏந்திக்கொண்டு ; **கொண்டு - எய்தார்** - என்று கூட்டுக. **ஈளைப்படுகில்** - ஈரமுள்ள மருதநிலம். **படுகர்** என்பது படுகு என நின்றது. **விழவின் ஒலி ஓவாப் பழனநகர்** என்று கூட்டி வீளைக் குரல் - விளிசங்கொலி என்பவற்றைத் திருநாள் விழாவின் அங்கங்களாகக் கொண்டுரைத்தலுமாம். இப்பொருளில், **விளி** - விளித்தல் - அடியாரைக்கூவி அழைத்தல் - என்றுரைக்க. "சங்கொலிப்பித்திடுமின் சிறுகாலை" "இயம்பின சங்கம்" (7) **பொய்யாமொழியார்** - மெய்த்திருவாக்குடைய அடியார். பொய்யாமொழி - வேதம் என்றுகொண்டு ; இறைவர்க்காக்கி உரைப்பினுமாம். **முறை** - விதிமுறை ; **கை ஆடலினர்** - வீசுகரம் ; துடியசைக்கும் கை என்றலுமாம் ; கையேந்திய தீயினால் ஆடல் - (அடுதல் - அழித்தல்) செய்பவர் என்றலுமொன்று. **உடனே** - பகைகொண்ட பிறையும் அரவும் ஒருங்கே தங்க என்பது குறிப்பு. "பாம்போடு திங்கள் பகைதீர்த்

தாண்டாய்" (தாண்)—(8) உயர்மலை, உடையான்மலை என்று தனித்தனி கூட்டுக. நஞ்சார் - நைஞ்சார் (இறந்தார்) என்பதன் மரூஉ.—(9) கொன்றை - மாலை - என்க. முடியா - அடங்காத. அளவுபடாத. படியார் - தன்மையினர்; பொடி - நீறு; உலகமழிந்தநீறு உடையார் எனக் காணாத தன்மைக்குக் காரணங் கூறியவாறு;—(10) கண்டான்...உண்டாங்கவர்கள் - புத்தர் வழக்கு. விடிய எழுந்ததும் முகங்கழுவாது உணவு கொள்ளுதல். நவீனரின் Bed Coffee என்ற ஆபாச வழக்கும் காண்க. ஓரார் - ஓராத (பொருட்படுத்தாத) அடியார். தாமரையில் நறவு உண்டு வண்டு யாழ்போலப் பண்பாடும் நல்லியல்புமில்லார்; கண்டான்...உண்டாங்குச் சிறு சொல்லுரைக்குமவர் என்ற உட்குறிப்பும் காண்க.—(11) நாவுய்த்தனைய திறல் - நாவினால் படைசெலுத்தினாற் போன்ற வல்லமை; "செல்லவுந்துக" "நாவலமே கோலாக" (புரா - 898); உய்த்தல் - படை செலுத்துதல். "அம்புய்க்கும்" என்புழிப்போல; பேசற்கினிய - சொற்பொருளமைதி.

தலவிசேடம்:—திருப்பழனம் – III பக்கம் ௩௩௪ - பார்க்க.

I. திருஐயாறு

திருச்சிற்றம்பலம் பண் - மேகராகக் குறிஞ்சி

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட் டைமே லுந்தி
யலமந்த போதாக வஞ்சேலென் றருள்செய்வா னமருங் கோயில்
வலம்வந்த மடவார்க ணடமாட முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்குந் திருவை யாறே. (1)

அன்னமலி பொழில்புடைசூழை யாற்றெம் பெருமானை யந்தண் காழி
மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான சம்பந்தன் மருவு பாடல்
இன்னிசையா லிவைபத்து மிசையுங்கா லீசனடி யேத்து வார்கள்
தன்னிசையோ டமருலகிற் றவநெறிசென் றெய்துவார் தாழா தன்றே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—ஆசிரியர் 2199-ல் காட்டியருளியது. இப்பதிகம் நகரின் புறத்தே நின்று தலத்தினைப் பாடியது. "திருவையாறே" என்றதும் காண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு:—(1) அலமந்தபோது - சாங்காலம். போது ஆக - சமயம் உளதாக. ஆக - அஞ்சேல் என்க. ஆக - உளதாக; ஆசிகூறல்; "பாண்டியற்காகவே" (தேவா); அஞ்சேல் - அபயம். மழை...முகில்பார்க்கும் - முழவதிர மழையென்றஞ்சி மரமேறி முகில்பார்க்கும்; மயக்கவணி; "மடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக் (சீகாமரம் திருவெண்காடு) குருகென்று - தடமண்டு துறைக்கெண்டை தாமரையின் பூமறைய" என்புழிப்போல; பிராந்தமதாலங்கார மென்பர்வடநூலார். தன்மைநவிற்சி யணியுமாம். மேல்வரும் பாட்டுக்களும் தன்மை நவிற்சி;—(2) விடல் ஏறுபடம் - விடத்தினை மேலே கொண்ட படம். விடலம் - நஞ்சு. விடலம் - விடல் என நின்றது. பலி - பலி பெய்யுமின்; திடல் - மணல்மேடு;—(3) கொங்கு - மணம்.—(4) ஊன்பாயும் - ஊன் உலர்ந்து பரவிய; முடை - முடைநாற்றம்; உடை - உடைந்த என்றலுமாம்; பாயும் விடை - "பாயும்விடையரன்" (கோவை); தேன்பாயும் - தேன் ஒழுகும்;—(5) கூவிளம் - வெள்ளெருக்கு - கொன்றை - கரந்தை இவை சிவபிரானுக் குகந்தவை;—(6) காந்தாரம்-பண்; தேந்தாம் - இசைக்கிளைய முழக்கும் முழவொலிக் குறிப்பு. "முழவதிர" 1.—(7) சிலை - வில்; மலையாகிய வில் என்றிரட்டுற மொழியவும் நின்றது; மலையாளி - கயிலைமலையை ஆள்பவர். பிரசம் -

தேன் ; மலர் - மலர்களினின்றும் ; தென்றலார் - ஆர் - சிறப்புக் குறித்த பன்மை விகுதி ; அடிவருடக் கண்வளர்தல் - சிலேடையணி; கண் - கரும்புகள் முற்றியபோது விளைந்து சாய்வனவாதலின் தென்றல் அவற்றின் அடியில்படவீசிற்று ; மெல்லிதாய் வீசுதலின் வருட என்றார். கண் வளர்தல் - துயிலுதல் என்றும், கணுக்கள் வளர்ச்சி பெறுதல் என்றும் இரட்டுற மொழிந்துகொள்க. தென்றல் வீசுங்காலத்தில் கரும்புகள் முற்றி விளையும் நிலையும் குறிப்பு. "கரும்பருகே கருங்குவளை கண்வளரும் கழனி" (தேவா. நம்பி - கலய நல்லூர் 1) ; "செஞ்சாலிக்கதிர்" என்ற குறிப்பும் காண்க, மேலும் பிள்ளையார் எழுந்தருளிய சிறப்புப்பற்றித் தொண்டர் ஆடலொடு பாடலறா அணிவீதி அடைய அலங்காரஞ் செய்தனர் (2198) என்பது பதிகம் - 1 - 5 - 6 - 9 பாட்டுக்களாலும் கருதப்படும் ;—(8) இளந்தெங்கின் பழம்வீழ - தெங்கின் பழங்கள் தாமாய் முற்றி வீழ்வனவன்றிப் பறிப்பாரிலர் என்ற நகர்வளமும் குறித்தது. செஞ்சாலி - சிறப்புக் குறித்தது. 904 - பார்க்க.—(9) அணவி - அணுகி. அணவியும் அகழ்ந்தும் என்க. உம்மைகள் தொக்கன. மாலோடு நான்முகனும்-எதிர் நிரனிறையாக்கிக் கொள்க. கோல் - ஆடலாசிரியன் ஏந்தும் தலைக்கோல் ; கூத்து - அரங்கில் ஆடல் ; சேல் - மீன் போன்றகண் ; சிலை - சிலைபோன்ற புருவம். ஆகுபெயர். "பொருகயற்கண் புடைபெயர" (1685); நடமாடும் - இவ்வியல்பெல்லாம் சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையினும், பிறண்டும் கண்டுகொள்க ;—(10) துற்றுடுக்கை - மேலேற உடுத்தபாய் உடை ; செண்டு - மலர்க்கொத்துக்கள்.

தலவிசேடம் - திருவையாறு - III பக்கங்கள் ௬௩௩ - ௬௪௪ பார்க்க.

2200. மணிவீதி யிடங்கடந்து மாலயனுக் கரியபிரான் மன்னுங் கோயில்
அணிநீடு கோபுரத்தை யணைந்திறைஞ்சி யுள்ளெய்தி யளவில் காதல்
தணியாத கருத்தினொடுந் தம்பெருமான் கோயில்வலங் கொண்டு தாழ்ந்து
பணிசூடு மவர்முன்பு பணிந்துவீழ்ந் தெழுந்தன்பாற் பரவு கின்றார், ௩௦௨

2201. "கோடல்கோங் கங்குளிர்கூ விள"மென்னுந் திருப்பதிகக் குலவு மாலை
நீடுபெருந் திருக்கூத்து நிறைந்ததிரு வுள்ளத்து நிலைமை தோன்ற
"ஆடுமா றதுவல்லா னையாற்றெம் மையனே" யென்று நின்று
பாடினா ராடினார் பண்பினொடுங் கண்பொழிநீர் பரந்து பாய ; ௩௦௩

2200. (இ - ள்) மணிவீதி இடம் கடந்து-அழகிய திருவீதியின் இடங்களைக் கடந்துபோய் ; மாலயனுக்கு......உள் எய்தி - மாலுக்கும் அயனுக்கும் அறிதற்கரியவராகிய சிவபெருமான் நிலைபெற வீற்றிருக்கும் திருக்கோயிலின் அழகு நீடும் திருக்கோபுரத்தைச் சார்ந்து பணிந்து கோயிலினுள்ளே சேர்ந்து ; அளவில்...பரவுகின்றார்-அளவில்லாத ஆசையானது பெருகித் தணியாத மனத்தோடும் இறைவரது திருக்கோயிலினை வலம்வந்து வணங்கிப், பாம்புகளைச் சூடிய அவரது திருமுன்னர்ப் பணிந்து நிலமுற விழுந்து எழுந்து அன்பினாலே துதிப்பாராகி ; ௩௦௨

2201. (இ - ள்) கோடல்...மாலை - "கோடல் கோங்கம் குளிர்கூவிளம்" என்று தொடங்கும் திருப்பதிகமாகிய சிறந்த சொல் மாலையினை ; நீடு...தோன்ற - நீடிய பெருந் திருக்கூத்தின் சிறப்பு நிறைவாகிய தமது திருவுள்ளத்தின் நிலைமை தோன்றும்படி ; ஆடுமாறது...நின்று - "ஆடுமாறு வல்லான் ஐயாற்றெம் ஐயனே" என்ற கருத்தினை முடிபாகக் கொண்ட பதிகத்தினை அருளி, நின்று ; பாடினார்...பாய - அன்புப் பண்பினோடு கண்களினின்றும் வழிகின்ற ஆனந்தக் கண்ணீர் இடையீடின்றிப் பரந்து பாயப் பாடினார் ; ஆடினார் ; ௩௦௩

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

2200. (வி - ரை) இடம் - இடங்களை ; நகரின் புறத்து நின்று பதிகம்பாடி நகரினை வணங்கிப் பின் திருவீதியினுள் அணைந்து, அச்சிறப்புக்களைக்கண்டு அவ்வீதியின் எல்லைநீங்கி. வீதி - பிள்ளையார் எழுந்தருளிவந்த திருவீதி. இது வடக்கிலுள்ள திருப்பழனத்தினின்றும் திருவையாற்றினுள்வரும் வீதி.

அளவில் காதல் தணியாத கருத்து - காதலின் பெருக்கு முன்பதிகத்தாலும், அது தணியாத நிலை மேல்வரும் பதிகத்தாலும் அறியக்கிடக்கின்றன.

பணி - பாம்பு - பணம் (படம்) உடையது.

பரவுகின்றார் - பரவுகின்றாராகி - முற்றெச்சம் ; பரவுகின்றார் - பாடினார் என மேல்வரும் பாட்டுடன் முடிந்தது. எழுவாய் மேலைச் செய்யுளினின்றும் வருவித்துரைக்க. 302

2201. (வி - ரை) கோடல்...கூவிளம் - இது பதிகத் தொடக்கம். பதிகம் பார்க்க.

குலவுமாலை - குலவுதல் - பெருஞ் சிறப்புடன் நிலவுதல். "குலாவு பாதம் விளக்கியே" (443)

நீடுபெரும்......நிலைமதோன்ற - இப்பதிகமருளியபோது பிள்ளையாரது திருவுள்ள நிலையிருந்தபடி பதிகத்துக் காணப்படுகின்றதென ஆசிரியர் காட்டியருளுகின்றார். திருக்கூத்து - ஆனந்தக் கூத்து. "தம்முண்ணிறைந்த ஞானத் தெழுமானந்த வொருபெருந் திருக்கூத்தும்" (2058) என்றது காண்க. நீடு - என்றுமுள்ள ; நித்தமாகிய ; பெரும் என்றது தமக்கே உரியநிலை குறித்தது ; திரு - முத்தித் திரு ; கூத்து நிறைந்த திருவுள்ளத்து நிலைமை - "பாடல் வீணை...பண்ணுகவே ஆடுமாறு வல்லான்" என்ற பதிகப்பாட்டின் பண்பினாற் போதரும் என்று மேல் உரைக்கின்றார்.

ஆடுமாறது வல்லான்...என்று - இது பதிகக் கருத்து. வல்லான் - வேறெவர்க்குமியலாமை குறிப்பு. வல்லமை - எளிதாயியற்றுதல் - விளையாட்டு என்ற கருத்து. ஐயனே - ஏகாரம் பிரிநிலை.

பண்பு - அன்பு நிரம்பி மேலோங்கிய தன்மை. இவை பாடுதல் - ஆடுதல் - கண்ணீர் வார்தல் முதலாயின.

பண்ணேடுங் கண்போழி—என்பதும் பாடம். 303

II. திருவையாறு

திருச்சிற்றம்பலம் பண் - இந்தளம்

கோடல்கோங் கங்குளிர் கூவிள மாலை குலாயசீர்
ஓடகங் கையொளி வெண்பிறை சூடு மொருவனார்
பாடல்வீ ணைமுழ வங்குழல் மொந்தைபண் ணாகவே
யாடுமாறு வல்லானு மையாறுடை யையனே (1)

ஓதியாருமறி வாரிலை யோதி யுலகெலாஞ்
சோதி யாய்நிறைந் தான்சுடர்ச் சோதியுட் சோதியான்
வேதி யாகிவிண் ணாகிமண் ணோடெரி காற்றுமாய்
ஆதி யாகிநின் றானுமை யாறுடை யையனே (7)

பலிதி ரிந்துழல் பண்டங்கன் மேயவை யாற்றினைக்
கலிக டந்தகை யான்கடற் காழியர் காவலன்
ஒலிகொள் சம்பந்த னொண்டமிழ் பத்தும்வல் லார்கள்போய்
மலிகொள் விண்ணிடை மன்னிய சீர்பெறு வார்களே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—முன் 2201-ன் கீழ் உரைக்கப்பட்டது. ஐயன் திருக் கூத்து நிறைந்த திருவுள்ளத்து நிலையில் அருளப்பெற்ற பெருமையுடையது இத்திருப் பதிகம்.

பதிகப் பாட்டுக் குறிப்பு :—(1) **கோடல்** - காந்தள்; **பாடல்......பண்ணுகவே - ஆடுமாறு** - திருக்கூத்தின் இயையும் அங்கங்கள். "அத்தங் கைக்கிளை" என்ற அம்மை மூத்த திருப்பதிகம் பார்க்க.—(2) **யாரும் இவர் தன்மை அறிவாரிலர்** - "இயல்பறியப் படா" (6); இவர் தன்மையறிவாரார் (தேவா.) "தன்பெருமை தானறியாத் தன்மையன்" (திருவா)—(3) **ஆறு** - அங்கம்; **நான்கு** - வேதம்;—(4) **வண்ணம்-வலி-வாய் மொழி** - தமது வண்ண முதலியன சொல்லும் மறைகள்; மொழியார் முதலியவை அம்மையாரைக் குறிப்பன;—(6) **பதினெட்டு** - புராணங்கள்; **நான்கு** - மறைகள். (7) **சோதி** - அருள்ஞானஒளி; **வேதி** - வேதத்தையுடையவன்;—(9) **தொல்வழி** - பழமையாகிய பத்திநெறி.—(10) **கொழுந்து** - ஆலின் கொழுந்தின் செழுமை; **பவளம் திரண்டது** - ஆலின் காய்.—(12) **பண்டங்கம்** - சிவன் கூத்து. "பண்டரங்க வேடத்தான்" (தேவா); "ஆடுமாறு வல்லான்" என்றதற் கேற்பச் சிவன் ஆடலைக் கூறி முடித்தபடி.

2202. பலமுறையும் பணிந்தெழுந்து புறம்போந்து பரவுதிருத் தொண்ட ரோடு
நிலவுதிருப் பதியதன்க ணிகழுநா ணிகரிலா நெடுநீர்க் கங்கை
அலையுமதி முடியார்தம் பெரும்புலியூர் முதலான வணைந்து போற்றிக்
குலவுதமிழ்த் தொடைபுனைந்து மீண்டணைந்து பெருகார்வங் கூரு நாளில்,

2203. குடதிசைமேற் போவதற்குக் கும்பிட்டங் கருள்பெற்றுக் குறிப்பி னோ
படருநெறி மேலணைவார் பரமர்திரு நெய்த்தானப் பதியி னண்ணி [டும்
யடையுமன முறவணங்கி யருந்தமிழ்மா லைகள்பாடி யங்கு நின்றும்
புடைவளர்மென் கரும்பினொடு பூகமிடை மழபாடி போற்றச் சென்றார்.

2202. (இ - ள்) பலமுறையும்......நிகழும் நாள் - பலமுறையாலேயும் பணிந்து எழுந்து திருக்கோயிலின் புறத்தே போந்து பரவும் திருத்தொண்டர்களுடனே நிலவிய அத்திருப்பதியினிடத்து எழுந்தருளியிருக்கும் நாள்களில்; நிகரிலா...... மீண்டு அணைந்து - ஒப்பற்ற நெடிய நீரினை உடைய கங்கை அலைதற்கிடமாகிய முடியில் மதியினைச் சூடிய இறைவரது பெரும்புலியூர் முதலாகிய பதிகளில் சென்று அணைந்து துதித்துக் குலவும் தமிழ்மாலைகளைப் புனைந்து மீண்டும் (திருவையாற்றில்) அணைந்து; பெருகு ஆர்வம் கூரும் நாளில் - பெருகும் ஆசை சிறக்க இருக்கும் நாள்களில்;

2203. (இ - ள்) குடதிசைமேல்......அருள் பெற்று - மேற்குத் திசையின் மேல் செல்வதற்கு விடைபெறக் கும்பிட்டுத் திருவருளினைப் பெற்று; குறிப்பினோடும் ...மேல் அணைவார் - அவ்வாறு பெற்ற திருவருட் குறிப்பின் வழியே செல்கின்ற

மேலை வழியில் அணைவாராய் ; பரமர்...பாடி - பரமரது திருநெய்த்தானப் பதியிற் சேர்ந்து அடையும் மனம் பொருந்த வணங்கி அரிய தமிழ் மாலைகளைப்பாடி ; **அங்கு... சென்றார்** *- அங்கிருந்து பக்கங்களில் வளரும்மென் கரும்பினோடு கமுகுகள் நெருங்கி யுள்ள திருமழபாடியினைப் போற்றச் சென்றருளினர்.* ௩௦௩

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

2202. (வி - ரை) **பலமுறையும்** - *ஒருமுறை, மும்முறை முதலாகப் பல காலும் ; பஞ்சாங்கம், அட்டாங்கம் முதலாகப் பல முறைகளாலும் என்றலுமாம்.*

பரவுதிருத்தொண்டர் - பரவு - *இறைவரைப் பரவும் - தம்மைப் பரவும் - தாம் பரவும் என்று பலவும் உரைக்க நின்றது.* **பரவு** - *எண்ணில்லாது பெருகும் என்றலுமாம்.*

நிகழுநாள்......மீண்டு அணைந்து - *பிள்ளையார் திருவையாற்றிற் பல நாள்கள் தங்கியருளினர் என்றும், அந்நாட்களில் அங்கிருந்தபடியே பெரும்புலியூர் முதலாகிய அணிமையில் உள்ள பதிகளிற் சென்று வணங்கித் திருவையாற்றினை அகலாது அதன்கண் மீண்டு அணைந்தனர் என்றும் கூறியபடி. ஆளுடைய அரசுகள் இவ்வாறே திருவாரூரில் எழுந்தருளியிருந்ததுவும் (1493), பிறவும் காண்க.*

பெருகு ஆர்வம் கூரும் நாளில் - கூர்தல் - *உள்ளது சிறத்தல். "ஆர்வங்கூர வடியேற்கே" (திருவா) ; முன்னரே பெருகிய ஆர்வம் மேலும் சிறந்து மூள என்க. "அளவில் காதல் தணியாத கருத்தினொடும்"* (2200).

தொண்டுகளி பெருகார்வம்—என்பதும் பாடம். 304

2203. (வி - ரை) **குடதிசை** - *காவிரிக்கு வடகரை வழியே மேற்குத் திசையாக ; "பொன்னி வடபாற் குடதிசை நோக்கி"* (2183)

போவதற்குத் தும்பிட்டு அந்த அருள் பெற்று - *பதியினின்றும் புறப்படுவார் அங்கு இறைவரது அருள்விடை பெற்றுப் புறப்படும் மரபு.*

குறிப்பு - *திருவருள் பெற்ற அக்குறிப்பு.* **நெறிமேல்** - *நெறியின் மேல் ;* **மேல் (குடக்கு) நெறி** *என்று கூட்டி உரைத்தலுமாம்.*

அடையும் மனம் உற - *வந்து அடைகின்ற ஆர்வமுடைய மனம் அவ்வார்வ முற்றப் பொருந்த.*

புடைவளர் மென்கரும்பு - புடைவளர் - *பக்கங்களில் தூறு கொள்ளப் புடைத்து வளர்தல் கரும்புப் பயிரின் இயல்பு.* **மென்கரும்பு** - *கரும்பின் ஒருவகை.* **மென்மை** - *பூகத்தை நோக்க மெல்லிய என்ற குறிப்புமாம். பூகமும் கரும்பும் அடுத்தடுத்து உள்ள நிலை. "கரும்பல்ல கமுகென்ன"* (65) *பார்க்க.*

மழபாடி - *மழநாட்டைச் சேர்ந்த ஊர். மருதநில மாதலால் கரும்பும் பூகமு மாகிய மருதநிலக் கருப்பொருள்களால் அறிவித்தருளினர்.* 305

திருப்பெரும்புலியூர்

திருச்சிற்றம்பலம் **பண் - காந்தாரம்**

மண்ணுமோர் பாக முடையார் மாலுமோர் பாக முடையார்
விண்ணுமோர் பாக முடையார் வேத முடைய விமலர்
கண்ணுமோர் பாக முடையார் கங்கை சடையிற் கரந்தார்
பெண்ணுமோர் பாக முடையார் பெரும்புலி யூர்பிரி யாரே. (1)

பிறைவள ரும்முடிச் சென்னிப் பெரும்புலி யூர்ப்பெரு மானை
நறைவள ரும்பொழிற் காழி நற்றமிழ் ஞானசம் பந்தன்
மறைவள ருந்தமிழ் மாலை வல்லவர் தந்துயர் நீங்கி
நிறைவளர் நெஞ்சின ராகி நீடுல கத்திருப் பாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—இறைவர் பெரும்புலியூர் பிரியார்.

பதிகப் பாட்டுக் குறிப்பு :—(1) **மண் - விண் - பாகமுடையார்** என்றது புவனங்களைத் தோற்றுவிக்கும் மாயையைப் பரிக்கிரக சத்தியாக உடையவர் என்ற கருத்து ;—(2) நீண்ட தோள்கள் பவளம் போல உள்ளன ; மேனியினுளும் கங்கையு மாகிய கன்னிகள் ; **புனை** - புனைதல், கூடுதல் ; அணிதல் என்றலுமாம். புனையப் படுவது— "புரைபடுமொன்றோ புனைபூணும்" (குறள்).—(3) **கள்ளமதித்த** - மல வலியை நிலையிட்டு அறுத்த ; கள்ளமாகச் செருக்கிய (கபாலம்) என்றலுமாம். **மதித்தல்** - தருக்கி, அல்லாதசொல் லுரைத்தல். **மதித்த - தொழிலர்** என்று கூட்டுக ; —(4) **இலயம்** - பொருந்த இசைதல் ; **ஊடலிலயம்** - ஊடலிலும் ஒற்றுமை. —(6) **கற்றதுறப் பணிசெய்து காண்டும்** - கற்றபடி பணிசெய்து இறைவனைக்காண் போம் ; **முதலியர்** - முதல்வர் ;—(9) **ஐந்நூற்றுப் பத்தாயபேர்** - ஐ - அழகிய. **நூற்றுப்பத்து** - ஆயிரம். "ஆயிரம் பேருடை யானும்" (தேவா) ; **அந்நூற்றுப் பத்தாய** - என்பதும் பாடம். —(11) **மறைவளர்** - வேதப் பொருள்களைத் தெருட்டிப் பரவச் செய்யும். **துயர்** - மலவாதனை ; **நிறை** - அன்பு ; **நீடுலகம்** - சிவலோகம்.

தலவிசேடம் - திருப்பெரும்புலியூர்—காவிரிக்கு வடகரையில் 53-வது தலம். கொள்ளிடத்தின் தென்கரையில் உள்ளது. புலிக்கால்முனிவர் - வியாக்கிரபாதர் - பூசித்த காரணத்தால் இப்பெயர் பெற்றது ; சுவாமி - **பிரியாநாதர் - வியாக்ரபுரீசுவரர்** ; அம்மை - **சௌந்தர நாயகி** - பதிகம் 1.

இது திருவையாற்றினின்றும் கரை வழியாய் வடமேற்கில் 1½ நாழிகை யளவில் அடையத் தக்கது.

திருநெய்த்தானம்

திருச்சிற்றம்பலம் **பண் - நட்டபாடை**

மையாடிய கண்டன்மலை மகள்பாகம துடையான்
கையாடிய கேடில்கரி யுரிமூடிய வொருவன்
செய்யாடிய குவளைம்மலர் நயனத்தவ ளோடு
நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தானமெ னீரே. (1)

தலமல்கிய புனற்காழியுட் டமிழ்ஞானசம் பந்தன்
நிலமல்கிய புகழான்மிகு நெய்த்தானனை நிகரில்
பலமல்கிய பாடல்லிவை பத்தும்மிக வல்லார்
சிலமல்கிய செல்வன்னடி சேர்வர்சிவ கதியே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—இறைவனது இடம் நெய்த்தானம் என்று போற்றுங்கள். போற்றுவோரை நோய் நலியா.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) மை - விடம் ; ஆடிய-விளங்கிய ; நெய்யாடிய பெருமான் இடம் - தலப்பேர்க் காரணம் காட்டியபடி ; 3-வது பாட்டும் பார்க்க. நெய்யாடுதல் - ஆடுதல் - மஞ்சனமாடுதல் ; நெய்யாடல் விழா என்ற குறிப்புமாம். —(2) பறையும் - நீங்கும் ;—(3) வேயாயின-வேய்போன்ற ; ஆக்கச்சொல் உவமை குறித்தது. தாயாகிய உலகங்கள் - உயிர்கட்கு ஆதாரமாகிய (தரணி) உலகங்கள் ; தாய் - தாரகமாவது. "தாய் தரையேயாந் துணையான்" (போதம்) ; எதுகையின் பொருட்டு - நெய் என்பது நேய் என முதனீண்டது ;—(4) நடுநள் இருள் - சங்கார காலம் ; ஆடுமிழ் - ஆடுதலினால் உமிழும் ;—(5) காவிரி பரவிப் பணிந்தேத்தும் - இக்கருத்தை ஆசிரியர் சேக்கிழார் "வம்பு லாமலர் நீரால் வழிபட்டு......சிவாலயத் தெம்பிரானை யிறைஞ்சலின்" (57) என்ற திருப்பாட்டில் விரித்தருளினர்.—(8) இறை யார - கைபொருந்த ;—(9) காலம்பெற - விதித்த காலத்தில் ;—(10) இறை - சிறிதும் ; உம்மை தொக்கது ;—(11) தலமல்கிய - நிலத்தை வளம்படுத்திய.

தலவிசேடம் - திருநெய்த்தானம் :—III - ௬௪௮ பக்கம் பார்க்க.

2204. செங்கைமான் மறியார்தந் திருமழபா டிப்புறத்துச் சேரச் செல்வார்
"அங்கையா ரழ"லென்னுந் திருப்பதிக மெடுத்தருளி யணைந்த போழ்தின்
"மங்கைவாழ் பாகத்தார் மழபாடி தலையினால் வணங்கு வார்கள்
பொங்குமா தவமுடையா" ரெனத்தொழுது போற்றிசைத்தே கோயில் [புக்கார்.

(இ - ள்) செங்கைமான்......செல்வார் - செங்கையிலே மான் கன்றை ஏந்திய இறைவருடைய திருமழபாடியின் புறத்திற் சேரச் செல்வாராகிய பிள்ளையார் ; "அங்கையார் அழல்"......போழ்தில் - "அங்கையாரழல்" என்னும் திருப்பதிகத்தைத் தொடங்கியருளி யணைந்தபோது ; மங்கை......தொழுது - அம்மை வாழ்கின்ற ஒரு பாகத்தையுடைய பெருமான் எழுந்தருளிய திருமழபாடியை வணங்குவார்கள் மேன் மேலும் பொங்கும் தவமுடையார்கள் என்று பாடித் தொழுது ; போற்றிசைத்தே - துதித்துக் கொண்ட வண்ணமே ; கோயில் புக்கார் - திருக் கோயிலினுள் புகுந்தனர்

(வி - ரை) மழபாடிப்புறத்துச் சேரச் செல்வார் - இத்திருப்பதிகம் மழபாடிப் பதியின் புறநகரினை அணுகும் பொழுது அவ்விடத்தே அருளியது. " மழபாடி தொழுவார்கள் " என்றது பதிகக் குறிப்பு.

அங்கை யாரழல் - பதிகத் தொடக்கம். எடுத்தே - தொடங்கியே. எடுத்தருளி - உயிர்களை இவ்வருளுபதேசத்தினால் மேலெடுத்து ஈடேற்றி என்ற குறிப்புமாம்.

மங்கைவாழ்......தவமுடையார் - என - இது முதற்பாட்டின் கருத்தும் பதிகக் குறிப்புமாம். " மழபாடியை வணங்கத் தவமாகுமே " (4) என்பது பதிகம். "இடமேவிய மங்கையான்" பதிகம். தவமுடையார் - முன்னைத்தவம்; வணங்கத் தவம் பெறுவர் என்பதும் குறிப்பு.

போற்றிசைத்தே - துதித்துக் கொண்ட வண்ணமாகவே. 306

திருமழபாடி

திருச்சிற்றம்பலம் பண் - கௌசிகம்

அங்கை யாரழ லன்னழ கார்சடைக்
கங்கை யான்கட வுள்ளிட மேவிய

மங்கை யானுறை யும்மழ பாடியைத்
தங்கை யாற்றெழு வார்தக வாளரே. (1)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—மழபாடியை வணங்குவார்கள் தவமுடையார். "தவமும் தவமுடையார்க் காகும்" (குறள்) என்ற கருத்து. ஆசிரியர் முன் 2204-ல் காட்டியருளியமை காண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) மழபாடியைத் தொழுவார் - தலத்தின் புறத்தே வந்த போது அதனை நோக்கிக் கைகூப்பி வணங்குவார் ; தகவு - நற்றகைமை ;—(2) விதி - நியதி - விளைவு ; நியதியால் வரும் அனுபவம் ; ஒளி......கதி - ஞான சாதனம் ; கசிவு - அன்பு. வசியாற்ற - மா-மதியுமாம் என்று பிரிக்க. வசி-ஐந்தெழுத்தின்வகையுள் ஒன்று ; ஆற்ற - நிற்க ;—(3) குலவுங்கையிலேந்திய மழுவினான் - மழு (பரசு) இங்குத் தவஞ் செய்து இறைவரது கையிலேந்தப் பெற்றது என்பதும், அதனால் இத்தலம் மழுவாடி என்றதொரு பெயரும் பெற்றது என்பதும், பரசிராமர் இங்குத் தவஞ் செய்து பரசு பெற்றனர் என்பதும் வடநூலார் தரும் தலவரலாறுகள். அவர் இப்பாட்டு அக்குறிப்புத் தருவதென்ப :—(4) கதியாகியமலை - கதி - சென்று புகலடையுமிடம். மலை - கயிலை ; தலையினால் வணங்கத் தவமாகுமே - இதன் சொல்லும் பொருளும் இப்பதிகக் கருத்தாக முன் (2204) எடுத்தாண்டு காட்டியருளியது காண்க.—(5) கல்வியாய கருத்தன்-கல்விப் பயனாகிய. "கற்றதனா லாய பயனென்கொல்" (குறள்) ; கருத்தன் - கருத்துள் நிறைந்தவன். கருத்தன் - முதல்வன் என்றலுமாம் ;—(11) மந்தம் - மணம்.

தலவிசேடம் - திருமழபாடி :—III - பக்கம் ௬௭௬ பார்க்க. — மழபாடி - மழவர்பாடி என்பதன் மரூஉ ; மழவர் - இளைஞர் - ஒருவகை வீரர் ; "உருவக் குதிரை மழவ ரோட்டிய" (அகம்). இனி, வேறு கதைபற்றி வடநூலார் "பரசு ஈர்த்த புரி" என்பர். ந. சிவப்பிரகாசக் குருக்களையா குறிப்பு.

2205. மழபாடி வயிரமணித் தூணமர்ந்து மகிழ்கோயில்
வலங்கொண் டெய்திச்
செழுவாச மலர்க்கமலச் சேவடிக்கீழ்ச் சென்றுதாழ்ந்
தெழுந்து நின்று
தொழுதாடிப் பாடிநறுஞ் சொன்மாலைத் தொடையணிந்து
துதித்துப் போந்தே
யொழியாத நேசமுட னுடையவரைக் கும்பிட்டங்
குறைந்தார் சின்னாள். ௩௦௭

(இ - ள்) மழபாடி......எய்தி - திருமழபாடியில் அழகிய வயிரத்தூண்நாதர் விரும்பி மகிழ்ந்தருளும் திருக்கோயிலினை வலமாகச் சூழ்ந்து சேர்ந்து;செழுவாச...... நின்று - செழுமையுடைய மணம் பொருந்திய தாமரைமலர் போன்ற திருவடிக் கீழே சென்று வணங்கி எழுந்து நின்று ; தொழுது...போந்தே-தொழுதும் ஆடியும், பாடியும், நறிய சொன்மாலைத் தொடை யணிந்து துதித்தும், வெளிப்போந்து ; ஒழியாத... சின்னாள் - இடையறாத அன்பினுடன் தமது தலைவராகிய இறைவரைக் கும்பிட்டுக் கொண்டு அத்தலத்திற் சிலநாள்கள் தங்கியருளினார்.

(வி - ரை) வயிரமணித் தூண் - தலச் சுவாமி பெயர். "வயிரத்தூணே" (தேவா)

வலஞ் செய்து...துதித்து - வலங்கொள்ளுதல் முதலிய வழிபாட்டு முறைகளை எல்லாம் ஒன்றொழியாது செய்து; எண்ணும்மைகள் தொக்கன.

சொன்மாலைத் தொடை - மாலையாகிய தொடை; சொல்லால் மாலையாகத் தொடுக்கப்பட்ட பதிகம். பல பதிகங்கள் என்ற குறிப்புமாம்.

ஒழியாத நேசம் - இடையீடில்லாது செல்கின்ற அன்பு; அத்தலத்தைவிட்டு நீங்காத நிலைமையை விளக்கும் அன்பு என்றலுமாம். அங்குச் சின்னாள் உறைதற்குக் காரணங் குறித்தபடியுமாம்.

உடையவர் - தம்மை ஆளாக உடைய தலைவர். "தமையுடைய தன்னுணர்வார்" (போதம் - அவையடக்கம்)

கும்பிட்டு - கும்பிடும்பொருட்டு என்றது குறிப்பு. 307

II திருமழபாடி

திருச்சிற்றம்பலம் பண் - இந்தளம்

களையும் வல்வினை யஞ்சனெஞ் சேகரு தார்புரம்
உளையும் பூசல்செய் தானுயர் மால்வரை நல்விலா
வளைய வெஞ்சரம் வாங்கியெய் தான்மதுத் தும்பிவண்
டளையுங் கொன்றையந் தார்மழ பாடியு ளண்ணலே. (1)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—மழபாடியுள் இறைவரைக் கும்பிடக் குறி கூடும்.

குறிப்பு :—இப்பதிகத்துள் 11-வது பாட்டில் பின்னிரண்டடிகள் சிதலரித் தொழிந்தன.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) அண்ணலே - வல்வினைகளையும்; நெஞ்சே அஞ்சல்; என்க; உளைதல் - அழிதல்; அளைதல் - சேர்தல்; தாரினையுடைய அண்ணல்;—(2) காய்ச்சு - மேலும் காய்ச்சப்படும் அவசியம்; காய்ச்சுதலில்லாத - காய்ச்சுதல் வேண்டாத; ஆசு - ஆச்சு என நின்றது எதுகை நோக்கி; ஆசு-குற்றம்; பேச்சு - வேறு பேச்சு; வாய்ச்ச என்பது வாச்ச என நின்றது. வாய்த்தல் - பல்லாற்றாலும் பொருத்தமுடையதாதல்.—(5) குறி - உயிர்க் குறுதியாகிய குறிக் கோள். வீடுபெறும் நிலை.—(6) பரவினான்-பரவி நிறைந்தான்; —(8) உரம்-வன்மை; வரத்தையே - ஏகாரம் தேற்றம்;—(10) கலி - கொடுமை; தீமை; நலியும் - நலிவு செய்யும்; பிறவினை;—(11) கலிசெய் - கலித்தல் - சத்தித்தல்; புகழ்தல்;

2206. அதன்மருங்கு கடந்தருளாற் றிருக்கானூர் பணிந்தேத்தி யான்ற சைவ
முதன்மறையோ ரன்பிலா லந்துறையின் முன்னவனைத் தொழுது போற்றிப்
பதநிறைசெந் தமிழ்பாடிச், சடைமுடியார் பலபதியும் பணிந்து பாடி
மதகரட வரையுரித்தார் வடகரைமாந் துறையணைந்தார் மணிநூன் மார்பர். ௩௦௮

(இ - ள்) அதன்...எய்தி - அப்பதியாகிய திருமழபாடியின் பக்கத்தினைக் கடந்துபோய்த் திருவருளினாலே திருக்கானூரினைப் பணிந்து போற்றி; ஆன்ற... தமிழ்பாடி - பெருமையுடைய ஆதிசைவரது திரு அன்பிலாலந்துறையில் இறைவரைத் தொழுது போற்றிப் பதங்கள் நிறைந்த செந்தமிழ்த் திருப்பதிகத்தினைப்பாடி; சடை ...பாடி - சடைமுடியாரது பல பதிகளையும் பணிந்து பாடல் புரிந்து; மதகரட...... மார்பர் - மத அருவி பாயும் மலைபோன்ற யானையை யுரித்த இறைவரது வடகரை மாந்துறையினை அழகிய நூலணிந்த மார்பினையுடைய பிள்ளையார் சென்று அணைந்தனர்.

(வி - ரை) அருளால் - பணிந்து - "அவனருளாலே அவன்றாள் வணங்கி" (திருவா) என்றபடி தலவணக்கம் செய்யும்பேறும் அவனருள் தர வருவதொன்றாம் என்பது; "நணியார் சேயார்" (தேவா)

ஆன்றசைவமுதன்மறையோர்அன்பிலாலந்துறை - ஆன்ற - எல்லா நற்குணங் களும் அமைந்த; புறம் 191 பார்க்க. புலனடங்கிய என்பாருமுளர். முதற்சைவ மறையோர் என்க. ஆதி சைவர் வாழ்வதற்கிடமாகிய. "மறையும்பல வேதியரோத" (4) என்றும், "கிடையாரொலி யோத்தரவத்திசை" (2) என்றும், ஆரணப் பொருள் (குறுக். 2) என்றும் வரும் தேவாரங்கள் காண்க. சைவத்துக்கு முதன் மறையோ ராகிய பிள்ளையார் மணிமார்பர் என்று கூட்டி உரைப்பர் முன் உரைகாரர். முதன் மறையோர் - இறைவருக்கு ஆக்கி யுரைப்பது மொன்று. சத்திபவாகீசர் என்ற தலத்துச் சுவாமி பெயர்க் குறிப்பும் காண்க.

பதநிறை செந்தமிழ் - சொற்கள் தனித்து ஓசைப்பட ஒலிக்கும்படி அமைந்த தமிழ் என்பார் பதநிறை என்றார். வேதத்தைப் பதமாக ஒலிக்கும் முறைபோல ஒலிக்க அமைந்ததென்பது; பதம்பாடுதல் என்ற மறைஓது முறை காண்க. பதிக யாப் யமைதி குறித்தது. பதம் - மந்திரம் என்பாருமுண்டு.

கரடம் - அருவி; மதம்பாய் சுவடு;

சடை முடியார் - சடைமுடி - தஞ்சை சில்லா கோவிலடி என்ற ஊரின் சிவா லயம்; "சடைமுடி...தக்களூர்" (க்ஷேத் - கோ) - என்று ஆராய்ச்சி செய்வாரு முண்டு.

பயில் பதியும் — என்பதும் பாடம். 308

திருக்கானூர்

திருச்சிற்றம்பலம் பண் - தக்கேசி

வானார் சோதி மன்னு சென்னி வன்னி புனங்கொன்றைத்
தேனார் போது தானார் கங்கை திங்க ளொடுசூடி
மானேர் நோக்கி கண்டங் குவப்ப மாலை யாடுவார்
கானூர் மேய கண்ணார் நெற்றி யானூர் செல்வரே. (1)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :- கானூர் மேய ஆனூர் செல்வர் உமையம்மை கண்டு அங்கு உவப்பச் சிருட்டி காரணமாக மாலை ஆடுவார். "அருளால்" என்பது புராணக் குறிப்பு.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) வானார் சோதி - ஒளி உருவர். வான் - ஞானா காயம். மானேர் நோக்கி - ஆர் - உவமவுருபு. நோக்கி - நோக்கினை (கண்ணை)

உடையவள் ; பெயர். அங்கு - ஊழிமுடிவில். காலை மாலை - மாலை - சங்காரம் - காலை - புனருற்பவம்.—(2) மென்சொல் இன்பம் - புனருற்பவத்துக் குரிய நாத கீதம். "வேதத் தொலிகொண்டு வீணை கேட்பர்" "வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே" (தேவா) ; பயந்த - கொடுத்த.—(3) தேன் - தேன் வண்டு வகை ; கறை - நிழல் ; இருள் ;—(4) எவ்வம் - துன்பம் ; திங்கள் மாலை - பிறையாகிய வெண்மாலைக் கண்ணி ;—(6) மூளி - எலும்புப் பொருத்தல்கள் ;—(7) போக்கம் - ஒவ்வாத பொய் மொழி ;—(8) தமிழ் - இசை ; —(9) மாலை - காலை - சங்காரமும் புனருற்பவமும் ; (1) —(11) கழுது - பேய் ; துஞ்சும் - உறங்கும் ; "பேயு முறங்கும் பிறங்கிருள்வாய்." (3476)

தலவிசேடம் - திருக்கானூர் – III - பக்கம் ௫௦௬ பார்க்க. சுவாமி - செம்மேனிநாதேசுவரர் - " வானூர் சோதி " (1) பதிகம் ; " பரஞ்சுடர் " (குறுந்) ; அம்மை - சிவயோக நாயகி - பதிகம் 2.

இது பூதலூர் நிலயத்தினின்றும் வடக்கே கற்சாலை வழி 5 நாழிகையில் உள்ள திருக்காட்டுப் பள்ளியினின்றும் வடக்கே விஷ்ணும்பேட்டை மட்சாலையில் 2 நாழிகையில் உள்ளது.

திருஅன்பிலாலந்துறை

திருச்சிற்றம்பலம் பண் - தக்கராகம்

கணைநீ டெரிமா லரவம் வரைவில்லா
இணையா வெயின்மூன்று மெரித்த விறைவர்
பிணைமா மயிலுங் குயில்சேர் மடவன்னம்
அணையும் பொழிலன்பி லாலந்துறை யாரே. (1)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—2206-ல் ஆசிரியர் குறித்தபடி.

பதிகப்பாட்டுக் குறிப்பு :—(1) எரியும் மாலும் கணையாக; அரவம் பிணித்த வரைவில்லா என்க.—(2) கிடை - ஓது கிடை. வேதம் பயில் சிறுர் கூட்டம்; ஓத்து அரவம் - வேதம் பயிலும் ஒலி ; கிள்ளை ஓத்தரவம் அடை என்க. அடைதல் - பழகுதல் ;—(6) ஊனமிலார்...சுவையாகிய - ஊனம் - பாவம் ; ஊறு - ஊற்று. —(11) பரவு - துதி ;

தலவிசேடம் - திருஅன்பிலாலந்துறை - III - பக்கம் ௫௦௬ பார்க்க.

2207. சென்றுதிரு மாந்துறையிற் றிகழ்ந்துறையுந் துறைநதிவாழ்
சென்னி யார்தம்
முன்றில்பணிந் தணிநெடுமா ளிகைவலஞ்செய் துள்புக்கு
முன்பு தாழ்ந்து
துன்றுகதிர்ப் பரிதிமதி மருத்துக்க ளோழுதுவழி
பாடு செய்ய
நின்றநிலை சிறப்பித்து நிறைதமிழின் சொன்மாலை
நிகழப் பாடி, ௩௦௬

2208. அங்கணகன் றம்மருங்கி லங்கணர்தம் பதிபிறவு
மணைந்து போற்றிச்
செங்கமலப் பொதியவிழச் சேல்பாயும் வயன்மதுவாற்
சேறு மாறாப்
பொங்கொலிநீர் மழநாட்டுப் பொன்னிவட கரைமிசைப்போய்ப்
புகலி வேந்தர்
நங்கள்பிரான் றிருப்பாச்சி லாச்சிரா மம்பணிய
நண்ணும் போதில், ௩௧௦

2209. அந்நகரிற் கொல்லிமழ வன்பயந்த வரும்பெறலா
ரமுத மென்சொற்
கன்னியிளை மடப்பிடியாங் காமருகோ மளக்கொழுந்தின்
கதிர்செய் மேனி
மன்னுபெரும் பிணியாகு முயலகன்வந் தணைவுறமெய்
வருத்த மெய்தித்
தன்னுடைய பெருஞ்சுற்றம் புலம்பெய்தத் தானுமனந்
தளர்வு கொள்வான், ௩௧௧

2210. மற்றுவே றொருபரிசாற் றவிராமை மறிவளருங்
கையார் பாதம்
பற்றியே வருங்குலத்துப் பான்மையினா ருதலினாற்
பரிவு தீரப்
பொற்றொடியைக் கொடுவந்து போர்க்கோலச் சேவகராய்ப்
புரங்கண் மூன்றுஞ்
செற்றவர்தங் கோயிலினுட் கொடுபுகுந்து திருமுன்பே
யிட்டு வைத்தான். ௩௧௨

2207. (இ - ள்) சென்று...தாழ்ந்து - சென்று, திருமாந்துறையிலே விளங்க வீற்றிருக்கின்ற, துறைகளையுடைய கங்கை நதி தங்கி வாழ்வடைந்த சென்னியினையுடையாரது திரு முற்றத்தினைப் பணிந்து, அழகிய நீண்ட திருமாளிகையினை வலமாக வந்து, உள்ளே புகுந்து, திருமுன்பு வீழ்ந்து வணங்கி; துன்று கதிர்...பாடி - நெருங்கிய கதிர்களையுடைய ஞாயிறும், சந்திரனும், மருத்துக்களும் தொழுது வழிபட இறைவர் எழுந்தருளிய நிலையைப் பாராட்டிநிறைவாகிய தமிழின் சொன்மாலையை நிலைபெற்று நிலவும்படி யருளிச்செய்து, ௩௦௯

2208. (இ - ள்) அங்கணகன்று...போற்றி - அவ்விடத்தினின்றும் நீங்கிச் சென்று அந்தப் பக்கத்தில் உள்ள, சிவபெருமானது பிறபதிகளையும் சென்று துதித்து; செங்கமலம்...மழநாட்டு - செந்தாமரை மலர்களின் பொதிமலரச் சேலமீன்கள் பாயத் தேன் பொழிதலாற் சேறு உலராத வயல்களையுடைய பொங்கும் ஒலியுடன் பெருகும் நீரினையுடைய மழநாட்டிலே ; பொன்னி வடகரை மிசைப்போய் - காவிரியின் வடகரை வழியாக மேலே சென்று ; புகலி வேந்தர்...நண்ணும் போதில் - சீகாழித் தலைவராகிய பிள்ளையார் நமது இறைவரது திருப்பாச்சிலாச்சிராமத்தை வணங்கச் சாரும் பொழுதில், ௩௧௦

2209. (இ - ள்) அந்நகரில்...அணைவுற - அந்நகரிலே கொல்லி மழவன் தான் பெற்ற ஆரமுதம் போன்ற மென் சொல்லுடைய கன்னியாகிய இளமான் போன்ற அழகிய இளங் கொழுந்தினுடைய ஒளி பொருந்திய மேனியிலே பொருந்திய பெரு நோயாகிய முயலகன் வந்து சார்ந்ததனாலே; மெய்...தளர்வு கொள்வான் - மெய் வருந் தித் தனது பெருஞ் சுற்றத்தார் புலம்பத் தானும் மனந்தளர்ச்சி யடைந்தவனாகி, ௩கக

2210. (இ - ள்) மற்று...தவிராமை - மற்று வேறொரு வழியாலுந் தீர்க்க மாட்டாமையால்; மறிவளரும்...ஆதலினால் - மான்கன்று பொருந்தி வளர்தற்கிட மாகிய கையினையுடைய இறைவரது திருவடிகளைப் பற்றியே வழிவரு வரும் மரபில் வந்த தன்மையுடையவனாதலாலே; பரிவுதீர - அன்பம் நீங்கும் பொருட்டு; பொற்றொடியை...வைத்தான் - பொற்றொடியணிந்த அப்பெண்ணைக் கொண்டு வந்து போர்க் கோலம் பூண்ட சேவகராய் முப்புரங்களையும் அழித்தவரது திருக்கோயிலி னுள்ளே உடன்கொண்டு புகுந்து அவருடைய திருமுன்பே இட்டு வைத்தான். ௩க௨

இந்த நான்கு பாட்டுக்களும் ஒரு முடிபு கொண்டன.

2207. (வி - ரை) திருமாந்துறை - வடகரை மாந்துறை; தலவிசேடம் பார்க்க.

துறைநதி - துறைகளையுடைய நதி - கங்கை; துறையாவது கருவாகிய துறையி னின்று ஏறுதற்கு வழியாயிருத்தல். "கங்கைநீ டுறையாடிக் கருத்துறைநீள் கடலேற் றும் அங்கணர்த மவிமுத்தம்" என்ற குறிப்பு.

அணி நெடுமாளிகை - அழகிய திருக்கோயில். மாளிகை - மரபு வழக்கு.

துன்று கதிர்ப் பரிதி - துன்று - சேர்ந்த; செறிந்து பொருந்திய. துன்று கதிர் - என்றது ஏழுநிறக் கதிர்களையும் உள்ளடக்கி ஒரு கதிராகச் சேர்ந்து ஒளி தருதல் என்றும், இந்நிலவுலகில் ஏனைப் பூத ஒளிகளெல்லாம் அடங்க நிற்றல் என்றும் குறிப் புக்கள் தருவது.

பரிதி மதி மருத்துக்கள் - வழிபாடு செயநின்ற நிலை - மருத்துக்கள் - தேவ மருத்துவர் இருவர். இவர்கள் வழிபட்டது தலவரலாறு. தலவிசேடமும் பதிகமும் (6) பார்க்க.பரிதியும் மதியும் மருத்துக்களும் என்க. எண்ணும்மைகள் தொக்கன.

நிறை தமிழின் சொன்மாலை - பதிகச் சிறப்புணர்த்தியது. நிறை தமிழ்-இயல். இசை-நாடகம் என்ற முத்தமிழ் இயல்புகளும் நிறையப் பெற்ற தமிழ் வளம்; இன் - இனிய; பதிகப் பாட்டுக் குறிப்புப் பார்க்க.

நிகழ - நிலைபெற்று என்றும் சிறப்பு நிகழும்படி.

திருநதிவாழ்—என்பதும் பாடம். 309

2208. (வி - ரை) அங்கண் - அவ்விடத்தினின்றும்; இன் என்னும் நீக்கப் பொருளில்வரும் ஐந்தனுருபு தொக்கது.

பதி பிறவும் - வடகரைமாந்துறைக்கும் திருபாச்சிலாச்சிராமத்துக்கும் இடையிலும் அருகிலும் உள்ளவை. திருத்தவத்துறை (லாலுகுடி), பூவாளூர், திருமங்கலம் முதலாயின என்பது கருதப்படும்.

செங்கமலம் போதி அவிழச் சேல்பாயும் - என்க. போதி - முடிப்பு; பொகுட்டு, கேசரம், பூந்தாது, தேன் முதலியனவற்றை உள்வைத்துப் பொதிந்தது போன்றிருத்தலால் போதி என்றார். அவிழ - அவிழும்படி.

மழநாடு - மழவர்களால் ஆளப்பட்ட நாடு; 926 பார்க்க. 310

திருவடகரைமாந்துறை

திருச்சிற்றம்பலம் பண் - நட்டராகம்

செம்பொ னார்தரு வேங்கையு ஞாழலுஞ் செருந்திசெண் பகமானைக்
கொம்பு மாரமு மாதவி சுரபுன்னை குருந்தலர் போக்குந்தி
யம்பொ னேர்வரு காவிரி வடகரை மாந்துறை யுறைகின்ற
வெம்பி ரானிமை யோர்தொழு பைங்கழ லேத்துதல் செய்வோமே. (1)

வரைவ ளங்கவர் காவிரி வடகரை மாந்துறை யுறைவானைச்
சிரபு ரம்பதி யுடையவன் கவுணியன் செழுமறை நிறைநாவன்
அரவெ னும்பணி வல்லவன் ஞானசம் பந்தனன் புறுமாலை
பரவி டுந்தொழில் வல்லவ ரல்லலும் பாவமு மிலர்தாமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு :—திருமாந்துறை யிறைவரை ஏத்துவோம்; அவரைத் தொழுத லல்லது மற்றறியோம் ; அவரைச் சிந்தியா மனத்தார் சேர்வது தீநெறிதான் ;

பதிகப் பாட்டுக் குறிப்பு :—(1) பொன் - நிறம் ;—(2) விளவு - விளா ;—(3) கூந்தல் - கூந்தற்பனை ; வாடினார் - இறந்தார் ; சாதியின் பலம் - சாதிக்காய்; —(6) இரவியும் மதியமும் மருதவானவர் வழிபடும்-2207 பார்க்க. மருத வானவர் - மருத்துவர் ;—(7) இறவில்-கானவில்; அறவன் - இயமதருமன் ; அறமாவது வாழ்நாள் பிழையாது அளந்தெடுத்து மரணம் துய்ப்பித்தல்.—(8) மந்திகள் மாந்திட - என்க. "சேராதார் தீ நெறிக்கே சேர்கின்றாரே" (தேவா)—(11) வரைவளம் கவர் - மலைபடுபொருள்களை வாரிவரும். முன் 1-10 பாட்டுகளிற் கூறிய குறிஞ்சிப் பொருள்கள் ; அரவெனும் பணி - அரனைத் துதியுமின் என்று உயிர்களை வழிப்படுத்தும் பணி;

தலவிசேடம் - திருவடகரைமாந்துறை - காவிரிக்கு வடகரையில் 58 வது தலம் ; ஆம்ரவனம் என்று வழங்கப்படும் ; தென்கரை மாந்துறை வேறு. சூரிய சந்திரர்களும் மருத்துக்களும் வழிபட்டமை பதிகத்துக் காண்க (6). இச் சிறப்பு 2208-ம் பாட்டில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. கண்ணுவ முனிவரும் வழிபட்ட தலம். சுவாமி - ஆம்ரவனநாதர். அம்மை - அழகம்மை ; பதிகம் 1. (ஆம்ரம் - மா) இது திருவானைக்காவினின்றும் வடகிழக்கே லாலுகுடி போகும் கற்சாலையில் 10 நாழிகை யளவில் உள்ளது.

2209. (வி - ரை) கொல்லி மழவன் - அந்நாட்டின் தலைவனான சிற்றரசன். இந்நாடு கொல்லிமலைத் தொடரை அரணாகிய எல்லையாகக் கொண்டதனால் இப் பெயர் போந்ததென்பது கருதப்படும். புகழ்ச் சோழ நாயனார் புராணக் குறிப்புக்கள் பார்க்க.

அரும்பெறல்...கொழுந்து - அடைமொழிகள் அப் பெண்மகவின் அருமைப் பாடும், அதற்கு நோய் வந்தமையால் தாதைக்கு நேரும் துன்பத்தின் மிகுதிப்பாடும் குறித்தன.

முயலகன் - பெரு நோய்களுள் ஒன்று. அபஸ்மாரம் என்பர் வடவர். உணர் வற்றுக் கிடக்கவும், வலிப்புக்களுடன் கூடவும், பிறவாறும் நலிவு செய்வது.

மெய் வருத்தம்-மனம் தளர்வு - உடல் வருத்தமும் மன வருத்தமும் அடைந்த நிலை.

பெருஞ்சுற்றம் - செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல் என்றபடி பெருகிய சுற்றத்தார். "பேதுறு மைந்தரோடும் பெருகுசுற் றத்தை நோக்கி" (839) "பரிபவப் பட்டு வந்த படர்பெருஞ் சுற்றத் தாரை" (420); "ஒட்டி உலர்வா ருறவு" என்ற நீதி யிலக்கணப்படி அன்பிலும் உடனின்ற நற்சுற்றமாதலின் புலம்பெய்தினர். 311

2210. **மற்றுவேறு ஒரு பரிசால்** - பரிசினாலும் என்ற முற்றும்மை தொக்கது. **மற்று - வேறு** - ஒரு என்பன பலதிறப்பட்ட தீர்வுகளின் தன்மை குறித்தன.

தவிராமை - தவிராமையால்; **தவிராமையால்** - இட்டு வைத்தான் என்க.

மறிவளரும்...பான்மையினன் ஆதலினால் - சிவனடிமைத் திறத்தில் வழிவழி யாக வந்த மரபு. "சிலம்பணிசே வடியார்தம், மன்னியசை வத்துறையின் வழிவந்த குடிவளவர்" (1900); "மரபிரண்டும் சைவ நெறி வழிவந்த கேண்மையினர்" (1915); இரு மரபிலும் வழிவழி சிவனடிப் பற்றினில் வந்தவர்க்கேயன்றி இத் துணிபும் பண்பும் வாராதென்பது குறிப்பு. **ஆதலினால்** என்ற கருத்தும் காண்க. மிக்க கோரமாயும் கோபமாயும் வந்த மறி (மான்) அடங்கியதுபோல இந்நோயும் அடங்கும் என்பது குறிப்பு என்பர் திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள்.

திருமுன்பே யிட்டு வைத்தான் - திருமுன்பு இடப்பட்டபோது நேரே திருப்பார்வை விசேடமாகிய சிவாகார சத்தியினால் நோய் முதலிய பீடைகள் வலி கெடுமென்பது துணிபு. வாயு சரீரமுடைய சிறு தெய்வங்களின் சேட்டைகள், திருக்கோயிலில் இறைவர் திருமுன்பு நீக்கம் பெறுதல் திருவாலவாய், திருச்செந்தூர் முதலிய பதிகளில் இன்றும் நிகழக் காணப்படும் உண்மையாகும்.

போர்க்கோலச் சேவகராய்...செற்றவர் - முப்புரப்பகை செற்றமைபோல மும்மலப்பகை விளைவாகிய இந்நோயினையும் நீக்குபவர் என்றது குறிப்பு.

இட்டு வைத்தான் - திருவடிச் சார்புபற்றி வந்த குலப்பான்மையால் மழவன் செய்த செயல் காரணமாகத் திருவருள் ஆளுடைய பிள்ளையார் வருகையை நிகழ்வித்து நோய் நீக்கம் செய்வித்த உண்மையும் கண்டு இவ்வுலகம் தெளிந்துய்யக்கடவது. "அவ்வளவில்" என்ற வரும்பாட்டின் தொடக்கக் குறிப்பும் காண்க.

பொன்தொடி - தொடியை அணிந்தவள்; அன்மொழித்தொகை. தொடிபோலத் துவண்டு உணர்வற்றிருந்த நிலையும் குறிப்பு. 312

2211. அவ்வளவி லாளுடைய பிள்ளையா ரெழுந்தருளி யணுக வெய்தச்
"செவ்வியமெய்ஞ் ஞானமுணர் திருஞான சம்பந்தன்
வந்தா" னென்றே
எவ்வுலகுந் துயர்நீங்கப் பணிமாறுந் தனிக்காளத்
தெழுந்த வோசை
வெவ்வுயிர்க்கு மவன்கேளா மெல்லியலை விட்டெதிரே
விரைந்து செல்வான், ௩௧௩

2212. "மாநகர மலங்கரிமின், மகரதோ ரணநாட்டு மணிநீர் வாசத்
தூநறும்பூ ரணகும்பஞ் சோதிமணி விளக்கினொடு
தூப மேந்தும்!
ஏனையணி பிறவுமெலா மெழில்பெருக வியற்றுமென
வேவித் தானும்
வானவர்நா யகர்மகனார் வருமுன்பு தொழுதணைந்தான்
மழவர் கோமான். ௩௧௪

2211. (இ - ள்) அவ்வளவில்...எய்த - அந்த அளவிலே ஆளுடைய பிள்ளையாரப் பதியினுக்கு எழுந்தருளி அதன் அணிமையிற் சேர; செவ்விய...ஓசை - "செம்மை தருகின்ற மெய்ஞ்ஞானத்தினை உணரும் திருஞான சம்பந்தன் வந்தான்" என்று எல்லா வுலகங்களும் துன்ப நீங்கும்படி ஒலிக்கின்ற திருக்காளம் முதலிய இயங்களினின்றும் எழுந்த ஓசையினை; வெவ்வுயிர்க்கும் அவன் கேளா - துக்கத்தினால் பெருமூச்சு விட்டிருக்கும் அந்தக் கொல்லி மழவன் கேட்டு; மெல்லியலை..... செல்வான் - மெல்லியலாகிய அந்தப் பெண்ணை விட்டுப் பிள்ளையாரது வரவினை எதிர் நோக்கி விரைந்து செல்வானாகி; ௩௧௨

2212. (இ - ள்) மாநகரம்...என ஏவி - பெரிய இந்நகரத்தினை அலங்காரஞ் செய்யுங்கள்; மகர தோரணங்களை உரிய எவ்விடத்தும் நாட்டுங்கள்; மணிகளையிட்ட வாசநீர் நிறைந்த அழகிய நிறை குடங்களையும், சோதியையுடைய அழகிய விளக்குக்களுடனே தூபங்களையும் ஏந்துங்கள்; இன்னும் ஏனையபிற அணிகளையெல்லாம் பெருகும்படி செய்யுங்கள்! என்று கட்டளையிட்டு; தானும்......கோமான் - மழவர்களது அரசனாகிய தானும், தேவ தேவராகிய சிவபெருமான்றிருமகனார் திருமுன்பு தொழுதுகொண்டே அணைந்தான். ௩௧௩

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

2211. (வி - ரை) அவ்வளவில்...எய்த - பொற்றொடியைத் திருமுன்பு இட்டு வைத்தலும், பிள்ளையார் எழுந்தருளி அணுக எய்துதலும், இடையீடின்றி உடனிகழ்ந்தன போன்றன என்பார் அவ்வளவில் - எய்த என்றார். அணுக - வினை நீங்கும் செவ்வி அணுக என்பதும் குறிப்பு.

செவ்விய மெய்ஞ்ஞானமுணர் என்றது ஞானமே எல்லாத் துன்பத்தையும் போக்கி யின்பமளிக்க வல்லதாகும் என்ற குறிப்பாகும். திருவருள் வயத்தானிகழ்ந்த தாதலின் காளங்கள் பிள்ளையாரது வேறு தன்மைகளைப் பற்றியன்றி இத்தன்மைபற்றி ஒலித்தலும், அவ்வோசையே மழவனது செவிக்குப் புலமாதலும் நேர்ந்தன. என்றே - தேற்ற ஏகாரத்தின் குறிப்புமது. பிரிநிலையுமாம்.

எவ்வுலகும் துயர் நீங்கப் பணிமாறும் - காள முதலிய இயங்கள் பிள்ளையாரது தற்பெருமை சாற்றவன்றி உலகம் பயன்பெறும் பொருட்டே இறைவனாற்றரப்பட்டு ஒலித்தன என்பதாம்.

வெவ்வுயிர்க்கும் - வேறொரு பரிசினாலும் நோய் தவிராமையின் மனந்தளர்தலினாற் பெருமூச்சு எறிந்து என்க. அருமையுடைய பெண்ணின்பால் வைத்த அன்பு மிகுதி அதற்குக் காரணமாம்.

மெல்லியலைவிட்டு எதிரே விரைந்து செல்வான் - விட்டு - இறைவன்பால் ஒப்புவித்து என்றும், அப்பெண்ணின்பால் வைத்த பாசப் பற்றினைவிட்டு என்றும் உரைக்க நின்றது. இறைவனருள் பெற்றார்மாட்டு இவ்வாறு கொண்டு நிகழ்ந்த அன்புச் செயல் " மறிவளருங் கையார் பாதம், பற்றியே வருங்குலத்துப் பான்மையினா லதல்" காரணமாக விளைந்தது. எதிரே - எதிர்கொண்டு. விரைந்து - அன்பின் மிகுதியினால் உண்டாயின் ஆவல் காரணம்; செல்வான் - செல்வானாகி; முற்றெச்சம்; செல்வான் - அணைந்தான் என வரும்பாட்டுடன் முடிந்தது. 315

2212. (வி - ரை) மாநகரம்.....ஏவி - நாட்டும் - ஏந்தும் என்பன நாட்டுக, ஏந்துக என விதிப்பொருள் குறித்த வியங்கோள் வினைமுற்றுக்கள். இங்குக் கூறியன அடியாரையும் குருவையும் எதிர்கொண்டு வரவேற்கும் மங்கலச் செயல்